13508

# உரும்பிராய்
# சைவத்தமிழ் வித்தியாலயம்

# பவளவிழா மலர்




372.06
உரும்
SLIPR

13508

உ

# உரும்பிராய்

# சைவத் தமிழ் வித்தியாலயம்

## பவள விழா மலர்

URUMPIRAI

# SAIVA TAMIL VIDYALAYAM

75th ANNIVERSARY NUMBER

(1915 – 1990)

1992

வெளியீடு :

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சபை

பிரதிகள் : **500**

அச்சுப் பதிவு :

திருமகள் அழுத்தகம்,
சுன்னுகம்.

உ
சிவமயம்



# காணிக்கை

போதக மாமுக ஞானசொ ரூபநின்
பொன்னடி போற்றிடுவோம்
புத்தொளி ஆதவ ராயிர ரொத்தவுன்
பூங்கழல் எத்திடுவோம்
மோதக மேந்திய கையினை, குன்றெறி
முருகனின் முன்னவனே
மொய்குழ லாதிப ராபரை பெற்றிடு
முத்தவி நாயகனே
சாதக மாயரு ளீந்திடு சங்கரன்
தந்திடு மைங்கரனே
சாற்றிடு நற்றவர் போற்று முரும்பிராய்
சார்ந்திடு கற்பகமே
பாதக மோட்டிடு நற்கலை ஈயுமோர்
பள்ளியி னில்மலரும்
பாங்குள விம்மலர் நின்கழல் சேர்த்தனம்
பாலித் தருளுகவே.

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயக் கீதம்

இராகம் : ஹம்ஸத்வனி                                                தாளம் : ஆதி

### பல்லவி

திருமலி ஈழத் திருப்புகழ் வாழி!
சிவநெறி வாழி தமிழ் வாழி!!! (திரு)

### அநுபல்லவி

உரும்பிராய் சைவத் தமிழ்வித்யா சாலை
உமாபதி போல நனி வாழி (திரு)

### சரணம்

இருளினை யோட்டி ஒளியினை யூட்டும்
இரவிபோல் எங்கலா சாலை—மன
மருளினை யோட்டி அறவொளி தீட்டி
மங்கல மாகவே வாழியவே! (திரு)

கற்பகப் பிள்ளையார் காத்திடக் கந்தன்
கருணை கொழிக்கும் கலைக்—கோயில்
அற்புத மாக நவீன அறிவியல்
அனைத்தும் ஓங்கி வாழியவே! (திரு)

கண்ணியங் கட்டுப்பாடு கடமைக ளாதி
கருத்தினிற் கொண்டு புது—முறையில்
நண்ணருங் கல்வியில் நாமுந் தழைத்திட
நலந்தரு வாய்கரு ணாகர ஓம்!!! (திரு)

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

சமய அடிப்படையிற் கல்விகற்றலே ஒருவருக்கு மேன்மை தரும் என்ற கொள்கையுடையவர் நாவலர் பெருமான். குறித்த கொள்கையின் அடிப்படையிலேயே பாடசாலைகளையும் ஸ்தாபித்தார். அவரது நோக்க அடிப்படையிலேயே இந்துக்கல்லூரி அதிகாரசபையும் பாடசாலைகளை ஸ்தாபித்தது. அவ்வாறான வித்தியாலயங்களில் ஒன்றே யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

1915ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பெற்ற சைவத் தமிழ் வித்தியாலயம் தனது வியத்தகு சேவையில்–1990இல்–75 ஆண்டுகளை நிறைவு செய்தது. 75 ஆண்டு நிறைவினைக் குறிக்கு முகமாகப் பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒத்துழைப்புடன் பவள விழாவினைக் கொண்டாடுவதுடன் ஒரு மலரையும் வெளியிடுவது என்று பாடசாலை அபிவிருத்திச் சபை தீர்மானித்தது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் இப்பணிக்கு மிகவும் ஆதரவாக இருந்தார்கள். இவ்விழாவினையும் பவள விழா மலர் வெளியீட்டினையும் கடந்த ஆண்டில் நடத்த விரும்பிய போதிலும், நாட்டு நிலைமை இடந்தரவில்லை. காலந் தாழ்த்தியே விழா நடக்கின்றது. பவளவிழா மலரும் இன்று (06-03-1993) சனிக்கிழமை வெளிவருகின்றது.

சிறந்த கட்டுரைகளையும், கவிதைகளையும், பாடசாலை சம்பந்தப்பட்ட வரலாறுகள் ஆகியவற்றையும் தாங்கி இப் பவள விழா மலர் வெளிவருகின்றது. நமது நாட்டு அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கவிஞர்கள், கல்விமான்கள் விஷயதானஞ் செய்துள்ளனர்.

பவள விழா மலரை வெளியிடுவதற்குத் திரு. பி. ஞானப்பிரகாசம் (ஞானம்ஸ்), திரு. இ. கணேசன் (அட்டைப்படம் வரைந்தவர்), திரு. க. சிவகுமாரன் (பட அச்சுத் தயாரிப்பு, கொழும்பு), திரு. சோ. பரமசாமி, ஆசிரியர் திரு. ச. செல்வரத்தினம், பண்டிதர் க. உமாமகேசுவரன், பவள விழா உபசபையினர் முதலானவர்கள் பெரிதும் உதவினர்கள்.

திருமகள் அழுத்தக முகாரி திரு. செ. சின்னத்துரை, முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம், அவரின் உதவிளாளர் திரு. ச. உமாசுதன், புத்தக அமைப்பு முதல்வரான திரு. ப. இராமச்சந்திரன், இயந்திர இயக்குநரான

திரு. பா. வயித்திலிங்கம் டி அழுத்தகத்தின் ஏனைய துறைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இம்மலர் பொலிவுடன் பிரசுரமாவதற்கு உழைத்த உழைப்பு மகத்தானது.

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றி உரியதாகுக

நல்வழியில் எமை ஈடுபடுத்தி அருள்மழை பொழியும் கற்பக விநாயகரின் திருவடிகளை மனசில் இருத்திப் பிரார்த்தனை செய்வோமாக.

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி,
பாடசாலை அபிவிருத்திச் சபை

சைவத் தமிழ் வித்தியாலயம்,
06-03-1993

*　　*　　*

உ
சிவமயம்

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

## பவளவிழா உப சபையினர்

செல்வி அ. சின்னத்தம்பி (அதிபர்)
ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
திரு. த. சிவசுப்பிரமணியம்
திரு. து. இ. இரத்தினவேலு
திரு. ச. செல்வரத்தினம்
திரு. க. ஆனந்தராசா
திரு. ந. கணேசலிங்கம்
திரு. ச. ஏகாம்பரநாதன்
திருமதி கா. இராஜகோபால்
திருமதி க. இராஜேந்திரம்
திருமதி சி. பவானந்தன்
திருமதி ம. திருநாவுக்கரசு
செல்வி. வா. சியாதா
செல்வி. ம. குமுதினி

# உள்ளே ...


வாழ்த்துரைகள், பாராட்டுரைகள்
— திரு. இ. சுந்தரலிங்கம்
— திரு. கா. மாணிக்கவாசகர்
— பேராசிரியர் அ. துரைராசா
— திரு. இ. சிவானந்தன்
— ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்
— சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
— திரு. அ. பஞ்சலிங்கம்
— திரு. சி. பாலசுப்பிரமணியம்
— திரு. ச. தனஞ்சயன்
— கலாநிதி க. கனகராசா
— வைத்திய கலாநிதி வே. யோகநாதன்
— திரு. வி. அரியநாயகம்
— திரு. செ. சிவன்பாலன்
— திரு. ஆ. வ. தங்கராசா
— மூதறிஞர் F. X. C. நடராசா

யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை வரலாறு — செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சபை
மேம்பாடு — கவிஞர் இ. முருகையன்
கல்வி – அன்றும் இன்றும் — பேராசிரியர் வ. ஆறுமுகம்
வளர்கலையின் பெருநிதியம் வாழிய பல்லாண்டு — சைவப்புலவர் சு. செல்லத்துரை
நாவலர் கல்விச் சிந்தனையும் சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சியும் — திரு. கு. சோமசுந்தரம்
பவள விழா வாழ்த்து — திரு. க. சரவணமுத்து
இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு — பேராசிரியர் சி. தில்லைநாதன்
தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பான சில சிக்கல்கள் — பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
பாராட்டுப் பாக்கள் — மூதறிஞர் நம. சிவப்பிரகாசம்
ஆசிரியரின் சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் — திரு. ஆர். எஸ். நடராசா
பகலவன்போ லொளிகான்று பல்லாண்டு வாழி — கவிஞர் செ. ஐயாத்துரை
பாரத இளவல்கள் மூவர் — வித்துவான் க. சொக்கலிங்கம்
புகழோங்கு கலைக்கூடம் — திரு. க. ஆனந்தராசா
இரசனை — இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
உறுதியாய் நிற்கும் ஒரு பணி — கவிஞர் சோ. பத்மநாதன்
மாணவர்களும் வாசிப்பும் — திரு. செல்லப்பா நடராசா
தாயே வாழி — வித்துவான் இ. நவரத்தினக் குருக்கள்
சைவத் தமிழிற் கல்வி வளர்ச்சி — திருமதி கா. இராஜகோபால்
சைவசமய மரபுச் சிந்தனைகள் — கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

எமது பாடசாலை — பா. ஞானமொழி
சைவத் தமிழில் பரிசளிப்பு விழா — ஏ. கீதாம்பிகை
சைவத் தமிழும் கவின் கலைகளும் — பா. ஜெனித்தா
சைவத் தமிழ் வித்தியாலயத்தின் எழுபத்தைந் தாண்டுப் பணி — ஞா. தர்மினி
My Village — J. Swarna
My School — S. Ishani
சைவத் தமிழ் பழைய மாணவர்கள் — திரு. ந. கணேசலிங்கம்
அதிபர் அறிக்கை — செல்வி அ. சின்னத்தம்பி
வாழிய நீடே — புலவர் ம. பார்வதிநாதசிவம்
அபிவிருத்திச் சபை வரலாறு — திரு. அ. பஞ்சாட்சரம்
நலன் நாட்டும் கல்லூரி — திரு. பெரியதம்பிப்பிள்ளை தருமலிங்கம்
உரும்பிராய் பற்றிய ஒரு நோக்கு — திரு. அ. பஞ்சாட்சரம்.

## விநாயகர் வணக்கம்

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
　　சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
　　பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
　　பிறைபூத்த சடைமௌலிப் பிரானுர் தந்த
வார்பூத்த அறிவிச்சை தொழிலென் ருேது
　　மதம்பூத்த விநாயகன்தாள் வணங்கி வாழ்வாம்.

— ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

யாழ்ப்பாணப் பிரதேசக் கல்விப்பணிப்பாளர்

திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களது

# பாராட்டுரை

சைவத் தமிழ்க் கல்வியின் மூலவித்தாக அமைந்தவர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ க. ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள். அவரது வழியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையினரும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரும், தனிப்பட்ட பெரியார்களும் ஊர்கடோறும் சைவப் பாடசாலைகளை



நிறுவி மாணவர்களின் கல்வியை மிகவும் துலங்க வைத்தனர். அத்துடன் நமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் வரிசையில் மிஷனரிமாரும் பாராட்டுக்கு உரியவர்கள்.

சமயக்கல்வியின் இன்றியமையாமையைக் கருத்திற் கொண்டு மக்களின் கல்வியைப் பண்பாட்டின் மூலம் நிலைநிறுத்தும் நோக்குடன் இந்துக்கல்லூரி அதிகாரசபையினால் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும் ஒன்று என்று கூறுவதில் ஒரு தனிச்சிறப்பு இருக்கின்றது. எல்லா வசதிகளுடனும் முழுமையான கல்வியை யூட்டும் தரத்தில் வெகுகாலமாக இப்பாடசாலை இயங்கி வருவதை யாவரும் அறிவர்.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் வசதி மிக்கவர்கள் நகரப்பாடசாலைகளை நோக்கிப் படை எடுப்பதும் வசதி குறைந்தவர்கள் கிராமப் பாடசாலைகளில் தஞ்சமடைவதும் அன்று தொடங்கி இன்றுவரை இருந்து வரும் நிலையாகும் கல்லூரிகளின் கல்விப் பணியைப் பலரும் போற்றுவதுண்டு. ஏனைய பாடசாலைகளின் பணி குறித்துச் சிந்திப்பதோ ஆராய்வதோ குறைவு என்றே கூறலாம். "எல்லார்க்கும் கல்வி" எனும் உயர்ந்த கல்விக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்தும் பெரும்பணியைச் செய்பவை இத்தகைய பாடசாலைகளே.

இன்றைய நிலையில் எல்லாப் பாடசாலைகளிலும் எல்லா வகுப்புக்களிலும் ஒரே பாடத் திட்டமே அமுல் செய்யப்படுகின்றது. அதனை நிறைவு செய்பவர்களும் ஆசிரியர்களே. பௌதிக வளத்திலும், மாணவர் வளத்திலும் கல்லூரிகளைப் போலச் சகல பாடசாலைகளும் பூரண பொலிவுடன் விளங்க ஒவ்வொரு பிரசையும் முயற்சி செய்ய வேண்டும்.

நல்லதொரு சூழ்நிலையில், கிடைக்கும் வளங்களைக் கொண்டு நன்கு இயங்கி வரும் பாடசாலைகளில் ஒன்ருன உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பொன்விழா, வைரவிழா என்பவற்றைக் கண்ட சிறப்புக்கு உரியது. இப் பொழுது பவள விழாவைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமானதே.

இவ் வித்தியாலயத்தின் வியத்தகு வளர்ச்சி குறித்துத் தியாக சிந்தனை யுடன் சேவை செய்தவர்களுக்கு, சிறப்பாக இப்பாடசாலையில் உதவி ஆசிரி யராயும், பிரதி அதிபராயும், அதிபராயும் 37 வருடங்கள் அரும்பணியாற்றி யதன் மூலம் இப்பாடசாலை சகல துறைகளிலும் உயர்வடைய உழைத்ததுடன் ஓய்வு பெற்ற நிலையில் இப்பொழுதும் பாடசாலை அபிவிருத்தி கருதி அளப் பரும் சேவை செய்து வரும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களுக்கும் இப்பொழுது சேவையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர், உப அதிபர், ஆசிரியர், பெற்ருேர், மாணவர், நலன் விரும்பிகள் உள்ளிட்ட அனைவருக்கும் யாழ் பிரதேசத்தின் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் எனது உளம் நிறைந்த பாராட்டினைத் தெரிவிக்கின்றேன்.

பவள விழாக் காணும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், மேலும் பல வளங்களையும் பெற்று எதிர்காலத்தில் நூற்ருண்டு விழாவையுஞ் சிறப் பாகக் கண்டு களிக்க இறைவன் திருவருள் புரிவார் என்பதே எனது மேலான பிரார்த்தனையாகும்.

இ. சுந்தரலிங்கம்

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

## திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின்

# ஆசிச் செய்தி

ஒரு பாடசாலையின் எழுபத்தைந்து வருட கால வரலாறு என்பது உண்மையில் மிகக் காத்திரமான ஒரு விடயமே.

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் பரந்த அதன் கல்விப் பணியும், சமூகப் பணிகளும் அவற்றின் ஊடாக உரும்பிராய்ப் பகுதி மக்களும், அதன் அயற் கிராமங்களும் பெருமைப்படத்தக்க விதத்தில் பாடசாலை செயற்பட்டதை என்னால் உணர முடிகின்றது.



சைவமும் தமிழும் வளரவும் எமது பாரம்பரிய கலை பண்பாடுகள் மேன்மையுறவும், மாணவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவும் பாடசாலை பெரும் பங்காற்றியுள்ளது.

*1915*ஆம் ஆண்டில் உரும்பிராய் இந்துக் கல்லூரி வளாகத்தில் பாலர் வகுப்பில் இருந்து மூன்றும் வகுப்பு வரையில் சிறிய தொகை மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை இன்று ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 11 வரை வகுப்புக்களையும் ஆயிரத்தை எட்டுகின்ற தொகையையுடைய மாணவர்களையும் தன்னகத்தே கொண்டு தனக்கென ஒரு வளாகத்தையும் ஏனைய திறமைகளையும் கொண்டு விளங்குவதை நினைத்து மகிழ்ச்சியடைய முடிகிறது.

இந்தளவுக்குப் பாடசாலை வளர்ச்சியடையவும், சிறந்து விளங்கவும் பலர் பாடுபட்டு உழைத்துள்ளார்கள். பாடசாலைக்கு அதிபர்களாக இருந்தவர்கள், பெற்றோர்கள், ஊரினதும் பாடசாலைகளினதும் அபிமானிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோருமே பாராட்டப்பட வேண்டியவர்கள்.

ஏனெனில் கோப்பாய் வட்டாரத்தில் முதலாம் ஆண்டில் இருந்து 11ஆம் ஆண்டு வரை இயங்கிவரும் கனிஷ்ட பாடசாலைகளில் கூடிய மாணவர்கள் தொகையைக் கொண்டதாக இப் பாடசாலை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலும், வட்டார மாவட்ட நிகழ்ச்சிகளிலும் இப்போது கொத்தணி, கோட்ட மட்டங்களிலும் பங்கு பற்றிப் பல சாதனைகளை நிலைநாட்டுவதும், அதனால்தான் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அவர்களைப் பாராட்டும் அதே வேளை இத்தகையவர்களின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்றி ஒன்றுபட்டு உழைப்பதன் ஊடாக இது போன்ற பாடசாலைகளை முன்னேற்ற வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறப்பு மிக்க பாடசாலைகளில் ஒன்றான உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் பவள விழாவினை வரவேற்பதோடு பவள விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**கா. மாணிக்கவாசகர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்

## பேராசிரியர் அ. துரைராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

உயர் கல்வி சிறப்படைவதற்கு அடிப்படையாய் அமைவது இளஞ் சிறுவர்களுக்குத் தொடக்க நிலையில் அளிக்கப்படும் பயிற்சியே ஆகும்.

ஒரு நாட்டின் அறிவு வளத்தினைப் பெருக்கி வளர்ப்பதிலே பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரிகள், கவின்கலை நிறுவனங்கள், பயிற்சிப் பணிக்களங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதை யாவரும் அறிவர். இந்த உயர் கல்வி நிறுவனங்களின் பங்களிப்பு எல்லாருக்கும் வெளிப்படையாகப் புலப்பட்டுத் தெரியும். அதனால் அவற்றின் பயன்பாட்டையும் முதன்மையையும் பற்றி அதிகம் விளங்கப்படுத்தத் தேவையில்லை.



ஆனால் தொடக்க நிலைக் கல்விக் கூடங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதைச் சாதாரணமாக நம்மிற் பலர் நினைத்துப் பார்ப்பதில்லை. பச்சிளம் பருவத்துப் பாலர்களின் புத்தியையும், திறன்களையும், உணர்வுகளையும் செம்மை செய்து நெறிப்படுத்தும் பணி நுட்பமான அரிய பணியாகும். உயர்ந்த வினைத்திறனும், பாரிய பொறுப்புணர்வும் அந்த அரிய பணியின் இன்றியமையாத அம்சங்களை விளக்குகின்றன.

தொடக்க நிலையிலும். இடை நிலையிலும் கல்வியூட்டும் இந்த அருமையான தொண்டினை நம்மிடையே இயங்கி வரும் ஆயிரக்கணக்கான கல்விக் கூடங்கள் ஆற்றி வருகின்றன. அத்தகைய கல்விக் கூடங்களில் ஒன்றாகிய **உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்** ஒரு முக்கால் நூற்றாண்டுச் சேவையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. அந்த அரிய சாதனை குறித்து இவ்வித்தியாலயம் பெருமிதங் கொள்வதில் நியாயமும் அர்த்தமும் உண்டு. இவ்வித்தியாலயம் தனது வரலாற்றைத் திருப்பிப்பார்த்து மதிப்பிடு செய்து வருங்காலத்தை நோக்கி அடி எடுத்து வைக்க நினைப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

பவள விழா கொண்டாடும் இப்பாடசாலை இனி வருங்காலத்தில் மேலுஞ் சிறந்த நற்பேறுகளை எய்தி விளங்க வேண்டுமென மனமார வாழ்த்துகிறேன்


**அ. துரைராசா**

மருதனார் மடம், கல்விக்கோட்டம் பிரதிக் கல்விப்பணிப்பாளர்

## திரு. இ. சிவானந்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை பவள விழாக் கொண்டாட இருப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அந்நியர் ஆதிக்கம் வலுவுற்றிருந்த காலத்தில் சைவமும், தமிழும் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்ற நல் நோக்கில் 1915ஆம் ஆண்டில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இன்று 850இற்கு மேற்பட்ட மாணவர்களுடன் தரம் இரண்டு பாடசாலையாக வளர்ச்சியுற்றிருப்பது இப்பகுதி மக்கள் இக் கல்விக் கூடத்தில் வைத்துள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது. கடந்த 75 வருடங்களுக்கு மேலாக எமது மக்களின் சைவத்தமிழ்ப் பண்பாட்டினை வளர்த்து நற்பிரசைகளை உருவாக்கும் அரும்பணியில் இவ் வித்தியாசாலை ஈடுபட்டுவருகிறது. இதற்கு வித்திட்ட இப் பாடசாலையை ஆரம்பித்து வளர்ப்பதற்கு உழைத்த பெரியோர்களை இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவுகூர வேண்டும்.



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் கல்வி கற்று உயர்ந்த பல பெரியோர்கள் இன்று எம்மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சியில் காட்டிவரும் அக்கறை பாராட்டத்தக்கது. ஆலயச் சூழலில் அமைந்துள்ள இக் கல்விக்கூடத்தினைச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக வளர்த்தெடுக்கும் பணியும் அவர்களைச் சார்ந்தது.

இவ்வித்தியாலயம் தொடர்ந்தும் தனது கல்விப் பணியினை இப்பகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டும். ஸ்தாபகர்களின் நோக்கங்களை ஈடேற்ற உழைக்க வேண்டும். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று இப்பகுதி மக்களுக்கு நிறைவான கல்வியை வழங்கவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இ. சிவானந்தன்


உ

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர்

ஸ்ரீலஸ்ரீ

சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின்

## ஆசியுரை



பேரன்பு மிக்க பெருந்தகையீர்

உரும்பிராய், சைவத் தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பெற்று எழுபத்தைந்து வருடங்கள் பூர்த்தியாகிப் பவள விழா எடுக்கவிருப்ப தறிந்து பேருவகை எய்துகிறோம். இது ஒரு அரிய சாதனை. கலாசாலைகளைத் தளர்வுறாது நடாத்துவது இலகுவான கருமமன்று. அதன் பெயருக்கேற்ப விருத்தி பெற்று வளரச் செய்வது எவ்வளவு கஷ்டம் என்

பதை யாம் நன்கு அறிவோம். அளவிறந்த இன்னல்களையும், இடர்களையும் எதையும் தாங்கும் இதயத்தோடு அணைத்து இப்பாடசாலை அபிவிருத்திச் சங்க அன்பர்கள், ஆற்றி வரும் அரிய தொண்டைப் பாராட்டுகிறோம். மாணவ, மாணவிகளின் பெற்றோர்களும் உறுதுணை நிற்க வேண்டும், நிற்பரென்பது திண்ணம்.

பக்தி பண்ணுவதில் சிறந்தவர்கள் சைவமக்கள். சைவ என்ற அடை இப் பாடசாலைக்கு அமைந்திருப்பது சாலப் பொருத்தமாகும்.

இப் பெரு விழா எல்லா வகையாலும் சிறப்புற நிறைவுறப் பணிகள் புரியும் அன்பர்களுக்கும், பெற்றோர்களுக்கும், இறைவன் திருவருளை உளமாரத் தியானித்து எல்லோருக்கும் எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

**ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்**

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி

## பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# வாழ்த்துரை

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை தனது பவள விழா வினைக் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். சைவத்தையும் தமிழையும் இரு கண்ணெனப் போற்றி வந்த யாழ்ப்பாணத்து ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் சைவமரபில் இப் பாடசாலைக்குச் சைவத்தமிழ் வித்தியாலயம் எனப் பெயரிட்டது பெரிதும் சாலச்சிறந்ததாகும். இப் பாடசாலை ஆரம்பித்து இன்று பவள விழாக் கொண்டாடுவதைக் கல்வி உலகம் பாராட்டாமல் இருக்கமுடியாது. "இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்" என்று பாடிச் சென்ற பாரதியார் "புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்" என அறுதியிட்டுக் கூறுகின்றார்.



இப்பாடசாலை ஸ்தாபகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்று பவள விழாக்காணும் பாடசாலை மேன்மேலும் கல்வித்துறையில் வளர்ச்சியடைந்து நன் மாணுக்கர்களை உருவாக்க வேண்டுமென்றும், பவள விழா சிறப்புற அமைய வேண்டுமென்றும் எல்லாம்வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**, ஜே. பி.

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர்
## திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

''அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

— பாரதியார்

ஈழ நல்லுலகத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிதம் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் இனிதே பூர்த்தியாகி உள்ளன என்பதை எண்ணுகையில் பெருமையும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. அந்த நிறைவினைக் கொண்டாடும் விழா தொடர்பாகப் பவளவிழா மலர் வெளியிடப்படுவதும் வரவேற்கத்தக்க தொன்றேயாகும்.



கல்வியின் பெருமையையும் பயனையும் நன்கறிந்த நம் முன்னோர்கள், குறிப்பாக நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் சைவமும் தமிழும் எம்மக்களின் இருகண்களாகவே கருதப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி எழுதியும் பேசியும் வந்தார். அவருடைய வேணவாவின் வழித் தோன்றிய 'இந்துக் கல்லூரிகள்' அதிகாரசபையினரால் உரும்பிராய் இந்துக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. அந்தக் கல்லூரியின் எல்லையினுள்ளேயே தாய் ஈன்ற சேய் போன்று 1915இல் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தோற்றம் பெற்றுச் சைவத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இடம் பெற்று நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தது. உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆங்கிலக் கல்வி போதிக்கும் ஆலயமாக மிளிர சைவமும் தமிழும் மிளிர வேண்டும் என்ற நோக்கிலேயே உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தோற்றம் பெற்றது.

பாடசாலை வளர்ச்சி பெருக, இது தனியே அன்மையில் ஒரு வளவில் அமைய வேண்டியது காலத்தின் தேவையாயிற்று. பீடும் பெருமையோடும் 1949 இல் ஆரம்பமாகி இன்று பரந்து நிற்கும் கட்டடங்களுடன் எழுபத்தைந்து ஆண்டுகளைத் தாண்டி உள்ள இக்கலாலயம் இன்னும் பல்லாண்டு காலம் வளர்ந்து சைவத் தமிழ் மக்களின் அபிலாசையைப் பூர்த்தி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இப் பாடசாலையின் பவளவிழா சிறப்புற அமைய வேண்டும். இவ்விழா தொடர்பான பவளவிழா மலர் எல்லா வகையிலும் சிறப்புற்று அமைய உரும்பிராய் கற்பகப் பிள்ளையாரின் அருளையும் வேண்டி மனதார வாழ்த்துகிறேன்.

இந்துக் கல்லூரி அதிகாரசபையின் கல்லூரிகளில் ஒன்றாகி இன்று புகழ் பூத்து நிற்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பிலும் என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

''சைவமும் தமிழும் தளர்வற்று ஓங்க
ஐவகை நலனும் உலகில் சீர்பெறுமே!''

**அ. பஞ்சலிங்கம்**

உரும்பிராய்க் கோத்தணி அதிபர்

திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

சைவமுந் தமிழும் நலிவுற்று, புறச்சமயங்களும் ஆங்கிலமொழியும் புகழோங்கியிருந்த காலத்தில் தமிழர் பண்பாடு, மரபு, சைவ நெறி, தமிழ்மொழி ஆகியவற்றின் மறுமலர்ச்சிக்குச் சைவப் பெருமக்கள் வித்திட்டனர். கல்வி மூலமே எமது பண்பாட்டையும், சமய ஒழுக்கத்தையும் வளர்க்க முடியும் என்பதை உணர்ந்து சைவத் தமிழ் வளர்க்கும் வித்தியாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த அடிப்படையில் எமது கல்லூரி வளவில் முளை கொண்ட உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை கற்பக விநாயகப் பெருமான் அருளினால் வளர்ச்சி பெற்று இன்று பவள விழாக் கண்டு பெருமையுறுகின்றது. நல்ல மனிதர்களின் உள்ளத்துதித்த உயர்ந்த நோக்கம் இன்று சைவத் தமிழ் வித்தியாசாலையாகச் சிறப்புற மிளிர்வது கண்டு பெருமையடைகின்றோம்.

ஆரம்ப காலத்திலிருந்தே எத்தனையோ இடையூறுகளைக் கடந்து வளர்ச்சி பெற்று இவ்வித்தியாசாலை இன்று எமது கொத்தணியின் சிறந்த கல்வி நிறுவனமாக விளங்குகின்றது. பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் சிறப்புத் தேர்ச்சி பெறச் செய்தும் வருகின்றது. ஆனாலும் இன்று வசதி படைத்தவர்கள் நகரப் புறப் பாடசாலைகளை நாடித் தம் பிள்ளைகளைச் சேர்க்கும் செயற்பாடு கிராமப் புறப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதைக் கல்வி உலகம் கசப்போடு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த வகையில் இன்று இவ்வித்தியாசாலையானது வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்வியூட்டி முதன்மை பெறச் செய்வதில் முன்னிற்கின்றது.

சிறந்த சைவச் சூழலில் நந்தமிழ்ச் செல்வங்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி, சமுதாய உயர்வுக்கு உதவுகின்ற உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் கல்விப்பணி வளர, உயர, சிறக்க விநாயகப் பெருமான் அடியிணையை இறைஞ்சி வாழ்த்துவோம்.

வாழ்க, வளர்க.

சி. பாலசுப்பிரமணியம்

### மருதனார் மடம்
### முன்னைநாள் கோட்டக்கல்வி அதிகாரி
## திரு. ச. தனஞ்சயன் அவர்களது

# பாராட்டுரை

''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே' இது ஓர் அமிர்தவாசகம். உயர்ந்தவர்களைக் கொண்டதே உலகம் என்பது மேலே கூறப்பெற்ற வாக்கியத்தின் உட்பொருளாகும். அஃதாவது கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியார்களைத் தன்னகத்தே கொண்டதுதான் உலகம்.

ஒருவனை, உயர்ந்தவனாக, நல்லவனாக வளரச் செய்வது கல்வி. கல்வியை ஊட்டுபவர்கள் நல்லாசிரியர்கள். எனவேதான் ''எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவன்'' என்று ஆசிரியர் போற்றப்படுகின்றார். நாட்டு வளர்ச்சிக்குப் பல ஸ்தாபனங்கள் காரணம் ஆகலாம். அப்படியான ஸ்தாபனங்களில் முன்னணியிற் கணிக்கக்கூடிய பெருமை வித்தியாலயங்களுக்கே உண்டு. வித்தியாலயங்களில் கல்வி கற்று முன்னேறுகின்ற மாணவர்களும் அவர்களுக்குக் கல்வி புகட்டும் ஆசிரியர்களும் பாராட்டப்படுகின்றார்கள்.

இவ்வாறாக முன்னணியில் இருக்கும் ஸ்தாபனங்களில் ஒன்றே உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம். இவ்வித்தியாலயத்தின் உயர் தனிச்சிறப்பை முன்னர் பலரும் சொல்ல யான் கேட்டதுண்டு. எனது சேவைக் காலத்தின் பிற்பகுதியில் யான் மருதனார் மடம் கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்த காரணத்தினால் குறித்த உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் நல்ல சேவையினை நேரடியாகவும் அறிந்து கொண்டேன்.

சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தை அடிப்படையாகக் கொண்டு நீண்டகாலமாக இயங்கி வரும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பவள விழாவினைக் கொண்டாடுவதை அறிந்து மிகவும் அகமகிழ்வு கொள்கின்றேன். பவள விழாவின் கனதியை எடுத்துக் காட்டும் வகையில் பவள விழா மலரை வெளியீடு செய்வதற்குப் பெருமுயற்சி எடுத்துள்ள பாடசாலை அபிவிருத்திச் சபையின் சேவையை உளமாரப் பாராட்டுகின்றேன். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் புகழ் ஓங்குக.

**ச. தனஞ்சயன்**

## சிவதர்ம வள்ளல், கலாநிதி க. கனகராசா அவர்கள்

வழங்கும்

# பாராட்டுரை

கடந்த எழுபத்தைந்து வருட காலமாகக் கல்விப்பணி புரிந்து நல்லவர்களையும் வல்லவர்களையும் உருவாக்கித் தந்த சைவத் தமிழ் வித்தியாலயத்தின் சாதனையை அதன் வளர்ச்சியை அவ்வப்போது கண்டும் கேட்டும் நாம் பெருமிதம் கண்டு வந்துள்ளோம். இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட தலைமையாசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் பலரை நாம் சந்தித்தும் அவர்கள் முயற்சிகளை அறிந்தும் வந்துள்ளோம்.



ஆங்கிலம் ஆட்சிமொழியாக அமைந்திருந்த காலமது. தமிழ் மொழியில் மூன்றாவது வகுப்பிலாவது சித்தியடைந்தவர்கள்தான் ஆங்கிலப் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டார்கள். இதனால் ஆங்கில பாடசாலைகள் அமைந்துள்ள வளவிலேயே மூன்றாம் வகுப்பு வரையில் கல்வி போதிக்கும் தமிழ்ப் பாடசாலைகளும் அமைக்கப்பட்டன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பல இன்றும் ஆரம்ப பாடசாலைகளாகத் தொடருகின்றன. உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட சைவத்தமிழ் வித்தியாசாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் பாங்கரில் பதினோராம் ஆண்டு வரை கல்வி போதிக்கும் வித்தியாலயமாக விளங்குவதற்குப் பல்லாற்றாலும் உதவியவர்களை நாம் நன்றியறிதலுடன் நினைவு கூரவும் வேண்டும்.

கற்பக விநாயகர் துணை தொடர உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் முதலாந்தர முன்னணிக் கல்லூரியாக எதிர்காலத்தில் விளங்க அருள்புரியும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன்.

க. கனகராசா

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையின் செயலாளர்

வைத்தியகலாநிதி வே. யோகநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் பவள விழா கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் அத்துடன் இணைந்த ஏனைய பாடசாலைகளின் அதிகாரசபையால் ஸ்தாபிக்கப்பட்ட பதின்மூன்று பாடசாலைகளுள் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையும் ஒன்றாகும். இந்த அதிகாரசபையின் முதலாவது கல்லூரியாகிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1990ஆம் ஆண்டில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை 1890ஆம் ஆண்டில்யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பராமரிப்பை செவ்வனே நடத்துவதற்கு ஆறுபேர் கொண்ட ஒரு சபையை ஸ்தாபித்தது. இச்சபை 1902ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினதும் அத்துடன் இணைந்த ஏனைய பாடசாலைகளின் அதிகார சபையாகச் சட்டமூலம் மாற்றப்பட்டது. பிரபல்யமான கடமையுணர்ச்சி உள்ள செயல் வீரர்கள் இந்த அதிகாரசபையில் இடம் பெற்றார்கள். முன்பு கூறியபடி உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையும் இவர்கள் ஸ்தாபித்த பாடசாலைகளில் ஒன்றாகும். உரும்பிராய் இந்துக்கல்லூரியும் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையும் உரும்பிராயில் ஸ்தாபிக்கப்பட்ட மற்ற இரு பாடசாலைகளாகும். 1915ஆம் ஆண்டில் இப்பாடசாலை தொடங்கும் பொழுது மூன்றாம் வகுப்பு வரையும் இருந்தது. இப்பொழுது பதினோராம் ஆண்டு வரையும் கல்வி கற்க வசதிகள் உள்ளன. இப்பொழுது ஏறக்குறைய 875 மாணவர்கள் இங்கு உள்ளனர். பிரபல்யமான பாடசாலைகளில் கல்வி கற்க வசதியற்றோர் இந்தப் பாடசாலையில் கல்வி கற்று நன்மையைப் பெறுகின்றார்கள். இங்கே கல்விகற்ற மாணவர்கள் வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், கல்விமான்கள் ஆகியோராகப் பரிணமித்து இந்த நாட்டிலும் வெளிநாடுகளிலும் சேவை செய்கிறார்கள். பிரபல்யமான உரும்பிராயில் வாழும் பெருமக்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் ஆகியோரின் விடாமுயற்சியால் இப்பாடசாலை இந்த நிலைக்கு வந்துள்ளது. மேலும் இப்பாடசாலை சர்வகலாசாலைக்குச் செல்லக் கல்வி கற்கக் கூடிய கல்லூரியாக மலர வேண்டுமென்று வாழ்த்துவதுடன் காலகதியில் நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும் என்று இப்பாடசாலைக்கு அண்மையிலுள்ள கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கிறேன்.




**வே. யோகநாதன்**

உரும்பிராய் சைவத் தமிழ வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர்

திரு. வி. அரியநாயகம் அவர்களின்

# ஆசிச் செய்தி

யாழ் / உரும்ரபிரய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஸ்தாபமாகி எழு பத்தைந்து வருடங்கள் பூர்த்தியடைந்ததினைக் கொண்டாடு முகமாகப் பவள விழா மலர் வெளியிடுவதை அறிந்து பெருமகிழ் வெய்தும் அதே வேளை எனது ஆசிச் செய்தியை வழங்குவதி லும் ஆனந்தம் அடைகின்றேன்.



ஒரு கல்விச்சாலை ஏழு தசாப்தங்களுக்கு மேலாக அதைச் சூழவுள்ள மாணவர்களுக் குச் சிறந்த கல்வியோடு நல்லொழுக்கத்தை யும் போதித்து வந்தமை அதன் கல்விப் பாரம்பரியத்தின் கனகாத்திரத்தை ஓரளவு அளவிட ஏதுவாகிறது. சைவத்தையும் தமி ழையும் தன் இரு கண்களென இலச்சினை பொறித்து இவ்வளவு காலமும் குறைவில் லாது வழங்கியமை இனிமேலும் அதன் கல் வித் தொண்டினைத் தொடர உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. காலங்கால மாகக் கல்லூரியில் கடமையாற்றிய அதிபர் ஆசிரியர்களின் அயராத சேவை மேற்படி இலக்குகளை எய்த உதவின என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். இக் கல்விச்சாலை தொடர்ந்து பல்லாண்டுகள் வெற்றி நடைபோட எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

மலருக்கு ஆசிச் செய்தி வழங்குமாறு கேட்டுக்கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வி. அரியநாயகம்

உரும்பிராய்க் கோத்தணியின் முன்னைநாள் அதிபர்

## திரு. செ. சிவன்பாலன் அவர்களது

# வாழ்த்து

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை எழுபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, பவள விழாக் காணும் இவ்வேளையிலே அதற்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் 1941 இல் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்த நாளிலிருந்து இன்று வரையில் அதன் வளர்ச்சியை அவதானிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஆரம்பத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரி வளவிலேயே இருந்து, 1949 இல் தற்போதைய இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள இப் பாடசாலை, இதற்குப் பொறுப்பாக இருந்த அதிபர்களினதும் கற்பித்த ஆசிரியர்களினதும், பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த பெற்றார் ஆசிரிய சங்க உறுப்பினர்களினதும் நன் முயற்சியினால் இன்று ஒரு தலைசிறந்த வித்தியாலயமாகத் திகழ்கின்றது 1988 ஆம் வருடம் உரும்பிராய்க் கொத்தணி உருவாகி, நான் கொத்தணி அதிபராக இப்பாடசாலையின் அலுவல்களில் தொடர்புபடத் தொடங்கிய காலத்தில் திருமதி ச. பரங்கிரிநாதன் அவர்கள் பாடசாலை அதிபராக இருந்தார். அவர் ஓய்வு பெற்றதன் பின்னர் செல்வி அ. சின்னத்தம்பி அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார். கல்வி கலாச்சார, விளையாட்டுத் துறைகளில் உரும்பிராய்க் கொத்தணியின் வளர்ச்சிக்குச் சைவத் தமிழ் வித்தியாசாலையின் பங்கு போற்றத் தக்கது.

பாடசாலைகளில் பெறப்படுகின்ற கல்வி, தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு மாத்திரமல்லாது எமது இனத்தின் மொழி, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் முதலியவற்றைப் பாதுகாக்கவும் பேணி வளர்க்கவும் பயன்பட வேண்டியது, மிகவும் முக்கியமானது. இவ்வாறான கல்வியினைச் சிறந்த முறையில் இக்கிராம மக்களுக்கு இப்பாடசாலை தொடர்ந்தும் வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

செ. சிவன்பாலன்

கோப்பாய் வட்டாரத்தின் முன்னாள் கல்வி அதிகாரி

திரு. ஆ. வ. தங்கராசா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் கமழுகின்ற உரும்பிராய்க் கிராமத்தில் அமைந்துள்ள உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பவள விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வித்தியாலயமும் ஆலயமும் ஒரு கிராமத்தின் இருகண்கள் என்பார்கள். கற்பக விநாயகர் ஆலய வீதியில் புனிதமானவொரு சமயச் சூழலில் இவ் வித்தியாலயம் இயங்கி, கல்வி பரப்பி வருவது ஒரு சிறப்பு அம்சமாகும். யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் கல்வி மணம் பரப்பி ஒரு தலைசிறந்த ஆலவிருட்சமாகப் புகழ் பூத்துச் சொரிந்து, தண்ணளிமிக்க தருநிழலாக ஊரின் நடுவே விளங்குகின்றது. இந்த ஆலவிருட்சத்தின் விழுதுகள் உலகமெங்கும் வியாபித்துத் தேமதுரத் தமிழோசை பரப்பி வருதல் கண்கூடு.

ஒரு தசாப்தத்திற்கு மேலாகக் கோப்பாய் வட்டாரத்தின் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய காலத்தில் இவ் வித்தியாலயம் துரித வளர்ச்சியடைந்து வருவதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்துள்ளேன். முன்னாள் அதிபர்களான வி. அரியநாயகம், அ. பஞ்சாட்சரம் ஆகியோரின் அயரா உழைப்பும் ஊக்கமுமே வித்தியாலய வளர்ச்சிக்கு முக்கிய காரணிகளில் ஒன்று என்பது எனது அசையாத மதிப்பீடு.

எனது காலத்தில் இவ் வித்தியாலயத்தை ஒரு மகாவித்தியாலயத்தின் தரத்திற்கு உயர்த்தப் பல முயற்சிகள் எடுத்தும், காலநிலை இடம்கொடுக்கவில்லை. இவ் வித்தியாலயம் மகா வித்தியாலயத்தின் தரத்திற்கு உயர்த்தப்பட்டு, கல்வியில் மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையாரை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**ஆ. வ. தங்கராசா**

மட்டக்களப்பு, மஹா வித்துவான்

முதறிஞர் F. X. C. நடராசா அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

எங்களுடைய சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பவள விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைக்காத நாள் எல்லாம் வீணுள்களாம்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்ற திருநாவுக்கரசர் வாக்கின்படி அடியேனுல் வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைக்காதபோது என்னுள்ளம் வருந்தும்.

வரலாறு மிக்கதோர் வித்தியாலயம். கற்பகப் பிள்ளையார் வளவில் அமைந்த இக் கல்விக்கூடம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிபாலனத்தில் வளர்ந்தது. உரும்பிராய் இந்து ஆங்கில பாடசாலை அதிபராயிருந்த சீதாராமையர் உருவாக்கிய மாணுக்கர் அடியேன்.

வித்தியாதானம் மேன்மைமிக்க தானம். இலிங்கக் குடும்பத்தினர் உரும்பிராயினை வதிவிடமாகக் கொண்டவர்கள். அவர்கள் உரும்பிராய் கிராமமக்கள். ஆவன செய்து உபகாரமாக இருந்தார்கள்.

அதிபர்கள் காலத்துக்குக் காலம் மாறி மாறிக் கடமை புரிந்தார்கள் அவர்களது சேவைகள் பாராட்டற் பாலன.

அதிபர்கள், சட்டத்தரணிகள், எஞ்சினியர்மார், நில அளவையாளர், பாராளுமன்ற உறுப்பினர், ஆசிரியர்கள், மலாயன் பென்சனியர்மார், கைவல்லாளர் போன்ற பல் துறையினரை வளர்த்த பாடசாலை இதுவாகும். இது மேலோங்கி வளர வாழ்த்துகின்றேன்.

இவ்வித்தியாலயம் செந்தமிழ் போல் செழித்து, ஓங்கி வளம்பெற இறைவனடி தொழுகின்றேன்; வணங்குகின்றேன்.

F. X. C. நடராசா

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
அதிபர்



செல்வி அ. சின்னத்தம்பி அவர்கள்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய
உப அதிபர்



திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்கள்

உ

# யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை—வரலாறு

## ஆரம்பம் :

''நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.''

யானையின் முகத்தைப் போலும் முகத்தையுடைய விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்குமானால் கல்வி உள்ளிட்ட சகல செல்வங்களும் ஒருவருக்குத் தாமே வந்து பொருந்தும் என்கின்றார் திருவருட் பயன் ஆசிரியர் உமாபதிசிவாசாரியர்.

கற்பக விநாயகர் பொற்பதங்களை அடியார்கள் மனதில் இருத்தி வழிபட்ட புண்ணியப் பேற்றினால் ஆரம்பமான பாடசாலையே உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.

நாவலர் வழியில் சைவ தமிழ்க் கலாசாரப் பண்பாட்டுடன் இயங்கி வந்த இந்துக் கல்லூரி அதிகாரசபையினால் உரும்பிராய் இந்துக்கல்லூரி வளவில் 1915இல் ஆரம்பிக்கப்பட்டது இப்பாடசாலை. அக்காலத்தில் அமுதலிங்கச் சட்டம்பியார், சின்னப்பு உபாத்தியாயர் ஊர்வாசிகளுதவியுடன் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் இது நடைபெறலாயிற்று. அப்பொழுது பாலர் வகுப்பிலிருந்து 3ஆம் வகுப்புவரை நான்கு வகுப்புக்கள் இருந்தன. பின்னர் பண்டிதர் மயில்வாகனம் தலைமையில் நான்காம் வகுப்பு வரை ஆரம்பமாயிற்று. பின் வந்த திரு. ஆ. கந்தையா தலைமையில் ஐந்தாம் வகுப்புத் தொடங்கப்பெற்றது. அவருக்குப்பின் வந்த பண்டிதர் பொன்னையா அவர்கள் 7ஆம், 8ஆம், வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார். 1945ஆம் ஆண்டு இலவசக்கல்வி காரணமாக 5ஆம் வகுப்பு வரை குறைக்கப்பட்டது. அப்பொழுது தலைமையாசிரியராக இருந்தவர் திரு. ஆ. கந்தையா அவர்கள்.

கல்லூரி வளர்ச்சிக்கு இடங்கொடுக்கும் பொருட்டு இத் தமிழ்ப் பாடசாலை கல்லூரி வளவை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

## இடமாற்றம் :

1949ஆம் ஆண்டு மாசிமாதம் திரு. நா. தம்பித்துரை தலைமையில் பெற்றார் ஆசிரிய சங்கம் ஒன்றைக் கூட்டினர். பாடசாலையை இடமாற்றும் விஷயத்தில் ஷெ சங்கம் மும்முரமாக ஈடுபட்டது. அவர்களது முயற்சிகள் கற்பகப் பிள்ளையார் திருவாலயத்துக்கு அருகில் குறித்த ஆலயத்துக்குச் சொந்தமான 11 பரப்புக் காணியில் புதிய கட்டடம் தோற்றுவதற்கு வழி வகுத்தது.

இக்கட்டடத்துக்கு அத்திபாரமிட்ட பெருமை இந்துக்கல்லூரி அதிகாரசபையின் முகாமையாளராக இருந்த அத்துவக்காத்து த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களுக்கே உரியது. இந்துக்கல்லூரி அதிகாரசபையின் நிர்வாகத்தில் பங்கு கொண்டு உழைத்த இராசவாசல் முதலியார் திரு. வை. பொன்னம்பலம் அவர்களுக்கும், சமூகத் தொண்டரான திரு. சின்னப்பு செல்லப்பா அவர்களுக்கும், திரு. சு. நல்லைநாதன் உடையார் அவர்களுக்கும் பாடசாலைப் புனரமைப்பில் பெரும்பங்கு இருந்தது. 1949ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாசம் 5ஆம் திகதி புதிய சூழ்நிலையிற் புதிய கட்டடத்தில் பாடசாலை ஆரம்பமாயிற்று. 120 அடி நீளமும் 24 அடி அகலமும் கொண்ட புதிய கட்டடத்தில் பாடசாலை இயங்கத் தொடங்கியது.

உரும்பிராய் கற்பக விநாயகரின் ஆதனத்தில், கற்பகப்பிள்ளையார் வீதியில் இவ் வித்தியாசாலை அமைந்ததும் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். தமிழ்மொழி மூலப்

பாடசாலையாய் இயங்கி வந்த இப்பாடசாலை சமய வளர்ச்சிக்கும் உரியதாக விளங்குகின்றது. சைவத் தமிழ் வித்தியாசாலை என்ற பெயருக்கு ஏற்ப இப்பாடசாலை சைவம் தமிழ் இரண்டையும் இரு கண்கள் எனப் போற்றி வளர்க்கும் பேறு பெற்றது.

**மாணவர்கள் :**

ஊரின் நடுவில் இவ்வித்தியாசாலை அமைந்திருப்பதினுல் நான்கு திசைகளிலும் இருந்தும் மாணவர்கள் கற்றலை நோக்கி நாடி வருகின்றூர்கள். பாலர் பிரிவு தொடங்கிப் பத்தாம் வகுப்புவரை [1ஆம்ஆண்டு—11ஆம் ஆண்டு] இடம்பெற்றுள்ள இப் பாடசாலையில் கல்வியைத் தொடரவேண்டுமென்று அயலூர்ப் பிள்ளைகளும் தேடிவருவதுண்டு. பணவசதி படைத்தவர்கள் நகரப் பாடசாலைகளுக்குச் சென்றுவிடப் பெரும்பாலும் ஏழை மாணவர்களே இங்கு கற்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். வசதியற்ற குழந்தைகளுக்குச் சகல வசதிகளையும் கொடுத்து அம்மாணவர்களைக் கல்வித்துறையில் கைதூக்கிவிடும் பாரிய பொறுப்பினை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஏற்று அத்துறையில் வியத்தகு பணி ஆற்றி வருகின்றது.

இப் பாடசாலையிற் படித்து, ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பெற்றவர்களும் க. பொ. த. ப. (சாதாரண) தரத்தில் சித்தி பெற்றவர்களுமான பலர் வைத்திய கலாநிதிகளாகவும், பொறியியலாளர்களாகவும், பட்டதாரிகளாகவும் இன்னும் உயர் உத்தியோகத்தர்களாகவும் ஈழத்திலும் பிறநாடுகளிலும் விளங்கி வருகின்றூர்கள். இப்பொழுது இப்பாடசாலையில் 874 மாணவர்கள் [ஆரம்பபிரிவு 544, கனிஷ்டபிரிவு 330] கற்று வருகிறூர்கள்.

கோப்பாய் வட்டாரத்தில் முதலாம் ஆண்டில் இருந்து 11ஆம் ஆண்டு வரை இயங்கி வரும் கனிஷ்ட வித்தியாலயங்களில் கூடிய மாணவர்கள் தொகையைக் கொண்டது இப்பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலைமாணவர்கள், பாடசாலை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலும், வட்டார மாவட்ட நிகழ்ச்சிகளிலும், இப்பொழுது கொத்தணி கோட்ட மட்டத்திலும் பங்கு பற்றிப் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.

கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய சைவசமயபாடப் பரீட்சையில் தோற்றிய ஒன்பதாம் வகுப்பு மாணவி செல்வி நல்லையா இந்துமதி 1977 ஆம் ஆண்டில் விசேடமாகச் சித்திபெற்று அகில இலங்கைப் பரிசான தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**மாணவர் சங்கம் :**

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளில் மாணவர் சங்கங்கள் இயங்குகின்றன. மேற்பிரிவு மாணவர் சங்கத்தினுல் கையெழுத்துப் பிரதியாக வெளியிடும் பத்திரிகையின் பெயர் 'கற்பகம்' என்பதாம்.

**கட்டட வசதிகள் :**

சகல பிள்ளைகளும் கற்கக்கூடிய கட்டட இடவசதி இப்பொழுது உண்டு. இக்கட்டடங்களில் பல, பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு முன்னர் இப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கமுயற்சியாலும், நலன் விரும்பிகளின் நன்கொடைகளினுலுமே அமைக்கப்பட்டன.

மலேசியா, கோலாலம்பூரில் வாழ்ந்து வந்த உரும்பிராய் அன்பர் திரு. தம்பு குமாரசாமி அவர்கள் ஏழைமாணவர்களின் நலன்கருதி விஞ்ஞானகூட மண்டபத்தை அமைத்துக் கொடுத்தார்.

பலவித அழகுக்காட்சிகள் பொருந்திய நாடக அரங்கை ஆக்கிக் கொடுத்தவர்கள் பாடசாலைப்பெற்றூர்ஆசிரியர் சங்கத்தினர்.

கட்டடத் திருத்த வேலை விஷயங்களில் உதவிபுரிந்த திரு. செ. தியாகலிங்கம், கியூ. ஸி. குடும்பத்தினர் என்றும் பாராட்டுக்குரியவர்கள்.

கட்டடங்கள் பல இருந்தபோதிலும் உறுதியான மேல்மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்கவேண்டு மென்பது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் முதலானவர்களின் நீண்டநாள் விருப்பமும் முயற்சியுமாகும். இம்முயற்சிக்குக் கல்வித்திணைக்களம் விரைந்து உதவி புரியும் என்பது எமது நம்பிக்கை.

பாலர் பிரிவுக் கட்டடங்களும் பாலர்களின் அறிவுத்திறனை வளர்க்கக்கூடிய நவீன வசதிகள் கொண்டதாக அமைய வேண்டியது அவசியமாகும்.

### பாலசுப்பிரமணியர் ஆலயம் :

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்து வந்த பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக நீண்டகாலம் பணிபுரிந்தவர் திரு. அ. இளையதம்பி அவர்கள். மலேசியாவில் உயர் உத்தியோகங்களை வகித்து வந்தவரான இவர் ஓய்வு பெற்று இவ்விடம் வந்தகாலத்தில் மாணவர்களின் சமயவழிபாட்டுமுறைகளை அவதானித்தார். அதன் பெறுபேறாக மாணவர்கள் தினசரி வழிபடக்கூடிய வகையில் பாலசுப்பிரமணியர் திருவாலயத்தை அமைத்தார். இவ்விஷயத்தில் மிகவும் ஒத்தாசையாக இருந்தவர் மலாயன் பென்சனர் திரு. இ. சிவகுரு அவர்கள். இவ்வாலயத்தில் தினசரி பூசையும், விசேடகாலங்களில் விசேடபூசைகளும் நடைபெற்று வருகின்றன. வெள்ளிதோறும் மாணவர்களது கூட்டுப்பிரார்த்தனை இவ்வாலய முன்றலிலேயே பல்லாண்டுகளாக நடைபெற்று வருகின்றது. நால்வர் குருபூசைகள், நாவலர், வள்ளுவர் குருபூசைகள், நவராத்திரி விழா என்பன முக்கிய நிகழ்ச்சிகளாம்.

### பஞ்சலிங்கங்கள் :

உரும்பிராயின் உயர் தனிச் சிறப்பை உலக அரங்கில் பரவச்செய்தவர்கள் பலர். அவர்களில் முக்கியமானவர்கள் பஞ்சலிங்கம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் தேசாதிபதி பதவியை வகித்த திரு. செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் இப்பாடசாலைப் பரிசளிப்பு விழாவிற்பங்குபற்றி உரை நிகழ்த்தினார். பாலர் கல்வி வளர்ச்சியின் பொருட்டு உபகரணங்கள் பலவற்றைப் பெற்றுக்கொடுத்தார். கணிதப்பேராசிரியரும் முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் பாடசாலையை இந்த இடத்தில் ஸ்தாபித்த காலத்திலும், அதனைத் தொடர்ந்தும் உதவிகளைப் புரிந்தார். திரு. செ. தியாகலிங்கம் அவர்களும் அவ்வழியில் பாடசாலை வளர்ச்சியில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

### பிரமுகர்கள் :

பிரபல சட்டத்தரணி திரு. எஸ். நடேசன், கியூ. ஸி. அவர்களும் நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் இப்பாடசாலை வைபவங்களிற் பங்குபற்றி உரை நிகழ்த்தியும், உதவி புரிந்தும் உற்சாக மூட்டினார்கள்.

இந்துக்கல்லூரி அதிகாரசபையின் முக்கிய பதவிகளை வகித்த வழக்கறிஞர் திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்களும், திரு. ஆ. முத்துவேலு, திரு. வே. நல்லையா, திரு. சி. செல்லப்பா, திரு. அ. சேனாதிராசா, திரு. இ. கந்தசாமி, திரு. கு. நவரத்தினசாமி உள்ளிட்ட பலரும், நலன் விரும்பிகளும் ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்கது. பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்த உத்தமர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க இவர்களுடன் இன்னும் பலர் இருக்கின்றார்கள்.

இந்துக்கல்லூரி அதிகாரசபையின் தனாதிகாரிப் பதவியை வகித்து வந்த இவ்வூர்ப் பிரமுகர் இராசவாசல் முதலியார் வ. பொன்னம்பலம் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சி கருதி ஆற்றிய பணிகள் அநேகமானவை.

### அதிபர்கள் :

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இன்றைய உன்னத வளர்ச்சிக்கு அயராது உழைத்த முன்னைய அதிபர்கள் வரிசையில் திருவாளர்கள் ஆ. கந்தையா, சி. பொன்னுத்துரை, சு. குமாரசேகரம், கு. சபாரத்தினம், க. கதிரவேல், ச. கதிரவேலு, க. நடராசா, வி. அரியநாயகம்,

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், திருமதி ச. பரங்கிரிநாதன் என்பவர்கள் இடம் பெறுவார்கள்.

இடைக்காடு திரு. ஆ. கந்தையா அவர்கள், தலைமையாசிரியராக இருந்த காலத்தில் எடுத்த நடவடிக்கைகள் சிறப்பானவை. திரு. கந்தையா அவர்கள் பாடசாலையை மிகவும் நேசித்தார். இப் பாடசாலையின் முகாமையாளர்களாகிய இந்துக்கல்லூரி அதிகார சபையினரின் பெரும் பாராட்டு தல்களைப் பெற்றவர்.

திரு. சி. பொன்னுத்துரை அவர்கள், இப் பாடசாலையில் உதவி ஆசிரியராகவும், சிரேட்ட ஆசிரியராகவும், தலைமையாசிரிய ராகவும் பணிபுரிந்தவர். அவரது சேவைக் காலம் இங்கே முப்பது வருடங்களாகும். இந்துக்கல்லூரி அதிகாரசபையினால் தேர்ந் தெடுக்கப்பட்ட இவரது சேவை 1966வரை நீடித்தது. பாடசாலையில் பல கட்டடங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர். பாடசாலையில் உள்ள நாடக மேடைக்கு 'பொன்னுத்துரை' அரங்கு என்று பெயர் சூட்டப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருக் கிறார்.

திரு. சு. குமாரசேகரம் அவர்கள், நிமிர்ந்த நடையும் நேரான பார்வையும் உடையவர். பரமேசுவரக் கல்லூரியின் பிரதம பகுதியின் தலைமையாசிரியராக இருந்த இவர் இந்த ஊர் மக்களின் வேண்டுகோளை ஏற்று இப் பாடசாலையின் அதிபர் பதவியை 16-6-1966 இல் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து அவர் கள் 5 ஆண்டுகள் பணிபுரிந்தார். இவரது காலத்தில் கட்டட வளர்ச்சி உன்னத நிலை யடைந்தது. பரீட்சைப் பெறுபேறுகளும் மிகவும் சிறப்பாக இருந்தன.

திரு. கு. சபாரத்தினம், திரு. க. கதிரவேல் இருவரும், அதிபராகப் பணியாற்றிய காலம் மிகக் குறைவானவை. எனினும் தங்கள் சக்திக்குஎட்டிய அளவுக்கு இவர்கள் முயற்சி இருந்தது. திரு. ச. கதிரவேலு, திரு. சு. நடராசா என்பவர்களும் மிகவும் குறுகிய காலம் அதிபர்களாகக் கடமையாற்றி னார்கள்.

1975 இல் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட திரு. வி. அரியநாயகம் அவர்கள் கலைப் பட்டதாரியாவர். கல்வியியல் டிப்பு ளோமா பட்டம் பெற்றவர். பன்னிரண்டு ஆண்டுகள் அதிபராகப் பணிபுரிந்தவர். பரிசளிப்பு விழா, கலைவிழா, பொருட் காட்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்த வர். இவரது காலத்தில் வைரவிழா நடை பெற்றது. க. பொ. த. ப. (சாதாரணம்) வகுப்பு மாணவர்கள் பரீட்சையில் கூடியளவு தேர்ச்சிபெற வழிகாட்டியவர். இப்பாட சாலையின் ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்கு அச்சாணியாக இருந்தவர்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் 3 - 9 - 1951இல் இப்பாடசாலையின் உதவி ஆசிரியராகச் சேர்ந்து துணை அதிபராகிப் பின்னர் அதிபருமாகி 12-11-1987 வரை (37 வருடங்கள்) பணி புரிந்து ஓய்வு பெற்றவர். இப்பாடசாலையின் வைரவிழாவையொட்டி வைரவிழா மலர் சிறப்பாக வெளிவர உழைத்தவர் பெற்றார் ஆசிரியர் சங்க வாயி லாகவும் வேறு பொது ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பாலும் பாடசாலை தரம் உயரப் பணி புரிந்தவர். சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் பாடசாலையின் நலன் கருதித் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். இப்பொழுது பாடசாலை அபி விருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்து கொண்டு பாடசாலையின் முன்னேற்றத்துக் காக உழைத்து வருகின்றார்.

இப் பாடசாலையில் பெண் அதிபர்கள் வரிசையில் முதலாம் இடத்தைப் பெற்ற வர் திருமதி சகுந்தலாதேவி பரங்கிரிநாதன் ஆவர். 1950இல் இப்பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்ற இவர் 1989ஆம் ஆண்டு நடுப்பகுதிவரை [39 வருடம்] கடமையாற் றினார். ஆசிரியராக, உப அதிபராக, அதி பராக இருந்த இவர் பாடசாலையின் சகல துறைப்பட்ட முயற்சிகளிலும் மிகுந்த அக் கறையுடன் உழைத்தவர். ஓய்வு பெற்ற பின்னரும் பாடசாலை வளர்ச்சிக்குக் காலத் துக்குக் காலம் உதவி வருகின்றார்.

**இப்போழுதைய அதிபர் :**

இப்பொழுது இப்பாடசாலையின் அதி பராகப் பணிபுரிந்து வருபவர் செல்வி அ.

சின்னத்தம்பி ஆவர். உயர்தர விஞ்ஞானப் பயிற்சி பெற்றவர். 1-2-76இல் விஞ்ஞான ஆசிரியராக இடமாற்றம் பெற்று வந்த இவர் 1989இல் உப அதிபராகப் பணியாற்றி வருகையில், முன்னைய அதிபர் திருமதி ச. பரங்கிரிநாதன் ஓய்வுபெற அவரதுபதவிக்கு உயர்த்தப்பட்டவர். பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் உள்ளிட்ட அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றுப் பாடசாலையை நன்கு நடத்தி வருகின்றார். கொத்தணி, கோட்ட மூலம் பாடசாலை வளர்ச்சிக்கு இவர் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்கு உரியவை.

## சிரேட்ட உதவி ஆசிரியர்கள் :

இப் பாடசாலையில் நீண்ட காலம் சிரேட்ட உதவி ஆசிரியர்களாக இருந்தவர்கள் திரு. சி. பொன்னுத்துரை, திருமதி இராமுப்பிள்ளை–தங்கமணி என்போர் இவ் வித்தியாசாலையில் முதல் நியமனம் பெற்று, ஓய்வு பெறும் வரை நல்ல சேவை செய்து பலரதும் அபிமானத்தை அமோகமாகப் பெற்றிருந்தார் திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை அவர்கள்.

சிரேட்ட உதவி ஆசிரியராகப் பணி புரிந்த திரு. வே. திருநாவுக்கரசு அவர்கள் அதிபராகப் பதவி உயர்வு பெற்று, கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்துக்கு மாற்றலாகிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துணை அதிபர்கள் :

இவ்வித்தியாலயத்தில் துணை அதிபர்களாகத் திரு. செ. சின்னத்துரை, திரு. அ. பஞ்சாட்சரம், திருமதி ச. பரங்கிரிநாதன், செல்வி அ. சின்னத்தம்பி ஆகியோர் பணி புரிந்துள்ளனர்.

## இப்போழுதைய துணை அதிபர் :

இப்பொழுது இப்பாடசாலையின் துணை அதிபராகப் பணிபுரிபவர் திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்கள்; சகல துறைகளிலும் நல்ல அனுபவம் வாய்ந்த ஆசிரியர். பாடசாலை நிர்வாகப் பொறுப்பில் மிகவும் அவதானமுடைய இவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தனாதிகாரியாகவும் இருந்து பெருந்தொண்டு புரிகின்றார். பாடசாலையுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் அபிமானத்தைப் பெற்றவர்; நல்ல உழைப்பாளி.

## பகுதித் தலைவர்கள் :

திருமதி க. இராஜேந்திரமும் [விஞ்ஞானப் பட்டதாரி], திருமதி ம. திருநாவுக்கரசுவும் [பயிற்றப்பட்ட முதல்வகுப்பு] பகுதித் தலைவர்களாகப் பணி புரிகின்றார்கள். மேல் வகுப்புக்களுக்குத் திருமதி க. இராஜேந்திரமும் கீழ்வகுப்புக்களுக்குத் திருமதி ம. திருநாவுக்கரசுவும் பொறுப்பாளர்களாக உள்ளனர்.

## இப்பொழுது கடமையாற்றும் ஆசிரியர்கள் விபரம் :

செல்வி அ. சின்னத்தம்பி — அதிபர்
திரு த. சிவசுப்பிரமணியம் — உப அதிபர்
திருமதி க. இராஜேந்திரம் } பகுதித்
திருமதி ம. திருநாவுக்கரசு } தலைவர்கள்

## உதவி ஆசிரியர்கள் :

திரு ச. செல்வரத்தினம், திரு. க. ஆனந்தராசா, திரு. இ. இராஜ்குமார் திரு. மு. மகாதேவன், திரு. செ. செல்வராசா, திரு. வி. எஸ். ஞானச்சந்திரன் [பகுதி நேரம்], திருமதி பொ. ஜெகநாதன் [நல்லாசிரியர் 1991] திருமதி சி. கணபதிப்பிள்ளை, திருமதி சீ. அன்னலட்சுமி, திருமதி சி. பவானந்தன், திருமதி செ. ஜெகநாதராசா, செல்வி கௌ. சுந்தரம், திருமதி தி. கணேசலிங்கம், திருமதி ரே பாலசுப்பிரமணியம், திருமதி ம. யோகேஸ்வரன், திருமதி ம. சிவசிதம்பரலிங்கம், செல்வி வா. பஞ்சாட்சரம், திருமதி அ. பஞ்சலிங்கம், செல்வி ரோ. இந்திரராசா, செல்வி வா. சியாதா, செல்வி மு. சுகுணமினி, செல்வி இ. உதயகலா, செல்வி ம. குமுதினி, திருமதி ஜெ. ஈஸ்வரன், திரு. ஆ இராமச்சந்திரன்.

### இப்பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்த உதவி ஆசிரியர்கள் :

திரு. அ. சின்னப்புச் சட்டம்பியார், திரு. மு. அமுதலிங்கச் சட்டம்பியார், பண்டிதர் நீ. சி. முருகேசு, திரு. த. சந்திரசேகரம், திரு. ரி. பொன்னம்பலம், திருமதி. ஞானமணி, திருமதி பெ. சின்னம்மா, திரு. எம். பொன்னுத்துரை, திரு. சி. எஸ். இராசையா, திரு. மு. வே. நவரத்தினம், திரு. செ. ஐயாத்துரை, திரு. க. சபாபதிப்பிள்ளை, திருமதி ப. சின்னத்துரை, திருமதி ம. சரவணமுத்து, திருமதி த. இராமுப்பிள்ளை, திரு. சி அப்புத்துரை, திரு. இ. சரவணமுத்து, திரு. நா. இராசையா, திரு. செ. சின்னத்துரை, திரு. வே. குலசேகரம்பிள்ளை, திரு. க. ஆறுமுகம், திரு. க. சோதிலிங்கம், திருமதி சி. ஆறுமுகம், திரு. வீ. ஆறுமுகம், திருமதி ச. சிவபாலசிங்கம், திரு. மு. விசுவலிங்கம், திருமதி இ. அப்புத்துரை, திரு. ஆர். இளையதம்பி, திரு. வி. மயில்வாகனம், பிரம்மஸ்ரீ சோ. சதாசிவஐயர், திருமதி ஈ, கணேசமூர்த்தி, பண்டிதர் இ. நவரத்தினக் குருக்கள், பண்டிதர் த. சுப்பிரமணியம், திரு. ச. முத்தையா, திரு. சி. தாமோதரம்பிள்ளை, பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, திரு. க. பொன்னுச்சாமி, திரு. சி. சிவராமலிங்கம், திருமதி மு. சிவராமலிங்கம், திரு. க. காசிப்பிள்ளை, திரு. இ. ஜெகசோதி, திரு. க. இராமுப்பிள்ளை, திரு. இ. ஆ. நாகலிங்கம், திருமதி த. சுப்பிரமணியம், திரு. ச. கதிரவேலு, திரு. சி. க. அருணாசலம், திருமதி ப. அழகரத்தினம், திரு. மு. நல்லையா, திரு. செ. குணசிங்கம், திரு. இ. தம்பித்துரை, திரு. வ. மதியாபரணம், திருமதி இ. கந்தையா, திருமதி அ. நேசதுரை, திரு. தி. ஐயாத்துரை, திருமதி ம. பண்டிதவரதன், செல்வி ச. குலநாயகம், திருமதி ப. நவரத்தினசிங்கம், திரு. க. சதாசிவம், திரு. மு. ஆறுமுகம், திரு. மு. கந்தப்பு, திரு. ந. சின்னத்தம்பி, திருமதி ப. கந்தையா, திரு. ம. பாக்கியநாதன், திரு. எஸ். சண்முகரத்தினம், திருமதி ச. பேரின்பநாதன், செல்வி ஞா. இராசையா, திரு. ப. ஜெகநாதன், திருமதி நீ. அமுசாகரன், திருமதி பு. கந்தையா, செல்வி தி. வேலுப்பிள்ளை, திரு. த. தேவராசா, செல்வி ந. இராசதுரை, திரு. நா. கனகலிங்கம், திரு. து. சிவசுப்பிரமணியம், திரு. அ. நாகரத்தினம், திரு. ம. மனோகரன், திரு. க. பாலசுப்பிரமணியம், திரு. சா. சிங்கராசா, திரு. செ. சின்னத்தம்பி, திரு. இ. நாகலிங்கம், திரு. வ. சுப்பிரமணியம், திருமதி கி. சோமசுந்தரம், திருமதி த. வெற்றிவேலு, செல்வி வ. செல்லத்துரை, செல்வி இ. குமாரசாமி, செல்வி செ. சண்முகம், திரு. எஸ். கங்கைநாதன், திருமதி பூ. தர்மரத்தினம், செல்வி ச. சண்முகம், திருமதி உ. தெய்வேந்திரம் திருமதி பு. அரிதாஸ், திருமதி கா. இராஜகோபால், திரு. கு. பிரேம்குமார், திருமதி க. இராசரத்தினம், திரு. க. யோகானந்தன், திருமதி அ. தர்மபாலா, திருமதி த. மாகலிங்கம், செல்வி சி. தயாபரி, திரு. கி. பி. சேவியர், செல்வி சு. புஷ்பலீலா, திருமதி கி. சோமசுந்தரம், திரு. எஸ். ஏ. துரைராசா, திருமதி வ. மகேந்திரன், [01-04--91 தொடக்கம்பலாலி ஆசிரிய கலாசாலைக்குத் தற்காலிக விரிவுரையாளராகச் சென்றுள்ளார்.] திருமதி தெ. குழந்தைவேலு, திருமதி மு. தர்மராசா, திருமதி ஞா. சிவசுப்பிரமணியம், திரு. வே. திருநாவுக்கரசு, திருமதி த. சிவச்சந்திரன், திரு. சோ. சரவணபவான், திருமதி ரே. பாலஸ்கந்தன், திருமதி கே. இராஜரத்தினம், திரு. ஆ. சபாநாயகம், திரு. சு. தங்கராசா, திரு. இ. தனபாலசிங்கம், திரு. த. தவராசா, திரு. க. கணபதிப்பிள்ளை, திருமதி ச. பகீரதன், திருமதி க. இராஜேந்திரம், திருமதி சி. இராஜகோபால், செல்வி ரோ. முத்துப்பிள்ளை, திரு. சு. சண்முககுமார், திருமதி வ. சிவப்பிரகாசம்.

### இப்பாடசாலையில் தொடர்ந்து கடமையாற்றி வெள்ளிவிழாக் கண்டவர்கள் :

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ந்தேர்ச்சியாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேற் சேவையாற்றி வெள்ளிவிழாக் கண்டவர்கள் : திரு சி. பொன்னுத்துரை, திருமதி த. இராமுப்

பிள்ளை, திரு. அ. பஞ்சாட்சரம், திருமதி தெ. குழந்தைவேலு, திரு. மு. விசுவலிங்கம், திருமதி இ. அப்புத்துரை, திருமதி த. வெற்றிவேலு, திருமதி ச. பரங்கிரிநாதன், திருமதி பொ. ஜெகநாதன், திருமதி ஞா. சிவசுப்பிரமணியம், திருமதி வ. சிவப்பிரகாசம்.

## கவின் கலைகள் தோ. மு. பாடங்கள் :

சங்கீதம், நடனம், சித்திரம், வர்த்தகம், விவசாயம், தையல் ஆகிய பாடங்களில் கணிசமான வளர்ச்சியுண்டு. இத்துறைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பல துறைப்பட்ட போட்டிகளிலும் பங்குபற்றியதுடன் வெற்றியுமீட்டியுள்ளனர்.

## வைரவிழா :

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வரலாற்றில் இங்கு கோலாகலமாக நடந்தேறிய வைரவிழா முக்கிய இடத்தைப் பெறுகிறது. கல்விப்பகுதியினரதும், கல்விமான்களினதும், பொதுமக்களினதும், பெரும் பாராட்டினை இவ்விழா பெற்றது. 7-4-77 வியாழனும், 8-4-77 வெள்ளியும் இவ்விழா சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது கல்வித்திணைக்களத்தில் [கொழும்பு] தமிழ்ப்பிரிவு அதிகாரியாக இருந்த ஶ்ரீ. கி. லக்ஷ்மணன், திருமதி பாலம் லக்ஷ்மணன், கல்விமா அதிபதி ஜோர்ஜ் மென்டிஸ், திரு. அ. வி. மயில்வாகனம் உள்ளிட்டவர்கள் விழாவில் பங்குபற்றியதுடன் விழாவின் சிறப்பைப் பற்றிச் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் சிலாகித்துக் கூறியும் உள்ளனர்.

இவ்விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது வைர விழா மலர் வெளியீடு. இன்றும் நறுமணம் வீசும் வைரவிழா மலராகவே கல்விப் பெரியார்களினால் கணிக்கப்பட்டு வருகிறது.

## பாடசாலை அபிவிருத்திச் சபை :

பாடசாலை தொடங்கிய காலத்தில் இருந்தே பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வாயிலாகப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர். பாடசாலையில் எடுக்கும் எந்த நல்ல நடவடிக்கையிலும் தோள் கொடுத்து உதவியிருக்கின்றார்கள். அதே வழியில் இப்பொழுதுள்ள பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

## பரிசளிப்பு விழா வைப்பு நிதி :

பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா முட்டின்றி நடைபெறும் பொருட்டுப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உரும்பிராய்க் கிராமிய வங்கியில் ''உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயப் பரிசளிப்பு விழா நிதி'' என்னும் தலைப்பில் முதலீடு செய்துள்ளது. குறித்த வைப்பு நிதியால் வரும் வட்டிப் பணம் பரிசளிப்பு விழாச் செலவினங்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்தப்படும். இந்நிதிக்கு இதுவரை உதவியவர்கள் திரு. சு. மனோகரரூபன், திரு. ஆ. செல்லையா, திருமதி கா. இராஜகோபால் என்பவர்களாவர்.

## பவள விழா :

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. ஒரு கல்வி ஸ்தாபனம் உருவாக்கப்பட்டு முக்கால் நூற்றாண்டு செவ்வனே இயங்கி, மேலும் மேலும் முன்னேறி வருகிறதென்றால் அதன் சரித்திரம் மிகவும் முக்கியமானதாகும். எழுபத்தைந்தாண்டு நிறைவினையொட்டிப் பவளவிழா ஒன்றினை இந்த ஆண்டு பிற்பகுதியில் நடத்துவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பவள விழா மலர் வெளியீடு முக்கிய இடம் பெற இருக்கிறது. குறித்த பவளவிழா இனிது நிறைவுபெற எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பிரார்த்திப்போமாக.

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.''

சேயலாளர்
(பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

# மேம்பாடு

கவிஞர் இ. முருகையன் அவர்கள்
(சிரேட்ட உதவிப் பதிவாளர்
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி
யாலயம் ஊர் சிறக்க
வருஞ்சிறார் வாழ்வை வளஞ்செய்த
வண்மை மதிப்பை எண்ணி
விரும்பி நம் மக்கள் பவள
விழாவெடுத் தார்களெனின்
கரும்பல்ல வோ, அந்தச் செய்தி!
கலைமகள் கண்ணருளே.

சின்னஞ் சிறிய இளைய
மனங்களைச் சீர்படுத்தி
நன்னெஞ்ச மாக்கி நலம்பண்ணும்
நன்றியை நாம் மறவோம்.
பொன்னம் பெரிய விழாச்செய்தல்
தக்கதே; பீடு பெற்று
மின்னும் கலைக்கூடம் மேன்மேலும்
பண்பட்டு மேம்படுமே.

உந்திமேல் ஏறும் உணர்ச்சிகள்
வாழட்டும்; ஊக்கமுடன்
சிந்தைகள் யாவும் திறமைகள்
ஈட்டிச் செழித்திடட்டும்;
செந்தமிழ்ச் சைவத்தின் தெய்விகம்
எங்கும் செறிந்திடட்டும்,
மந்திர ஆற்றற் பவள
விழாத்தரும் மாட்சியிலே.

# கல்வி — அன்றும் இன்றும்

பேராசிரியர் வ. ஆறுமுகம் அவர்கள்
(கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்)

கல்வி என்பது இன்று நேற்றுத் தொடங்கிய முயற்சியன்று. என்று மனித இனம் உருப்பெற்றதோ அன்றுதொட்டுக் கல்வியும் இடம்பெற்றுள்ளது என்பது கண்கூடு. காட்டில் அலைந்து திரிந்த வேட்டுவ நிலையிலுஞ்சரி, காட்டை அழித்து நாட்டைப் படைத்த நாகரிக நிலையிலுஞ்சரி மனித முன்னேற்றம் கற்றலின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. மனித வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதனை எதிர்நோக்கிய அறைகூவல்கள், அவன் முகங் கொடுக்க வேண்டியிருந்த நிலைமைகள் ஒவ்வொன்றும் மனிதனுக்கு ஏதோ ஒன்றினைக் கற்பிப்பனவாக அமைந்தன. அவற்றுக்கூடாகவே கல்வி இன்று பன்முகப் பரிமாணங்களையுடையதாக விசாலித்துள்ளது.

சமூகவாழ்வின் ஆரம்பத்தில் குடும்பமே கல்வி நிலையமாகத் திகழ்ந்தது. தந்தையும் தாயுமே பிள்ளையின் முதலாசிரியர்களாகச் செயற்பட்டனர். தந்தையைப் பார்த்துத் தனயனும், தாயைப் பார்த்து மகளும், செயற்படக் கற்றுக்கொண்டனர் எனலாம். அக்கல்வி வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான தொழில்களைப் பயிற்றுவதாகவே இருந்தது. காலஞ் செல்ல, மனித தொடர்புகள் பெருக, அறிவுத் தேவைகள் விருத்தியடைய, அவற்றைக் குடும்பம் நிறைவு செய்ய முடியாத நிலையில், குடும்பத்துக்குமப்பால் கல்வியை நாடிச் செல்லும் நிலை உருவாகியது. அந்தக் கட்டத்திலேயே குருவை நாடித் தேடிச் சென்று கல்வி கற்கும் மரபு தோன்றியது; கீழைத்தேய வழக்கில், குறிப்பாக இந்து மரபில், காணப்பட்ட குரு-சிஷ்ய மரபும், மேலைத்தேய வழக்கில் காணப்பட்ட தேவாலய மரபும் இத்தகைய ஒரு நிலையைப் பிரதிபலிப்பனவாகக் கொள்ள முடியும். தன்னை நாடிவந்த சீடர்களின் தரத்தையும் தன்மையையும் நோக்கித் தகுதியானவர்களைத் தனது மாணவராக ஏற்றுக் குரு கல்வி வழங்கும் வழக்கு அன்று கடைப்பிடிக்கப்பட்டது. அந்நிலையில் கல்வி ஒரு சிலருடைய தனியுடைமையாகவே காணப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் கல்வியானது மாணவனுடைய தேவையைக் கருத்திற் கொண்டே வழங்கப்பட்டது. நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அமைந்த அன்றைய சமுதாயத்தில் சமூகத்தின் மேல்மட்டத்தில் இருந்தவர்களே தலைமைப் பொறுப்புக்களை வகித்தனர். அவரவர் வகித்த பொறுப்புக்கேற்ற கல்வி தேவைப்பட்ட நிலையில் சமூகத்தின் மேல்மட்டத்திலிருந்தவர்களின் கல்விக்குக் கூடிய கவனம் செலுத்துவது இயல்பாகவே இருந்தது. சமூக அமைப்பின் அடித்தளமாக இயங்கிய, எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான, உடலுழைப்பில் ஈடுபட்டவர்களான தொழிலாள வகுப்பினர் பிரத்தியேகத் திறன் எதையும் தேவையாகக் கொண்டிருக்கவில்லை. ஆதலால், அவர்களுக்கு விசேட கல்வி எதுவும் வழங்கப்படவும் இல்லை. அரச பதவிகள், இராணுவப் பதவிகள், வணிகச்செயற்பாடுகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த மேல்மட்டத்தினருக்கு அந்தந்தத் தேவைகளுக்குப் பொருத்தமான கல்வி வழங்கப்பட்டது. அந்தப் பின்னணியில் உயர் குழுவினரே கல்விக்குரியவர்களாயினர்.

காலப்போக்கில், வாழ்க்கை நடைமுறைகளில் ஏற்பட்ட பல்வகை முன்னேற்றங்களினால் தொழில்களிலும் முன்னேற்றங்களும் அவற்றின் விளைவான மாற்றங்களும் கல்வியின் தேவையை அதிகரித்தன. விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள், அவற்றின் பயனாக ஏற்பட்ட தொழிற்புரட்சி, அதனையடுத்துச் சமூக அமைப்பில் தோன்

றிய புத்துணர்வுகள், அவற்றினடிப்படையில் வளர்ச்சி பெற்ற சமூக-அரசியற் கருத்துக்கள் ஆகியன எல்லாம் அறிவின் பரப்பெல்லையை விசாலிக்கச் செய்தன. அந்தப் பரந்த பரப்பினை உள்ளடக்குவதாகக் கல்வியிலும் விரிவாக்கம் ஏற்பட்டது.

புதிய சூழ்நிலைக்கேற்ற புதிய திறன்கள் தேவைப்பட, அவற்றைக் கொண்ட தொழிலாளர் குழுவினை உருவாக்கும் நிலைமை தோன்றியது. இத்தேவை கல்வியில் உயர் குழுவினருக்கு இருந்த ஏகபோக உரிமையைக் குலைப்பதைக் காணலாம். உயர் குழுவினர் தவிர்ந்த மற்றவர்களும் கல்வி பெறும் கதிநிலை உருவாகியது. படிப்படியாக ஏற்பட்ட சமூக வளர்ச்சியும், மக்களாட்சியின் எழுச்சியும், சாதாரண மனிதனுடைய கைகளுக்கும் கல்வியை எட்டச் செய்தன. மக்களினுடைய தெரிவுக்குட்பட்ட அரசுகளின் உதயம் சமூகநலனில் அக்கறை கொண்ட சமூக-நல அரசமைப்பினைத் தோற்றுவித்தது. மக்களாட்சி மகத்துவம் பெற மக்களுக்குக் கல்வியூட்ட வேண்டும் என்ற எண்ணம் பரவியது. ''எமது எசமானருக்குக் கல்வியளிக்க வேண்டும்'' என்ற சிந்தனையின் செயல் வடிவமே காலப்போக்கில் சகலருக்கும் கல்வி என்ற நடைமுறையை நிலைநாட்டியது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்து, உலகில் சமாதானத்தை நிரந்தரமாக நிலைபெறச் செய்வதற்கு, மக்கள் மனதில் சமாதானக் கருவை வேரூன்றச் செய்யக் கல்வியே தகுந்த கருவியாயிற்று. அதன் வெளிப்பாடே கல்வியை மனிதனின் பிறப்புரிமையாகப் பிரகடனப்படுத்தியது. ஐக்கிய நாடுகள் அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை மனித உரிமைப் பிரகடனத்தின் 26ஆம் பிரிவு அதனைப் பிரதிபலிக்கின்றது. இந்த அடிப்படையில், ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலிருந்து கல்வியைப் பெறும் உரிமையை இன்று கொண்டுள்ளது.

கல்வியை வழங்கும் பொறுப்பில் காலத்துக்கூடாக ஏற்பட்ட மாற்றமும் கணிசமானதாகவே காணப்படுகின்றது. ஆரம்ப காலத்தில், கல்வியை வழங்கியவர்கள் மதகுருமாராகவே இருந்தனர். அன்று மானிடத் தேவைகளின் அறிவுப்பரப்பினை உள்ளடக்கிய அறிவினை வழங்கும் ஆற்றலும் அனுபவமும் மதகுருமாருக்கே இருந்தது. கல்வியைப் பெற விரும்பியவர்கள் அக்கல்வியை வழங்கக்கூடிய குரு எங்குள்ளார் என்பதை அறிந்து அங்கு சென்றனர். அவ்வண்ணம் சென்றோருள் கற்கத் தகுதியானவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை குருவுக்கே இருந்தது. இக்காலத்தில் இடம் பெறும் தெரிவுத் தேர்வுகளைப் போன்று அவ்வழக்கு நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும், தத்துவார்த்த ரீதியில் அதுவும் தெரிவுத் தேர்வேயாகும். கல்வியானது குழந்தையின் பிறப்புரிமை என்ற கோட்பாடு அங்கீகரிக்கப்பட்ட இன்றைய நிலையில் அத்தகைய தெரிவின் சாத்தியத்தை நாம் எண்ணிப் பார்க்கலாம். அதுமட்டுமல்லாமல் குருவை நாடி மாணவர் சென்றதற்குப் பதிலாக, இன்று மாணவரைத் தேடிக் குரு வகுப்பறைக்குச் செல்வதும் சிந்திக்கத்தக்கது.

கல்வியை வழங்கும் பொறுப்பில் முழுவதையுமோ அல்லது பெரும்பகுதியையோ இன்று அரசு ஏற்றிருப்பதும் நோக்கத்தக்கது. அன்று குழவிப் பருவத்திலிருந்த 'அரசு' என்ற அமைப்பு தனது செயற்பாடுகளை இயன்றளவு சுருக்கிக்கொள்ள முனைந்தமை இயல்பானதேயாகும். அத்தகைய நிலையில் கல்வியை வழங்கும் விடயத்தில் பொறுப்பேற்பதற்கு வேறு நபர்/நிறுவனம் இருந்தபோது அரசு அப்பொறுப்பிலிருந்து 'தள்ளி நின்றமை' புரிந்து கொள்ளக்கூடிய செயலேயாகும். பூரண பொறுப்பினை ஏற்பதற்குப் பதிலாக மானியம்/நன்கொடை என்பவற்றுக்கூடாக அரசு தனது பங்களிப்பினைச் செய்தது. அன்றைய காலகட்டத்தில் அரசினுடைய உதவியுடன் பொறுப்பினைச் சுமந்த அமைப்பு இருந்தபடியால் கல்வி என்னும் செயற்பாடு கச்சிதமாக நிறைவேறியது. கல்வியின் பரப்பெல்லை, இன்றுபோல் பரந்ததாக இல்லாமல், குறுகியதாக அன்று இருந்தமையும் அதற்கு ஒத்தாசையாயிற்று.

காலப்போக்கில் கல்வியில் ஏற்பட்ட அகற்சியும், அதை வழங்குவதற்குத்தேவைப்பட்ட செலவின் பெருக்கமும், அரசினுடைய பங்களிப்பில் பெருக்கத்தை வேண்டி நின்றன. அரசின் அதிகார வரம்பின் பரப்பும், பலத்தின் பெருக்கமும் கல்வியில் அதன் ஈடுபாட்டைத் தவிர்க்க முடியாததாக்கியதும் கணிப்பிற் கொள்ளத்தக்கதாகும். தனது அதிகார எல்லையினுள் பிறருடைய நுழைவினைப் பலம்பொருந்திய அரசு ஏற்றுக்கொள்ள முடியாமையும் வளர்ச்சியில் இயல்பானதேயாகும். இன்னோரன்ன காரணங்களினால் கல்வியை வழங்கும் பொறுப்பு ஒன்றில் முழுமையாகவோ அல்லது பெரும் அளவிலோ அரசினால் வகிக்கப்படுவது இன்று உலக நாடுகளில் காணக்கூடிய ஒன்றாகும்.

கல்வியின் பருவ எல்லையும் காலவோட்டத்தில் மாறுபட்டிருப்பது கண்கூடு. தொடக்கத்தில் கல்விக்குரிய பருவம் பிரமசரியப் பருவத்தை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. அண்மைக் காலம்வரைக்கும், வரலாற்றுக் கூடாகவும், அப்பருவமே கல்விப் பருவமாகக் கணிக்கப்பட்டுள்ளது. கல்விப் பரப்பின் விசாலம், உளவியல் கருத்துக்களின் தாக்கம் என்பன கல்விப் பருவத்திலும் அகற்சியினைப் புகுத்தியுள்ளன. முன்பள்ளிப் பருவக் கல்வி முதல் வளர்ந்தோர் கல்விவரை கல்விச் செயற்பாடு இன்று விஸ்தரித்துள்ளது. அத்துடன், கல்வி என்பது ''கருப்பையிலிருந்து கல்லறை வரை'' என்ற சிந்தனையின் செறிவும் இன்று ஊறியுள்ளமை கவனிக்கத்தக்கது. கல்வியானது வாழ்நாள் முழுவதும் வியாபித்த ஒரு முயற்சி என்ற இன்றைய கருத்து ''கல்வி கரையில கற்பவர் நாள்சில'' என்ற எம் முன்னோரது கருத்துடன் ஒப்புநோக்கத்தக்கது.

கற்பித்தற் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களும் கவனத்திற்குரியனவாகும். அன்றைய கற்பித்தல் என்பது கற்பிக்கப்படும் பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தது. ஆசிரியர் கற்பிக்கும் விடயத்தை மாணவன் உள்ளத்தில் பதித்து மீட்டும் ஒப்படைக்கும் வகையில் நெட்டுருச் செய்யும் வழக்கு மேற்கொள்ளப்பட்டது. அக்காலகட்டத்தில், இன்று போல், அச்சியந்திர வசதிகள் இல்லாத நிலையில், நெட்டுருச் செய்வது கற்றலின் அடிப்படையாக இருந்தது. மாணவர் தமது உள்ளத்தில் பதித்ததைக் கொண்டு, தமக்கு எழுந்த ஐயங்களைத் தீர்க்கும் வகையில் ஆசானிடம் 'கடாக்களை' விடுத்துக்கற்றனர். அன்றைய கல்விக் கதிநிலை, தமிழ் இலக்கண நூலார் கூறியது போன்று,

''சித்திரப் பாவையி னத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து''

கற்கும் ஒன்றாகக் காணப்பட்டது. பாடஞ் சொல்லும் அக்கால வழக்கினை இன்றைய நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமுடையதாகும். இன்றுபோல, நூல்கள், நூலகங்கள், கற்றலுக்குரிய சாதனங்கள் என்பன இல்லாத அந்தக் காலத்தில் மாணவன் ஆசிரியனிலேயே முற்றாகத் தங்கியிருக்க வேண்டி நேரிட்டது. ஆசிரியர் சொல்வது ஒவ்வொன்றிலும் தனது கருத்தைச் செலுத்த வேண்டிய நிலையில் மாணவன் தனது கவனத்தை வேறெங்கும் அலைய விடாமல் ஒருவழிப்படுத்துவது அவசியமாயிருந்தது. எனவேதான் சித்திரத்திலுள்ள பாவைபோன்ற அசைவற்ற நிலை தேவைப்பட்டது. அதில் முக்கியமாக எதிர்பார்க்கப்பட்டது மனம் ஒருவழிப்பட்ட நிலையேயாகும். அத்தகைய நிலையில் அறிவென்னும் பயிர் வேரூன்றி விளைவதற்கேற்ற புலமாக அமைந்தது மாணவனுடைய உள்ளம். செவியினூடாகக் கேட்டவை உள்ளத்தில் பதியவைக்கும்போது அறிவு என்னும் முளை அரும்பி வளர்கின்றது. அப்படியான ஒரு எண்ணமே அன்றைய நடைமுறையின் பின்னணியில் இருந்தது எனக் கொள்வது தவறாகாது. அதில் கற்ற பாடமே முதன்மையான கவனத்தைப் பெற்றமை நியதியேயாகும்.

அந்த நிலை காலப்போக்கில் மாற்றத்துக்குள்ளாகியது. பாடத்துக்கு முக்கியத்துவம் கொடுத்த நிலை மாறி குழந்தைக்கு முதலிடம் வழங்கும் நிலைமை உருவாகியது.

உளவியற் கருத்துக்களின் விருத்தியின் விளைவாகக் குழந்தையின் தனித்துவம் கருத்துக்கெடுக்கப்பட்ட காலம் கற்பித்தல் முறைகளில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. அந்தத் திருப்புமுனையின் நாயகனாக விளங்கியவர் பிரெஞ்சுச் சிந்தனையாளர் ரூசோ. அவருடைய கருத்துக்கள் குழந்தையின் தேவைகளையொட்டிக் கற்பிக்கும் முறைகளை வளர்க்கும் மரபுக்கு வித்திட்டன எனலாம். அந்த வழிமுறையில் வளர்ந்து வந்தவைதான் ''நவீன கற்பித்தல் முறைகள்'' என நாம் பெருமைப்படும் இன்றைய கற்பித்தல் முறைகள்.

புதிய கற்பித்தல் முறைகளின் பயன்பாடு ஆசிரியருடைய தயார் நிலையிலும் மாற்றத்தை வேண்டிநின்றது. அறிவுள்ளவர் கற்பிக்கலாம் என்ற ஒரு காலத்தைய எண்ணம், அறிவுடன் சேர்த்துக் கற்பிக்கும் ஆற்றலை வழங்கும் பயிற்சியும் இடம்பெறும் வகையில் இன்று விசாலித்துள்ளது. அதன் முழுநிறைவினைப் பயிற்றப்படாத எவரும் கற்பிக்கும் கடமையில் ஈடுபடக்கூடாது என்ற இன்றைய கோட்பாட்டில் காணலாம். இன்றைய உலக வழக்கு இதனைக்கட்டாயப்படுத்தும் நிலைக்குப் படிப்படியாகப் பரவிச் செல்கின்றது.

கல்வியின் நோக்கமும் காலவோட்டத்தில் பரந்து விரிந்துள்ளதைக் காணலாம். கல்வியின் நோக்கம்பற்றிய சிந்தனை இன்று நேற்று ஆரம்பமானது அன்று. கிரேக்க-உரோம ஆதிபத்தியகாலத்தில், பிளேத்தோ, அரிஸ்டாட்டில் போன்ற அறிஞர்களுடைய கருத்துக்களில் கால்கொண்ட மேற்கத்தைய கல்விச் சிந்தனை, கிழத்தேயப் பண்பாட்டுப் பின்னணியில் உருப்பெற்ற ஆன்மீக நோக்கு என்பன இணைந்து இன்றைய சிந்தனைகளில் சங்கமமாகியுள்ளன.

கல்வியின் நோக்கம் இதுதான் என ஒருமைப்படுத்திக்கூறும் அளவுக்கு அதனை அறுதியிட்டுக் கூறமுடியாது. தேச, இன, பண்பாட்டுப் பேதங்களின் அடிப்படையில் பல்வகைப்பட்டுப் பரந்திருக்கும் கல்வியினைப் பார்க்கும்போது ''கல்வி தனக்கென எவ்வித நோக்கமும் இல்லாதது என்பதை நினைவுகொள்ளுதல் நல்லது. பெற்றோர், ஆசிரியர்கள் முதலியோரே நோக்கங்களைக் கொண்டுள்ளனர்'' என்ற ஜோன் டூயியின் கூற்றின் பொருத்தப்பாடு புலனாகும். அறிவு விருத்தி, முழுமையான வாழ்வுப் பயன், அறத்தையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்தல், சமூகப் பொருத்தப்பாட்டினை வளர்த்தல், நாட்டுக்குகந்த நற்பிரசையை உருவாக்குதல், ஆன்மீக ஈடேற்றம், வாழ்க்கைக்கு வழிசமைத்தல் என்ற பல்வேறுபட்ட நோக்கங்களுள் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நிறைவுசெய்ய முயல்வதனை இன்றைய கல்விச் செயற்பாடுகளில் காணமுடிகின்றது.

கல்வியின் பரப்பெல்லை விசாலித்துள்ள இன்றைய காலகட்டத்தில் அதற்குரிய முழுப்பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளும் சக்தி அரசு அல்லாத வேறெந்த அமைப்புக்கும் இல்லாத ஒன்றாகும். அப்பொறுப்பின் நிறைவுக்கு அதிகாரஞ் செலுத்தும் வகையில் பங்கேற்கும் அமைப்புக்கள், அந்தந்த நாட்டு அரசியலமைப்பின் தன்மையைப் பொறுத்து, வேறுபடினும் அதன் பின்னணிப்பலம் அரசு யந்திரத்தினுடையதே. காலத்துக்கூடாக 'அரசு' என்ற அமைப்பு வளர்ந்த விதமும் பெற்றபலமும் அதன் தோற்றத்திலும் செயற்பாடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்விதம் உருவாகியதே 'சமூகநல அரசு' என்ற தோற்றம். சமூகத்தின் நலனைப் பேணுவதைத் தனது பெருங்கடமையாக அரசு ஏற்றுள்ளமையை இது காட்டுகின்றது. அவ்வித சமூகநலன்களில் ஒன்றாகக் கல்வி கருதப்படுகின்ற இன்றைய காலத்தில் அதற்குரிய பழுவினை அரசு சுமந்து கொள்வது இயல்பான காரியமேயாகும். உலக நாடுகளை நோக்கின் இதன் உண்மை புலனாகும்.

கல்வியில் அரசுப் பொறுப்பின் வளர்ச்சி அக்கல்வியைத் திட்டமிடும் தேவையையும் இன்று உருவாக்கியுள்ளது. நாட்டின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் உச்சப் பயனளிக்கும் வகையில் நடை

முறைப்படுத்தப்படவேண்டியது அவசியம். எல்லாவகைப்பட்ட முயற்சிகளையும் இலாப நட்ட நோக்கில் சிந்திக்கும்போது, ஆளணி அடிப்படையில் மிகப்பெரிய முயற்சியாகிய கல்வியில் அக்கரிசனை தவிர்க்கமுடியாத தாகும். மனித சக்தியைப் பயன்படுத்தி, மனித சக்தியைப் பெருக்க எடுக்கும் முயற்சியான கல்வி ''மனித மூலவளங்களில் மேற்கொள்ளப்படும் முதலீடு'' என்ற கணிப்பில், அதனைத் திட்டமிடுவது எல்லா நாடுகளிலும் இன்று வலியுறுத்தப்படுகின்றது. இத்திட்டமிடல் சமூக - பொருளாதாரக் குறிக்கோளைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்படுவது அவதானிக்கத்தக்கது.

கல்வியைத் திட்டமிடும் செயற்பாடுகளில் மேலிருந்து — கீழும் - கீழிருந்து — மேலும் என்ற முறையில் இருவழித்தொழிற்பாடுகள் இடம்பெறினும், இறுதி முடிவு அரச மேல்மட்டத்தில் எடுக்கப்படுவதே வழக்கு. இதனால், சிலசந்தர்ப்பங்களில் சில விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்படாமலும் போகலாம். திட்டமிடப்படும் போது பொருளாதாரப் பேறுகள் முன்னுரிமை பெறும்நிலையில், விழுமியஞ் சார்ந்த பிற தேவைகள் பிற்தள்ளப்பட்டுவிடும் ஆபத்தும் உண்டு என்பதை நாம் மறுக்கலாகாது. இவ்விதமான நிலைமைகள் உருவாகுவதைத் தடுக்கவேண்டியது சமூகத்தின் கடமையாகும். சமூகத்தின் நலனுக்காகக் கல்வி வழங்கப்படும்போது அதன்மூலம் உரிய பயனைப் பெறுவதற்குச் சமூகம் விழிப்புடன் செயலாற்றுவது அவசியம்.

## ஆச்சிரமக் கல்வி

இராமலக்குமணர்களைத் தசரதனுடைய புதல்வர்களென்று உலகங் கொண்டாடுகிறது. உண்மையாக நோக்குமிடத்து, அந்தத் தசரதன் பெயரளவிலே தான் இவர்களுக்குத் தந்தை. தந்தையாயுங் குருவாயுந் தெய்வமாயும் இருந்தவர் தவசிரேஷ்டராகிய வசிஷ்ட முனிவரே. வசிஷ்டருடைய ஆச்சிரமத்திலேதான் இவர்கள் வளர்ந்தவர்கள். இவர்களுக்கு உபநயனச் சடங்கும் ஆச்சிரமத்திலேதான் நடந்திருக்கிறது. வேதாத்தியயனமும் வசிஷ்டரிடத்திலே தான் இவர்கள் பயின்றார்கள். வில்வித்தை முதலிய சமஸ்த வேதவித்தைகளும் அங்கேதான் இவர்களுக்குப் பூரணம் எய்தியது. உலக சர்வ கலாசாலைக் கல்விகளெல்லாஞ் சென்று முற்றுப்புள்ளி எய்தும் இடம் வசிஷ்டருடைய ஆச்சிரமம்.

இராமனாதியர்கள் நகரங்கடந்து, நாடு கடந்து, கரடுமுரடான காட்டுக்குட் பிரவேசிக்கின்றார்கள். அங்கே கட்டடம் இல்லை. கதவுகள் இல்லை. நவீன உபகரணங்கள் அத்தனையும் இல்லை. மரங்கள், கொடிகள், செடிகள் ஆகிய இயற்கைகளே அன்றிச் செயற்கைகள் எவையும் இல்லை. அங்கும் இங்கும் அடர்ந்து படர்ந்த மரநிழல்களிலே புலித்தோலாசனங்களில் முனிவர்கள் நிமிர்ந்து நிட்டை கூடுகின்றார்கள். அவர்கள் முன்னிலையில் நெய்யோடு கூடிய ஓமாக்கினி நாவை நீட்டுகின்றது. இராமன் போன்றவர்கள், பால கிருஷ்ணர்கள்-கைகளிலே சமித்துக்களை ஏந்தி நின்று பணிவிடை செய்கின்றார்கள். இடையிடையே பாடம் நடக்கின்றது. இரு என இருந்து, ஏடு அவிழ் என அவிழ்த்துப் பாடம் நடந்த பிறகு பாலர்கள் தத்தம் வீடு திரும்புகின்றார்கள். அவர்கள் படித்த பாடங்களுக்கு ஒரு பரீகைஷ போல, பாலர்கள் வரும் வழியில் அந்தப் பாலர்களை எதிர்ப்படுபவர்களின் முகங்கள் ஒளிவிடுகின்றன.

— **பண்டிதமணி சி. க.**

[கம்பராமாயணக் காட்சிகள்]

உ

# வளர்கலையின் பெருநிதியம் வாழிய பல்லாண்டு

சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்
(அதிபர், இளவாலை மெய்கண்டான்
மகா வித்தியாலயம்)

பிள்ளையுள்ளம் என்கின்ற வெள்ளைமனத் திரையில்
பேறளிக்கும் கல்வியினைப் பாடமாய்த் தொடங்கி
சொள்ளையின்பம் தருகின்ற குதலைமொழி வாயில்
கொய்தெடுத்த சொல்லமைத்து நல்லமுதாய் ஊட்டி
அள்ளியள்ளி ஆரம்பக் கல்வியினை வழங்கி
அரும்புகளை மலராக்கி மணங்கமழச் செய்யும்
வள்ளன்மை மிக்கசைவத் தமிழ்வித்யா சாலை
வளர்கல்விப் பெருநிதியம் வாழியபல் லாண்டு.

மரத்தினுரம் கிளையினெழில் மலரழகு கனிகாய்
மாட்சிகளைப் பார்த்தவற்றை மனதாரப் புகழ்வர்
உரந்தந்து நீர்தந்து ஊட்டமெலாம் தந்து
உறுதியுடன் நிற்கவைக்கும் வேரைவெளிக் காணார்
மரத்துக்கு வேர்போலக் கல்விநல மெல்லாம்
மலரவைக்கும் ஆரம்பக் கல்விவேர் மாண்பைக்
கரத்திலுறு கனிபோலக் காட்டியுணர் வூட்டும்
கல்விவளர் பெருநிதியம் காலமெலாம் வாழி.

வெள்ளிவிழாப் பொன்விழா வைரவிழாக் கண்டு
வைரவிழா மலர்மலர்ந்து மண்டுபுகழ் கொண்டு
அள்ளஅள்ளக் குவிகின்ற சாதனைகள் தந்து
ஆண்டெழுபத் தைந்துநிறை பவளவிழா வென்று
கள்ளவிழும் பவளமலர்க் கருப்பொருளாய் நின்று
கல்விதந்த ஆசார்கள் அதிபர்கள் பெற்றார்
வள்ளல்சிவன் அருளாலே வாழியபல் லாண்டு
வளர்கலையின் பெருநிதியம் வாழியபல் லாண்டு.

# நாவலர் கல்விச் சிந்தனையும் சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சியும்

திரு. கு. சோமசுந்தரம் அவர்கள்
(பணிப்பாளர், தமிழ்த்துறை
தேசியக் கல்வி நிறுவகம்)

மக்களின் வாழ்க்கை சீரும், சிறப்பும் கொண்டதாக அமைய வேண்டுமாயின் அவர்களிடம் கல்வி, தறுகண், இசைமை, கொடை எனும் நான்கும் ஒருங்கே காணப் படவேண்டும் என்பது பண்டைய தமிழ் மக்களின் கருத்தாகும். இதனைத் தொல் காப்பியர் தமது நூலில் வெளிப்படுத்து கிறார். இந்நான்கினுள்ளும் கல்விக்கே முதன்மை கொடுத்திருப்பதும் குறிப்பிடற் பாலது. தொல்காப்பியனார் காலத்திலிருந்து நமது காலம் வரை கல்விக்கு முதன்மை யும், முக்கியத்துவமும் அளித்துப் பேணி வரும் பண்பினைத் தமிழ் மக்களிடையே காண முடிகின்றது.

தமிழ்க் கல்விநெறி அதன் நோக்கங்க ளையும், அடையும் பயன்களையும் தெளி வாக வரையறுத்துள்ளது. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அடை தல் தமிழ்க் கல்வியின் நோக்கமாகும். நோக் கம் எய்தப்படும் போது பயன் ஆகின்றது. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை நோக் கங்களே, அவர்களின் கல்வி நோக்கங்க ளாகவும் விளங்கின. இதிலிருந்து தமிழ் மக்க ளின் வாழ்க்கையும் கல்வியும் நெருங்கிய தொடர்புடன் அமைந்திருந்த சீரிய தன் மையை உணர முடிகின்றது.

உலகில் நாகரிகமடைந்த பல்வேறு மக் கட் தொகுதியினரின் கல்வி வரலாற்றில், ஏதேனும் சில கல்வி நோக்கங்களுக்கே அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தமையை அவதானிக்கலாம். ஆனால் தமிழ்மக்கள், இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முற் பட்ட காலத்திலிருந்தே அறநோக்கு, பொருள் நோக்கு, முருகியல் நோக்கு, விடு தலை உணர்வு நோக்கு ஆகியவற்றின் ஒன் றிணைந்த சமநிலை வளர்ச்சியைக் கல்விமூலம் பெறுவதற்கு முனைந்தனர் என்பதை அறி யும்போது யாவரையும் வியப்பிலாழ்த்து கிறது. வளர்ச்சி மட்டும் கல்வியாகாது என்று கொண்ட தமிழ்மக்கள், அவ்வளர்ச்சி தூய்மையின் அடிப்படையில் ஏற்படவேண் டும் என்றும் கொண்டனர். அறிவின் பெரு வளர்ச்சியினால் ஆக்கமும் கேடும் விளைவதை இன்று காண்கின்றோம். "அறிவற்றங் காக் கும் கருவி" - அறிவு, அழிவு வராமல் காக் கும் கருவியாக அமைதல் வேண்டும் எனப் பழந் தமிழ் மக்கள் கருதினர் என்பதைத் திருவள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். தூய் மையின் அடிப்படையில் கல்வி அமையும் போதுதான், கல்விதரும் அறிவு, ஆக்கத் திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

மனிதனையே மையமாகக் கொண்டு, அவனின் ஆத்மீக, ஒழுக்க, சமூக, பொரு ளாதார, உணர்வு, உடல் மேம்பாட்டிற்கு உறுதுணையாகத் தமிழ்க் கல்வி விளங்கி வந் தது. மனித ஈடேற்றம் என்பது உலகியல் ஈடேற்றம், ஆத்மீக ஈடேற்றம் ஆகிய இரண் டினையும் உட்படுத்தியதாகவே தமிழ்மரபு கருதுகின்றது. திருமூலரும், வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவது தூயநற்கல்வியே என்கின்றார். "உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி" என்பது ஒளவையார் கருத்து. உலக ஐக்கியம், ஒருமைப்பாட்டிற்குத் தமிழ்க் கல்வி வழிவகுக்கிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் அதிஉயர் விழுமிய கருத்தை முதன்முதலில் உலகிற்கீந்து பெருமை கொண்டது தமிழ்க் கல்வி. சான் றோர்களை உருவாக்குதலே கல்வியின் நோக்க மாகஇருந்தது. அன்பு, நாண், ஒப்புரவு, கண் ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து சால்பு களையும் உடையவர்களே சான்றோர்கள்.

இவ்வாறு ஒவ்வொருவரும் சான்றோன் ஆகிவிட்டால், சான்றோர்களைக் கொண்ட சமுதாயம் உருவாகிவிடும். தமிழர் சமுதாயம் சான்றோர்கள் நிறைந்த சமுதாயமாக மலரக் கல்வியே உற்றதுணையாக இருந்தது. கல்வி, கேடில் விழுச்செல்வம் என்று போற்றப்பட்டது.

சங்ககாலத்தைத் தொடர்ந்தும், இத்தமிழ்க் கல்விப் பண்பு வளர்க்கப்பட்டு வந்தது. ஈழநாட்டில், தமிழ்க் கல்வி மரபு, சைவசமய உணர்வோடும், தமிழ் இலக்கிய இலக்கண வளத்தோடும் இணைந்து வளர்ந்து வந்தது. மனித மேம்பாட்டிற்கும், சமுதாயக் கட்டுக்கோப்பிற்கும், சமூக உறுப்பினர்கள் தத்தம் கடமைக் கூறுகளை உணர்ந்து கொள்வதற்கும், சமூக உறுதிப்பாட்டிற்கும் தமிழ்க் கல்வி துணையாயிற்று. இதனால் மக்கள் வாழ்வில் இன்பமும், அமைதியும் நிலவின. மனத்தைப் பண்படுத்துவதன் மூலம், மக்களின் வாழ்க்கையைக் கல்வி வளம்படுத்தியது. ''மனத்துக்கண் மாசிலனாதல்'', ''சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற திறன்'' ஆகிய மிகக் கடினமான பயன்களைத் தமிழ்க் கல்வி யளித்தது. சொல்லையும், செயலையும் முகாமை செய்வது மனம். மனம் பண்படும் நிலையில் யாவும் பண்பட்டுவிடும் எனக் கொண்டு, மனத்திற்குக் கல்வியளித்து வந்தது தமிழ்மரபு.

தமிழ்க் கல்வி மரபு, நம்நாட்டில் சைவத் தமிழ்க் கல்விமரபாகவே வளர்ந்து வந்துள்ளது. தமிழ் இலக்கண இலக்கியங்கள், நிகண்டு, அறநூல்கள், தருக்கம், திருமுறைகள், சைவசித்தாந்தம், புராண இதிகாசங்கள், வடமொழி என்பன கற்பிக்கப்பட்டன. ஆசிரியர்கள் தங்கள் இல்லங்களிலும், கோயில்களிலும், ஆசிரமங்களிலும் திண்ணைப்பள்ளிக்கூடங்களிலும் பாடங்களை நடாத்தினர். பகலிலும், இரவு வேளைகளிலும் கற்பித்தல் நடைபெற்றது. முறைசாராக் கல்வி அமைப்பினையே கொண்டிருந்தது.

பதினாறும் நூற்றாண்டில் இலங்கைக்கு ஐரோப்பியர் வருகை தந்ததன் பின்னரே, முறைசார்ந்த பாடசாலைக் கல்விமுறை இங்கு புகுத்தப்பட்டது. அத்துடன் கல்வியின் நோக்கம், கல்விப் பொருள், கல்விப் பரப்பு, கல்விப் பயன் ஆகியவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. மேற்கத்தைய பாடசாலைக் கல்விமுறைமை கிறீத்தவ சமயக் குழுவினரால் இலங்கையில் புகுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. கிறீத்தவ சமயத்தைப் பரப்புதலே பிரதான நோக்கமாகும். பின்னர் தேவைக்கேற்பப் பொதுக்கல்வி, அறிவியல் கல்வி ஆகியவற்றையும் இம்முறைமை இணைத்துக் கொண்டது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் நம்மை ஆட்சிபுரிந்த காலங்களில் ஊர்கள் தோறும் கிறீத்தவ தேவாலயங்களும் அவற்றை அண்டிப் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. கிறீத்தவ சமயக் குழுவினருக்கு அரச ஆதரவும், ஐரோப்பிய நாட்டுச் செல்வந்தர்களினதும் கிறீத்தவ நிறுவனங்களினதும் உதவியும் அநுசரணையும் தாராளமாகக் கிடைத்தன. இதனால் அவர்களால் கல்விப்பணியையும், கிறீத்தவ சமயப்பணியையும் முட்டின்றி ஆற்றமுடிந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகத் தீவிரமாக இந்நிலை பரவியது. இது தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குக் குந்தகமாக அமைந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிகளில் தமிழ்ப் புலவர்களும், தமிழ் ஆசான்களும் வெளிப்படையாகத் தமது தமிழ்க் கல்விப் பணிகளை ஆற்ற முடியாத நிலை ஏற்பட்டது. இக்காலப் பிரிவில் சைவத் தமிழ்க் கல்வி வழி புலப்பாடின்றி இருந்ததுடன் புலவர்களும் ''தலைமறைவில்'' வாழ்ந்து வர வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. நெல்லுக்கு நீர் போன்று, கல்வி வளர்ச்சிக்குச் சுதந்திர உணர்வு அவசியம். புலவர்கள் கிளர்ந்தெழக் கூடிய சூழ்நிலையும் அன்று இல்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்திலும் இந்நிலை நீடித்தது. 1832ஆம் ஆண்டில் இலங்கை வந்த கோல்புறூக்-கமரன் குழுவினால் விதந்துரைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் கிறீத்தவ மிசனரிமாரின் பணிகளுக்கு மேலும் உத்வேகத்தை அளித்தன. அரச உத்தியோகங்கள், அரச செல்வாக்குகள் என்பன ஆங்கிலக் கல்வி

பெற்றவர்களுக்கும் கிறீத்து மதத்தைச் சார்ந்தவர்களுக்குமே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பேற்பட்டன. ஆங்கிலப் பாடசாலைகளும், கல்லூரிகளும் நிறுவப்பட்டன. இங்கிலாந்து நாட்டுக் கல்விமுறைமை இங்கும் இடம் பெற்றது. வாழ்க்கைத்தரமும், சமூக அந்தஸ்தும் ஆங்கிலக் கல்வி கற்று வந்தவர்களிடமே உயர்ந்து காணப்பட்டது. இதனால் பலரும் ஈர்க்கப்பட்டனர். நடை, உடை, பாவனை, பொழுதுபோக்கு, இசை, நடனம், நாடகம், விளையாட்டு, உணவு முறை யாவற்றிலும் மேற்கத்தைய பண்பாடு புகுந்து கொண்டது. தேசியம் புறக்கணிப்புக்குள்ளாகியது. சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கல்வியை நாடுவோர் தொகையும், வழங்குவோர் எண்ணிக்கையும் தொடர்ந்து குறைந்துகொண்டே வந்தது. ஆங்கிலக் கல்வி முறைமையை எதிர்த்துப் போரிடும் வல்லபமோ, ஆற்றலோ தமிழ்க் கல்வியியலாளரிடம் வற்றிவிட்டது.

''பறங்கியர், ஒல்லாந்தர் காலத்திலே சைவசமயத்துக்கு வந்த வருத்தம் சிரங்கு வருத்தம் போன்றது. அது வெளித் தோல் வருத்தம். உள்ளூறச் சமயம் உயிரைப்பற்றி நின்றது. ஆங்கிலேயர் காலத்திலே சமயத்துக்கு வந்த வருத்தம் கசவருத்தம் போன்றது. உயிரைக் கொல்லுகின்ற வருத்தம். அது உட்பகையான வருத்தம். புறப்பகையில் உட்பகை பொல்லாதது.'' இவ்வாறு அக்காலச் சைவசமய நிலைபற்றி இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிடும் கூற்றுக்கள் அக்காலக் கல்வி நிலைக்கும் பொருந்தும்.

கோல்புறூக் குழுவினரின் விதப்புரையின் விளைவாக ஆங்கிலக் கல்விமுறை தழைத்தோங்க, அதனால் அரசதுறை வேலை வாய்ப்புக்கள், சமூகநிலை, பொருளாதார நிலை, மதிப்பு மரியாதைகள் உயர்வடைய ஆங்கிலக் கல்வியைத் தேடிச் செல்வோர் தொகையும் அதிகரித்தது. இவர்களையே கற்றவர்கள், கல்விமான்கள், நாகரிகம் தெரிந்தவர்கள் என்று சமூகம் ஏற்றது. முன்னர் தலைமறைவாகவேனும் தமிழர் கல்வி, பண்பாடு, கலாசாரம் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியில் அவற்றின் பெறுமதி, பயன்பாடு பெரிதும் குறையத் தொடங்கியதுடன், அவற்றை நாடுவோரும் பேணுவோரும் மிகவும் குறையலாயினர். இந்த வகையில் சைவத் தமிழ்க் கல்வியின் ஆணிவேரும் ஆட்டம் காணும் காலம் நெருங்கி வந்தது. கந்தபுராணத்தினாலே தமிழும் சைவமும் வளர்ந்துவந்த யாழ்ப்பாணத்தை மேல்நாட்டார் தலைகீழ் செய்தார்கள் என்று பண்டிதமணி குறிப்பிடுவர். இத்தகைய ஓர் அபாயகரமான இருள் சூழ்ந்த சூழ்நிலையே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை, தனிமனித இயக்கமான சைவத்தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து முன்னின்று நடத்தத் தூண்டியது.

ஆறுமுகநாவலர் தோன்றி வாழ்ந்த காலம் கி. பி. *1822 — 1879* க்கு இடைப்பட்ட காலம் ஆகும். ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாக அடக்கப்பட்டு, கிளர்ந்தெழுந்து மலர்ச்சிபெறாது தடுக்கப்பட்டு, தலைமறைவாக உறைந்துவந்த தமிழ்க்கல்வி இலக்கியப் பரம்பரையினர், அடங்காது திடீரெனக் கிளர்ந்தெழுந்து ஓர் எழுச்சியை ஏற்படுத்திய காலம் இப்பத்தொன்பதாம் நூற்றாண்டேயாகும். ஈழத்திலேதான் முதன்முதலில் இது பரிணமித்தது. அதற்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தலைமகன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆவர். ஒரு நாட்டின் அரசியல் விடுதலைக்கு முன்னோடியாக மொழி, சமயம், கலைகள், பண்பாடு, கலாசாரம் என்பன மறுமலர்ச்சி கண்டு விடுதலை பெற வேண்டும் என்பது நாவலரின் கருத்தாகும். இவருடைய இக்கருத்தையே இவருக்குப்பின் பிறந்த இரவீந்திரநாத் தாகூர் (*1863—1941*) அவர்களும் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தென்பகுதியில் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் இக் காலகட்டத்தில் தோன்றியது. ஆனாலும் நாவலரின் சைவத் தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் காலத்தால் முந்தியது. அது வட இலங்கையில் மட்டுமல்ல. தென்னிந்தியத் தமிழ்நாட்டிலும் விரிந்து பரவியது. அங்கும் நாவலரே முன்னோடியாக விளங்கினார்.

சைவத்தையும், தமிழையும் பாதுகாக்க, பரிமளிக்கச் செய்ய, நாவலர் கண்டவழி, கல்வி வழி. பாடசாலைகளை நிறுவி, சைவத் தமிழ்க் கல்வியைப் புகட்டுவதன் மூலம் இக் குறிக்கோளை அடைய முயற்சிகளை மேற்கொண்டார். நாவலர் இளமையில் குருகுல முறையில் சைவத் தமிழ்க் கல்வியைக் கற்றவர்; அத்துடன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆங்கிலக் கல்வியையும் கற்றுணர்ந்தவர். இரண்டு கல்வி முறைமைகளையும் நன்கறிந்தவர் நாவலர்.

வித்தியாதானத்திற்கு நிகராக வேறொன்றில்லை என்பர் நாவலர். கல்வி என்பது விளக்கேற்றல் என்று கூறும் நாவலர், கல்வி மக்கள் வாழ வழி வகுப்பது, அத்தோடு ஆன்ம ஈடேற்றத்திற்கும் கருவியாவது என்று குறிப்பிட்டுள்ளார். ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் இருக்க வேண்டிய பண்புகளை வரையறுத்துக் கூறியுள்ளார். ஒரு சிறந்த கல்வித்திட்டத்தையும் ஆக்கித் தந்துள்ளார். நடைமுறைப்படுத்தக் கூடிய செயல்முறைத் திட்டமாக உள்ளது. சைவசமய ஒழுக்க, பண்பாட்டு விழுமியங்களையும்; பொருளாதார, சமூகப் பண்புகளையும் உள்ளடக்கியதான இக் கல்வித்திட்டம், இன்று எமது சமுதாயம் ஏங்கிக் கொண்டு விரைந்து கேட்கும் கல்வி இதுவோ என்று எண்ணக் கூடிய வகையில் அமைந்துள்ளது.

நாவலர், தமது கல்விச் சிந்தனைகளைச் செயற்படுத்தும் களமாக, சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சியின் நிலையமாக 1848ஆம் ஆண்டிலே, யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினர். தமிழ் கூறும் நல்லுலகிலும், ஏனைய அடிமைப்பட்டுக் கிடந்த கீழைத்தேய நாடுகளிலும் தேசிய மறுமலர்ச்சிப் பாடசாலைகளும் கல்லூரிகளும் தோன்றுவதற்கு முன் தோன்றிய மூத்த பாடசாலை இதுவாகும்.

ஓரினத்தின் பண்டைய பண்பாடுகள், மரபுகள், கல்விப் பாரம்பரியங்கள், வாழ்க்கை முறைகள் என்பவற்றை ஆராய்ந்து விமர்சித்துத் தெளிந்து, அவற்றிலிருந்து எழுகின்ற சிறந்த அம்சங்களை, தற்காலத்தில் வளர்ச்சி பெற்று வருகின்ற சமுதாயத்தின் தேவைகள், நோக்கங்கள், பண்புகள், கால உணர்வுகள் என்பனவற்றிற் கியையப் பொருத்தமாக உருவாக்கி இணைக்கும் முயற்சிகள் மறுமலர்ச்சிப் பணிகளுக்குள் அடங்குகின்றன என அறிஞர் கொள்வர். பழையன யாவும் தள்ளப்பட வேண்டியனவுமல்ல; புதியன அனைத்தும் கொள்ளப்பட வேண்டியனவுமல்ல.

மரபுவழி வந்த சைவத்தமிழ்க் கல்வியையும், மேற்கத்தைய ஆங்கிலக் கல்வியையும் இணைத்துப் பார்த்து, ஆங்கிலக் கல்வி முறைமைக் கூடாக எங்ஙனம் சைவத் தமிழ்க் கல்வியையும் புகுத்தலாம் என்பதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்து நாவலர் செயற்பட்டுள்ளார். இது தமிழ் மொழியும் ஆங்கில மொழியும் இருவித முரண்பட்ட நாகரிகப் பண்பினை இணைத்து வளர்க்க முடியும் எனும் நாவலரின் கல்வித் தத்துவத்தை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது எனப் பேராசிரியர் சந்திரசேகரம் கூறுவர். சைவத்தையும், தமிழ்மொழியையும், தமிழ் நெறியையும் ஆங்கிலப் பாடசாலைகளின் ஒழுங்கமைப்பில் எழுந்த முறை சார்ந்த பாடசாலை முறைமை மூலம் கற்பிப்பதற்கு அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் எழுந்த முதற் பாடசாலை வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையாகும். ஆங்கிலப் பாடசாலை அமைப்பு முறை காலத்தின் தேவையாக இருந்தது. அதேவேளை மரபுவழி வந்த சைவத் தமிழ்க் கல்வி மறுமலர்ச்சி காண வேண்டியது தமிழினத்தின் பண்பாட்டுத் தேவை. இரு தேவைகளையும் நன்குணர்ந்து செயற்பட்டவர் நாவலர்.

வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆங்கிலக் கல்வியமைப்பில், ஆனால் சைவசமய பண்பாட்டுச் சூழலில் கல்வியை வழங்குவதற்காக அமைக்கப்பட்டது. நாவலரின் புதுமையான இக் கல்விச் சிந்தனை நம் நாட்டில் பல இந்துக் கல்லூரிகளும், இந்துப் பாடசாலைகளும் காலப் போக்கில் உருவாவதற்குக் கால்கோளாக

அமைந்தது. சைவநெறியையும், தமிழ் இலக்கண இலக்கியப் பண்பையும் கட்டிக் காக்க இந்துக் கல்லூரிகளும், இந்துப் பாடசாலைகளும் பெரும் பங்கு கொண்டமை கல்வி வரலாறு ஆகிவிட்டது.

சைவத் தமிழ் மரபுக் கல்வி மறுமலர்ச்சிக்கு இன்னொரு வழியையும் நாவலர் கையாண்டார். மரபுவழிக் கல்வியைக் குருகுல முறையில், பாரம்பரிய வழியில் போதிப்பதற்கெனச் சைவப்பிரகாச வித்தியாசாலையின் இன்னொரு பகுதியில் காவிய பாடசாலையை நிறுவி நடாத்தினார். சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் இங்குதான் சைவத் தமிழ்க் கல்வித் தலைமை ஆசானாக விளங்கினார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை போன்ற பலர் இங்கேயே மரபுவழித் தமிழ்க் கல்வியைக் கசடறக் கற்றுத்தேர்ந்தனர். உத்தியோகப் பற்றற்ற கல்வியாகவே விளங்கியபோதிலும், கற்றோரைப் பண்புடையோர் ஆக்கியது இக் கல்வி.

நாவலர் வண்ணார்பண்ணையில் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தொடர்ந்து, இணுவில், கந்தமடம், கோப்பாய், கோண்டாவில், புலோலி, மூளாய், வேலணை, கொழும்புத்துறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1865இல் சிதம்பரத்திலும், அதன் பின்னர் மாயவரம், வேதாரணியம் ஆகிய இடங்களிலும் சைவப் பாடசாலைகளை நாவலர் அமைத்தார். அச்சுக்கூடங்களையும் சென்னை, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நிறுவிப் பாடநூல்களை வெளியிட்டதுடன், பழந்தமிழ் நூல்கள் பலவற்றையும் பரிசோதித்து அச்சேற்றிய பெருமை நாவலருக்குரியது.

நாவலரின் மறைவிற்குப் பின், 1888ஆம் ஆண்டில் சைவபரிபாலன சபை, அவரின் மாணாக்கரினால் நிறுவப்பட்டது. 1890ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்துக் கல்லூரிச் சபை மானிப்பாய், உரும்பிராய், காரைநகர், சாவகச்சேரி ஆதியாம் இடங்களில் இந்துக் கல்லூரிகளை ஆரம்பித்து நடாத்தி வந்தது. இக் கல்லூரிகள் ஆங்கிலக் கல்வியை வழங்கிய போதிலும், சைவத் தமிழ்ச் சூழலை ஆங்கு உருவாக்கியிருந்தன. நாவலரின் கல்விச் சிந்தனைக்குச் செயலுருவம் அளிக்கப்பட்டது. இக் கல்லூரிகளை அன்மித்துத் தமிழ் மொழியைப் போதனாமொழியாகக் கொண்டு சைவத் தமிழ்ப் பாடசாலைகளும் தோற்றுவிக்கப்பட்டன. அத்தகைய ஒரு பாடசாலையே இன்று பவள விழாக் காணும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகும். 1920இல் சைவ வித்தியா விருத்திச் சங்கம் உதயமாகியது. ஊர்கள் தோறும் ஓரிருபள்ளிகள் சைவத் தமிழ் மணங்கமழ அமைக்கப்பெற்றன. குடாநாட்டிலும், வெளியிலும் இவ்வாறு சைவ வித்தியா விருத்திச் சங்கம் அமைத்த சைவப் பாடசாலைகள் இருநூறுக்கும் அதிகமானவை. இவை தமிழ்மொழி மூலப் பாடசாலைகளாக விளங்கி, சைவத் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை சைவத்தமிழ் ஆசிரியர்களை உருவாக்கி நாட்டின் நாலா புறத்திற்கும் அனுப்பி சைவத் தமிழ்க் கல்வியை மேம்படுத்தியது. சைவப் பெரியார்கள் பலர் தனிப்பட்ட முறையில் சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள். சேர் பொன். இராமநாதன், நாவலர் கல்விச் சிந்தனையின் அடிப்படையில் திருநெல்வேலியில் பரமேஸ்வராக் கல்லூரியையும், மருதனார்மடத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியையும் நிறுவினார்.

நாவலர் பெருமான் இலவசக் கல்வி தாய்மொழிக் கல்வி, விழுமியக் கல்வி,

சமய பண்பாட்டுக் கல்வி, அனைவர்க்கும் கல்வி, வாழ்நாட் கல்வி, வளர்ந்தோர் கல்வி போன்ற இருபதாம் நூற்றாண்டுக் கல்விச் சிந்தனைகளைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே உணர்ந்துகொண்டு, அரச ஆதரவும் இன்றிச் செயற்பட்டவர். நாவலரின் சைவத் தமிழ்க் கல்வி வழியாகத் தொடர்ந்த அவரின் ஞானபரம்பரை அவர் பணிகளைத் தொடர்ந்தது.

நாவலரின் கல்விச் சிந்தனை இருவழிப் பட்டதாகக் கண்டோம். ஒன்று நேரடி அணுகு முறை. அதன் பிரகாரம் சைவத் தமிழ்க் கல்வியை மரபு தவறாமல் நேரடியாகவே மாணவர்க்கு வழங்குதல் ஆகும். காவியப் பாடசாலைகள் மூலம் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. மற்றையது ஆங்கிலக் கல்வி முறை அமைப்பினைக் கொண்ட பாடசாலைகளை நிறுவி, ஆங்கு பின்பற்றப் படுகின்ற கலைத்திட்டத்துடன் இணைந்து சைவத் தமிழ்க் கல்வியை அளித்தல் ஆகும். அத்துடன் சைவத் தமிழ்ச் சூழலை உருவாக்குதல்; சைவ வழிபாட்டு முறைகளை அனுட்டித்தல்; இணைப் பாடவிதான நிகழ்ச்சிகள், புறப்பாடப் புலங்கள் ஊடாக சைவத் தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களைப் புகுத்துதல் என்பனவும் இடம்பெற்றன. அதிபர்கள், ஆசிரியர்கள் சைவசமயிகளாகவே இருந்தனர். இந்த வகையில், சீவனோபாயக் கல்வியாகவும், உத்தியோகப் பற்றற்ற மரபுவழிக் கல்வியாகவும், சைவத் தமிழ்க் கல்வி பத்தொன்பதாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சி கண்டு, இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதிக் காலம்வரை வளர்ச்சி பெற்று வந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர், அதிலும் அண்மைக் காலமாக, சைவத் தமிழ்க் கல்வியின் வளர்ச்சி உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதை போலாயிற்று. சமூகத்தில் அமைதி, ஒழுங்கு காண்பதற்கும்; மக்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும் நாவலர் கல்விச் சிந்தனைகள் மீளவும் செயலுருப் பெற வேண்டிய தேவை தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம். கல்வியை இளமை தொட்டு மரணபரியந்தம் வரை விடாமற் கற்க வேண்டும். நாவலர் பெருமானின் இம் மகுட வாசகங்கள் சிரஞ்சீவித்துவமானவை.


உ

## வித்தியாதானம்

சரீர சுகத்துக்கு ஏதுவாகிய அன்னவஸ்திர முதலியவற்றையும், ஆன்ம சுகத்துக்கு ஏதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையேயாதலின், எல்லாத் தானங்களிலும் வித்தியாதானமே சிறந்தது. ஒருவருக்கு அன்னவஸ்திரங் கொடுத்தால், அவை அவருக்கு மாத்திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிது பொழுது மாத்திரமே. ஒரு விளக்கேற்றுதல், அவ்வொரு விளக்கிலே பல விளக்கும், அப் பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக, எண்ணில்லாத விளக்கு ஏற்றப்படுதற்கு ஏதுவாதல் போல, ஒருவருக்குக் கல்வி கற்பித்தல், அவ்வொருவரிடத்திலே பலரும், அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக, எண்ணில்லாதவர் கல்வி கற்றுக் கொள்ளுதற்கு ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப் பிறப்பினன்றி மற்றைய பிறப்புக்களினும் சென்று சென்று உதவும். ஆதலின் வித்தியாதானத்துக்குச் சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை. தாங் கற்ற கல்வியை நன் மாணுக்கர்களுக்குக் கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சுமாமரமாவர்.

— நாவலர் பெருமான்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சபை — 1992



**இருப்பவர்கள் :** (இடமிருந்து வலம்) திருமதி பொ. ஜெகநாதன், திருமதி ம. திருநாவுக்கரசு, திரு. சு. ஆனந்தராசா (உப தலைவர்), ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் (செயலாளர்), செல்வி அ. சின்னத்தம்பி (தலைவர்), திரு. க. சிவஞானம் (உப தலைவர்), திரு. கா. குமாரசாமி, திரு. து. இ. இரத்தினவேலு (ஜே. பி.), திருமதி கா. இராஜகோபால்.

**நிற்பவர்கள் :** (இடமிருந்து வலம்) திரு. ச. ஏகாம்பரநாதன், திரு. பொ. தர்மலிங்கம், திரு. சு. அப்புத்துரை, திரு. ந. கணேசலிங்கம், திரு. ச. செல்வரத்தினம் (உப செயலாளர்), திரு. அ. இ. தர்மலிங்கம், திரு. இ. இராஜ்குமார், திரு. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை, திரு. சி. அரியநாயகம், திரு. த. சிவசுப்பிரமணியம் (தனதிகாரி)

## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர்கள் — 1992



இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்) திருமதி வ. சிவப்பிரகாசம், திருமதி சி. கணபதிப்பிள்ளை, திருமதி பொ. ஜெகநாதன், திருமதி ம. திருநாவுக்கரசு, செல்வி அ. சின்னத்தம்பி (அதிபர்), திரு. த. சிவசுப்பிரமணியம் (உப அதிபர்), திருமதி க. இராஜேந்திரம், திருமதி அ. பஞ்சலிங்கம், திருமதி சி. அன்னலட்சுமி, திருமதி சி. பவானந்தன்.

நிற்பவர்கள் : (நடுவரிசை) திருமதி செ. ஜெகநாதராசா, திருமதி தி. கணேசலிங்கம், திரு. க. ஆனந்தராசா, திரு. வி. எஸ். ஞானச்சந்திரன், திரு. ச. செல்வரத்தினம், திரு. இ. இராஜ்குமார், திரு. சே. செல்வராஜா, திருமதி ம. யோகேஸ்வரன், திருமதி ம. சிவசிதம்பரலிங்கம், திருமதி ரே. பாலசுப்பிரமணியம்.

நிற்பவர்கள் : (மேல்வரிசை) செல்வி இ. உதயகலா, செல்வி சு. ராஜினி, செல்வி ம. குமுதினி, செல்வி மு. சுகுணமினி, செல்வி வா. சியாதா, செல்வி கௌ. சுந்தரம், செல்வி. வா. பஞ்சாட்சரம், செல்வி ரோ. இந்திரராஜா திருமதி ம. இராஜசிறீதேவி.

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயப்
# பவளவிழா வாழ்த்து

ஆசிரியர் திரு. க. இ. சரவணமுத்து அவர்கள்

*　　*　　*

செந்தமிழ் சைவம் வாழச்
சேவைசெய் துழைத்த மேதை
நந்தமிழ் நாவ லர்கோன்
நல்லடிச் சுவட்டில் நின்றே,
பந்தமாய்ப் பல்லாண் டாகப்
பண்புறு கல்வி பேணும்,
சந்தமார் சைவ வித்யா
சாலையே, தழைத்து வாழி!

உரும்பிராய் நாப்பண் மன்னும்
ஓடையம் பதியில் மேவி
அரும்பெரும் வரங்கள் ஈயும்
அருளுறு கற்ப கன்சீர்த்
திருவருள் முன்னிட் டென்றுஞ்
செய்வினை மேற்கொள் கின்ற
தருமமார் சைவ வித்யா
சாலையே, தழைத்து வாழி!

கண்ணியங் கட்டுப் பாடு
கடமைகள் கண்போற் காத்து,
எண்ணிடும் எழுபத் தைந்தாண்(டு)
எல்லையிற் பவளப் பேராற்
பண்ணிடு விழாக்காண் கின்றேம்;
பல்கலைக் கழக மென்னத்
தண்மையார் சைவ வித்யா
சாலையே, தழைத்து வாழி!

# இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

கல்வியறிவின் இன்றியமையாமையினையும் அதனை ஈட்டுவதனால் ஏற்படத்தக்க நன்மைகளையும் தமிழ் மக்கள் நெடுங்காலமாகவே அறிந்திருந்தனர்.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்ற உயர்நோக்கினையும் அவர்கள் பெற்றிருந்தனர். இலங்கைத் தமிழ் மக்களும் கல்வியைப் பெருக்குவதிலும் அதற்குரிய வாய்ப்புக்களை வளர்ப்பதிலும் அக்கறையுடையவர்களாகவே இருந்து வந்தனர். இலங்கைப் பல்கலைக் கழகக் கல்விவளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்பு மகத்தானது என்றே கொள்ள வேண்டும்.

சென்ற நூற்றாண்டிலே இலங்கையின் பலபகுதிகளில் நவீன முறையிற் கல்வி போதிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டன. அவற்றில் தாய்மொழிமூலம் ஆரம்பக்கல்வியும் ஆங்கில மொழி மூலம் உயர்கல்வியும் போதிக்கப்பட்டது. உயர்தரக் கல்லூரிகள் பல தோன்றியமையினையும், அவை அரச திணைக்களங்களிலும் வர்த்தக நிறுவனங்களிலும் சேவையாற்றும் வாய்ப்புக்களை வழங்கியமையினையும், அவ்வாய்ப்புக்களைத் தமிழ் மக்கள் இயன்றளவு பயன்படுத்த விழைந்தமையினையும் யாவரும் அறிவர். அரச நிர்வாக சேவைகள் படிப்படியாகச் சுதேசமயமாக்கப்பட்டதையொட்டி உயர்தரக் கல்லூரிகள் பெருகியபோது பல்கலைக் கழக மட்டத்திலான கல்வி வசதிக்கான தேவை உருவாயிற்று. இந்நிலையில் பல்கலைக் கழகப் படிப்பினை மேற்கொள்ள விரும்பியவர்கள் சென்னை, கல்கத்தா போன்ற இந்தியப் பல்கலைக்கழகங்களையோ ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களையோ நோக்கிச் செல்ல வேண்டியவராயினர். செல்வத்துட் பிறந்த சிலருக்கே அது இயல்வதாயிற்று.

இக்காலப் பகுதியிலே மேலைநாட்டுக் கல்வி பயின்ற நடுத்தர வகுப்பினரின் அரசியற் செல்வாக்கு அதிகரிக்கலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம் பெற்ற சமய மறுமலர்ச்சி இயக்கங்களைத் தொடர்ந்து தோன்றிய அரசியல், பண்பாட்டு இயக்கங்கள் தேசியப் புனருத்தாரணம் குறித்துக் குரலெழுப்பின. இந்திய தேசிய இயக்கத்தினதும் உலகமாறுதல்களினதும் செல்வாக்குக்கு ஆட்பட்ட அவ்வியக்கங்கள், உலகமுன்னேற்றத்துக்கு இசைந்தவகையிலும் விஞ்ஞான அடிப்படையிலும் கல்வி அமைய வேண்டும் என்பதை மட்டுமன்றி நாட்டுக்கு உகந்தவகையில் பாடவிதானம் உருவாகவேண்டும் என்பதையும் வற்புறுத்தின.

1870ஆம் ஆண்டில் இலங்கைச் சட்டசபையிலே உத்தியோகப்பற்றற்ற இலங்கைப் பிரதிநிதியாக விளங்கிய பி. குமாரசுவாமி அவர்கள் இலங்கையின் உயர்தரக் கல்வி நிலையினை மறுசீராய்வு செய்வதற்கு ஒரு குழுவினை நியமிக்கவேண்டு மென்ற பிரேரணையைச் சமர்ப்பித்தார். அதற்கிணங்கச் சட்டசபையின் உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. பி. குமாரசுவாமியும் வேறோர் இலங்கை உறுப்பினரும் அக்குழுவிற் பணியாற்றினர். உயர்தரக் கல்வி மூலம்தான்

ஆரம்பக் கல்வியையும் போதிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்களை உருவாக்க முடியும் என்று அவ்வுபகுழு அறிவித்தது.

1905ஆம் ஆண்டு பிரசித்தி பெற்ற கீழைத்தேய அறிஞரும் பண்பாட்டு மறுமலர்ச்சிவாதியுமான கலாநிதி ஆனந்த குமாரசுவாமி தலைமையிலே தொடக்கப்பட்ட இலங்கைச் சீர்திருத்தச் சங்கமானது மொழி, கல்வி, பண்பாடு முதலானவை சம்பந்தமான பொதுமக்கள் அபிப்பிராயங்களை மாற்றும் முயற்சிகளில் இறங்கியதோடமையாது பல்கலைக்கழக இயக்கத்துக்கும் ஒரு முன்னோடியாக அமைந்தது. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, சீர்திருத்தச் சங்கம் நடாத்திய இலங்கைத் தேசிய சஞ்சிகையில் பல்கலைக்கழகத் தாபனம் பற்றியதொரு திட்டத்தை வெளியிட்டார். பண்பாட்டையும் சிந்தனை சக்தியையும் வளர்க்கும் குறிக்கோள்களை அதில் அவர் வலியுறுத்தினார்.

இந்தப் பின்னணியில் இந்நாட்டுக்கென ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு முகமாக உறுதியோடு முன்வைத்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் ஆவர். இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தின் தந்தை எனச் சிறப்பிக்கப்படும் பெருமை அவருக்கே உரித்தாயிற்று. பல்கலைக் கழகம் வேண்டிக் கிளர்ச்சி செய்யும் நோக்கோடு 1906 ஜனவரியில் இலங்கைப் பல்கலைக் கழகச் சங்கம் தோன்றப் பெரிதும் பொறுப்பாயிருந்த அவரே அச்சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பல்கலைக் கழகம் ஏன் தேவைப்பட்டது என்பதையும், அது எவ்வாறு அமையவேண்டுமென்பதையும் விளக்கும் வகையில் அவர் பல கட்டுரைகளை எழுதினார். இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கச் சஞ்சிகையிலே 1906இல் அவர் வெளியிட்ட மேல்வரும் கருத்து எதனை அவர் எதிர்பார்த்தார் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

> ''ஆங்கில மொழியைக் கற்பதற்கும் மேலைத்தேயபண்பாட்டைத் தமதாக்கிக் கொள்ளுதற்கும் சிறந்த வாய்ப்புக்கள் அளிப்பதுடன் எமது இளைஞர்கள் தமது சுயமொழிக்கும் தமது முன்னைய வரலாற்றுக்கும், பாரம்பரியத்துக்கும் அன்னியராக வளர்ந்து வராது பாதுகாப்பதே இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பிரதான இலட்சியமாகவிருக்கும். ஆகவே, இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கும் போது எமது சுயதேவைகளும் உள்நாட்டு நிலைமைகளுமே கல்வியின் ஆணிவேரெனக் கொண்டு அக்கொள்கையை இலங்கைப் பல்கலைக்கழகம் கடைப்பிடிப்பதோடு அதைச் செயற்படுத்தவும் முடியும்.''

இலங்கையிலே பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்பது 1912ஆம் ஆண்டிலே கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும், முதலாம் உலகப்போர் வெடித்தமையின் காரணமாக அது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் 1921ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக் கழகத்தோடு இணைந்த இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. அக்கல்லூரி அமைக்கப்படுவதற்கு முன்னின்று உழைத்தவரும், அதன் செம்மையான செயற்பாட்டுக்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டவரும் சேர் பொன். அருணாசலம் ஆவர்.

பல்கலைக் கழகம் ஒன்று செயற்படுவதற்கு ஏற்றதொரு நூல்நிலையம் அத்தியாவசியமானதென்பதை யாவரும் அறிவர். இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரிக்கான நூல்நிலையம் அறையொன்றில் ஆரம்பிக்கப்பட்டது. சேர் பொன். அருணாசலம் நன்கொடையாக அளித்த புத்தகங்களை முதலாகக் கொண்டேயாகும். இளமையிலேயே காலஞ்சென்ற அவரது மகனை பத்மநாப சேகரித்து வைத்திருந்த புத்தகங்களைப் பல்கலைக் கழகக் கல்லூரி நூலகத்துக்குச் சேர் பொன். அருணாசலம் வழங்கினார். கல்லூரியின் யூனியன் விடுதிக்கும் அவர் தாராளமாக உதவினார். சேர் குமாரசுவாமி விஞ்ஞானப் பரிசுக்கு ஏற்பாடு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழகம் அமைப்பதற்குச் சட்ட சபையில் ரூபா 3,000,000 ஒதுக்கப்படுவதற்கு இரண்டு மாதங்கள் முன்னதாக 9-01-1924 அன்று சேர் பொன். அருணாசலம் இறைபதம் எய்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தை எங்கே அமைப்பதென்பது குறித்து அன்று நடைபெற்ற சர்ச்சையிலும் பல்கலைக்கழகம் பேராதனையில் அமையவேண்டும் என்பதற்கு ஆதரவான கருத்தினை அவர் வெளியிட்டிருந்தார். பேராதனைக்குப் பல்கலைக்கழகம் மாற்றப்பட்டபோது முதலில் அமைக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு அருணாசலத்தின் பெயர் சூட்டப்பட்டது.

1923 இறுதியிலே தலயாத்திரை மேற்கொண்டு இந்தியா சென்ற சேர் பொன். அருணாசலம் 1924 ஜனவரியில் மதுரையில் மறைந்த செய்தி இலங்கையை எட்டியபோது, பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்களை அதன் முதல் அதிபரான ஆர். மார்ஸ் கல்லூரியின் பிரதான மண்டபத்திற் கூட்டினார். கூட்டிய அதிபர் சேர் பொன். அருணாசலம் பற்றி உணர்ச்சிகரமான நீண்டதோர் உரையினை நிகழ்த்தினார். பல்கலைக் கழகம் சம்பந்தமான அருணாசலம் அவர்களின் எண்ணங்களை அறிந்தவரும் உள்ளக் கிடக்கையை ஒன்றி உறவாடி உணர்ந்தவருமான மார்ஸ், அருணாசலத்தின் சேவைகளை நன்றிப்பெருக்குடன் நினைவுகூர்ந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத் திட்டத்தின் தந்தையென அருணாசலத்தைக் குறிப்பிட்ட மார்ஸ், பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி ஆலோசிக்க 1906 ஜனவரி 19ஆம் திகதி கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய சேர் பொன். அருணாசலம் முடிவுரையாகக் கூறிய, இலங்கைப் பல்கலைக் கழகச் சங்கம் உருவாக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த வார்த்தைகளை நினைவுபடுத்தினார்.

1906 ஜனவரியில் நடந்த கூட்டத்தில், இலங்கைப் பல்கலைக் கழகம் எந்தக் கட்டமைப்பில் உருவாக வேண்டும், இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களைப் போலவா அல்லது இந்தியப் பல்கலைக்கழகங்களைப் பின்பற்றியா, எவ்வாறு போதனைகளை நிகழ்த்துவது, எவ்வாறு பரீட்சைகளை நடாத்துவது என்பன போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. அவற்றைப்பற்றியெல்லாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்றும் காலகதியில் எமது விசேட தேவைகளுக்கேற்ற மாற்றங்களுடன் அவற்றை முடிவு செய்துகொள்ளலாம் என்றும் கருத்து வெளியிட்ட சேர் பொன். அருணாசலம், எமது மக்களின் பண்பாட்டை உயர்த்தப் பல்கலைக் கழகம் ஒன்று அமையவேண்டும் என்பதே முக்கியமானது என்பதை வலியுறுத்தினார்.

மனித நாகரிகத்தின் உயர்ந்த தரங்களுக்கு ஏற்பச் சிந்திக்கவும் செயலாற்றவும் கூடிய உண்மையும் உறுதியும் பேணும் குடிமக்களை உருவாக்குவதே இலங்கைப் பல்கலைக் கழகத்தின் இறுதி இலக்காக இருக்க வேண்டுமென்பதைச் சேர் பொன். அருணாசலம் தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார் என்பதை மார்ஸ் நினைவுபடுத்தினார். கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற அந்த அஞ்சலிக் கூட்டத்தில் மார்ஸ் கூறிய மேல்வரும் வார்த்தைகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

> "தனது நாட்டின் முன்னேற்றத்துக்கான அதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்துடனும் கோட்பாட்டுத் தெளிவுடனும் திடசங்கற்பத்துடனும் ஆற்றல் வாய்ந்த ஆர்வத்துடனும் பல்கலைக் கழகத்துக்காக அவரைப்போல் வாதாடியவர்கள் இந்நாட்டில் வேறு யாரும் இலர்."

சேர் பொன். அருணாசலத்தின் சகோதரரான சேர் பொன். இராமநாதனும் பல்கலைக்கழக இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவராவர். அவர் இலங்கைப் பல்கலைக்கழகம் இணைந்த கல்லூரிகளைக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் கொண்டதாக அமையவேண்டுமென்ற கருத்தை முன்வைத்தவராவர். பல்கலைக்கழகத்தை எங்கே அமைப்பது என்பது குறித்து அறிக்கை சமர்ப்பித்த குழுவிலும் அவரும் அவரோடு சட்டசபை உறுப்

பினராக இருந்த எச். ஏ. பி. சந்திரசேகரரும் இடம்பெற்றனர். ஒரு பல்கலைக்கழகமாக வேண்டுமென்ற நோக்குடன் யாழ்ப்பாணத்திலே பரமேஸ்வரக்கல்லூரியை நிறுவிய அவரது தொலைநோக்கு வியக்கத் தக்கதாகும். இலங்கைப் பல்கலைக்கழகத் தாபகர்களுள் ஒருவராக மதிக்கப்படும் சேர் பொன். இராமநாதனின் பெயரிலே பேராதனையிற் பெரியதொரு விடுதி அமைந்துள்ளது.

இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிலும் 1942இல் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் பல்வேறு துறைகளில் பணியாற்றிய தமிழர்கள் பல்கலைக் கழக விருத்திக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள். அந்தவகையில் ''அடங்காத் தமிழன்'' எனப் பட்ட சி. சுந்தரலிங்கம் எமது நினைவுக்கு வருகிறார். இந்திய சிவில் சேவை, இலங்கைச் சிவில் சேவை ஆகிய இருபரீட்சைகளிலும் சித்தியெய்தியவரும் இலங்கையின் விடுதலைக் குப் பிந்திய முதலாவது அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சராக விளங்கியவருமான சி. சுந்தரலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிற் கணிதப் பேராசிரியராகப் பெரும் செல்வாக்குடன் பணியாற்றியவராவர். யூனியன் விடுதிப் பாதுகாவலராக விளங்கிய சி. சுந்தரலிங்கமே தமிழ்ச் சங்கத்தையும் ஆரம்பித்து வைத்தார். பல்கலைக்கழகக் கல்லூரி அதிபராகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் அவர் முயன்றமையும் குறிப்பிடத்தக்கது.

சி. சுந்தரலிங்கத்துக்குப் பின் கணிதப் பேராசிரியராகிய எப். எச். வி. குலசேகரம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது கணிதப் பேராசிரியரானார். அவருக்குப்பின் கணிதப் பேராசிரியர் பதவியை அலங்கரித்தவர் அத்துறையில் உலகப்பிரசித்தி பெற்றவரும் இலண்டன் பல்கலைக்கழக டி. எஸ்ஸி. பட்டம் பெற்றவருமான சி. ஜே. எலியேசர் ஆவர். அவர் சிலகாலம் விஞ்ஞான பீடாதிபதியாகவும் விளங்கினார். பல்கலைக்கழகத்தின் முதலாவது இரசாயனப் பேராசிரியராகப் பதவி வகித்தவர் இலண்டன் பல்கலைக் கழக டி. எஸ்ஸி. பட்டம் பெற்ற ஏ. கந்தையா ஆவர். பௌதிகப் பேராசிரியர் பதவியை முதலில் வகித்த இலங்கையர் ஆ. வி. மயில்வாகனம் ஆவர். அவருடன் பணியாற்றிய வி. அப்பாப்பிள்ளை பேராதனையில் பௌதிகப் பேராசிரியராகவும் நீண்டகாலம் விஞ்ஞானப் பீடாதிபதியாகவும் பெருமையுடன் விளங்கினார். கணிதப் பேராசிரியர் பே. கனகசபாபதி, தாவரவியற் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், சிறந்த கணித ஆசிரியரென மதிக்கப்பட்ட என். நடராசர், இரசாயனத் துறையில் டி. எஸ்ஸி. பட்டம் பெற்ற கலாநிதி எம். ஏ. வி. தேவநாதன் முதலானோரையும் குறிப்பிட வேண்டும்.

மேலே கூறியவற்றால் பல்கலைக் கழக விஞ்ஞான பீடத்திலே பல தமிழர்கள் சிறப்புடன் துலங்கியமையும், பாடநெறிகளையும் ஆய்வுகூடங்களையும் ஒழுங்குபடுத்தவும் உயர்த்தவும் உதவியமையையும் அறிந்து கொள்ளலாம். ஏனைய பீடங்களிலும் தமிழர் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தன.

கலைப்பீடத்தில் தமிழ்த் துறையினைப் பொறுத்தவரை தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கான அதன் பங்களிப்புத் தனியாக நோக்கப்பட வேண்டியதாகும். பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ் பாடத்துக்குப் பொறுப்பாயிருந்த வண. பிதா. பிரான்சிஸ் கிங்ஸ்பரி இலங்கைக்கு முழுமையான ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பதை அடிக்கடி வலியுறுத்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப்பேராசிரியரான சுவாமி விபுலாநந்தர் 1920களிலிருந்தே நாட்டு முன்னேற்றத்திற்குப் பல்கலைக்கழகம் அவசியம் என்பதை வலியுறுத்தி வந்தார். சுமார் ஐந்து ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய அவரும் அவருக்குப் பின் வந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் பல்கலைக் கழகத்தில் உழைத்தேயக் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த ஆலோசனைகள் வழங்கினர்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராதனையில் நாட்டுக்கூத்துக்களை நவீன முறை

யில் தயாரித்து எல்லோரது பாராட்டையும் பெற்றவர்; விஜயவர்த்தனா விடுதியின் பாதுகாவலராகப் பணியாற்றியவர். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகி அதன் விருத்திக்குப் பலவகைகளில் ஆதாரமானவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சிறந்த முறையிற் செயலாற்றிய க. கைலாசபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்று வளாகம் உறுதியான அடித்தளத்தில் எழக் காலானார். இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் மத்தியில் கலைகளையும் பண்பாட்டுப் பெறுமானங்களையும் பேணிவளர்க்கும் ஆர்வத்தைத் தூண்டிய வகையில் சுவாமி விபுலாநந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், கலாநிதி கைலாசபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புவியியல்துறைப் பேராசிரியர்களாக விளங்கிய க. குலரத்தினம், ஜி. ஜி. ஆர். தம்பையாபிள்ளை, மெய்யியல்துறைத் தலைவராகவும் ஹில்டா ஒபயசேகர பெண்கள் விடுதிப் பாதுகாவலராகவும் பணியாற்றிய செல்வி கே. மதியாபரணம், கல்வித் துறையில் விரிவுரையாளராயிருந்தபின் மலேசியப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தோற்றுவித்தவருமான தனிநாயக அடிகள், கல்வித்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரான ப. சந்திரசேகரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற் பேராசிரியராக விளங்கிய சோ. செல்வநாயகம், அங்கு இந்து நாகரிகப் பேராசிரியராக அமர்ந்திருந்த கா. கைலாசநாதக் குருக்கள், பிறநாடுகளில் பிரசித்தியுடன் திகழும் சமூகவியலறிஞர் எஸ். ஜே. தம்பையா, அரசறிவியற் பேராசிரியர் ஏ. ஜெயரத்தினம் வில்சன், வரலாற்றுப் பேராசிரியர் எஸ். அரசரத்தினம், ஆங்கிலத் துறையிற் பணியாற்றிய கலாநிதி திரு. கந்தையா முதலானோர் கலைப்பீடத்தை அலங்கரித்து இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல வகைகளில் உதவியோராவர்.

இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஐந்து ஆண்டுகளின் பின் 1947இல் சட்டக் கல்வித்துறை ஆரம்பிக்கப்பட்டபோது விரிவுரையாளராக நியமிக்கப்பட்ட இருவரில் ஒருவர் த. நடராஜா ஆவர். அதிதி விரிவுரையாளராகப் பணியாற்றி, பின்னர் நீதியரசரான கலாநிதி எச். டபிள்யு. தம்பையா. தி. நடராஜா நீண்டகாலம் சட்டத்துறைத் தலைவராகவும் சில காலம் கலைப்பீடாதிபதியாகவும் திகழ்ந்தவர். இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராக விளங்குகிறார்.

மருத்துவ பீடத்தைப் பொறுத்தவரையில் அறுவை வைத்தியத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய மில்றோய் போல், உடலமைப்பியற் பேராசிரியர் பீ. கே. சண்முகம், மகப்பேற்றியல், பெண்ணோயியல் பேராசிரியர் அ. சின்னத்தம்பி, உடற்றொழிலியற்துறைத் தலைவர் ஆர். எஸ். வாட்சன், மருத்துவப் பேராசிரியராக மிளிர்ந்த ரி. வரகுணம், ஒட்டுண்ணியியல் பேராசிரியராக விளங்கிய வி. சிவலிங்கம், சத்திர சிகிச்சையியற் பேராசிரியராகப் பிரசித்திபெற்ற பார் குமாரகுலசிங்கி முதலியோர் குறிப்பிடத்தக்கோராவர். பல்வைத்தியத்துறையில் ஆரம்பத்தில் அமைந்த ஒரே பேராசிரியப் பதவியை அலங்கரித்தவர் பிறிற்றோ முத்துநாயகம் ஆவர். அத்துறையில் நீண்டகாலம் புகழுடன் கடமையாற்றியவர் மருத்துவ டாக்டர் பார்ட்லெட் ஆவார்.

பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடத்தைப் பொறுத்தவரை தமிழர்களின் பங்களிப்புக் கணிசமானது. பொறியியற் பீடம் 1950இல் நிறுவப்பட்ட போது நியமிக்கப்பட்ட இரு பேராசிரியர்களில் ஒருவர் ஆர். எச். போல் ஆவர். அவர் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் பணிப்பாளராக விளங்கிய முதலாவது இலங்கையர். மின் எந்திரவியற் பேராசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய பேராசிரியர் போல் அத்துறைக்கான ஆய்வுகூடங்களை

நன்கு திட்டமிட்டு நிர்மாணித்தார். பொறிசார் எந்திரவியற் பேராசிரியராக விளங்கிய ஜே. சி. வி. சின்னப்பாவும் சிறப்புப் பேராசிரியராகப் பதவிபெற்ற எஸ். மகாலிங்கமும் தமது துறை ஆய்வு கூடங்களைச் சிறந்த முறையில் அமைத்துக் கொண்டனர். வெளிக்கள அனுபவம் மிகுதியாகப் பெற்றிருந்த த. சிவப்பிரகாசபிள்ளை, பொறியியலில் முதலிற் பி. எச்டி. பட்டம் பெற்ற பி. செல்வநாயகம் முதலானோரின் சேவைகளும் பொறியியற் பீடத்துக்கு வாய்த்தன.

இலண்டன் பல்கலைக்கழக டி. எஸ்ஸி. பட்டம் பெற்றவரும் பொறிசார் அதிர்வு சம்பந்தமான பிரச்சினைகளை நுணுகியாராய்ந்தவருமான பேராசிரியர் மகாலிங்கம் ரோல்ஸ் ரோய்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து பெற்ற ஜெட் விமான இயந்திரம் பேராதனைப் பொறியியற்பீட வாயிலில் வைக்கப்பட்டுள்ளது. கற்பித்தலுக்கும் ஆய்வுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பேராசிரியர் மகாலிங்கம் பிற ஆசிரியர்களுக்கு ஓர் இலக்காகத் திகழ்கிறார்.

குடிசார் எந்திரவியற்துறை ஆய்வு கூடங்கள் பேராசிரியர் அ. துரைராசாவினாலும் கலாநிதி கே. ஆறுமுகத்தினாலும் திட்டமிடப்பட்டவை. சிலகாலம் பொறியியற் பீடாதிபதியாகச் செல்வாக்குடன் விளங்கிய பேராசிரியர் அ. துரைராசா இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக அதன் வளர்ச்சி வேண்டி உழைக்கிறார்.

விவசாய பீடத்திலும் பல தமிழர்கள் பயன்மிகு வகையிற் பணியாற்றினர். பேராசிரியர் ஆர். ஆர். அப்பாத்துரை விவசாய பீடாதிபதியாகப் பலகாலம் செயலாற்றினார். பேராதனையிற் சிறந்து விளங்கும் விவசாய உயர் பட்டப் படிப்புக்கள் நிறுவனம் எழுவதற்குப் பிரதான காரணமாக இருந்தது பேராசிரியர் அப்பாத்துரையின் பெருமுயற்சியேயாகும். அந்நிறுவனத்தின் பணிப்பாளராகச் சிலகாலம் விளங்கிய பேராசிரியர் த. யோகரத்தினம் இன்று விவசாயப் பொருளியற் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

பாராளுமன்றத்தில் சிலகாலம் பருத்தித்துறைப் பிரதிநிதியாக விளங்கிய பொன். கந்தையா இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராக இருந்து சிறந்த முறையிற் பணியாற்றியமையும் பலரால் நினைவு கூரப்படுவதாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக இலச்சினையை உருவாக்கியவர் கலைவல்லுநரான எஸ். சண்முகநாதன் என்பதும் குறிப்பிடத்தக்கது.




கலைவல்லுநர் எஸ். சண்முகநாதனல் வரையப்பெற்ற இலச்சினை



இலங்கைப் பல்கலைக்கழகம் 1942இல் நிர்மாணிக்கப்பட்டபோது அதன் முதலாவது துணைவேந்தரான சேர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களுக்கு உறுதுணையாக நின்று சிறந்த முறையிற் செயற்பட்டவர் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ. எம். கே. குமாரசாமி ஆவர். இந் நூற்றாண்டின் மூன்றாவது நான்காவது தசாப்தங்களிற் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்ட குமாரசாமி ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். அவரே இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாறிய வேளையிலும் பதிவாளராக இருந்து அம் மாற்றத்தைத் திறமையுடன் அமுல்படுத்தினார்.

இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளிலே தமிழர் பலர் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்கள் எல்லோரைப் பற்றியும் இங்கே எடுத்துக்கூறுவதென்பது இயலாதகாரியம். இதுகாலவரை அறிந்தவைகளையும் கேள்விப்பட்டவைகளையும் பின்னோக்கிப் பார்த்தவேளையில் நினைவுக்கு வந்தவையே இங்கு கூறப்பட்டனவெனலாம்.

## மாண்புடன் வாழ்க

திருமதி ம. சிவசிதம்பரலிங்கம்
(ஆசிரியை உ. சை. த. வி.)

பவளஅணி விழாவயரும் பைந்தமிழின் சோலை
பனிமலர்கள் எனமலரும் பாலர்பயில் சாலை
தவழுமிளந் தென்றலெனச் சைவத்தமிழ்ப் பண்பில்
தானெழுபத் தைந்தாண்டு தழைத்துவளர் பாவை
திகழுமழ குடன்அமுத சுரபியெனக் கல்வி
திசைமகிழ வேயள்ளித் தந்திட்ட செல்வி
புகழுயரும் உரும்பைநகர்ப் புண்ணியர்கள் கூடிப்
போற்றுசைவத் தமிழ்வித்யா சாலைபுகழ் வாழ்க

* * *

கோலமிகு கற்பகப் பிள்ளையரு ளாலே
குவலயமே கண்குளிரக் கண்டுவகை கொள்ள
நீலமணிக் கடல்கொழிக்கும் நித்திலங்கள் என்ன
நிகரரிய மாணவ மணிகள்பலர் வாழ்க
காலம்எழு பத்தைந்து ஆண்டுநிறை வாகிக்
காண்கின்ற பவளவிழா களிப்புடனே வாழ்க
ஞாலம்உள்ள வரையுரும்பைச் சைவத்தமிழ்ச் சாலை
ஞாயிறென மாண்புடனே வாழ்கநிதம் வாழ்க.

# தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பான சில சிக்கல்கள்

**பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்**
(தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்)
**திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்**
(ஆய்வுத்துறை, கக்குசுயின் பல்கலைக்கழகம்,
தோக்கியோ, யப்பான்)

தமிழ் மாணவர்கள் எல்லோரும் கல்வி நிலையில் தம்முடைய பத்தாம் வகுப்புவரை தமிழ் மொழி என்னும் பாடத்தினைப் பயின்று வருகின்றார்கள். அதன் பின்னர் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுக்குச் செல்லும் மாணவர்களுள் ஒரு பகுதியினர் மட்டுமே அப்பாடத்தைப் பாடசாலையிலேயே படிக்கின்றனர். இவர்களுள் ஒரு சிறுதொகை மாணவர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். அவர்களுள் ஒரு சிறுபகுதியினர் மட்டுமே அங்கு தமிழை ஒரு பாடமாகப் படிக்கின்றனர்.

இவ்வாறு தமிழ் என்னும் பாடம் பல்கலைக்கழகம் வரை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்ற ஒரு பாடமாக இன்று இருக்கின்றது. இப்பாடத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கின்றபோது, கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்கள் பல உள. அவற்றை எவ்வாறு தீர்த்து, தமிழ் மொழி என்னும் பாடத்தை மாணவர்கள் கற்கை நிலையில் நிலைபெறச் செய்யலாம் என்பது பற்றிய சில கருத்துக்களை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழ் மொழி ஆர்வம் :

தமிழ்மொழி, மாணவர்களுடைய தாய் மொழியாக அமைந்திருக்குமிடத்து அம்மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பது சற்று எளிமையான செயலாகும். ஆனால் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிராத மாணவர்களுக்கு அதைக் கற்பிக்கும்போது சற்று நிதானமாகக் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனினும் இவ்விரு நிலைப்பட்ட மாணவர்களும் தமிழ் மொழியைக் கற்கும்போது ஆர்வத்தோடு கற்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். மொழியார்வம் என்ற நிலையில் தமிழ் மொழியைக் கற்கின்ற நோக்கமும் தொடர்புடையது. எமது நாட்டில் தாய் மொழி என்ற நிலையில் மாணவர்கள் தமிழைக் கட்டாய பாடமாகக் கற்க வேண்டியுள்ளனர். பத்தாம் வகுப்பில் தமிழ்மொழிப் பாடத்தில் தேர்ச்சி பெறுவிட்டால் மாணவர்கள் தமது உயர் கல்வியைத் தொடர முடியாது. தமிழ் மொழியைப் பிற மொழி பேசும் மாணவர்களும் பல்வேறு காரணங்களுக்காகக் கற்க முற்படுகின்றனர்.

இவ்விரு மாணவர்களுக்கும் தமிழ் மொழியை ஒருபாடமாகக் கற்பிக்கும்போது அப்பாடத்தின் மீது அவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டியது கற்பித்தலை மேற்கொள்வோரின் கடமையாகின்றது. மொழித் தேர்ச்சியின் பெறுபேறு பற்றிய இடர்களை மனங்கொள்ளாது மாணவர்கள் தமிழ்ப் பாடத்தை ஆர்வமாகக் கற்கவேண்டும். இந்த ஆர்வமே சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும். இதனால் தமிழ்மொழி மீது மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்குரிய வழிகளைத் தொடக்க நிலையிலேயே கற்பித்தலை மேற்கொள்வோர்கள் செய்ய வேண்டும்.

## தேர்ச்சி நிலை :

தமிழ் மொழியைக் கற்பிக்கும் போது தொடக்க நிலையிலிருந்து மாணவர்களின் தேர்ச்சி நிலையைக் கருத்திற்கொண்டு கற்பித்தலைத் தொடர வேண்டும். மாணவர்களின் மொழியார்வ நிலைக்கு ஏற்பத்தேர்ச்சி நிலையை வகைப்பாடு செய்யவேண்டும்.

இந்த வகைப்பாடு எமது நாட்டில் வகுப்பு நிலை வளர்ச்சியாக அமைந்துள்ளது. ஆண்டு ஒன்றிலிருந்து பதினோராமாண்டு வரை மாணவர்களின் தேர்ச்சி நிலை மதிப்பிடப் படுகின்றது. ஒவ்வொரு ஆண்டிலும் குறிப் பிட்ட புள்ளிகளைப் பெற்றுத் தமிழ்மொழி யில் தேர்ச்சிபெற்றவரே தொடர்ந்து ஏனைய ஆண்டுகளில் அப்பாடத்தைக் கற்பதற்குச் சேர்க்கப்பட வேண்டும். குறித்த ஆண்டில் தேர்ச்சி நிலைக்கு உரிய புள்ளிகளைப் பெறாது தமிழ் மொழியிலே தேர்ச்சி பெறத் தவறிய மாணவர்களை 'இடைநிலைத் தேர்வுகள்' மூலம் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளித்துத் தொடரும் ஆண்டுக்கு உரிய தமிழ் மொழிப் பாடத் தைக் கற்கச் செய்ய வேண்டும். இதனால் தமிழ் மொழிப் பாடத்தில் மாணவர்கள் உளநிலையில் வெறுப்பு ஏற்படா வண்ணம் பாதுகாத்துக்கொள்ள முடியும். தாய்மொழி என்ற நிலையில் தமிழை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கும் பிற மொழியா ளர் என்ற நிலையில் தமிழை ஒரு பாடமா கக் கற்கின்ற மாணவர்களுக்கும் இம்முறை பொருத்தமானது.

## பாடநூல்களும் துணைநூல்களும் :

தமிழ் மொழியைக் கற்பதற்குரிய பாட நூல்கள் சம்பந்தமாக இன்று பல சிக்கல் கள் எழுந்துள்ளன. தமிழ்மொழித் தேர்ச் சிக்கான வகுப்பு நிலையான பாடநூல்களைத் தெரிவு செய்வதில் மிகவும் விழிப்பாகச் செயற்பட வேண்டும். தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்க ளுக்குப் பாடநூல்களைத் தேர்வு செய்யும் போது தொடக்க ஆண்டிலிருந்து பதினோ ராம் ஆண்டு வரை கற்கை நிலையில் ஒரு தொடர்பை ஏற்படுத்த வேண்டியது இன்றி யமையாதது. மொழியறிவு தொடர்பான பாடநூல்களைப் புதிதாக வகுப்பு நிலைக்கு ஏற்ப வகுத்து எழுத வேண்டும். அவற்றிலே காலத்திற்குஏற்ப மொழி நிலையிலே காணப் படும் மாற்றங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகத் தற்காலத் திலே பிறமொழிச் சொற்களைத் தமிழ் மொழியிலே பயன்படுத்தும் தன்மையினை மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டியுள் ளது. வகுப்பு நிலையில் மட்டுமன்றிப் பிற சூழல் நிலைகளிலே மாணவர்களுக்கு அறி முகமாகும் பிறமொழிச் சொற்களையும் தமிழ் மொழிப் பாடத்தில் மாணவர்கள் அறிய வேண்டியதும் இன்றியமையாதது. ஏனைய பாடங்களில் பிறமொழிச் சொற்க ளைப் பெரிதாகப் பயன்படுத்துகின்ற வாய்ப்பு இருப்பதால் அச்சொற்களைத் தமிழ் மொழிப் பாடத்தின் மூலம் தெளிவுபடுத்து வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நேரடி மொழிபெயர்ப்புச் சொற் கள், கலைச்சொற்கள், தெளி பொருள் விளக் கச் சொற்கள் என்பவற்றைத்தமிழ்மொழிப் பாட நூல்களிலே மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். அத்துடன் அப் பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் இருப்பின் அவற்றினை இனங்காணப் பயிற்ற வேண்டும், இதனால் மரபான பாடங்களைப் பாடநூல்களிலே தொகுக்கும் வேளையில் புதிய பாடங்களை யும் எழுதி இணைக்க வேண்டிய தேவை ஏற் படுகிறது.

இந்நிலையில் பாடநூல்களுக்கான துணை நூல்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய் வதன் மூலம் கற்பித்தலில் ஓர் ஒழுங்கமை தியை ஏற்படுத்தலாம். பாடநூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பற்றி மாணவர் தனிநிலைக் கற்கை நிலையில் தெளிவு பெறுவதற்குத் துணை நூல்கள் உதவ வேண் டும். துணை நூல்களில் பொருள் விளக்கம், சொல் விளக்கம், இலக்கணக் குறிப்புகள், பிறதகவல்கள், விளக்கப்படங்கள், அட்ட வணைகள், செய்முறைப் பயிற்சிகள், உறுப் பெழுத்துப் பயிற்சிகள், மதிப்பீட்டுத்தேர்வு வினாக்கள், களஆய்வு என்பவற்றை இடம் பெறச் செய்ய வேண்டும். இதன் மூலம் முதலாமாண்டு தொடக்கம் பதினோராம் ஆண்டு வரை தமிழ் மொழிப் பாடத்தை ஆசிரியக் கற்பித்தல் நிலையுடன் மாணவர் தனி நிலைக் கற்கை நிலையையும் தொடர் புறுத்த வழியுண்டாகும். தமிழ் மொழியைக் கற்கின்ற பிற மொழியாளர்களின் தனி நிலைக் கற்கைக்கும் பேருதவி செய்யும்.

## மாணவர்களும் பாடத்திட்டமும் :

மாணவர்களுக்கு உரிய தமிழ் மொழிப் பாடத்திட்டத்தைத் தயாரிப்பதில் சில

சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொதுத் தேர்வு என்ற நிலையில் பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படும் போது அப்பொதுத் தேர்வுக்கு உரிய தகுதியை முதலில் முடிவு செய்தல் வேண்டும். எடுத்துக்காட்டாகப் பத்தாம் வகுப்பு மாணவனுடைய தமிழ் மொழித் தகைமை எவ்வளவு என்பதை நோக்காக வைத்துப் பத்தாம் வகுப்புக்கு உரிய பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். மொழி என்ற நிலையில் இலக்கண அறிவு, இலக்கிய அறிவு என இரு நிலையாகப் பாகுபாடு செய்து மொழியறிவை மதிப்பீடு செய்வது பொருத்தமாகும்.

ஆரம்ப வகுப்புக்களிலிருந்து பொதுப் பரீட்சைக்குரிய வகுப்பு வரை தமிழ் மொழிப் பாடத்தை மாணவர்கள் ஆர்வத்தோடு கற்பதற்குத் தூண்டுவதாகவும் பாடத்திட்டம் அமைய வேண்டும். இன்னும் குறிப்பாகத் தமிழ்மொழிப் பேணலை முக்கிய நோக்காகக் கொண்டு பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். பிறமொழிப் பாடத்திட்டங்களை வகை மாதிரியாகக் கொண்டு தமிழ் மொழிப் பாடத்திட்டங்கள் தயாரிப்பது தவிர்க்கப்பட வேண்டும். இன்று பாடத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது பிறமொழிப் பாடத்திட்டங்களை வகை மாதிரியாகக் கொள்ள வேண்டிய கட்டாயமும் எமக்கு உண்டு. இச் சந்தர்ப்பத்தில் தமிழ் மொழிப் பாடத்திற்கென நாம் விரும்பும் வகையில் ஒரு பாடத்திட்டத்தைத் தயாரிப்பதும் சிக்கலாக உள்ளது. எனினும் ஏனைய பாடங்களை விடத் தாய்மொழி என்ற நிலையில் தமிழ் மொழியை வைத்து அதற்கெனத் தனியாக ஒரு பாடத்திட்டத்தை அமைத்துக்கொள்ள வழியுண்டு. இன்று தமிழ் மொழிப் பாடத் திட்டத் தயாரிப்பில் எல்லாக் கல்வி நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலம் இச் சிக்கலைத் தீர்த்துக் கொள்ளலாம். பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் தனியார் கல்வி நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து மாணவர்களின் வகுப்பு நிலையான தமிழ்மொழித் தேர்ச்சியை முதலில் வரையறை செய்துகொள்ள வேண்டும். பின்னர் அவரவர் கற்பித்தல் நிலைக்கு ஏற்பப் பாடத்திட்டங்களை வகுக்க வேண்டும். அதன் பின்னர் அப் பாடத்திட்டங்களைப் பாடநூல்கள் வாயிலாகவும் துணை நூல்கள் வாயிலாகவும் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதைத் திட்டமிட வேண்டும். கற்பிக்கும் ஆண்டு, பாடவேளைகள், கற்பித்தல் நேரம் என்பவற்றை இத் திட்டத்திற்கு அமைய இணைத்துக்கொள்ள வேண்டும். பொதுத் தேர்விற் பெறும் பெறுபேறுகள் இப்பாடத் திட்டத்தின் இறுதி நோக்காக அமைய வேண்டும். தொடக்கப் பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகம் வரை தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுடைய பாடத்திட்டங்களை ஒரு நோக்கிலே பார்க்கக் கூடிய வகையில் அமைக்க வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழியைக் கற்பித்தலில் ஓர் ஒருங்கிணைந்த நிலையை எல்லா மட்டங்களிலும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

**மாணவர் பங்களிப்பு :**

தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கற்கின்றபோது கற்கை நிலையில் மாணவர்களின் பங்களிப்பு இன்று போதுமானதாக இல்லை எனக் கருதப்படுகிறது. வகுப்பு நிலைக்கு ஏற்ற தமிழ் மொழித் திறமை மாணவர்களிடம் இல்லை என ஆசிரியர்கள் கருதுகின்றனர். இச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்களின் பணியே முதன்மையானது. ஒருங்கிணைந்த பாடத்திட்டமும் பாட நூல்களும் துணை நூல்களும் சிறந்த முறையில் அமைந்திருந்தால் தமிழ் மொழிக் கற்கை நிலையில் மாணவர்களின் பங்களிப்பு பெரிதும் இடம்பெற வாய்ப்புண்டு. இன்னும் ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய பாடத்திட்டத்தை மாணவர்களும் அறிந்திருக்க வேண்டும். எனவே கற்கை நிலைத் தொடக்கத்தில் மாணவர்களுக்குப் பாடத் திட்டத்தையும் பாட நூல்களையும் துணை நூல்களையும் ஆசிரியர் முழுமையாக அறிவிக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலையில் மட்டுமன்றித் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மேலதிகக் கற்கை நிலையை மேற்கொள்கின்றனர். அங்கு பாடத்திட்டத்திற்குப் புறம்பாகச் சில குறுக்கு நிலைக் கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படுவதால்

மாணவர்கள் அதைப் பெரிதும் விரும்பிச் செல்கின்றனர். முன்னர் குறிப்பிட்டது போலப் பாடத்திட்டம் சகல மட்டங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டதாக அமையின் மாணவர்களும் இக் குறுக்கு நிலைக் கற்கை நெறியை மேற்கொள்ள முடியாது போய் விடும்.

பாடசாலை விடுமுறைக் காலங்களில் தமிழ் மொழிப் பாடம் தொடர்பான கள ஆய்வுகளை மாணவர்கள் மேற்கொள்ளச் செய்ய வேண்டும். இதனால் மாணவர்களுக்கு ஆசிரியருடைய அறிவூட்டலுக்கு மேலாகத் தன் நிலையான அறிவுத் தேட்டத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த முடியும். மாணவர்களின் வயது நிலைக்கு ஏற்ற கள ஆய்வுகளை ஆசிரியர்கள் வகுத்துக் கொடுக்க வேண்டும்.

## ஆசிரியர் பணி :

தமிழ்மொழி கற்பித்தலில் ஆசிரியர்களுடைய பணியே முதன்மையானது. தமிழ் மொழியைச் சிறப்பு நிலையிலே கற்று, கற்பித்தல் நெறியிலே பயிற்சி பெற்றுத் தமிழாசிரியர்கள் மாணவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்க வேண்டும். சில வேளைகளில் நம் நாட்டில் ஆசிரியர் பற்றுக்குறை காரணமாக இத்தகைய சிறப்பு நிலை ஆசிரியர்களை விடச் சாதாரண ஆசிரியர்களும் தமிழ் மொழியைக் கற்பிக்கின்ற பணியில் ஈடுபட்டிருக்கின்றனர். உண்மையில் தமிழ்மொழியாசிரியர் தாய்மொழி என்ற நிலையில் தமிழ் மொழிக் கற்பித்தலைச் செய்வது எளிது என எல்லோரும் கருதுகின்றனர். ஆனால் ஏனைய பாடங்களையும் மாணவர்கள் செம்மையாகக் கற்பதற்குத் தமிழ்மொழியில் தன்மொழிக் கல்வி நடைபெறும் எமது நாட்டில் தமிழ் மொழியறிவு மிகவும் முதன்மையான தொன்றாகும். எனவே ஏனைய பாடங்களையும் மாணவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குத் தமிழ்மொழி ஆசிரியரின் கற்பித்தலே பேருதவி புரிகின்றது.

வகுப்பு நிலையிலே ஏனைய பாடங்களை விடத் தமிழ்ப் பாடமே மிகவும் எளிதானது என்ற மனோ நிலையை மாணவர்கள் பெற வேண்டும். இதுவே தமிழ்மொழி கற்பிக்கின்ற ஆசிரியர்களுடைய இலக்காய் அமைய வேண்டும். இதனால் பாடத்திட்டத்திற்கு மேலதிகமாகச் சில விடயங்களைத் தமிழ் மொழி ஆசிரியர் சேகரிக்க வேண்டியுள்ளது. பாட நூல்கள், துணை நூல்கள் என்பவற்றில் கூறப்பட்டிருக்கும் விடயங்களுக்கும் மேலாக அவற்றோடு தொடர்புற்றுள்ள விடயங்களைப் பற்றியும் வகுப்பிலே மாணவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டியுள்ளது. குறிப்பாகக் "களஆய்வு" நிலையில் மாணவர்களின் முழுமையான ஈடுபாட்டிற்கு ஆசிரியரே வழிகாட்டியாகின்றார். விஞ்ஞானப் பாடங்களைக் கற்கின்ற மாணவர்கள் விஞ்ஞானச் செய்முறைப் பயிற்சிகளிலே ஆர்வம் கொள்வது போலத் தமிழ் மொழியைக் கற்கின்ற மாணவர்களும் 'கள ஆய்வு' களில் ஆர்வம்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பான தரவுகளைச் சேகரித்தற்கு மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை மாணவர்கள் தரத்திற்கு ஏற்ப ஆசிரியரே வகுத்துக் கொடுக்க வேண்டும்.

தமிழ் மொழியைக் கற்பிக்கும்போது முழுப் பாடவேளையையும் ஆசிரியரின் 'உரையாடல் நிலை' யாக மாற்றுமல் மாணவர்களின் கலந்துரையாடல்களையும் இணைக்க வேண்டும். இம்முறை தொடக்கத் தமிழ் மொழிக் கல்வி நிலையிலிருந்து பல்கலைக் கழகத் தமிழ்மொழிக் கல்வி நிலை வரை தொடர வேண்டும். ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கும் அறிவுநிலைப் பரிமாற்றத்திற்கும் இம்முறை பெரிதும் உதவும். ஆனால் மாணவர்கள் தொகை கூடிய வகுப்புக்களிலே இத்தகைய கலந்துரையாடல்களைச் செய்வதும் கடினமானதே. அச் சந்தர்ப்பத்தில் மாணவர்களைச் சில குழுக்களாகப் பிரித்துக் குழு நிலையிலிருந்து மாணவர் ஆசிரியருடன் உரையாடுவதற்கு வாய்ப்பளிக்கலாம்.

## நிறுவனங்களும் தமிழ் கற்பித்தலும் :

பாடசாலை நிலையில் மட்டுமன்றித் தனிப்பட்ட நிறுவனங்களிலும் தமிழ் மொழிக் கற்பித்தல் இன்று நடைபெறு

கின்றது. பாடசாலையில் தமிழை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர் தனிப்பட்ட நிறுவனங்களிலும் சென்று அப்பாடத்தைக் கற்கின்றார். அவ்வாறு கற்கும்போது மாணவருடைய நோக்கம் பரீட்சையில் தேர்ச்சி என்பதேயாகும். பாடசாலையில் கற்கை நிலையில் சிக்கல்கள் இருப்பதால் தனியார் நிறுவனங்களுக்குச் சென்று மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்கின்றார்கள் என்று கூற முடியாது. ஆனால் எமது நாட்டில் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்களே தனியார் நிறுவனங்களிலும் மேலதிகப் பொருள் தேட்ட நிலையில் தமிழ்மொழியைக் கற்பிக்கின்றார்கள். இதனால் சில வேளைகளில் பாடசாலைகளிலே இவ்வாசிரியர்கள் கருத்தூன்றிய நிலையில் தம்முடைய கற்பித்தலைச் செய்வதில்லை. இது மிகவும் மனவருத்தத்திற்குரிய செயலாகும். இந் நிறுவனங்கள் பாடசாலைகளோடும் பல்கலைக் கழகங்களோடும் தொடர்புடைய நிறுவனங்களாக அமையின் நன்று. மேலும் இங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பாடசாலைகள் பல்கலைக்கழகங்களில் கற்பிக்காத தனிப்பட்ட ஆசிரியர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

### தமிழ்மொழி இலக்கியக் கற்கைக்கான நிறுவனம் :

தமிழ்மொழி இலக்கியக் கற்கைக்கான நிறுவனமொன்று நிறுவப்பட வேண்டியது அவசியமாகும். இந்நிறுவனம் தமிழ் மொழி கற்பித்தலைச் செய்கின்ற சகல மட்டங்களையும் இணைக்கின்ற ஒரு மையமாக அமையும். தமிழ்மொழி கற்பித்தலில் ஏற்படும் சிக்கல்களைப் பற்றி எல்லோரும் ஒன்று கூடி ஓரிடத்தில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு இது வாய்ப்பளிக்கும். மேலும் இந் நிறுவனத்திற்குக் கிளை நிறுவனங்கள் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் அமைக்கப்பட வேண்டும். கிளை நிறுவனங்கள் தமிழ் மொழி கற்பித்தல் சம்பந்தமான சிக்கல்களை நேரடியாகக் கண்டு தாய் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உடனுக்குடன் அவற்றைத் தீர்க்கும் வழிகளையும் அறிவிக்க முடியும். இந்த நிறுவனம் பொது நூலகங்களுடனும் தொடர்புற்றதாக அமைய வேண்டும். இந்நிறுவனத்தின் பணிகளுள் "தமிழ் மொழிப் பேணல்" முதன்மையானதாக அமைய வேண்டும். கிராம மட்டத்தில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு என ஏற்படுத்தப்பட்ட மன்றங்களும் இந் நிறுவனத்துடன் தொடர்பு படுத்தப்பட வேண்டும். பிற மொழியாளர்கள் தமிழைக் கற்பதற்கும் தமிழ் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உதவுவதாகவும் இந் நிறுவனம் அமைய வேண்டும். இந் நிறுவனம் அமையும் பிரதேசம் ஏனைய சகல தொடர்புறும் நிறுவனங்களும் இலகுவில் தொடர்புறக்கூடிய மையப் பிரதேசமாக அமைய வேண்டும். மேலும் இந் நிறுவனத்தில் தமிழ் மொழியுடன் பிறமொழிகளின் ஒப்பீட்டாய்வைச் செய்யக்கூடிய வசதிகளும் அமைக்கப்பட வேண்டும். மொழி கற்பித்தலுக்குத் தேவையான நவீன வசதிகளையும் இந் நிறுவனம் கொண்டமைவது சிறப்பானது.

நாடு தழுவிய நிலையில் தமிழ் மொழி சார்ந்த சகல துறைகளும் செம்மையான நிலையில் தொடர்புற்றமைய இத்தகைய ஒரு நிறுவனமே எமக்குத் தேவையானது. ஆரம்பப் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழக ஆய்வு நெறிவரை தமிழ் கற்பித்தல் தொடர்பாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் தமிழ்மொழி கற்பித்தலை ஓர் ஒழுங்கு முறையிலே நடைமுறைப்படுத்துவதற்கும் இந் நிறுவனத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகும். எமது நாட்டில் தமிழ்மொழி தன்மொழிக் கல்விமொழியாக அமைவதற்கு இத்தகையதொரு நிறுவனமே தொடர்ந்தும் காலம் காலமாக இயங்க வல்லமையுடையதாகும். எதிர் காலங்களில் இந் நிறுவனத்தின் இயக்கமே தமிழ் மொழியைப் பேணிப் பாதுகாக்க வல்லது என்பதில் ஐயமில்லை.

சிவமயம்

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை,

# பவளவிழாப் பாராட்டுப் பாக்கள்

மூதறிஞர் நம. சிவப்பிரகாசம் அவர்கள்

### வெண்பா

பெரும்பிரான் கற்பகப் பிள்ளையார் நீழல்
சுரும்பிரா கஞ்செய்பூஞ் சோலை — உரும்பிராய்த்
தண்பவனச் சைவத் தமிழ்வித்யா சாலைவிழா
பண்பவளச் செவ்வழகப் பாங்கு.

### அகவற்பா

அதிபர் அரங்கோ அதியெழில் வாய்ந்து
விதிமுறை சைவ நிதிதமிழ் என்று
மரபு நிறீஇய வரன்வழி யாகும்
வரிசையில் முதற்கண் உரியவர் கந்தையர்
புரிபணி பொன்னுத் துரையின் பேற்றனர்
பாகராய்க் குமார சேகரம் வரச்சபா
இரத்தினம் பொறுப்பினை விருத்திசெய் தனர்கதிர்
வேலவர் மேலும் சீர்நட ராசர்
காலம தன்பின் அரிய நாயகம்
என்ற வகையில் மன்றம் வளர்ந்தது
இவ்வணம்
வளர்ச்சி விளங்க எழுச்சி விளைந்திட
இயைந்தனர் எல்லா நயந்திகழ் அதிபர்
பஞ்சாட் சரம்நினை நெஞ்சால் அத்தகு
நாமம் பூண்ட வாமன் அடியான்
பண்டித மணியின் சிந்தனை உண்டியல்
ஆசிரிய மணியாந் தேசிகர் ஒய்வுறப்
பரங்கிரி நாதன் கரங்கவர் காரிகை
சகுந்தலா தேவி புகுந்தனர்; படைத்தனர்
சரித்திரம். தொடர்ந்து விரித்தனர் செல்வி
சின்னத் தம்பி என்னே சிறப்பிது

அங்ஙனம்

துணையதி பதிகள் இணையிலா மணிகள்
கற்பிப் போரும் சிற்பிகள் அதான்று
மாணுக் கர்பெரும் பூணுய்க் கவின்செய
நலன்விரும் புநரும் வலம்இடம் பொலிந்தனர்

ஆக,

சீரா லுயர்ந்த ஊரார் தேசிய
வீரர் விறல்மணி ஆரம் பூண்டவர்
வைத்திய கலாநிதி சித்திரச் சிற்பிகள்
சட்ட மேதைகள் பட்ட தாரிகள்
பேரா சிரியர் பேர்திகழ் பண்டிதர்
தேசாதி பதியர் தேசாபி மானிகள்
உழவுந் தொழிலும் தொழுதிடும் உத்தமர்
கற்பின் பொற்புறு நற்றவ நங்கையர்
செந்தண் மைச்சீர் அந்தணர் இன்னிசை
வாணர் மேவும் மாணுர் மாவளம்
கூட்டிய கூடம் நாட்டின் கொள்கலன்
தேட்டம் சிவநெறி ஈட்டிய செம்மையிற்
பவளம் புகழிற் றவழும் அமையம்
போற்றுவம் யாவரும் சாற்றுவம்
ஆற்றுப் படையினை ஆற்றல் அறிந்தே.

### கலித்துறை

குரவர் கொலுவைந்தார் கோணகிச் சைவக் கொடிநிலவிப்
பரவ நெறிசெய்த பண்பாலே இந்து பலகலைசீர்
விரவ எழும்மூல வேருரும் பையூர் விபுதரணிப்
புரவ லருகந்த புண்யகைங் கர்யம் பொலிந்ததுவே.

# ஆசிரியரின் சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும்.....

திரு. ஆர். எஸ். நடராசா அவர்கள்
(அதிபர், ஆசிரியகலாசாலை, பலாலி)

ஆசிரிய வாண்மையின் பயன், மாணவர் சிறப்பாகக் கற்க உதவுதல். கற்றல் என்பது, கற்றபடி நிற்றலையும் உள்ளடக்குவதாகும். கற்றபடி நிற்போரையே கற்றோர் என மதிப்பர். கல்வி பெரிதும் விருத்தி அடைந்ததாகக் கூறப்படும் நாடுகளிலும், கல்விக்கும் வாழ்வுக்கும் தொடர்பில்லாத நிலை காணப்படுகின்றது. துரித பொருளாதார முன்னேற்றம் காணவேண்டும் எனத் துடிக்கும் வளர்முகநாடுகள் பலவும், வெறும் ஏட்டுக் கல்வியைப் பரீட்சை இலக்குடன் வழங்குவதால் ''வாழுக்கல்வி'' என்னும் நிலை காணப்படுவதில்லை. சில வளர்முக நாடுகளில் பொருத்தமற்ற கல்வியால் அரசியல் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் கவலைதரும் அளவுக்குப் பெரிதாகியுள்ளன. இந்நிகழ்வுக்கு இலங்கையின் கல்வி வரலாறு நல்ல உதாரணமாகும்.

உயர்ந்த பொருளாதார விருத்தி இலக்கினை அடைய விஞ்ஞான தொழில்நுட்பக் கல்விக்கு முன்னுரிமை தரும் நாடுகளில் மனிதத்துவ விருத்தி உதாசீனம் செய்யப்படுவதால் சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றக்கூடும். கல்வி விருத்தியினால் தனது பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வுகாணலாம் என எதிர்பார்த்த மனிதன் ஏமாற்றமடைந்தவனாய் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான்..

''அணுவைப் பிளந்தாயிற்று;
அண்டத்தை அளந்தாயிற்று;
ஆனால், மனிதன் மனிதப்
பண்பை இழந்தாயிற்று''

என மனிதன் தவிக்கும் நிலையினைக் காண்கின்றோம். வாழக்கல்வி வழிசெய்யவில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசெய்ய வேண்டிய கல்வி, மனித வாழ்வைக் குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொண்ட நிலைக்கு ஆக்கியுள்ளது.

இவற்றை எல்லாம் கருத்திற் கொள்ளும் பொழுது காலதாமதமின்றிக் கல்விக் கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்னும் முடிவுக்கே வருகின்றோம். கல்வியின் மூலம் மனித நடத்தை பண்படுத்தப்பட வேண்டிய தேவை என்றுமில்லாத அளவுக்கு இன்று உணரப்படுகின்றது. விஞ்ஞான விருத்தியால் உலகை ஆட்டிப்படைக்கும் செல்வ நாடுகள், தமது ஆதிக்க வேட்கையால் அழிவை ஆயுதமாகக் கொண்டு மனித குலத்தையே அச்சுறுத்தும் நிலையைக் காண்கின்றோம். ''உலகப் போர் மனித உள்ளத்திலேயே ஆரம்பிக்கின்றது.'' மனித உள்ளத்தை மாசற்றதாக்கி, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் கொள்கைப்படி மனித வாழ்வு உருவாகக் கல்வி உதவவேண்டும். வேதனையும் சோதனையும் மிகுந்த இன்றைய நிலையினை மாற்றி அமைக்கக் கல்வியினைப் பயன்படுத்துவதே அறிவுடைமை. கல்வியால் அறிவு ஒளியுடையதாக்கப்பட்டு மனிதத்துவத்தை மதிக்கும் அன்பும் பண்பும் விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியினை நெறிப்படுத்தி, மனிதன் மனிதனாக வாழக்கல்வி வழங்க விரைவில் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்வியின் நோக்கும் போக்கும் மாற்றி அமைக்கப்படுவது இன்றியமையாததாகும்.

கல்வி என்பது பொதுவாக வளர்முக நாடுகளில் பரீட்சை என்னும் பந்தய ஓட்டமாகவே அமைந்துள்ளமை வேதனை தருவதாகும். உயர்ந்த தராதரப் பத்திரத்தினைப் பெறும் நோக்குடன் கற்போர் ஓய்வில்லாது கற்றலில் தம்மை ஈடுபடுத்தவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர். பிள்ளைகளின் ஏட்டுக்கல்வி முன்னேற்றம் குறித்த பெற்றோரின் அபிலாசை செறிந்த அழுத்தத்தால் பிள்ளைகள் தங்களது உள்ளார்ந்த இயல்புக்கேற்ற விருத்தியினைப்

பெறமுடியாது போகின்றது. அவர்களது திறன்கள், தேவைகள், உந்தல்கள், அபிலாசைகள் எல்லாமே நசுக்கப்படுகின்றன. அவர்கள் பெறும் வெறும் ஏட்டுக் கல்வித் தராதரப் பத்திரங்கள் அவர்கள் வாழப் பயன்படாது போய்விடும்பொழுது தாம் கற்ற கல்வியிலும் அக்கல்வியைத் தம்மீது திணித்த சமூகத்திலும் வெறுப்படைவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது.

இலங்கையில் அண்மைக் காலத்தில் இளைஞரிடம் பரவலாகக் காணப்படும் அமைதியின்மை, விரக்திநிலை, சமூக எதிர்ப்புப் போக்கு என்பனவற்றுக்குரிய காரணங்களை இனங்கண்டு அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழிவகைகளைக் கண்டறிய 1990ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சனாதிபதி விசாரணைக்குழு, அதன் அறிக்கையில் இளைஞர் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருத்தமற்ற ஏட்டுக் கல்வியையே சுட்டிக் காட்டியுள்ளது. கல்விக் கோட்பாட்டையும் செயற்பாட்டையும் 'வாழக்கல்வி' என்னும் நோக்கில் மறுசீரமைப்பதே இளைஞர் பிரச்சினைக்குத் தீர்வுதரும் என்னும் கருத்தை விசாரணைக் குழுவினர் எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு மறுசீரமைக்கும் பொழுது மாணவரின் இயல்பு, நாட்டின் தேவை, நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியம், பொருளாதார நிலை என்பவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. வாழப் பயன்தரும் கல்வியை அறிமுறை மூலமும் செய்முறை மூலமும் சமவிருத்திபெற்ற ஒன்றிய ஆளுமை உடையவராக உருவாவதற்குக் கல்வி திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும் என்பதே ஆணைக்குழுவின் விதப்புரையின் சாரம் எனக் கொள்ளலாம்.

பிள்ளைகள் தமக்கும் சமூகத்துக்கும் அதி உச்சப் பயன்தரும் வகையில் உருவாக்கப்படுவது அவசியமாகும். திட்டமிட்டுப் பிள்ளைகளின் அறிவு, திறமை, மனப்பாங்கை விருத்தி செய்யக்கூடிய தகுதி முறைசார்ந்த கல்வி நிலையங்களாகிய பாடசாலைகளுக்கே உள்ளது. பாடசாலைகள் வழங்கும் கல்விச் சூழலின் தன்மைக்கேற்பவே கல்விப்பயன் அமையும். மரபும் சூழலுமே ஒருவரது ஆளுமை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகள். ஆளுமையை மதிப்பிட ஒருவரின் பெற்றோரையும் அவர் கற்ற பாடசாலையையும் அறிய முற்படுகின்றோம். ஆசிரிய வாண்மையின் சிறப்பே பாடசாலை வழங்கும் கல்விச் சூழலின் சிறப்பாகும். தராதரப் பத்திரம் மாத்திரம் ஒருவரின் நிறைவான வாழ்வுக்கு உத்தரவாதமாகாது. பரீட்சை நோக்கில் பெற்ற தராதரப்பத்திரம் வாழத் திறமை வழங்குவது சாத்தியமில்லை. கல்வியின் பயன் வாழ்வே. பட்டங்கள் பல பெற்றும் அவற்றின் அடிப்படையில் பதவிகள் பெற்றும் சிலர் மனிதப் பண்பு இல்லாராய் தாம் வேதனைப்படுவதும் பிறரை வேதனைப் படுத்துவதும் நிசமாக் காண்பது பரீட்சை மையக் கல்வியின் விளைவே.

கல்விச் செயற்பாட்டின் கவலைக்குரிய விளைவுகளை மாற்றி அமைத்து இன்று நாம் எதிர்கொள்ளும் முக்கிய வாழ்க்கைப் பிரச்சினைக்குத் தீர்வுதரக் கல்வி வழங்குவது இன்று ஆசிரிய வாண்மைக்குச் சவாலாய் அமைவதாகும்.

இலங்கையில் எழுத்தறிவு பெற்றோர் தொகை 86% எனச் சொல்லப்படுகின்றது. இது வளர்முக நாடுகள் பலவற்றுள்ளும் முன்னேற்றமான சாதனை என்றும் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. எனினும் எழுத்தறிவு வளர்ச்சியும், ஒன்பது பல்கலைக்கழகங்களால் உயர்கல்வி விருத்தியும், கல்விக்காகச் செலவிடப்படும் பெருந் தொகைப் பணமும் மக்கள் வாழ்வில் உண்மையான உயர்வைத் தரவில்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். கடந்த அரை நூற்றாண்டில் இந்நாட்டில் இடம்பெற்ற கல்வி வரலாற்றைத் திறனாய்வோர் பரீட்சை இலக்குடைய ஏட்டுக்கல்வி தொடர்வதுக்குரிய முக்கிய காரணிகளை இனங்காண முடியும். தற்கால இலங்கையின் தேசியக்கல்வியின் தந்தை என மதிக்கப்படத்தக்க கல்வியாளர் கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் தேசிய மொழிகளைப் போதனா மொழிகளாக்கியும், ஆரம்ப நிலையிலிருந்து பல்கலைக்

கழகம் வரை கல்வியை இலவசமாக்கியும், அரசே கல்வியை வழங்கும் முழு உரிமையையும் பெற்றிருக்க வேண்டுமென மகாவித்தியாலயங்களையும் மத்திய மகாவித்தியாலயங்களையும் குறிப்பாகக் கல்வியில் பின்தங்கிய பிரதேசங்களில் அமைத்தும், கல்வி வாய்ப்புக்களைப் பரவலாக்க ஆர்வத்தோடு உழைத்தார். அவரது கல்வித்திட்டம் வாழக்கல்வி வழங்குவதையே முக்கிய இலக்காகக் கொண்டிருந்தது. தொழிலும் தொழில் நுட்பமும் விவசாயமும் இடைநிலைக் கல்விக் காலத்தில் மாணவருக்கு வழங்க அவர் வகுத்த திட்டம் கைவிடப்பட்டது நாட்டுக்குப் பெரும் சாபக்கேடாயிற்று. அதன்பின் வேலை அனுபவம் தொழில் முன்னிலைப் பாடங்களின் மூலம் மாணவர் செய்தும் சிந்தித்தும் கற்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் கைவிடப்பட்டன. வாழ்க்கைத்திறன் கல்வி போதிக்கப்படும் என்னும் வாக்குறுதியும் ஆர்வத்தோடு நடைமுறைப் படுத்தப் படவில்லை. ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் நிலை தொடர்வதையே காண்கின்றோம். அதன் விளைவாக நாட்டில் அமைதியின்மையும் அவலமும் மக்களை வருத்துவதை அவதானிக்க முடிகிறது.

ஏட்டுக் கல்வியை மாற்றி அமைத்து வாழக்கல்வி வழங்கக் காலத்துக்குக் காலம் எடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்தமைக்குக் காரணங்களைக் கண்டறிவது பயனுள்ளதாகும். எமது கல்வியில் இங்கிலாந்துக் கல்விச் சிந்தனையும் செயற்பாடும் இடம் பெறுவதையே படித்த உயர்வகுப்பார் விரும்பினர். உய வகுப்பாரின் ஆதிக்கம் தொடர ஒரு சிலருக்கே ஆதிக்கப் பதவி தரத்தக்க ஏட்டுக்கல்வி தொடரப்பட்டது. பெருந்தொகையினர் கல்வியால் பயன்பெற முடியாமைக்கு ஏட்டுக்கல்வியே காரணம். இப்பிரச்சினை ஆசிரியர்களால் அக்கறையோடு சிந்திக்கப்படவில்லை. ஆசிரிய சங்கங்களும் சமூக முன்னேற்ற அமைப்புக்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அதிக அக்கறைப்படுவதில்லை. எனவே தேசியப் பிரச்சினைகள் தீர்வின்றித் தொடர்கின்றன.

''பாடசாலை சமூகத்தின் கரு'' அதைத் தக்க முறையில் செயற்படச் செய்து முக்கிய தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதே அறிவுடைமை. மாணவரின் உளவிருத்திக்கு மட்டுமே ஆசிரியர் பொறுப்பு என்னும் தவறான கருத்தை ஆசிரியர்கள் கைவிட வேண்டும். மாணவரின் முழுவிருத்திக்கும் ஆசிரியர்களே பொறுப்பு என உளப்பூர்வமாக உணர்ந்து அதற்கேற்ப ஆசிரிய வாண்மையை உருவாக்கிச் செயற்படல் இன்று ஆசிரியரிடம் வேண்டப்படுகின்றது. ஆசிரியர்களே சமூக முன்னோடிகள். அவர்கள் முயன்றால் நாடு கல்வியால் நலம்பெறும் நிலையினை உருவாக்க முடியும் என இன்று சமூகம் எதிர்பார்க்கின்றது. சுருங்கச் சொல்லின் இந்நாட்டுக்கு முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் கல்விக்கோட்பாட்டிலும் செயற்பாட்டிலும் ஆசிரியர்கள் புரட்சியாளராகப் பணியாற்ற முன்வரவேண்டும்.

வாழக்கல்வி வழங்கும் கோட்பாட்டையும் செயற்பாட்டையும் அரசு தொடங்கிச் செயற்படுத்துவது சாத்தியமன்று. கடந்த காலக் கல்வி வரலாறு அரசு யதார்த்த நிலை உணர்ந்து கல்வியை வழங்கும் என்ற நம்பிக்கை தரவில்லை. எனவே தற்போதுள்ள கல்வித் திட்ட வரம்பினுள் தம்மாலியன்ற அளவு ஆசிரியர்களே வாழக் கல்வி வழங்க முன்வரவேண்டியுள்ளது. வகுப்பறை ஒன்றே கல்விச் சூழல் எனக் கருதாது, வகுப்பறை, பாடசாலை, சமூகம் என்னும் மூன்று சூழலையும் மாணவர் வாழக்கல்வி பெறப் பயன்படுத்துவதே ஆசிரிய வாண்மைக்குச் சவாலாகும்.

ஆசிரியர்கள் பரீட்சை இலக்குடைய பாடச் செயற்பாடே மிக முக்கியம் எனக் கருதாது கல்வி கற்போரின் வாழ்வுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவும் அறிவு, திறமை, மனப்பாங்கு பெறச் செய்வதும் முக்கியம் எனக் கருதுவதும், பாட இணைச் செயற்பாடுகளைத் துணைக்கொண்டு அனுபவங்களையும் மனப்பாங்கையும் உருவாக்க முன்வர வேண்டும். இன்று பெரும்பாலான பாடசாலைகளில் எவ்வித பாட இணைச் செயற்பாட்டிலும் அக்கறை காட்டப்படுவதில்லை. ஆசிரியர்களும் அது தமது கடமைக்கூறு அல்ல எனக் கருதுவதுண்டு. மாணவருக்கும் பெற்றோருக்கும் அக்கறை

இல்லை எனக் கூறித் தமது அக்கறை இன்மையை நியாயப்படுத்துவதுண்டு. எனினும் ஆசிரியரின் பாட இணைச் செயற்பாடுகளில் காட்டும் ஆர்வம் நிலைமையை மாற்றும் என்பதை மறுக்க முடியாது.

கல்விச் சூழலை ஒழுங்கு செய்யும் பொறுப்புள்ள ஆசிரியர்கள் வாழக்கல்வி வழங்கும் நோக்குடன் செயற்படக் கல்வி பற்றிய தெளிவான எண்ணக் கருவினை நினைவிலிருத்திச் செயற்பட வேண்டியது அவசியம். அவர்கள் பின்வரும் சில முக்கிய கருத்துக்களை மறவாது மதித்துச் செயற்படுவது வெற்றிக்கு வழியாகும்.

* எல்லோருக்கும் கல்வி அவசியம்.
* எல்லோரும் கற்கக் கூடியவரே.
* பயனுள்ளவற்றையே பிள்ளைகள் கற்க விரும்புவர்.
* செய்தும் சிந்தித்தும் கற்பதை விரும்புகின்றனர்.
* புலக்காட்சி மூலமே அதிகம் கற்கின்றனர்.
* பாடசாலையும் பிள்ளைகள் வாழும் இடமாகும்.
* சமூகத்தைப் புரிந்து பொருந்தி வாழப் பயிற்சி வேண்டும்.
* பிள்ளைகள் தம்மில் தாம் தங்கியிருக்க விருத்தி செய்யப்பட வேண்டும்.
* உடலுழைப்புக் கல்விச் செயற்பாட்டில் இடம்பெற வேண்டும்.
* கல்விச் செயற்பாட்டைச் சிறப்பான சூழல் ஊக்குவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் பிள்ளைகள் வாழப் பயனுள்ள கல்வியை மகிழ்ச்சியோடும் அக்கறையோடும் பெற வழிவகுக்கும். பிள்ளைகளின் வாழ்க்கைச் சூழலோடு தொடர்புபடாத விடயங்களை நெடுந்தொலைவிலுள்ள நிச்சயமற்ற எதிர்காலத்துக்கு அவர்களை ஆயத்தப்படுத்தும் கல்வியை அவர்கள்மேல் திணிப்பது பிள்ளைகளின் அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் என்பதே உண்மை நிலையாகும்.

கல்வி வரலாற்று ஒப்பீட்டு நோக்கில் பார்க்கும் பொழுது வாழக்கல்வி வழங்கும் நாடுகளில் முன்னேற்றம் துரிதப்படுத்தப்பட்டமை தெளிவாகும். ரூஷியா, சீனா, தன்சானியா வாழக்கல்வி வழங்கித் துரித முன்னேற்றங் கண்ட நாடுகளாகும். உற்பத்தி சார்ந்த தொழில்நுட்பப் பயிற்சியினைப் பிள்ளைகள் பாடசாலையில் பெறுவது இந் நாடுகளின் கல்விச் செயற்பாட்டுச் சிறப்பாகும். பாடசாலைகளில் பண்ணைகளும் தொழிற்சாலைகளும் அமைந்திருப்பதுவும், பண்ணைகளிலும் தொழிற்சாலைகளிலும் பாடசாலைகள் அமைந்திருப்பதுவும் சிறப்பு அம்சங்களாகக் கொள்ளலாம்.

நமது நாட்டுக் கல்வி நமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டியது அவசியம். கல்வியால் சமூகநீதி, சமதர்மம், ஒன்றிய ஆளுமை விருத்தி என்பவை விருத்தி செய்யும் செயற்பாடுகள் பாடசாலைகளில் பரவலாக இடம்பெறச் செய்ய ஆசிரியர் முன்வர வேண்டும். வளர்முக நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் தேசிய முன்னேற்றத்துக்குத் தனது உச்சப் பங்களிப்பினைச் செய்யும் நிலை உருவாக்கப்பட வேண்டும். ''நான் வந்தபோது இருந்ததைவிட இச் சமூகத்தை நான் சிறந்த இடமாக விட்டுச் செல்ல வேண்டும். அது எனது சமூகக் கடன்'' என்னும் உணர்வு ஒருவனது வாழ்க்கைக் குறிக்கோளாய் அமையக் கல்வி உதவ வேண்டும்.

சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வால் பற்பல பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கும் நாடுகளில் கல்வியே பிரச்சினைக்குத் தீர்வு கண்டு முன்னேற்றமடையச் செய்யும் சிறந்த சாதனமாகும். பாடச் செயற்பாடு மாத்திரம் போதியதன்று. பாடச்செயற்பாடுகள் பெறும் அக்கறை, பாட இணைச் செயற்பாடுகளும் பெறுதல் அவசியம்.

* உடல்நலத்தையும் உள நலத்தையும் உறுதி செய்யப் பாடசாலைகளில் பெருந் தொகையினர் பங்குபற்றும் விளையாட்டு முயற்சிகளை ஒழுங்கு செய்தல்.

* மாணவர் ஒன்றுகூடல்கள் மூலம் நல்ல சமூக மனப்பாங்குகளை உருவாக்க முயற்சித்தல்.
* சமூக பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் புரிந்து பொருந்தி வாழச் சமய சமூக விழாக்களைப் பயன்படுத்தல்.
* தொழில் மகத்துவம் உடல் உழைப்பின் உயர்வு என்பவற்றை உணர்த்தச் சிரமதான முயற்சிகளைப் பாடசாலையிலும் அதன் சூழலிலும் மேற்கொள்ளல்.
* தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள வாழ்க்கைத்திறன் கல்வியை ஆர்வத்தோடு பிள்ளைகள் கற்றுப் பயன் பெறச் செய்வதில் ஆசிரியர் அக்கறை கொள்ளல்.
* பாடசாலைத் தோட்டம், மரம் நாட்டல், சூழல் மாசுறுது பாதுகாத்தல் ஆகிய பயனுள்ள பணிகளை மேற்கொள்ளச் செய்தல்.
* சாரணர் இயக்கம் போன்ற அமைப்புக்களை உருவாக்கிச் சிறப்பாகச் செயற்படச் செய்தல்.

ஆகிய பாட இணைச் செயற்பாடுகளை அதிக சிரமமின்றி ஆசிரியர் மேற்கொண்டு கல்விப்பயனை உறுதிசெய்யலாம். இவற்றைச் செயற்படுத்துவதில் நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன என்று கூறி ஆசிரியர்கள் உதாசீனம் செய்வது நியாயமில்லை. ஆசிரியத் தொழில் உயர் தொழில். இவ்வுயர் தொழில் வாண்மை உடையோர் தம்மைத் தமது தொழிலுக்காய் அர்ப்பணிக்கும் பக்குவம் உள்ளவரென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்கள் உருவாக்கப்படுகின்றார்கள், உருவாக்கப்பட்டவர்கள் தமது பணியால் தம்மை உயர்த்திக்கொள்கிறார்கள். ஆசிரியரின் நல்வழி சமூகம் அவ்வழி.

இன்று எமது சமூகத்தைச் சீரழிக்கும் நோய்களைத் தீர்க்கும் வைத்தியராய் ஆசிரியர் தமது பாரிய பொறுப்புணர்ந்து பணியாற்ற முன்வர வேண்டும். சமூக விடுதலைக்கும், முன்னேற்றத்துக்கும் பாடசாலையை நன்கு பயன்படுத்திச் சமூகம் மாசகன்று மலர்ச்சி பெற்று மகிழ்ச்சியுற ஆசிரியர் சிந்தித்துச் செயலாற்ற வேண்டப்படுகின்றனர்.

'' தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை ''

## அறிவுச்சாலை


'' எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் '' என்னும் உண்மையைப் பழந்தமிழ் மக்கள் பொன்னே போல் போற்றினர். கல்வி நலம் வாய்ந்தவரே மக்களாவரென்றும் அந்நலம் அமையப் பெறாத மானுடர் விலங்களையரென்றும் பழந்தமிழ் பனுவல் பகுத்துரைக்கின்றது. ' கற்றல், கேட்டல் உடையார் பெரியார் ' என்றார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர். எனவே உடம்பினை வளர்க்கும் அன்னசாலையினும், உயிரினை வளர்க்கும் அறிவுச்சாலை சிறந்ததென்று அறைதலும் வேண்டுமோ ?

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வளர்ச்சிக்கு உழைத்த பெரியார்களில் அமரத்துவம் அடைந்தவர்கள்




இராசவாசல் முதலியார்
வ. பொன்னம்பலம்
அவர்கள்




நியாயவாதி
ஆ. தனபாலசிங்கம்
அவர்கள்



த. முத்துச்சாமிப்பிள்ளை
அவர்கள்
அத்துவக்காத்து



அ. இளையதம்பி
அவர்கள்




சி. செல்லப்பா
அவர்கள்


(ம. ப. பா.)




வே. நல்லையா
அவர்கள்



அ. சேனாதிராசா
அவர்கள்



தம்பு குமாரசாமி
அவர்கள்



ஆ. முத்துவேலு
அவர்கள்



க. செல்லையா
அவர்கள்

# பகலவன்போ லொளிகான்று பல்லாண்டு வாழி

கவிஞர் செ. ஐயாத்துரை அவர்கள்

கற்பகனு ராலயத்துக் கயலே வைகிக்
கனகமணிக் கவின்கலைகள் பலவு மோச்சி
பொற்புநிறை பூம்பொழிலாய்ப் புனித வூற்ருய்ப்
புகலரிய தமிழ்க்கல்வி போற்றும் வண்ணம்
அற்புதமாய் வளர்த்தளிக்கு மருமை சான்ற
ஆரணங்கே அமுதனைய வன்னுய் நின்னைப்
பற்றிநின்ற சிருர்கல்விப் பசியைத் தீர்த்துப்
பராபரிக்கும் பராபரியே நின்ருள் போற்றி.

ஊர்நடுவே பழுத்தநல் விருட்சம் போல
உவந்துகல்வி யூட்டுகின்ற உயர்வு கண்டோம்
கார்தருநல் மழையினைப்போற் கனிந்து கல்வி
காதலொடு பயிற்றுகின்ற பண்பு கண்டோம்
பேர்பெறுநல் வித்தியா சாலை யென்று
பெருமிதமாய்ப் பல்லோரும் பேசக் கேட்டோம்
பார்வதிபோல் விளங்குமெழிற் ருேற்றம் பார்த்தோம்
பகலவன்போ லொளிகான்று பல்லாண்டு வாழி.

நாவலனுர் வகுத்தவழி நன்கு வாழ
நல்லுரும்பை யம்பதியில் நவில வொண்ணு
தாவறுநற் சைவமொடு தமிழும் நன்ருய்த்
தரணியுளோர் போற்றும்வகை தழைத்து மேலாந்
தேவர்களு மதிசயிப்பத் திறன்சால் கல்வித்
தீம்புனலில் மாணவர்கள் குளித்து மூழ்கும்
பான்மையிலே கலைகள்பல பயில வைத்தாய்
பாரிலுள்ளோர் போற்றப்பல் லூழி வாழி.

செந்தமிழும் சிவமதமுந் திருவும் ஓங்கச்
சிருரும்பை செம்மைபெற்றுச் சிறந்தே ஓங்க
வந்தணையும் மாணவரின் கல்வி ஓங்க
வளமான வாழ்வவர்கள் பெற்று நீடு
சிந்தனையி லுயர்ந்தோங்கு பண்பி ஞேடு
சிறந்தநற் பிரசைகளாய் வாழ ஊக்கும்
சுந்தரஞ்சேர் சைவத்தமிழ் வித்யா சாலை
சோதிப்ர காசமொடு தொடர்ந்து வாழி.

# பாரத இளவல்கள் மூவர்

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள்

இளமை வலிவும் வனப்பும் கொண்டது. உயர் குறிக்கோள்களை அமைத்துக்கொள்வதற்கும் உண்மை வழி ஒழுகுவதற்கும் மறத்தினை எதிர்த்துப் போராடுவதற்கும் தயங்காத பருவம், பெரும்பாலும் இளமைப் பருவமே. 'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை' என்னும் உள்ள உறுதி ஒருவருக்கு இளமையிலேயே அமைந்துவிடுமாயின் அஃது அவரின் நற்பேறே. காற்று வீசுகையில் அது வீசும் பக்கமெல்லாம் சாய்வது புல்லின் இயல்பு. அது புன்மையானது. கிளையுடன் கெடுவதாயினு வளையாமல் நின்று வலிய எதிர்ப்பைக் காட்டுவதே பெருமையும் புகழும் தரும். 'மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே' என்ற உயர் நிலைமைக்குத் தம்மை உள்ளாக்கும் இளைஞர்களே வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்கள், வையத்தை வாழ்விப்பவர்கள். அவர்களையே உலகம் போற்றும். புலவர் பாடும் பெருமைக்கும் அவர்களே உரியராவார்கள்.

பாரத இதிகாசத்திலே இத்தகைய புகழுக்கும் பெருமைக்கும் உரியோராய் அமைந்த இளவல்கள் விகருணன், அபிமன்னியு, சகாதேவன் ஆகிய மூவருமாவர். மூத்தோர், அறிஞர், அறமுணர்ந்தோர் முதலாகப் பலரும் அமர்ந்திருந்த அவைக்களத்திலே அவர்கள் கூறத் தயங்கிய நீதியினை அஞ்சாது எடுத்துரைத்தவன் விகருணன். மாரத வீரர் பலரும் பெரும்படையோடு தன்னைச் சூழ்ந்து நின்று போருடற்றிய காலத்தும், இறுதிவரை எதிர்த்துப் போராடிச் சூழ்ச்சியால் வீழ்ந்துபட்டவன் அபிமன்னியு. கபட நாடக சூத்திரதாரியான கண்ணபிரானின் உள்ளக்கிடக்கையினைத் தனது உள்ளுணர்வால் அறிந்துகொண்டதோடு, அவனையும் தனது பத்திவலையிலே படுத்துத் தன் தமையன்மாராலும் ஆகாத ஒன்றை அடைந்திடும் பெருமைக்கு உரிமை படைத்தவன் சகாதேவன். இம் மூவர் பற்றியும் நினைவுகூர்வது பயனுடையதே.

விகருணன் திருதராட்டிரனுக்கும் அவன் பட்டத்தரசியான காந்தாரிக்கும் பிறந்த நூறுவது மகன். ஆண்மக்கள் தொண்ணூற்றொன்பதின்மருக்கும் அடுத்துப் பிறந்தவன். இவனுக்கு ஒரு தங்கை துச்சளை என்னும் பெயரினள். இவர்கள் நூற்றொருவரும் பிறந்த வகைபற்றி வில்லிபுத்தூரர் பின் வருமாறு கூறுவார்,

கோள்களின் நிலையால் தீமை
கொண்டன முகூர்த்தம் தன்னில்
தேள்களின் கொடிய மற்றைச்
சிறுவரும் சேர ஓரோர்
நாள்களிற் பிறந்த பின்னர்
நங்கையும் ஒருத்தி வந்தாள்
தோள்களிற் கழையை வென்றாள்
துச்சளை என்னும் பேராள்.

'தேள்களிற் கொடிய சிறுவர்' என்று பெரும்பான்மை கருதி அவர் இவ்வாறு உரைத்தாலும் விகருணன் தன் தமையன்மாரிலும் வேறானவன். தேள்களிடையே அவன் ஒரு பிள்ளைப்பூச்சி; சேற்றினிடையே மலர்ந்த செந்தாமரை. அவனுள்ளே மறைந்துகிடந்த அறவேட்கையானது அஞ்சாமையோடு வெளிப்பட்டுத் தன்னைப் புலப்படுத்தும் இடமாகச் 'சூதுபோர்ச் சருக்கம்' அமைந்து விடுகின்றது.

இந்திரப்பிரத்த நகரமைத்து, இராசசூய வேள்வி நிகழ்த்தி, அந்த வேள்வியிலே கண்ணபிரானுக்கு முதன்மையளித்து, யாவரும் போற்றிடத் தோற்றமும் ஏற்றமும் பெற்றுத் திகழ்ந்த பாண்டவர்தம் செல்வங்கள் யாவற்றையும் கவர்வதற்குச் சூது

பொருதலே தக்கவழி என்று தாய்மாமனான சகுனி கூறிய ஆலோசனையை ஏற்று, அதற்கென அழகொளிர் மண்டபம் அமைத்து, அம்மண்டபம் காணவருமாறு துரியோதனன் சார்பில் திருதராட்டிரன் விதுரன் மூலமாகப் பாண்டவருக்குத் தூதனுப்புகின்றான். பாண்டவரில் மூத்தோனான தருமன், விதுரன் வாயிலாகத் துரியோதனனின் உள்நோக்கத்தை அறிந்துகொண்டாலும், அழைப்பனுப்பியவன் தன் பெரிய தந்தை என்பதால், அதனை மறுத்தல் தகாது என்று கொண்டு தன் தம்பிமாரோடும் படை பரிவாரங்களோடும் அத்தினபுரம் செல்கின்றான்.

அங்குச் சகுனிக்கும் தருமனுக்குமிடையே சூதாட்டம் நிகழ்கிறது. தருமன் தன் நாடு நகர் செல்வம் யாவும் இழக்கின்றான்; அவற்றோடு நில்லாது தன்னையும் தம்பிமாரையும் ஒட்டம்வைத்தும் தோல்வியே அடைகிறான். இறுதியாக ஐவர்க்கும் தேவியான பாஞ்சாலியும் ஒட்டப் பொருளாகி இழக்கப்படுகிறாள். துரியோதனனின் பொறாமையும் பழிவாங்கலும் இந்த அளவிலும் முற்றுப்பெறவில்லை. அவன் அரசவையிலே பாஞ்சாலியை அழைத்து அவமதிப்புச் செய்ய முனைந்து,

"நின்றவன் ஒருவன் றன்னை
நீநனி விரைவி னோடிச்
சென்றவ ளிருந்த கோலத்
தெரிவையைக் கொணர்தி"

என்று கட்டளையிடுகிறான். அவன் கட்டளையினை ஏற்ற தேர்ச் சாரதியான பிராதிகாமி, பாஞ்சாலி இருந்த இடம் சென்று அவளை அழைக்கிறான். அவளோ, "(தருமன்) முன்னைத் தோற்றுத் தோற்ற பொருள் முற்றுங் கவரு முறையன்றிப் பின்னைத் தோற்ற பொருள் கவரப் பெறுமோ?" என்ற வினாவை எழுப்பி (தருமன் தன்னைத் தோற்றபின் தன் மனைவியை ஒட்டம் வைத்திழக்க உரிமையற்றவன்) அவனைத் திருப்பி அனுப்புகின்றாள். ஆனால் துரியோதனனோ அவளின் வினாவிற்குச் செவி சாய்க்காது, தன் தம்பி துச்சாதனனை அனுப்ப அவன் சென்று தனது கைச்செண்டாலே பாஞ்சாலியின் கூந்தலைப் பற்றி அவைக்கு இழுத்து வருகின்றான். அந்தச் செயல்கண்ட மக்கள் வருந்துகின்றனர். அவையோரும் கவலையுற்றனரே யன்றித் துரியோதனனிற் கொண்ட அச்சம் காரணமாக மௌனச் சிலைகளாகிவிடுகின்றனர். புனையா ஓவியம் போல் இருந்த மன்னர்களின் செயலைக் கற்பனைக் கண்கொண்டு காணும் வில்லிபுத்தூரார், "ஐயோ! அந்தக் கொடுமையை யாம் உரைக்கும் பொழுதைக் கதிபாவம்" என்று குருதிக் கண்ணீர் வடிக்கின்றார்.

பாஞ்சாலியின் நிலை நோக்கி 'வீமன் கதைமேற் கைவைத்தும்', 'விசயன் சிலைமேல் விழிவைத்தும்', இளையோர் (நகுல, சகாதேவர்) தமது உள்ளங்களிலே சினமூண்டும் தம் தமையனின் ஆறுதல் மொழிகளில் அமைதி அடைகின்றனர். பாஞ்சாலி, மல்லார் திண்டோள் மாமனான திருதராட்டிரனையும், மந்தாகினியாள் மதலையான வீட்டுமனையும் முறைகேட்டபோதும் பயன் கிட்டவில்லை. வீட்டுமன் உள்ளத்திலே பாஞ்சாலி மீது இரக்கம் தோன்றிய போதும் அவன் துச்சாதனனை நோக்கி "நீ அருந்ததி போலும் பாஞ்சாலி மீது தவறான இழிவுரைகள் பேசுதல் முறையோ!" என்று கேட்டதோடும், பாஞ்சாலியை நோக்கி "உனது முறைப்பாட்டை அரசனாகிய திருதராட்டிரனுக்குக் கூறு" என்று உரைத்ததோடும் தனது கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிடுகின்றான். (மந்தாகினியாள் மதலை—கங்கையின் மகன்—வீட்டுமன்)

பாஞ்சாலி, வீட்டுமன் கூறியபடி திருதராட்டிரனுக்குத் தன் முறையீட்டை எடுத்தியம்ப, மௌனமே பதிலாகக் கிடைக்கின்றது. அந்த அவல வேளையிலே அவளின் சார்பாக ஓர் இளமைக் குரல் பெருமிதத்தோடு எழுகின்றது. அந்தக் குரலுக்குரியவன் விகருணன்.

முறையோ என்றென் றவனிதலம்
முழுது முடையான் முடித்தேவி
நிறையோ டழிந்து வினவவும்நீர்
நினைவற் றிருந்தீர் நினைவற்றோ?

இறையோன் முனியும் எனநினைந்தோ
  இருந்தால் உறுதி எடுத்தியம்பல்
குறையோ? கண்கண் டதுநாளும்
  குலத்துப் பிறந்தோர் கூறாரோ?

இறையோன்—அரசன் (துரியோதனன்)
முனியும்—சீற்றமடைவான்

அந்த அளவிலும் அங்கு இருந்தாருக்குச் 'சுரணை' ஏற்படவில்லை. "ஒப்பில்லாத தருமன் தனக்கு உரியனவெனத் தக்கவற்றையெல்லாம் முதலிலே தோற்றான்; பின்பு தன்னை உள்ளிட்ட ஐவரையும் தோற்றான். சகுனி எதிரிலே தான் சொன்ன வாக்கின்படி தான் பிறருக்கு அடிமையாகிய பின்பு, சுருண்ட கூந்தலை உடையாளாகிய பாஞ்சாலியை ஒட்டம் வைத்துத் தோற்க அவனுக்கு உரிமை உண்டோ?" என்ற வினா அங்கிருந்த அனைவரதும் உள்ளங்களை ஆட்டி அசைத்திருக்கும், என்றே கொள்ளத்தக்க வகையிலே விகருணனின் அறிவார்ந்த விவாதம் அமைந்துள்ளது. ஆனால், பெண்ணடிமை நிலவிய ஒரு காலகட்டத்தில் அந்த வினாவிற்கும் விவாதத்திற்கும் எது நடந்திருக்குமோ, அதுதான் நடந்தது. பாஞ்சாலியின் துகிலுரிதலும், பரந்தாமனின் அருள்பாலிப்பும், பாஞ்சாலி, வீமன், அருச்சுனன், நகுலன் ஆகியோரின் வஞ்சின உரைகளும் இடம்பெறுகின்றன. தீயிலே குளித்துத் தன் கற்பு நெறியினை உலகிற்கு வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்குள்ளான சீதாபிராட்டி வாழ்ந்த பாரத நாட்டிலே, 'சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக் குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்து' வந்த கோவலன், "எழுகெ"ன எழுந்த கண்ணகி வாழ்ந்த தமிழ்நாட்டிலே, பெண்ணுரிமைக் குரல் பாஞ்சாலியின் வாயிலிருந்தும், விகருணனின் வாயிலிருந்துமே முதலில் வெளிப்பட்டது என்று கொள்ளலாம் போலும்! பாஞ்சாலி நேரடியாகவே பாதிக்கப்பட்டவள். விகருணனே கொடுமை கண்டு பொங்கி எழுந்த கோமான்! அவனுடைய அஞ்சாமையும் தருமாவேசமும் என்றும் நினைவுகூரத் தக்கன.

அபிமன்னியு, கண்ணபிரானின் தங்கையான சுபத்திரைக்கும், அருச்சுனனுக்கும் மகன்; வீரமும் பேராற்றலும் தன் தந்தையைப்போலவே அமையப்பெற்றவன். பாரதப் போரிலே கலந்துகொண்ட இளம் வீரர்களிலே அவனுக்கு ஈடானவர் எவரும் இல்லை. மலையே வரினும் மனங் கலங்காத அவனது துணிவும் வீரமும் அவன் பட்டு வீழ்ந்த பதின்மூன்றாம் நாட் போரிலே உச்சத்தை அடைகின்றன. முன்னாட் போர்களிலே விகருணனின் உடலைச் சிதைத்தும், வேறு பல வீரர்களைப் புறங்கண்டும் கௌரவர் படைக்கு இடியேறுபோன்று விளங்கிய அவனைப் பதின்மூன்றாம் நாளிலே முடித்துவிடக் கௌரவர் படையின் தலைசிறந்த வீரர்கள் யாவருமே ஒன்றுசேர்கின்றனர்.

அன்றைய போரிலே சக்கரவியூகம் கௌரவரால் அமைக்கப்படுகிறது. (சக்கர வடிவிலே நாற்படைகளையும் அணிவகுத்து நிறுத்திப் போர் செய்தலே சக்கரவியூகம்) இந்த வியூகத்தை உடைத்து உள்நுழைவதோ பகைவரை ஒழிப்பதோ எல்லார்க்கும் எளிதன்று. அபிமன்னியு ஒருவனே அவற்றைச் செய்யவல்லவன். இதனை அறிந்திருந்த தருமன் அபிமன்னியுவை அந்தப் பணிக்கு அனுப்பிவைக்கின்றான். பாஞ்சாலியின் அண்ணன் திட்டத்துய்மன் முதலாம் வீரமன்னர் சூழ்ந்துவர அபிமன்னியு தனது தேரிலே விரைந்து சென்று சக்கர வியூகத்தை உடைக்கும் வகையிலே அம்புமழை பொழிகின்றான். அவனுடைய தாக்குதலுக்கு ஆற்றாது துரோணரே புறமுதுகு காட்டி ஓடுகிறார். தொடர்ந்து அவர்மகன் அசுவத்தாமனும், கன்னனும் அவனை எதிர்த்து அவரின் கதிக்கே உள்ளாகிறார்கள். துரோணரின் மைத்துனரும் போர்க்கலை வல்லாருமான கிருபர், சகுனியின் மகன், விகருணன் முதலாம் துரியோதனனின் தம்பிமார், வேறு அரசர் என்ற பலரும் அபிமன்னியுவை எதிர்த்து அவன் அம்புமாரிக்கு ஆற்றாது உடைகின்றனர். இவ்வேளையில் வீமன் அபிமன்னியுவுக்குத் துணைவர முற்பட்டபொழுது, அபிமன்னியுவுக்கும் வீமனுக்கும் இடையே துரியோதனன் சூழ்ச்சியால் கொன்றைமாலை இடப்பட, அதனைக் கடந்து வர இயலாத நிலையில், வீமன் சுவலையோடு பிரிந்து வேறிடம் செல்கிறான். ஆனால் அபிமன்னியுவின் உள்ளத்தில் தளர்ச்சியோ, அச்சமோ ஏற்பட

வில்லை. அவன் முன்னரிலும் மிகுந்த வீறு கொண்டு போர் நிகழ்த்தப் பகைவர் தடுமாறுகின்றனர்; தளர்கின்றனர்.

கன்னன், துரோணர், அசுவத்தாமன், தருமனின் மாமனும் கௌரவரின் படையணியில் போர் நிகழ்த்தியவனுமான சல்லியன். அவன் மகன் உருமித்திரன், துரியோதனனின் மகன் இலக்கணகுமாரன், அவனோடு இணைந்து வந்த அரசகுமாரர் பதினாயிரவர் ஆகிய பலரும் போருடற்ற வந்து, உயிர் பிழைத்தாலே போதும் என்று புறமுதுகிடுகின்றனர். போரில் இலக்கணகுமாரன் அபிமன்னியுவின் அம்புக்கு இலக்காகி மாண்டொழிகின்றான். இதனால் மனமுடைந்த துரியோதனன் அபிமன்னியுவை எவ்வாறாவது கொன்றொழிக்க வேண்டும் என்று தன் சார்பினரைத் தூண்டுகின்றான். துரோணர், அசுவத்தாமன், மற்றும் படைத்தலைவர்களாகிய மன்னர்கள், கன்னன் யாவரும் ஒன்று திரண்டு ஒரு முகமாக வந்து அபிமன்னியுவை எதிர்த்துப் போரிடுகின்றனர்.

அபிமன்னியுவின் தேர் சிதைகின்றது. அவன் தரையிலே பாய்ந்து வாள்கொண்டு போரிடுகின்றான். அப்போரிலே துச்சாதனனின் மகன் துச்சனி மாய்ந்து போகின்றான். துரோணரின் அம்புமாரிகளைத் தடுத்து அவன் எய்த அம்புகளாலே துரோணரின் மூன்று தேர்கள் அடுத்தடுத்துச் சிதைகின்றன. என்னும், எவ்வாறோ அவனுடைய வாளேந்திய கையைத் துரோணர் துணித்து விடுகின்றார். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் அன்றோ'? இழந்த கைபற்றி எள்ளளவும் பொருட்படுத்தாது, களத்திலே கிடந்த தேர்ச் சக்கரம் ஒன்றை எடுத்து அதனைச் சுழற்றிச் சுழற்றிப் பகைவரைத் தாக்குகின்றான் அபிமன்னியு. துரியோதனன் இது கண்டு பொருது சயத்திரதன் என்பவனைக் கதாயுதம் ஏந்தி அபிமன்னியுவுடன் சென்று போரிடச் செய்கின்றான். அபிமன்னியுவும் களத்திலே கிடந்த கதை ஒன்றினைத் தானும் எடுத்துச் சயத்திரதனுடன் போருடற்றுகின்றான். அபிமன்னியுவின் போர்த்திறன் கண்டு யாவரும் வியந்த வண்ணம் இருக்க, ஒற்றைக் கையுடைன அவனை இருகையுடைய சயத்திரதன் கொன்றொழிக்கின்றான். மாரதர் பலரும், பன்னூறு படைத்தலைவரும், பல்லாயிரம் படையினரும் சேர்ந்து நடத்திய வீரப்போர்(?), வீரத்தின் விளைநிலமான சிறுவன் ஒருவனை மாய்ப்பதற்குப் பயனுயிற்று. அவர்களின் வீரமே வீரம்!

கன்னனையும் தேரழித்தான். கந்தனிலும
  வலியனோ அந்தோ அந்தோ
மன்னவர்ஐ வருமிருக்க மைந்தனுயிர்
  அழிவதே அந்தோ அந்தோ
பொன்னுலகோர் வியந்துநகிப் புந்தியினுல்
  மலர்பொழிந்தார் அந்தோ அந்தோ
அன்னநெடுந் துவசனிவற் காயுமிகக்
  கொடுத்திலனோ அந்தோ அந்தோ.

அன்ன நெடுந்துவசன் — பிரமன். (அன்னத்தைத்தன் நெடிய குடையிலே கொண்டவன்)
ஆயு — ஆயுள் (வயது)

சரம்அறுத்தான் வில்அறுத்தான் தேர்அறுத்தான்
  கொடிஅறுத்தான் சமரபூமி
உரம்அறுத்தான் முதற்பொருத உதயதின
  கரன்மைந்தன் உடன்ரரீரிக்
கரம்அறுத்தான் நடுப்பொருத கார்முகத்தின்
  குருவிசயன் காளைதன்னைச்
சிரம்அறுத்தான் பின்பொருத சயத்திரதன்
  இவன்வீரம் செப்பலாமே.

உதயதினகரன் மைந்தன் — கதிரவன் மகன் (கன்னன்)

நடுப்பொருத—நடுவில் வந்து போர் செய்த
கார்முகம் — வில்

குரு — ஆசிரியன் (துரோணர்)

தருமன் அறத்தின் வடிவினன். வீமன் கதாயுதம் ஏந்திச் செரு விளைப்பதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். அருச்சுனன் வில்லுக்கு ஒருவன்; 'தனுவுண்டு காண்டீபம் அதன்பேர்' என்று தன்வில்லிலே முழுநம்பிக்கை வைத்தவன். நகுலன் குதிரைகளின் இயல்புணர்ந்தோன். குதிரைப்படை கொண்டு போராடுவதில் வல்லவன். இந் நால்வர்க்கும் பின்வந்த சகாதேவனின் போர்த்திறம் பற்றிப் பாரதத்தில் அதிகம் பேசப்படவில்லை. ஆனால் இவன் சிறந்த சோதிட நிபுணன். யாவினும் மேலாக ஆழ்ந்த இறைபக்தியும், அதன் மூலம் முக்காலமும் உணர்ந்த ஞானமும்

அவனுக்குக் கைவந்திருந்தன. பாரதப் போரை நடாத்துவதற்கு ஏற்ற நல்ல நாளினைத் தங்கள் பகைவரான கௌரவருக்குக் குறித்துக் கொடுத்தமை இவனது பரந்த உள்ளத்தை மட்டுமன்றிப் போர் முடிவு பற்றிய எதிரது உணரும் திறனையும் காட்டுகின்றது. இவையாவிலும் மேலாகத் தன் மூத்தோர், தருமனின் சமாதானத் தூதனுப்பலை, எதிர்த்து எரிமலைகளாய்க் கனன்று நின்று தருமனையே எதிர்த்து வாதாடிய பொழுது, சகாதேவன் அமைதி காத்ததும், கண்ணபிரானையே அன்பினாலே கட்டி, நடக்க முடியாத ஒன்றை அப்பெருமான் மூலம் நடக்க வைத்ததும் அவனுடைய பேரறிவை நன்கு புலப்படுத்தும் சான்றுகளாகும்.

“மலை போன்ற எனது கதாயுதத்தின் வலிமையைக் கண்டும், காண்டீபனின் வில்லின் திறம் கண்டும், எங்கள் போர்த் திறலைக் கண்டும், எமக்காக எம் சார்பில் திருமாலே நிற்பது கண்டும், பாஞ்சாலி விரித்துள்ள கூந்தல் கண்டும், இனியும் துரியோதனாதியரின் கொலையைக் காண முயலாது துரியோதனனின் குடைநிழலிலே இருக்கக் குறிக்கின்றாயே” என்று விமன் குமுறுகின்றான்; ‘கண்ணபிரான் தூது எதற்கு? என்னை அனுப்பு; நான் அவர்களை அழித்து, உனக்கு முடியளிக்கின்றேன்’ என்று முழங்குகின்றான். “அக்காலம் பொறுத்த எல்லாம் அமையாது. இன்னம் இருந்து (நீ—தருமன்) அறமே சொன்னால், எக்காலம் பகை முடித்து, திரௌபதியும் குழல் முடிக்க இருக்கின்றாள்?” என்று அருச்சுனன் கொதிக்கின்றான். “காடுசென்றும் கரந்துறைந்தும் குறித்த காலம் கழித்த பின்னரும் எவ்வித ஈனமும் இன்றி நம் துணைவர் வந்து விட்டனர்” என்று அவர்களுக்குப் பெரு நகரும் வளநாடும் துரியோதனன் இன்னமும் வழங்காவிடில், பிறர் போய்க் கற்பித்தால் மட்டும் அவன் உணர்ந்து கொள்வானோ? என்று நகுலன் சலிக்கின்றான்.

தன்னைத் துரியோதனனிடம் தூது செல்லுமாறு தருமன் வேண்டியது பற்றிய கருத்தினைக் கூறுமாறு கண்ணபிரான் வேண்டிய பொழுது, சகாதேவன் தவிர்ந்த மற்றைய மூவரதும் மனக் குமுறல்களும் வெகுளியுமே மேற்குறித்த கூற்றுக்களாய் வெளிப்பட்டன. ஆனால் சகாதேவனுக்கோ கண்ணபிரானின் உட்கிடக்கை நன்கு தெரியும். அவனைப் பொறுத்தவரை இத்தகைய குமுறல்கள் பொருளற்றவை. சமாதானத் தூதுவன் என்ற போர்வையிலே சென்று, கண்ணபிரான் போருக்குத் தடையாக உள்ளவற்றை நீக்குவதிலேயே வெற்றி பெறுவான் என்பதும் அவனுக்குத் தெரியும்! எனவே கண்ணபிரான்,

“புகலரிய உணர்வுடையோய்! புகழுடையோய்
திறலுடையோய் புகல் நீ”

என்று தன்னை வேண்டிக்கொண்ட பொழுது, கண்ணபிரானே திகைப்படையுமாறு (!) அவன் கூறுவான்:

**சிந்தித்த படிநீயும் சென்றாலென்?**
**ஒழிந்தாலென்? செறிந்த நூறு**
**மைந்தர்க்குள் முதல்வன்நிலம் வழங்காமல்**
**இருந்தாலென்? வழங்கினாலென்**
**கொந்துற்ற குழலிவளும் முடித்தாலென்?**
**விரித்தாலென்? குறித்த செய்கை**
**அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத்**
**தெரியுமோ? ஆதி மூர்த்தி!**

இதனோடு அவன் நின்றுவிடவில்லை. கண்ணபிரானின் திருவிளையாடல்களை நினைவு கூரும் வகையிலே அவனைத் தொடர்ந்து விளித்து, “ஒருவருக்கும் தெரியாது இங்குன் மாயை; யான் அறிவேன் உண்மையாக; திருவுளத்துக் கருத்தெதுவோ, அது எனக்கும் கருத்து” என்று சொன்னதற்கு முரண்படுவது போல (யான் அறிவேன் உண்மையாக) உரைக்கின்றான்.

அவன் கூற்றின் உண்மையைப் புரிந்து கொண்ட கண்ணபிரான், சிரிப்பினாலே தன்னைச் சமாளித்த வண்ணம், “மற்றையோர் சொன்னது போல இவன் கூறாது தந்திரமாக (விரகாக)ப்பேசுகின்றான்” என்பதைத் தன் திருவுளத்திலே கொண்டு, அவனைத் தனியிடத்தில் அழைத்துச் சென்று,

"பாரதப் போர் பயிலாவண்ணம் உய் வண்ணம் சொல்லுக நீ உபாயம்" என்கின்ருன்.

உபாயமும் உபேயமுமாயுள்ள (உபாயம் வழி, உபேயம் - வழிமூலம் அடையும் பொருள்) மாயக்கள்வன் தன்னிடம் உபாயம் கேட்பது சகாதேவனுக்கு நகைப்பை விளைவித்திருக்க வேண்டும், (அவன் பதிலால் அவ்விதமே ஊகிக்கத் தோன்றுகின்றது.) அவன் சொல்வான்.

"கோபாலா, போரேறே, பாரதப் போரிலே யாவரையும் நீருக்கிப் பூமி பாரத்தைப் போக்கவே நீ திருவவதாரம் செய்துள்ளாய். நீயேயல்லாது மகாபாரதப் போரை அகற்றவல்லவர் யார்?" (அப்படி நாமாக அகற்ற வேண்டுமாளுல் பின்வருவனவெல்லாம் நிகழல் வேண்டும்.)

"பார்ஆளக் கன்னனிகற்
பார்த்தனைமுன் கொன்றணங்கின்
காரார் குழல்களைந்து
காலிற் றளைபூட்டி
நேராகக் கைப்பிடித்து
நின்னையும்யான் கட்டுவனேல்
வாராமற் காக்கலாம்
மாபாரத" மென்ருன்.

பார்த்தன் — அருச்சுனன்

கால்: காற்று (இவ்விடத்தில் காற்றின் (வாயுவின்) மகனுகிய வீமனைக் குறிக்கும்.)

தளை: விலங்கு (சிறைப் படுத்தும் கருவி)

இதுவரை வேடிக்கையாகப் பேசி வந்த கண்ணபிரானுக்கு, "நின்னையும் யான் கட்டுவன்" என்ற சகாதேவனின் உறுதிமொழி வியப்பை அடையச் செய்திருக்குமோ, என்னவோ?

"முன்னம்நீ கூறியவை எல்லாம் முடித்தாலும்
என்னைநீ கட்டுவது எவ்வாறு?

என்று அவன் வினவும் வினு, உண்மையில் வியப்பின் வெளிப்பாடு போலவே தோற்றுகின்றது.

ஆனல் சகாதேவன் சாமானியனு? 'பரந்தாமா, உன்னை நீதானும் உணராதாய். உன் வடிவம் தன்னை நீ காட்டத் தளை யிடுவன் யான்'.

என்று அறைகூவல்போல அவன் சொற்கள் வெளிப்படுகின்றன.

மாயவனும் அவனுடைய மனத்தினை அறிந்து "கட்டுக" என்று தன் பதினுருயிரம் திருவுருவங்களோடும் சகாதேவன் முன் காட்சி தருகின்ருன். தூயவனுகிய சகாதேவனும் பெருமானின் மூலமாம் தோற்றத்தினை முற்ற உணர்ந்தவனுய், அதன் அடியிணைகளைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கிருன். பக்திவலையிற் படுவோனுகிய பரந்தாமன் தன் பாதங்களை விடுவித்தற்காக "வன் பாரதப் போரில் வந்தடைந்தார் ஐவரையும் நின் பார்வையிற் காத்தல் வேண்டும்" என்ற பிடிவாதமான வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்டு "அவ்வாறே காப்பேன்" என்று உறுதிமொழி கொடுக்க வேண்டியதாயிற்று. சகாதேவன் இந்த வரத்தினைப் பெருதிருந்திருந்தால், பூபாரந் தீர்க்கப் புரிந்த புயல்வண்ணன் பாண்டவரையும் பூமிக்குப் பாரமென்று முடித்திருப்பான்! ஆனல் பாண்டவரின் இளவலான சகாதேவனின் பக்தியும் எதிர துணர்வும் அறிவாற்றலும் பாண்டவர் உயிரைக் காத்தன.

ஆக, விகருணனின் அறவேட்கை, அபிமன்னியுவின் வீரத்திறல், சகாதேவனின் பத்திகலந்த பேரறிவு என்பன எமக்கு வழிகாட்ட வல்லன என்பதற்கு ஐயம் இல்லை.

# புகழோங்கு கலைக்கூடம்

திரு. க. ஆனந்தராசா அவர்கள்
''அன்னைதாசன்''
(ஆசிரியர், உ. சை. த. வி.)

**வெண்பா**

உரும்பிராய்ச் சைவத் தமிழன்னை நின்னை
விரும்பிநான் பாட அறியேன் - அரும்புகின்ற
ஆசையா லுன்புகழை அன்பொழுகச் செந்தமிழால்
ஓசையாய்ச் சொன்னேன் உவந்து

✱

கற்பக விநாயகன் கருணையாற் கொலுவெய்திப்
பொற்புமிகுங் கல்வியாற் புகழோங்குங் கலைக்கூடம்
தமிழோடு சைவமுமே தரணியிலே நிலைபெறவே
தகைமைபெறும் மாணவர்கள் தமையாக்கும் எழிற்கூடம்
உரும்பிராய்ச் சைவத் தமிழ்வித்யா லயமெனவே
கரும்பான பெயர்கொண்ட கலைஞானத் திருக்கூடம்
ஏழுபத்தோ டைந்தாண் டினியபணி செய்திட்டு
வேழமுகன் அருளெனவே மிளிர்கின்ற தாய்க்கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் புலவர்கள் பலபேரை
அவனியிலே உருவாக்கி அணிசெய்யும் அருட்கூடம்
தமிழ்ப்பற்றும் தாய்ப்பற்றும் தம்மனத்திற் குடிகொண்ட
தரமான மாணவர்கள் பலபேரை உவந்தளித்தே
அழியாத புகழோடு அவனியிலே தலைநிமிர்ந்து
நிலையான பணிசெய்து நிற்குமுத் தமிழ்க்கூடம்
பல்லாண்டு பல்லாண்டு பலநூறும் ஆண்டிங்கே
யாவர்க்கும் பலநூறு பணிசெய்ய வேண்டுமென
மண்ணிலே மாண்புறவே மனமார வாழ்த்திசைத்து
அன்னையவள் தாசன்நான் அவள்கழலே பணிகின்றேன்.

# இரசனை

இயலிசைவாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர் அவர்கள்

இரசங்களை அநுபவித்தல் இரசனை யாகும். நுண்கலைகளுள் பொதிந்து கிடக்கும் இரசங்கள், ஒன்பது வகையாகப் பரந்து கிடக்கின்றன. அவையாவன:

அற்புதம், இரௌத்திரம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம் என்னும் ஒன்பது சுவை களுமாம்.

இந்த நவரசங்களும் சிற்பம், சித்திரம் சங்கீதம், நாட்டியம், கவித்துவம் மூலம் இரசனையை நல்கி இரசனையின் மூலம் உணர்ச்சியைத் தூண்டி, உணர்ச்சியின்மூலம் மனித மனத்தைத் தூய்மைப்படுத்தி, பண்பு, பண்பாடு நிறைந்த உள்ளங்களாக மனித மனத்தை மாற்றிவிடுகின்றன. மனித மனத்தை உணர்வுகள் மூலம் ஊடுருவி, உயர்ந்த சிந்தனை, கருத்துக்கள், எண்ணங் கள், கற்பனைகள், அறிவுரைகள், போத னைகளைக் கிரகிக்கும் பான்மை, ஆகியவை களை நல்கி, பண்பாளனாகவும், பண்பாடு உள்ளவனாகவும், மனிதனை உருவாக்குவது இந்த இரசனையே. இரசனை இல்லாதவன் வெறும் சடப்பொருளாகக் கணிக்கப் பெறு வான். இந்த இரசனையின் தோற்றத் தந்தை உணர்வு; தாய், உள்ளம். உள்ளத்திலே உதிக் கும் உணர்வுகளின் பேதங்கள் நவரசங்க ளாகி மனித வாழ்வை மலரச் செய்து விடு கின்றன. நவரசங்களின் சேர்க்கையே மனித வாழ்வு. வாழ்க்கையின் தத்துவமே இரசனை. பக்தி, காதல், அன்பு, பாசம், அத்தனை உணர்வுகளுக்கும் ஆதார தத்துவம் இரச னையே !

பக்தன் ஆண்டவன் சந்நிதியில் நின்று மெய்தானரும்பி, விதிர்விதிர்த்துக் கண்ணீர் சொரியக் காட்டும் பக்தி மார்க்கம் ஆண் டவனின் அற்புதத் தெய்வீக லீலாவினோ தங்களைத் தனது உணர்வு பூர்வமாக இர சித்து அநுபவித்து ஆனந்தக் கண்ணீர் சொரிவதெல்லாம் இரசனை அள்ளி அள்ளிக் கொடுத்த உணர்வுகளே! போர்வீரன் போர்க்களத்தில் காட்டும் வீரம், கொல் லன் தனது உலைக்களத்தில் காட்டும் ஆர்வம், கவிஞன் தனது கவிதா சிருஷ்டிகளை ஆக் கும்போது காணும் கற்பனை, அத்தனைக்கும் விளைநிலம் இந்த இரசனையே. தனது கற்பனா சிருஷ்டிகளைப் படைத்து, கலையின்பத்தைத் தானும் அநுபவித்து உலகுக்கும் கொடுப் பதற்கு அமைந்தது இந்த இரசனையே. இரசனையின் வளர்ச்சியிலும் உயர்ந்த பரி பக்குவத்திலுமே கலைஞனின் படைப்புகள் சிரஞ்சீவித்துவம் பெறுகின்றன. அபாரமான இரசனை நல்கிய கலாமேதைத் தன்மையும் கற்பனா சக்தியும் உரமாக அமைந்த கலா சிருஷ்டிகள் உயர்ந்த இரசனையைக் கொடுத் துச் சமுதாய உயர்ச்சிக்குதவுகின்றன.

மனிதனை மனிதனாகவும், மனிதனைத் தேவனாகவும் மனிதனை விலங்காகவும் ஆக்கி வைப்பது இரசனையே. தரங் குறைந்த கலைப் படைப்புக்கள் அவன் மனத்திலே காமம், குரோதம் உலோபங்களை வளர்த்து அவன் உயர்ந்த பண்பாளனாகத் தடையாகவிருக் கின்றன. உயர்ந்த நோக்கமுள்ள சீரிய பெரும் தத்துவங்கள் நிறைந்த கலாசிருஷ் டிகள் மனிதனை மனிதனாக மட்டுமல்ல, தேவனாகவும் ஆக்கி விடுகின்றன. உதாரண மாகத் திருமூலரின் திருமந்திரத்தைக் கற் கும் போது உள்ளம் உயர்ந்ததொரு தெய் விக உணர்வு பெற்று அதி உயர்ந்த புனி தமான உணர்வுப் பீடத்தில் அமர்ந்திருப் பதை நாம் உணர்கிறோம். அந்நிலையில் எமது எண்ணங்கள், கருத்துக்கள், சிந்தனைகள், கற்பனைகள் யாவும் உன்னத தெய்விகப் பண்பாகி விடுகின்றன. தெய்விகத்துடன் இணைந்த தேவ உள்ளம் பெறுகிறது மனித மனம்.

மனித உள்ளம் நிறமற்ற நீர்போன்றது. கண்ணாடிப் பாத்திரத்துக்குள் நீர் இருக்கிறது. அந்தப்பாத்திரத்தின் நிறத்தினையே நீரும்

பெறுகிறது. அதேபோல உயர்ந்து அநுபவித்து இரசிக்கும் உள்ளமும், உயர்ந்த பண்புகள், உயர்ந்த பண்பாடுகள் கொண்டிருக்கும். தரமற்ற மிகவும் குறைந்த நிலையிலுள்ள கலாசிருஷ்டிகள் தரமற்ற இரசனையைக் கொடுத்து, மனிதனைக் கீழ்மை நிலையில் கொண்டுவந்து விடுகின்றன.

மனிதனை உயர்ந்தவனாகவும், தாழ்ந்தவனாகவும் ஆக்கி வைக்கும் இரசனையை நாம் கலாசிருஷ்டிகளின் தரமறிந்து பாதுகாத்துப் பேண வேண்டியவர்களாகவுள்ளோம்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள், நுண்கலைகள் அபரிமிதமான இரசனையைத் தருபவை. இவை கலா ரசனையை மிகவும் நுணுக்கமாகவும், நுண்ணிய கலாதத்துவங்களைத் தெளிவாகவும் தருபவையாதலால் ''நுண்கலைகள்'' எனப் பெயர் பெற்றமை இரசனைக்குரியது. இந்த நுண்கலைகளுள் சங்கீதம், நாட்டியம், நாடகம், சிற்பம், சித்திரம் போன்ற கலைகள் தலையாயவை.

நுண்கலைகள் அழகு வாய்ந்தவை. இயல்பாகவே இந்த அழகுக்கலைகள் அழகுணர்ச்சியான இரசனைக்கு நிலைக்களமாக அமைந்துள்ளன. கலை, ஞானம் தருவது; கல்வி, அறிவு தருவது. கலைஞானமும் கல்வியறிவும் இணைந்திருப்பது அழகியற் கல்வி. குழந்தைகளின் ஆரம்பக் கல்வியிலேயே இந்த இரசனையான அத்திபாரத்தை உயர்ந்த தரமான அத்திபாரமாக இட்டு வைத்தால், உறுதியான — மூலாதாரமான இரசனையின் மூலம், குழந்தை வளர வளர உயர்ந்த பண்பாளன் ஆகிவிடுகின்றான். இதன் காரணமாகவே இரசனையை வளர்ப்பதற்கு ஆரம்பக் கல்வியிலேயே, ' அழகியற் கல்வி ' எனும் பாடத்தைப் புகுத்தியுள்ளனர் கல்வியியலாளர்.

ஆரம்பக் கல்வியிலே புகுத்தப்பெற்ற அழகியற் கல்வி குழந்தைகளுக்கு இசைப் பாடல்களாகவும், அபிநயப் பாடல்களாகவும், கதைப் பாடல்களாகவும் போதிக்கப் பெறுகின்றன; ''இசையும் அசைவும்'' போன்ற இரசனை நிறைந்த கலைத்துவங்களைப் பிஞ்சு உள்ளங்களில் விதைத்து விடுகிறது அழகியற் கல்வி. ஆடிப்பாடி அபிநயித்து ஓடிவிளையாடும் குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களிலே அவ்வயதிற்கேற்பச் சிறிய சிந்தனை, கற்பனை, போதனை, வர்ணனை யாவும் பசுமரத்தாணியெனப் பதிந்து விடுகின்றன. காரணம் கலையின்பத்தை அநுபவித்த குழந்தையின் இரசனையே. சித்திரம், சிற்பம், சங்கீதம், நாட்டியம் போன்ற கலைப்பாடங்களை மேல் வகுப்புகளில் கற்பதற்கும் இந்த அழகியற் கல்விப் பாடம் மிகுந்த உதவியாகவும் இருக்கும்.

அழகியற்கலை போதிக்கும் ஆசிரியர், குழந்தைகள் இரசித்து அநுபவிக்கும் வண்ணம் கற்பிக்கும் முறைகளையும் உளவியல் உத்திகளையும் கடைப்பிடித்து அவ்வழியே கற்பித்தல் அவசியம். குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான கலைநயங்களைத் தேர்ந்தெடுத்து மிகுந்த கவர்ச்சியுடன் இசையமைத்து இசைப்பாடலாகவோ, அபிநயப்பாடலாகவோ, கதைப் பாடலாகவோ கற்பிக்கலாம். சித்திரம் கற்பிக்கும் ஆசிரியரும் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமாகப் பழங்கள், வாகனங்கள், மிருகங்கள், குருவிகள் போன்றவற்றின் படங்களை எளிமையாக வரைந்து, அத்தோற்றங்களில் பொதிந்துள்ள இரசனைக் குறிப்புகளையும் குழந்தைகளுக்குக் கூறி ஆர்வமேற்படுத்தலாம். சின்னஞ் சிறு நாடகங்களைத் தெளிவான, சுருங்கிய வசனங்களில் ஆக்கிக் குழந்தைகளை நடிக்கச் செய்து நாடகக் கலையின்பத்தை நுகரச் செய்யலாம். இத்தகைய நுண்கலைகளைக் கற்பிக்கும்போது மாணவரை ''மெய்மறந்த நிலையில்'' இரசனை மூலம் கொண்டு சென்று போதித்தால் வகுப்பு உயிருள்ள வகுப்பாகவும் இருக்கும். வகுப்பை உச்சக் கட்டத்தில் (Climax) கொண்டு வருவதற்கு ஆசிரியரின் மனோ நிலையும் மாணவரின் மனோநிலையும் ஒன்றிணைந்த மனோலயம் பெற வேண்டும். இதற்கு மாணவரினதும் ஆசிரியரினதும் உச்சக்கட்ட இரசனை பேருதவியாக இருக்கும்.

தரமான நுண்கலைகளைத் தரமறிந்து இரசிப்பதற்கு மாணவருக்கோ அல்லது மற்றையோருக்கோ கலாரகசியங்கள் சில

வேணும் தெரிந்திருத்தல் அவசியமாகிறது. நல்ல ஞானம் நிறைந்த இசைப் பாடகர் கச்சேரி செய்கிறார்; இராகம் பாடிக்கொண்டிருக்கிறார். இசைத் தத்துவங்கள் தெரியாதவர்களே மயங்கும் வண்ணம் அற்புதமாகப் பாடுகிறார். என்ன ராகமோ என்ன தாளமோ என்று அறியாதவரின் இரசனை, சங்கீத நுணுக்கம் தெரிந்தவர்கள் இரசிக்கும் அந்த ஆற்றல் மிக்க திறனைப் பெற்றிருக்கமாட்டாது. இசைக்கச்சேரிகளை இரசிப்பதற்குரிய ஆரம்ப அறிவை — கலைத் தத்துவங்களை - சிறிது ஆராய்வோம். இசைக் கச்சேரி செய்யும் பாடகர்களுக்குப் பின்னால் தம்புரா அல்லது சுருதிப்பெட்டி ஒலிக்கிறது. அந்த ஒலியை ஆதார ஸ்ருதியாக வைத்துக் கச்சேரி ஆரம்பிக்கிறார்.

இசை இன்பத்தை நுகர வேண்டுமானால் சங்கீத சாஸ்திரத்தின் சில கலா ரகசியங்களைப் புரிந்து கொள்வது அவசியமாகிறது. நாதம், ஸ்ருதி, ஸ்வரம், தாளம், லயம் போன்ற அமிசங்களின் அடிப்படை அறிவு இரசனைக்குப் பேருதவியாக இருக்கும். அன்றியும் எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்கள், அவைகளின் ஸ்வரபேதங்கள் மற்றும் தாய் ராகம்-சேய் ராகம் இவைகளின் பெயர்களையும் ஸ்வரஸ்தானங்களையும் தெரிந்து கொண்டால் பாடகர் பாடும் இராகம் என்ன இராகம் எனக் கண்டு கொள்ள முடியும். தனக்குப் பரிச்சயமான இராகமாயிருந்தால் இரசிகரின் இரசனை மிகுந்திருக்கும். அத்துடன் வித்துவானின் வித்துவத் திறமையும் இரசிகர் கண்டு இரசிக்கமுடியும். வாத்தியங்களைப் பற்றிய அறிவும் சங்கீத இரசிகருக்கு அவசியம். வாத்தியங்களின் அமைப்பு அவற்றைப் பிரயோகிக்கும் வழிமுறைகள் இவற்றைச் சிறிதளவேனும் இரசிகர் அறிந்திருந்தால் நலமுடைத்தாக இருக்கும். அன்றியும் கீர்த்தனை கிருதி, பதம், தில்லானா, ஜாவளி, வர்ணம், பதவர்ணம், விருத்தம், துக்கடா போன்ற இசைக்கச்சேரிப் பாடல்களின் அமைப்பு முறைகளையும் தெரிந்திருந்தால் இரசனை உயர்வடையும். இன்னும் இரசனையை உயர்த்தவேண்டியிருந்தால் சங்கீத சாஸ்திரக் கலை நுணுக்கங்களை அறிவது அவசியம். மனோதர்மம், கல்பனாஸ்வரம், ஆலாபனை—வாதி—ஸம்வாதி—விவாதி—அநுவாதி விபரங்கள், தசவித கமகங்கள், பாஷாங்க ராகங்கள் போன்றவற்றையும் நுணுக்கமாகத் தெரிந்திருந்தால், இசைக்கச்சேரியை உயர்ந்த தரத்தில் இரசித்து இரசனையைப் பெறலாம்.

இரசிகர் இராகங்களை இனங்கண்டு இரசிக்கும் ஆர்வமுடையவராயிருந்தால் அவரது இரசனை மிகுந்த தரத்தை அடையும். வித்துவான் பாடும் இராகத்தில் மூர்ச்சனாஸ்வரங்களிலே இராகபாவம் ததும்பும்படி ஆலாபனை செய்து பாடுங்கால் இந்த நுணுக்கங்கள் தெரிந்த இரசிகருக்கு இசையின்பம் இனிக்கும். ''ஆஹா'', ''பலே,'' ''பேஷ்'' என்றெல்லாம் மெய்மறந்து இரசிகர்கள் கூறுவதை நாம் கச்சேரிகளில் கேட்டிருக்கிறோம். மெய்மறந்த நிலையில் வரும் ஆமோதிப்பு உயர்ந்த இரசனையின் பிரதிபலிப்பு ஆகும்.

## நடன இரசனைக் குறிப்புகள் :

பரதநாட்டியக் கலையை இரசிப்பதற்கான அமிசங்கள் சிலவற்றைக் கவனிப்போம். பாவம் + ராகம் + தாளம் சேர்ந்தது பரதம். நிருத்தம் - நிருத்தியம் - நாட்டியம் - தாண்டவம் - லாஸ்யம் என ஐந்து பிரிவுகளையுடையது.

**நிருத்தம்:** தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கருத்தைப் புலப்படுத்தாத ஆடல். உதாரணம் அலாரிப்பு, ஜதிஸ்வரம்

**நிருத்தியம்:** தாளக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கிக் கருத்தைப் புலப்படுத்தும் ஆடல், பதவர்ணம் - தில்லானா

**நாட்டியம்:** பழைய புராணக்கதைகளை ஆதாரமாகக் கொண்டு நடிக்கும் நாடகம், ஸ்கந்தலீலா, குறவஞ்சி போன்றவை.

**லாஸ்யம்:** மென்மையான ஆடல் தீபநடனம், கலசநடனம்; பெண்களுக்குரியது.

**தாண்டவம்:** கம்பீரமான ஆடல்; ஆண்களுக்குரியது.

பரதமுனிவர் அருளிய நூல் நாட்டிய சாஸ்திரம். பாவங்கள்—அபிநயத்தின் மூலம் வெளிக்கொணர்வது, அபிநயங்கள் நான்கு.

1. ஆங்கிகம் 2. வாசிகம் 3. ஆஹார்யம் 4. சாத்விகம்

**ஆங்கிகம்:** அங்க அசைவுகளால் கருத்தைப் புலப்படுத்தல்

**வாசிகம்:** வார்த்தைகளால் கருத்தைப் புலப்படுத்தல்.

**ஆஹார்யம்:** ஆடை ஆபரணாதிகளால் கருத்தைப் புலப்படுத்தல்

**சாத்விகம்:** உணர்வுகளால் கருத்தைப் புலப்படுத்தல்.

(புல்லரித்தல், கண்ணீர் போன்றவை) நவரசங்கள் முகபாவம் மூலம் தோற்றுவிக்கும் உதவியை ஆங்கிக அபிநயங்கள் புரிகின்றன.

ஆங்கிக அபிநயத்தில் அங்கம் பிரத்தியாங்கம், உபாங்கம் ஆகியவற்றில் தலை கண் கைகள் பாதங்கள் உதவுகின்றன. கைகளின் சைகைகள் அல்லது அசைவுகள் முத்திரைகள் எனப் பெறும். இந்த முத்திரைகளின் விநியோகங்கள் அபிநய ரூபமாக மலர்ந்து பாடல்களின் அர்த்த புஷ்டியைத் தெளிவாக்குகின்றன.

## சித்திர சிற்ப இரசனைக் குறிப்புகள் :

பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கலைகளுள் சிற்பமும் சித்திரமும் சமுதாய வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன. தெய்வச்சிலைகள் ஆலயங்களில் வழிபாட்டுத் தெய்வங்களாகவும் திரைச் சீலை ஓவியங்கள் அல்லது சித்திரங்கள் வழிபாட்டுத் தெய்வச் சித்திரங்களாகவும் நமது நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. இத்தகைய சித்திர ஓவிய சிற்பக் கலைஞர்கள் சாஸ்திரோக்தமான சிற்ப சித்திர ஓவியங்களைப் பயின்று அதன் தத்துவங்களுக்கேற்பத் தமது கற்பனைத் திறனால் அதியற்புத கலைப் படைப்புகளைப் படைத்துள்ளனர். ஒவ்வொரு சித்திரமும் சிற்பமும் ஓவியமும் ஆழ்ந்த பண்பாடுகளைச் சித்திரிக்கும் வண்ணம் படைத்துள்ளனர்.


**நாடகம் :**

அகத்தை நாட வைப்பதும், நாடும் அகத்தினில் போதனைகள், பக்தி, நற்சிந்தனைகள் என்பனவற்றை நல்குவதும், தத்ரூபமான சம்பவங்களை நடிப்பின்மூலம் இரசிகர்கள் உள்ளங்களில் நிதரிசனமான முறையிற் பதியவைப்பதும், அவர்களை இரசிக்கச் செய்வதும் நாடகக் கலையின் சிறப்பியல்பே.

வாழ்க்கையே ஒரு நாடகமெனவும், நாடகமே உலகம் எனவும் கருதுவர். கதைகளையோ, சம்பவங்களையோ நடித்துக் காட்டும் நாடகம், வாழ்வில் ஒரு கலையாகி, அந்தக் கலை இரசனைக்கு உரியதாக ஆதலும் நாடகத்தின் சிறப்பினை விளக்கச் சிறந்த உதாரணமாகலாம். புராண, சரித்திர, இதிகாச, சமூக நாடகங்கள் மனித வாழ்வினை மேம்படுத்தும் சிறந்த சாதனங்கள். ''ஹரிச்சந்திரா'' நாடகத்தைப் பார்த்த காந்தியடிகளின் மனமாற்றம் நாடக இரசிகத் தன்மையின் சிகரமாகும். நாடக இரசனை நல்வழிப்படுத்தும்.

இத்தகைய கலைகளை அவற்றின் கலா ரகசியங்களை அறிந்து கொண்டு இரசித்தால் இரசனையின் தரமே உயர்ந்துவிடும். ஔவையார் ''வரப்புயர'' என அன்று வாழ்த்தினார். இன்று ''இரசனை வாழ்க'' என வாழ்த்துவோம். இரசிகத் தன்மை உயர்ந்தால் இரசிகர்களின் தரம் உயரும். இரசிகனின் தரம் உயர்ந்தால் கலைஞனின் தரம் உயரும். கலைஞனின் தரம் உயர்ந்தால் கலா சிருஷ்டிகளின் தரம் உயரும். கலாசிருஷ்டிகளின் தரம் உயர்ந்தால் பண்பாடு உயரும். பண்பாடு உயர்ந்து விட்டால் நாடே உயர்ந்து விடும்.


## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகள் சேவை புரிந்ததின் மூலம் வெள்ளிவிழாக் கண்டவர்கள்



திரு. மு. விசுவலிங்கம்
அவர்கள்



திருமதி இ. அப்புத்துரை
அவர்கள்




திரு. சி. பொன்னுத்துரை
அவர்கள்



திருமதி த. வெற்றிவேலு
அவர்கள்



திருமதி த. இராமுப்பிள்ளை
அவர்கள்



திரு. அ. பஞ்சாட்சரம்
அவர்கள்

[ தொடர்ச்சி: மறுபக்கம் பார்க்கவும் ]



திருமதி தெ. குழந்தைவேலு
அவர்கள்



திருமதி ஞா. சிவசுப்பிரமணியம்
அவர்கள்



திருமதி ச. பரங்கிரிநாதன்
அவர்கள்



திருமதி வ. சிவப்பிரகாசம்
அவர்கள்



திருமதி பொ. ஜெகநாதன்
அவர்கள்

13508

# உறுதியாய் நிற்கும் ஒரு பணி!

கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள்
(உப-அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

உரும்பிராய் நடுவே எழுந்தபே ரறிவின்
ஊற்றினை, எழுபத்தைந் தாண்டு
பெரும்பயன் தந்து வருமொரு கல்விப்
பேற்றினைத் தெய்வசந் நிதியை,
தருமநன் னெறியும் சைவமுந் தமிழும்
தழைக்குநன் னெறியுமிங் குணர்த்தி
வருமொரு மரபை இருகையுங் கூப்பி
வணங்குவம், வாழ்த்துவம், வாரீர்!

அறிவியல் ஆய்வு, நாடகம், நடனம்
ஆதியாம் கலைகளில் தேர்ச்சி
பெறுவதற் கான வாய்ப்புகள் செய்த
பேருப காரிகள் வாழ்க!
சுறுசுறுப் பாக இயங்கியிங் கறிவுச்
சுடரினைத் தூண்டியோர் வாழ்க!
உறுதியாய் நிற்கும் ஒருபணி யால்,நம்
ஊரினை உயர்த்தியோர் வாழ்க!

வாழிய வித்தி யாலயம், கல்வி
வளமெலாம் காணுக, இளைஞர்
தோளினில் வீரம் நெஞ்சினில் துணிவு
கண்களில் தூரநோக் கோடு
சூழுக பணிகள்! பவளஆண் டிதனில்
தொட்டவை துலங்குக! என்றும்
நீளுக உரும்பை ஊரினில் வித்தி
யாலயம் நிறுவியோர் நினைவு!

# மாணவர்களும் வாசிப்பும்

திரு. செல்லப்பா நடராசா அவர்கள்

மாணவர்களின் பொது அறிவு இன்று எத்தகைய நிலையில் உள்ளது? மாணவர்கள் நாள்தோறும் தின, வார, மாத இதழ்கள் பலவற்றையும் வாசித்துப் பயன் பெறுகின்றார்களா? பாடசாலைகளில் நூலகங்கள் எத்தகைய தரத்திற் பயன்படுத்தப்படுகின்றன? உயர்தர பாடசாலைகள் அனைத்தும் பூரணமான நூலகங்களைக் கொண்டுள்ளனவா? வாசிகசாலைகள் மூலம் அன்றாடம் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை மாணவர்கள் அறிந்து கொள்ளுகின்றார்களா? இத்தகைய ஈடுபாடுகளில் மாணவர் கவனம் செலுத்தும் விதத்தில் பாடசாலைகளில் ஊக்கம் அளிக்கப்படுகின்றதா? என்ற இன்னோரன்ன வினாக்களுக்கு விடை அறிந்து அவற்றுக்கு ஏற்ப எமது மாணவ சமுதாயத்தை நாமே வழிநடத்திக் கொள்ளும் நடைமுறைகளைப் பற்றிச் சிந்திப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

பத்திரிகைத் துறையில் யான் பணியாற்ற நேர்ந்த காரணத்தால், சந்திக்கும் மாணவர்களுடன் பத்திரிகை வாசிப்பு எந்த அளவில் அவர்கள் மத்தியில் இடம்பெறுகிறது என்பதை அறிய முயல்வது வழக்கம். அவர்களுடன் நடத்தும் சம்பாஷணையில் இருந்து தின, வார, மாத இதழ்களை அவர்கள் நன்கு வாசித்துத் தமது பொது அறிவை விருத்தி செய்திருக்கின்றார்களா, அத்துறையில் மாணவர்கள் எவ்வளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை நுகித்து உணர முடிகிறது.

கிராமப்புறப் பாடசாலைகளில் அமைந்துள்ள வாசிகசாலைகள் நிறைவாக இருக்கின்றனவா என்பது ஒரு கேள்வி, நகர்ப்புறப் பாடசாலைகளில் சகல வசதிகளோடும் கூடிய நூலகங்கள் இருந்தும் மாணவர்கள் அவற்றை நன்கு பயன்படுத்துகின்றார்களா என்பது மற்றொரு கேள்வி.

மாணவர் சமுதாயத்தை இப்பொழுது நோக்குங்கால் கணிசமான அளவுக்கு மாணவர்கள் விஞ்ஞானத்துறையிலும் தொழில்நுட்பத்துறையிலும் அதிகம் அக்கறை காட்டுவதுடன் அத்துறைகளில் நன்கு அறிவு பெற்று இருப்பதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. பாராட்டப்பட வேண்டிய விஷயமே.

பாடசாலையிற் படிக்க வேண்டிய பாடங்களையே படித்து முடிக்க நேரமின்றியும், தனியார் கல்வி நிலையங்களுடனும் அல்லற்படும் எமக்குப் பத்திரிகைகள், நூல்களைப் படிக்கவோ அல்லது நூலகங்களுக்குச் செல்லவோ நேரமேது என்று இன்றைய மாணவர்களிற் பலர் வினவலாம், படிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள பிள்ளைகளின் பெற்றோர்களும் பத்திரிகைகள் நூல்களைப் பெறுவதில் தமக்குள்ள இடர்ப்பாடுகளைத் தெரிவிக்கலாம். நேர வசதியின்மை பற்றி இரு பகுதியாரும் கூறும் கருத்துக்களை இந்தக் காலக் கல்விச் சூழ்நிலையில் மறுத்துரைக்கவும் முடியாதுதான்! சிறிது நேரமாவது பாடசாலை நூலகங்களிலோ, அல்லது வெளியிடங்களில் உள்ள வாசிகசாலைகளிலோ தின, வார, மாத இதழ்களை வாசிப்பதற்கு இயலுமான வரை முயலுதல் வேண்டும்.

பலதுறைப்பட்ட விஷயங்களையும் மாணவர்கள் நன்கு அறிந்து கொள்ளுவதற்கு வாசிப்பு இன்றியமையாதது. மாணவர்களது பொது அறிவை நன்றாக விருத்தி செய்யக் கூடிய அளவுக்கு வாசிகசாலைகள், நூலகங்கள் இயங்குவதற்குப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆவன செய்து வைத்தல் வேண்டும்.

## அநுபவத்துக்கு நிகர்..........

அநுபவத்துக்கு நிகர் அநுபவமே என்பார்கள் அறிஞர்கள். அவர்கள் கூற்றுப்படி பத்திரிகைத்துறையில் யான் பிரவேசிக்கவும் பாராளுமன்றத்தில் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளனாகப் பணிபுரியவும் காரண

மாயிருந்த சில அநுபவங்களைப் பவளவிழாக் காணுகின்ற உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவர்களுடன்—பொதுவாக மாணவர் சமுதாயத்துடன் பகிர்ந்து கொள்ளுவது ஏற்புடையது.

சிறுவனாக இருந்த காலத்தில் எமது கிராமத்துப் பிள்ளையார் கோயில் வீதியில் அமைந்துள்ள வாசிகசாலைக்குப் போவதுண்டு. தின, வார, மாத இதழ்களுடன் வேறு பல சஞ்சிகைகளையும் கருத்தூன்றி வாசிப்பது வழக்கம். அவற்றில் உள்ள ஓவியங்களையும் சித்திரங்களையும் பார்த்துப் பெரிதும் இரசித்ததுண்டு.

சிறுவர்களுக்கான பக்கங்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. வனவிலங்குகளை வைத்துப் பலவகையான சித்திரங்கள் வரையப்பட்டிருக்கும். பல்வேறு விநோத உடைகளில் காட்டு மிருகங்களைப் பார்ப்பதே தனி இன்பம். சஞ்சிகை ஒன்றில் இடம்பெற்றிருந்த கேலிச்சித்திரம் ஒன்று எனது கவனத்தை மிகவும் ஈர்த்தது. கோணங்கிபோல் நின்ற மாணவர் ஒருவரைப் பார்த்து ஆசிரியர் 'எட்டுக் கொடிய மிருகங்களின் பெயர்களைக் கூறு' என்றார். அதற்கு அந்த மாணவர் 'ஐந்து புலிகள் மூன்று சிங்கங்கள் சேர்' என்கின்றார். அந்தக் கேலிச்சித்திரமும் கேள்வியும் பதிலும் என்னை மிகக் குதூகலிக்கப் பண்ணி விட்டன. அதன் பின்னர் மேலும் வாசிப்புப் பயிற்சி வளர்ச்சியடைந்தது.

யான் உரும்பிராய் இந்துக் கல்லூரியிற் கல்வி பயின்றவன். அப்பொழுது திரு. சீ. ஸ்ரீநிவாசன் அவர்கள் அங்கு புகழ்பூத்த அதிபராக விளங்கினார். கல்லூரியில் ஒரு தினம் குடியியல் வகுப்பில் 'இன்று இலங்கையின் தேசாதிபதி யார்?' என்று பாட ஆசிரியர் கேட்டார். 'உரும்பிராயின் தவப் புதல்வன் நீதியரசர் செ. நாகலிங்கம்' எனப் பதில் அளித்தேன். ஆசிரியர் பாராட்டினார்.

தேசாதிபதி அவர்கள் விடுமுறையிற் செல்ல, அன்றைய அரசியற் சட்டப்படி அக்காலத்தில் பதில் பிரதம நீதியரசராக விளங்கிய திரு. செ. நாகலிங்கம் அவர்களே தேசாதிபதியாகப் பதிற் கடமை யாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலைக் கல்வியுடன் வாசிப்புப் பயிற்சியும் இருந்த காரணத்தினாலேதான் சரியான விடையைச் சரியாக இறுக்க முடிந்தது.

பொதுவாக மாணவர்களுக்கு எடுத்துக் கூற விரும்புவது, நல்ல விடயங்களை நாள் தோறும் படிப்பது காலப்போக்கில் மாணவர்களை நல்லதொரு ஏற்றமான வாழ்க்கைக்குள் புகுத்திவிடும் என்பதுதான். நல்லதோர் ஆய்வுக் கட்டுரையைப் பத்திரிகையில் படிப்பது பல நூல்களை வாசிப்பதற்குச் சமமானது. ஓர் அறிஞர் பல நூல்களை வாசித்துப் பல ஆராய்ச்சிகளைச் செய்தே ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதுகின்றார். வீரகேசரி, தினகரன், ஈழகேசரி முதலான பழைய பிரபல பத்திரிகைகளும் கடந்த மூன்று தசாப்தங்களாக வெளிவருகின்ற ஈழநாடு பத்திரிகையும் பின்னர் வெளிவந்த தினபதி – சிந்தாமணி, உதயன் – சஞ்சீவி, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம் என்பனவும் வாசகர் உள்ளங்களில் அறிவை வளர்க்கும் கட்டுரைகளையும் செய்திகளையும் பிரசுரித்து வந்தன. இப்பொழுதும் நடைமுறையில் உள்ள பத்திரிகைகள் தமது நல்ல பணியைத் தொடர்ந்தும் செய்துவருகின்றன. ஆங்கிலத் தினசரிகளும் வாரப் பதிப்புக்களும் மக்கள் அறிவை விருத்தி செய்யும் வகையிற் பணிபுரிகின்றன.

**கருத்துக் கருவூலங்கள் :**

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சைவாசிரியர் கலாசாலையிற் கடமையாற்றிய காலத்தில் தொடர்ச்சியாக எழுதிய கம்பராமாயணக் கட்டுரைகளைத் தினகரனிலேயே படித்து நன்கு அனுபவித்ததுண்டு. இதுபற்றிப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையால் 1989ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பண்டிதமணி நினைவு மலரில் தினகரனின் இன்றைய பிரதம ஆசிரியர், இலக்கியச் செம்மல் திரு. ஆர். சிவகுருநாதன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார். " பண்டிதமணி

யின் கம்பராமாயணக் காட்சிகள் தொடரை நாம் தினகரனில் விரும்பிப் படித்ததுண்டு. கம்பராமாயணக் காட்சிகள் என்ற நூலுக்குச் சாகித்தியமண்டலம் பரிசு வழங்கிய போது தினகரன் பெரிதும் மகிழ்ந்தது என்ன இலக்கியச் சர்ச்சை என்ருலும் பண்டிதமணி தினகரனிலே என்ன எழுதுகிருர்கள் என்பதைத்தான் பலரும் அவதானிப்பார்கள்.''

அந்தக் காலத்தில் பண்டிதமணியின் கம்பராமாயணக் காட்சிகளைப் பத்திரிகை மூலம் எப்படி விரும்பிப் படித்துப் பயனடைந்தோம் என்பதைத் திரு. சிவகுருநாதன் அவர்கள் மேற்கண்டவாறு தொட்டுக் காட்டியிருக்கிருர்கள்.

பண்டிதமணி அவர்கள் எழுதிய கால கட்டங்களில் வித்துவான் ந. சி. கந்தையா பிள்ளை, வித்துவசிரோமணி சி. கணேசையர், மாவைக் கவுணியன் சு. நவநீத கிருஷ்ண பாரதியார், புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, வெள்ளவத்தை மு. இராமலிங்கம், வித்துவான் க. வேந்தனர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை போன்ரேரது கருத்துக்களையும் தினகரன் பிரசுரித்தது. இவையெல்லாம் பலரைத் தமிழில் வளர்த்தெடுத்தன.

### ஏட்டுச் சுரைக்காய் :

மாணவர்களின் கல்வியின் உச்சக்கட்டமானது ஈற்றில் அவர்களைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து விடுகின்றது. பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் சித்தியடையும் மருத்துவத்துறை மாணவர்கள் இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் Viva Voce எனப்படும் வாய்மொழித் தேர்வுக்கும் சமுகமளித்துத் தமது புலமையை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குட்பட்டிருந்தனர். அக்காலத்தில் வாய்மொழித் தேர்வுக்குத் தோற்றிய யாழ்ப்பாணத்து மாணவர் ஒருவரைப் பார்த்துப் பல்கலைக்கழக உயர் பீடத்தினர் J. M. O என்பதன் முழு அர்த்தம் என்ன? என வினவினர். தனது அறிவீனம் காரணமாக Judicial Medical Officer (நீதித்துறை சார்ந்த வைத்திய அதிகாரி) என்று சொல்வதற்குப் பதிலாக Junior Medical Officer (கனிஷ்ட வைத்திய அதிகாரி) எனப் பதிலளித்ததனுல் தமது மருத்துவத் துறைப் படிப்பை இழக்க நேரிட்டது. இம் மாணவனின் திறமையும், இலட்சியமும் பாடசாலைக் கல்வியுடன் பொது அறிவையும் ஒருங்கே சமமாக வளர்க்காத காரணத்திஞல் ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாத'' கதையாக முடிந்தது.

பல்கலைக்கழகங்களிலும், நூலகங்கள் மூலம் மாணவர்கள் தமது அறிவை விருத்தி செய்து கொள்ளுகிருர்கள். அவர்களது மேற்படிப்பு ஆராய்ச்சிகளுக்கும் நூலகங்களே பெரிதும் உதவுகின்றன. இதனுற்ருன் போலும் பெரியோர்கள் ''வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணத்துவ முடையவனுக்குகிறது'' என்று கூறிவைத்தனர். ''கண்டது கற்கப் பண்டிதனுவான்'' என்பதும் முதுமொழி.

பாடசாலை நூலகங்கள் சிறப்பாக அங்கு கல்வி பயிலும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அறிவை விருத்தி செய்ய உதவுகின்றன. பாடசாலைகளுக்கு வெளியே இருக்கும் வாசிகசாலைகள் விசேடமாக வளர்ந்தோருக்கான அறிவு விருத்தியை மையமாகக் கொண்டு இயங்குகின்றன. நூலகங்களில் சாதாரணமாக வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மட்டும் இருந்தாற் போதாது. அறிவுக்குரிய நூல்களும் நிறைய இருத்தல் வேண்டும்.

நூலின் பயன்பாட்டிலக்கணத்தை ஓர் ஆய்வாளர் பின்வருமாறு கூறுகின்ருர்.

> ''பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும் குறையும் இல்லாமல், சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல், நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல், சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும்போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந் தீங்கு

செய்தாலும் வசைமொழி கூறுமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல் கற்பிப்பனவும் நூல்களே.''

— றிச்சேட் டி. பியூறி

இத்தகைய நூல்கள் பல. பற்பல நூல்கள் வாசம் செய்யுமிடம் நூலகம் [நூல் + அகம்] எனப் பெயர் பெறுகிறது. ஓர் அறையில் நூல்களைக் குவித்துவிடின் அது நூலகமாகாது. புத்தகக் கடையில் இருப்பதைப் போன்று நூல்களைக் கண்ணுடி அலுமாரிகளில் அடுக்கி வைப்பினும் அது நூலகமாகாது. நூல்களை வாசித்துப் பயன் பெறும் போதுதான் நூலகத்தின் நோக்கமும் நிறைவு பெறுகின்றது. நூல்கள் நுவலப்படுவதற்கு உரியவை. கடமைகளையும், உரிமைகளையும் எடுத்தியம்பிக் கால தேச வர்த்தமானங்களைத் தெரிவித்து குடும்ப, கிராம, மாகாண முழுநாட்டினதும் மேம்பாட்டு வளர்ச்சிக்கு உதவி செய்கின்றன. சமயம், கலை, கலாசாரங்களைக் காக்கும் பண்புகளை வளர்த்து அதன் மூலம் வீட்டிற்கும் நாட்டிற்கும் உகந்த நற்பிரசையாக வாழ வழிகாட்டுகின்றன. மனித சமுதாயம் என்றென்றும் நல்லபடி ஓங்க உதவி செய்யும் மனப்பக்குவ நிலையை நூல்கள் வாயிலாக அடைய முடிகின்றது. எல்லாவற்றிற்கும் மேலான கல்வி அறிவை நாள்தோறும் நல்க வல்லவை நூல்கள். அவ்வாறன நூல்களைக் கொண்டுள்ள நூலகங்கள் வளர வேண்டும். நூலகங்களையும் வாசிகசாலைகளையும் மாணவர்கள் தினசரி நன்கு பயன்படுத்தித் தமது அறிவை விருத்தி செய்வார்களாக.

## மாணவர் உவப்புடன் கற்று வாழ்க!

**பண்டிதமணி, வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள்**

**அறுசீரடி யாசிரிய விருத்தம்**

சீருறு முரும்பி ராயிற் றிகழ்சைவ வித்யா சாலை
ஏருறு கலைஞா னங்கள் இனிதுமிக் கோங்கி வாழ்க
பேருறு முபாத்தி யாயர் பெருங்கடன் ஆற்றி வாழ்க
ஊருறு மாண வர்தாம் உவப்புடன் கற்று வாழ்க.

சீலமார் மகாரின் பெற்றோர் சேர்ந்துழைத் தினிது வாழி
நீலமார் கண்டன் கௌரி நெடிதருள் புரிந்து வாழி
மேலதாஞ் சைவ நீதி மிக்குறீஇ யாரும் வாழி
மூலமார் அரசின் செங்கோல் முதலவேய்ந் துலகர் வாழி.

[உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய வைரவிழா மலர் 1977]

# தாயே வாழி !

பண்டிதர், வித்துவான் இ. நவரத்தினக் குருக்கள் அவர்கள்

சீர்பூத்த உரும்பைநகர்ச் சைவமோங்கச்
சிவம்பூத்த செந்தமிழும் செழித்துவாழப்
பேர்பூத்த ஆயிரத்துத் தொளாயிரத்தில்
பிறங்குபதின் ஐந்தாமாண் டதனிற்றுனே
கார்பூத்த வேழமுகக் கற்பகத்தின்
கவின்பூத்த நல்லருளின் நாட்டத்தாலே
ஏர்பூத்த சைவத்தமிழ் வித்தியாலயமே
இலக்குவளர்த் திட்டநீ உயர்ந்துவாழி!

சந்தமிகு வந்தனையின் துணையினுலும்
சற்குணராம் கணக்காயர் ஊக்கத்தாலும்
பந்தமுறு பெற்றேரின் கொடையினுலும்
பலங்கொண்ட கட்டிடங்கள் கட்டிக்கொண்டு
செந்தமிழும் ஆங்கிலமும் சேர்விஞ்ஞானம்
செஞ்சமயம் கணிதமுதற் பலகலைகள்
நந்துபல வகுப்புக்கள் நாட்டியேநாள்
தோறும்வளர்ந் திலங்கியே வாழிவாழி.

மாகாளி தேவியரு ளாலயத்தின்
மன்னுபுலத் தமையகத்துச் சிருர்கள்கூடி,
பாகான இன்சொலுடன் பரதமாடப்
பண்ணேடு அபிநயங்கள் காட்டியாட
ஆகாவென்றே பெற்றேர் ஆர்ப்பரிக்க
அதிசய மிதுவெனவே ஆருங்கூற
வாகான மேடையமை சைவத்தமிழ்
வளர்வித்தி யாலயமே நீடுவாழி.

தந்திமுகன் தேர்வீதி வலம்வரும்போது
சதுர்முகன் சாரதியா யமைரதத்தின்
கந்தமுறு கொடிஞ்சியதன் மேலுமோங்கக்
கவினுறுநல் மாடிகளு முடைத்தாயின்று
சந்தமுறு பவளவிழாக் காணுந்தேவீ,
சதமாண்டு விழாக்காணச் சைவம்வாழச்
செந்தமிழும் வாழநிதம் தொண்டுசெய்து
செகத்திலுள்ளோ ரறிவுவளர் தாயே வாழி !

# சைவத் தமிழ்க் கல்வி வளர்ச்சி

திருமதி கா. இராஜகோபால் அவர்கள்

எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் ஊன்றுகோலாயிருப்பது கல்வியேயாகும். எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். இக்கல்வியை வளர்த்து வரும் வித்தியாலயங்கள் தேவாலயங்களுக்கு இணையானவை என்று கூறின் மிகையாகாது.

> '' குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
> நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
> கல்வி யழகே யழகு ''

என்னும் பாடல் மிகவும் சிந்தனைக் குரியது. கல்வி வளர்ச்சிக்கான வித்தியாலயங்களில், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் மிகவும் பழைமை வாய்ந்த ஒரு ஸ்தாபனமாகும். இந்துக் கல்லூரி அதிகார சபையினால் 1915 இல் ஸ்தாபிக்கப்பெற்ற இக்கல்வி நிலையம் பவளவிழாவைக் காணுகின்றது.

ஈழத்திலும் ஏனைய பிறநாடுகளிலும் உத்தியோகம் வகித்து வருகிறவர்களில் உரும்பிராயைச் சேர்ந்தவர்களாய் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் வகிக்கும் உத்தியோகச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் எனலாம்.

இப் பாடசாலையைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் புற முயற்சிகள் எல்லாவற்றிலும் முதலிடம் வகிக்கின்றனர். இங்கு கல்வி கற்பவர்களில் ஆண்களை விடப் பெண்களே கூடுதலான தொகையினராவர். அத்துடன் பெண்கள் கூடுதலான புள்ளிகள் பெற்று முன்னேறியுமுள்ளனர். ஆசிரியர்களில் ஆண்களை விடப் பெண்களே தொகையிற் கூடுதலாகக் கற்பித்து வருகின்றனர். பெண்கள் அதிபர்களாகவும் பதவியுயர்த்தப்பட்டனர். இப்பாடசாலையின் முதல் பெண் அதிபர் என்ற தனி முத்திரையைத் திருமதி ச. பரங்கிரிநாதன் பெறுகின்றார். இவரையடுத்து இன்றைய அதிபராகப் பதவியிலிருக்கும் செல்வி. அ. சின்னத்தம்பி இடம்பெறுகின்றார். இவ்விரு பெண் அதிபர்களும் பெண்ணினத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளனர். இவர்களது திறமை பாராட்டத்தக்கது.

இப்பாடசாலையில் ஆண்டு தோறும் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்கள் சித்தி பெற்று வருகின்றனர். பவளவிழாக் காணும் இவ் வேளையில் 1990இல் புலமைப் பரிசில் பரீட்சையில் 13 மாணவர்கள் சித்தியெய்தினர். இப்பாடசாலையின் வளர்ச்சியை நோக்கும்போது கொழும்பு விவேகானந்த சபை நடாத்திய அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக்குப் பல மாணவர்கள் தோற்றிச் சித்தி பெற்றனர். 1977ஆம் ஆண்டு குறித்த சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றிய செல்வி ந. இந்துமதி பாராட்டத் தக்கவகையில் அகில இலங்கை ரீதியில் முதற் பிரிவில் முதலாம் ஆளாகத் தேறிச் சான்றிதழையும், தங்கப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கு முன்னரும் பின்னரும் பல சாதனைகளை எமது மாணவர்கள் நிலைநாட்டியுள்ளனர். பவளவிழாக்காணும் இவ் வேளையில் க. பொ. த. சாதாரண பரீட்சையில் செல்வி கா. யசோதா என்பவர் ஆறு விசேட சித்திகளையும் ஒரு திறமைச் சித்தியையும் பெற்று எம் ஊருக்கும், பாடசாலைக்கும், தனக்கும் பெருமையைத் தேடிக் கொண்டார். எனவே பெண்களின் கல்வி வளர்ச்சி சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். கொத்தணி, கோட்ட மட்டங்களிலும் பல நிகழ்ச்சிகளில் பெண்கள் கலந்து முதலிடங்களைப் பெற்றுள்ளனர். பாரதியார் கூறியது போல ஆண்களுக்குச் சமானமாகப் பெண்களும் பிரகாசிக்கின்றனர். இப்பாடசாலை கூட இதற்கு எடுத்துக் காட்டாகவுள்ளது. விளையாட்டுத்துறை, நாடகத்துறை முதலியவற்றில் ஈடுபாடு கொண்டுள்ள ஆண்களும் பல சாதனைகளை நிலை

நாட்டியுள்ளமை என்றும் நினைவு கூரத் தக்கவை. பாடசாலையின் பலதரப்பட்ட முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்து வருகின்ற ஆண்களும் பாராட்டுக்கு உரியவர்களே.

சிறு கொட்டிலில் ஆரம்பமான இப்பாடசாலை இன்று பெரு விருட்சமாக வளர்ந்து பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. இந்த விருட்ச நிழலில் தங்கி இளைப்பாறியவர்கள் பலர் நல்ல நிலையில் இருக்கின்றனர். ''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' புண்ணியம் என்ற பாரதியார் வாக்குக்கிணங்க எமது பாடசாலை ஏழை மாணவர்களுக்குப் புகலிடம் அளித்தது. இப்பொழுதும் புகலிடம் அளித்து வருகிறது. தொடர்ந்தும் இந்த நிலை நீடிக்கும் என்பது உறுதி.

இப்பாடசாலையின் கடந்தகாலப் பணிகளை அவதானித்த கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர்களும் கல்விமான்களும் காலத்துக்குக் காலம் மிகவும் பாராட்டி இருக்கின்றார்கள்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வரும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் கல்வித்துறையில் நடுவூர்ப் பழுத்த நன்மரமாகத் திகழுகின்றது. மாணவர்கள், விசேடமாகப் பெண்கள் விரும்பிக் கற்கும் சங்கீதம், நடனம், சித்திரம் முதலான பாடங்களுக்கு இங்கே ஊக்கம் அளிப்பதனால் அத்துறையில் மாணவர்கள் பயின்று பாடசாலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதோடு மட்டும் நில்லாமல் சமுதாய நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றித் தமது ஆற்றலைத் தனி இலச்சினையாகப் பதியச் செய்துள்ளனர் என்பதை இங்கு முக்கியமாகக் கூறவேண்டியுள்ளது. ஆண்களும் இந் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக் கணிசமான அளவுக்கு முன்னேறி உள்ளனர் எனலாம். கவின் கலைகளை இங்கே முன்னர் நன்கு கற்ற மாணவிகள் அக்கலைகளை வளர்க்கும் பணியில் வழிகாட்டிகளாயுள்ளனர் என்பது ஒரு நற்செய்தியாகும்.

ஆலயங்களுக்கு அயலிலே வித்தியாலயங்கள் அமைவது பெரிதும்சிறப்புக்கு உரியது. தொழுகின்ற அடியார்களின் விக்கினங்களைப் போக்கியருளும் கற்பகவிநாயகரின் தரிசனத்தைத் தினமும் பெறுகின்ற இப்பாடசாலை மாணவர்கள், ஆலயப்பணிகளில் பக்தியுடன் ஈடுபடுவார்கள். உற்சவங்களில் ஆசார சீலர்களாகக் கலந்து கொள்ளுவார்கள். ஸ்ரீகற்பகவிநாயகர் தேர்த் திருவிழாவிலன்று, பாடசாலையின் கிழக்கு வாய்தலில் பந்தல் அமைத்து, தோரணம் நிறைகுடம் மங்கலப்பொருள்களால் அணி செய்து, தேங்காய் உடைத்துத் திருத்தேரில் ஆரோகணித்து வரும் கற்பகவிநாயகரின் திருவருளை வேண்டி மாணவர்கள் ஆசிரியர்கள் வழிபாடுசெய்யும் காட்சி அருட்காட்சியாக இருக்கும்.

இவ்வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தோள்கொடுத்து உதவுபவர்கள் பெற்றோர்கள். அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் உள்ளிட்டவர்கள் ஒரு குடும்பம் போல இயங்குவதாலேயே இவ்வித்தியாலயம் வியத்தகு முன்னேற்றத்தை அடைய முடிந்தது என்பது வெளிப்படை. சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பல்வேறு வளர்ச்சிகளுக்குக் காலத்துக்குக் காலம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சேவை மிகமிக உயர்ந்தது.

வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா என்பனவற்றைக் கண்டுகளித்தது யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் பல நூறு விழாக்கள் சிறப்பாக நடந்திருக்கின்றன. இவ்விழாக்களுக்கெல்லாம் சிகரமாயமைந்த விழா வைரவிழா. இவ்வித்தியாலயத்தின் அறுபது ஆண்டுப் பணிகளை எடுத்தியம்பும் வகையில் 07–04–1977 வியாழக்கிழமையும் 08–04–1977 வெள்ளிக்கிழமையும் இவ்விழா வித்தியாலயத் திறந்த வெளி அரங்கில் நடைபெற்றமை இன்றும் மனதில் பசுமையாகக் காட்சிதருகின்றது. இவ்விழாவைக் கண்டு நாடே மகிழ்ந்தது. அறிஞர் பெருமக்கள் நிறைவாகப் பங்குகொண்ட இவ் வைரவிழாவை யொட்டி வெளியிடப் பெற்ற வைரவிழாமலர் கற்றோர் கைகளில் இன்றும் நறுமணம் வீசிக் கொண்டே இருக்கின்றது.

இப்பொழுது சைவத்தமிழ் வித்தியாலயம் பவளவிழாவைக் கண்டு குதூகலம் அடைகின்றது. வெற்றிப்பாதையில் சென்றுகொண்டு இருக்கும் சைவத் தமிழ் வித்தியாலயம் நூற்றாண்டு விழாவையும் கண்டுகளிக்க இறைவன் திருவருள் புரிவாராக.

# சைவ சமய மரபுச் சிந்தனைகள்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்
(தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்)

எமது பண்பாட்டு மரபிலே எல்லாப்படி நிலைகளையும் கடந்து உச்சியிலே நிறைவுடைய சமயமாகச் சைவம் அரசோச்சுகின்றது என்பது ஞானபக்தராகிய தாயுமானவரின் அனுபூதி வாக்காகும். அனைத்துச் சமயங்களும், சமய நெறிகளும், சமய நூற் கொள்கைகளும் தன்னகத்தே படிநிலைகளாக அமைய இவையனைத்தையும் கடந்த மேடைமீது சிம்மாசனத்திலே பொலிந்து விளங்கும் ஆன்மீக ஆட்சியில் அமர்ந்தது சைவசமயம் என்பது இந்த ஞானியின் உள்ளக் காட்சியாகும்.

இயல் பென்றுந் திரியாமல் இயமமாதி
எண்குணமுங் காட்டி அன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி
மயல் அறுமந் திரஞ்சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ·

எனச் சைவத்தின் பெருமையைப் பாடுகின்றார். சைவ சமயம் இன்ன காலத்தைத் தோற்றுவாயாகவுடையது என்று கூறமுடியாதவாறு காலத்தால் தொன்மையுடையது. சைவ மரபின் சிறப்பினைக் கூறும் அனைத்து நூல்களும் இச்சமயத்தின் பிரமாண நூல்களாகிய வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக் கொண்டுள்ளன. சிவனைப் பரம்பொருளாகக் கொண்டு அப்பரம்பொருளை அறியவும் அடையவும் வழிவகைகளைக் கூறும் வகையால் சிவாகமங்கள் சிறப்புப் பெறுகின்றன. இவற்றை இறைவன் நூல் எனப் போற்றப்படும் மரபு இச்சமயத்திற்கே உரியது. இப்பிறவியின் நல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குரிய வழி வகைகளைக் கூறும் கருவூலமாக இவை உள்ளன. ஆகவேதான் இற்றைக் காலம் வரை எமது சமய மரபில் அவை சமயம், தத்துவம், கலை ஆகிய துறைகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இறைவழிபாட்டிற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திய வகையிலும் இவை சிறப்புப் பெறுகின்றன. நாம் எடுத்தபிறவியின் முக்கிய நோக்கம் இறைவன் திருவடிகளைச் சேர்தல் ஆகும். எனவே அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலும் எமது முக்கிய கடமைகளாக அமைந்துள்ளன. அகநிலையிலும் புறநிலையிலும் இச்சமயஞ் சார்ந்த ஒருவன் தூய்மை பெற ஏற்ற வழிவகைகள் இவற்றில் கூறப்பட்டுள்ளன. அளவையியலாலும் அறிவாராய்ச்சியியலாலும் ஆய்ந்து நிறுவப் பெற்ற கொள்கைகள் இச்சமயத்தின் மாட்சிக்கு உரைகல்லாக உள்ளன. உயர்ந்த கொள்கையால் உலகில் ஏனையவற்றிலும் தழைத்து ஓங்கியும் அனுபவ நுட்பத்தால் ஏனையவற்றிலும் விளக்கமாகவும் எளிமையாகவும் நின்ற காரணத்தால் இச்சமயம் தனக்கேயுரிய சிறந்த மரபினை ஏற்படுத்திக் கொண்டது. முதனூல்களாகிய வேதம் ஆகமம் ஆகியவற்றின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு சமய இலக்கியங்கள் விரிவடைந்தன.

தேவர் குறளுந் திருநான் மறை (முடிவும்)
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்ற ஒளவையாரின் வாக்கு, சமய இலக்கிய மரபின் சிறப்பினை உணர்த்துகின்றது.

சைவசமய மரபின் மற்றுமொரு சிறப்பம்சம் இறைவனது உண்மையினை அடிப்படையாக வைத்து, ஒழுக்க நெறியினை உணர்த்துவதாகும். ஒழுக்கம் இருவகைகளாகக் கூறப்படும். ஒன்று பொது ஒழுக்கம்; மற்றையது சிறப்பொழுக்கம். அன்பு, ஒழுக்கம், ஆசாரம், தவம், தானம், வாய்மை, வணங்கல், அடக்கம், அறவழி நிற்றல் போன்றவை பொது ஒழுக்கத்தில் அடங்குவன.

இறைவனது அருளாற்றலில் ஊன்றி மனம் வைத்து உணர்ந்து அவனது அருட் பெருங் குணங்களில் தோய்ந்து இறுதியில் அவன் வண்ணமாய் ஒன்றுதற்கு முயற்சி செய்தல் சிறப்பொழுக்கமாகக் கொள்ளலாம். இவ்வொழுக்கத்தினை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்காக வகுத்துக் கூறும் மரபு சைவத்திற்கே உரியதொன்று. சிவாகமங்கள் கூறிநிற்கும் இவ்வொழுக்க மரபுக்கமைய வாழ்ந்து காட்டிய சிறப்பு சிவனடியார்களாகிய சமயாசாரியர்களுக்கே உரியது. தமது வாழ்க்கையைச் சிவமணங்கமழும் ஒன்றாக ஆக்கிச் சிவனுக்கே தம்மை அர்ப்பணித்ததன் பயனாய், சிவனுக்கு வழங்கப்படும் பெருமையை அடியாருக்கும் வழங்கும் மரபு சைவசமயத்தில் ஏற்படலாயிற்று. குருலிங்க சங்கமம் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. சிவனடியார் மேல் அன்புடையராதல் ஓர் உயர்ந்த ஒழுக்கமாய் அமைந்தது.

இத்தகைய ஒழுக்க நெறிகளுக்குரிய நிலைக்களனாகவும் பயிற்சிக் கூடமாகவும் அமைந்தது சிவாகமங்கள் சிறப்பித்துக் கூறும் சிவாலயங்கள் ஆகும். இறைவனது திருவுருவங்களை இறைவனாகவே நினைந்து வழிபடும் மரபு சைவத்தில் சிறப்பாக உள்ளது. சிவனை உணரவும் அவன் அருளாற்றலைத் தெளியவும் அருள் நிலையமாகிய ஆலயங்கள் அடியார்களுக்குப் பெரிதும் துணை நின்றன.

குறிகளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே.

என்ற அப்பரின் அருள் வாக்கு, சிவனது பெருமைகளைக் கூறிநிற்கும். எவரெவர் எவ்வெவ்வுருவாய் இறைவனை வழிபடுகின்றனரோ அவரவர் கருதும் உருவாய் நின்று அவர் செய்யும் வழிபாட்டினை ஏற்று அருள் புரியும் பாங்கு சைவ மரபில் சிறந்த வழிபாட்டு மரபினுக்கு அணிகலனாக உள்ளது. சிவ வழிபாட்டுக்குத் துணைபுரியும் சாதனங்கள் எண் வகையாக அமையும் மரபினை மூவர்தமிழ் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. சிவ சின்னமாகிய திருநீறு, குருவருள், திருவைந்தெழுத்து, திருக்கோயில், இறைவனது திருவடிவங்கள், திருவடி, அர்ச்சனை, தொண்டு என்பன அவை. சேக்கிழாரின் பெரிய புராணம் சைவ சமய மரபினைச் சிறப்பாக எடுத்துக் கூறும் நூலாகும்.

மகா புராணங்கள் இறைவன் பற்றிக் கூறும் அருட்செயல்களைத் தென்னாட்டில் உள்ள தலங்களோடு இணைத்து வழிபாடியற்றும் மரபு இங்கு குறிப்பிடத்தக்கது. 'தென்னாடுடைய சிவனே போற்றி'' என மணிவாசகர் போற்றியருளியவாறு தென்னாட்டிலே இறைவன் பல்வேறு வடிவங்களில் எழுந்தருளி அருள்பாலிக்கும் தலங்கள் பல. இறைவனுக்குத் திருக்கோயிலை நிர்மாணிப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் பல்லவ மன்னர்களும் சோழப் பெருமன்னர்களும் பெருந்தொண்டு புரிந்தனர். இவர்களது அரிய தொண்டுகளால் சைவ சமய மரபு மேன்மையுற்றது. இவ்வாலயங்களை நிலைக்களனாகக் கொண்டு சைவ மரபினை மக்கள் கைக் கொண்டு வாழ நாயன்மார்கள் வழியமைத்தனர். நாயன்மார்களது திருப்பதிகங்களை இறைவன் சந்நிதியில் ஓதி உய்வு பெறும் மரபு சைவத்திற்கே உரியதொன்று. 'திருப்பதியம் விண்ணப்பம் செய்யும்' மரபு சோழப் பெருமன்னர் காலத்தில் மேன்மையுற்றது. சிவாகமங்கள் கூறும் வழிபாட்டு மரபினைப் பேணுவதில் காலந்தோறும் எழுந்த சிவாலயங்கள் முக்கியத்துவம் பெற்றன. தென்னாட்டில் ஆலயங்களின் மதிப்பு உயர்ந்து வந்த விடத்தும் நாயன்மாரது பாடல்பெற்ற தலங்களுக்குச் சிறப்பான நிலை அமைந்தது. அத்தலங்களுக்கு அடியார்கள் தம் வாழ்நாளில் அடிக்கடி சென்று வழிபடும் மரபு ஏற்படலாயிற்று. தல யாத்திரை மரபு சிறப்படைந்தது. சிதம்பரமும் மதுரையும் மயிலாப்பூரும் திருவாரூரும் ஏனைய தலங்களை விடப் பெருமை பெற்றன. இத்தகைய தலங்களில் பலவற்றுக்கு அவற்றின் சிறப்பினைக் கூறும் தலபுராணங்கள் எழுந்தன.

ஊர்தோறும் கோயில்கள் எழுந்து சைவ மரபின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தன. ஊரில் வாழ்ந்த மக்களது சமய வாழ்க்கைக்கு நிலைக்களனாக அவை அமைந்தன.

கோயிலுக்கு 'நகர்' என்று பெயர். 'முக்கட் செல்வர் நகர்', 'பூமுடி நாகர் நகர்' என்ற சங்க நூல்களில் வரும் தொடர்கள் மூலம் இதனை அறியலாம். கோயில்களாகிய நகரைச் சுற்றிப் படர்ந்ததே நாகரிகம். சைவ மரபின் நிகழ்கால வடிவமாக விளங்கியது திருக்கோயில், சிற்பம், விக்கிரகக்கலை, கட்டிடக்கலை, இசை, நடனம், அணிகலன் கலை, அலங்காரக் கலை, ஓவியம் ஆகிய பல கலைகளும் வளர்வதற்கு ஏற்ற வாய்ப்பளித்தது திருக்கோயில் வழிபாடு. கோயிற் கட்டிடக் கலையிலும் நித்திய நைமித்திகப் பூசைகளிலும் பல கலைஞர்கள் தம் கலையாற்றலைக் காட்டினர். ஆகம மரபு கோயில் மரபுக்கு வழியமைத்தது. பண்ணும் பரதமும் வளர்ச்சி கண்டன. சைவத் திருமுறைகள் திருக்கோயில் வழிபாட்டிற்கும் பக்திக்கும் தத்துவ மரபுக்கும் வழிவகுத்தன. இவை யாவற்றையும் உள்ளடக்கிய திருக்கோயில் வழிபாடு சைவமரபிற்கு அணிகலனாக அமைந்தது. கோயிலின் சிறப்பால், வழிபாட்டு மரபால், கலைகளின் சிறப்பால், பக்தி நலத்தினால் சைவ மரபு வளர்ச்சி கண்டது.

**ஆக்கையாற் பயனென்**
**அரன் கோயில் வலம் வந்து**
**பூக்கையா லட்டிப் போற்றி யென்னாத விவ்**
**வாக்கையாற் பயனென்.**

என அப்பர் பெருமான் திருக்கோயில் வழிபாட்டின் சிறப்பினைக் கூறி, எமது சரீரம் அதற்காகவே இறைவனால் அருளப்பட்டதென்ற உண்மையை எமக்கு உணர்த்துகின்றார். எமது அங்கங்கள் ஒவ்வொன்றும் திருக்கோயில் வழிபாட்டில் இணைய வேண்டும் என்பது அப்பரது திருவுள்ளக்கிடக்கை.

நாவலர் முதல் இலக்கியக் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரை எமது நாட்டில் வாழ்ந்த சமயப் பெரியார்கள் இச் சைவ மரபின் சிறப்பினைத் தமது பேச்சுக்களினாலும், எழுத்துக்களினாலும் உரம்பெறச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. எமது நாட்டிலே பிற சமயத் தாக்கங்களிலிருந்து சைவத்தைக் காத்த பெருமை நாவலருக்கே யுரியது. சைவ மரபின் காவலன் எனப் போற்றத் தகுந்த அப்பெருமானின் தூய சமய மரபு சார்ந்த நற்பணிகளை வியந்து வியந்து, நயந்து நயந்து சைவ மரபிற்கு ஓர் இலக்கணமாகத் திகழும் சைவ பூஷணம் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் '**நாவலர் நயம்— இறை ஒளி வெண்பா**' என்ற நூலில் பாடியுள்ளார். நாவலர் காட்டிய சைவ மரபில் வாழாதார் வாழ்க்கையினால் என்ன பயன் என அந்நூலில் வினா எழுப்புவது இங்கு சிந்தனைக்குரியது.

அந்நோக்கில் நாவலர் மாணவர் வழி வந்த யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி சதாவதானம் நா. கதிரவேற்பிள்ளை அவர்களது '**சிவக்ஷேத்திர மகோற்சவ உண்மை**' என்ற நூல் சைவ மரபில் திருக்கோயிலின் மேன்மையைத் தக்க நூல்களின் பிரமாணங்கள் வழி எடுத்துக் கூறுகின்றது. சிவ விளக்கம், க்ஷேத்திர ஆலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என்ற தலைப்புக்களில் திருக்கோயில் மரபினை விளக்கி நிற்கின்றது.

சைவ மரபின் மேன்மையான ஒழுக்கம் 'சிவ' என்னும் திருநாமத்தை உள்ளன்புடன் ஓதி உணர்தலாகும். 'சிவ' என்னும் திருநாமத்தை அன்புடன் உச்சரித்தலினாலும், கேட்டலினாலும் அனைத்துப் பாவங்களும் அகன்று விடும் என்ற நம்பிக்கை எம்மிடையே ஆழமாக உள்ளது.

**சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்**
**கோத்தி ரமுங்கு லமுங் கொண்டென் செய்விர்**
**பாத்திரஞ் சிவமென்று பணிதி ரேல்**
**மாத்தி ரைக்குள் அருளுமாற் பேறரே.**

என வரும் அப்பர் தேவாரம் இதன் சிறப்பினை விதந்தோதுகின்றது.

**சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்**
**சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்**
**சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்**
**சிவசிவ வென்னச் சிவகதி தானே.**

என 'சிவ' என்ற திருநாமத்தினைப் போற்றுகின்றது திருமந்திரம்.

சிவன், அநாதி மல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் தம்மையறிந்து வழிபட்டுய்யும் காரணத்தினால் அருவம், அருவுருவம், உருவம் என்று முத்திறத் திருமேனி கொண்டருளினார் என்பது சைவசாத்திரத் துணிபு.

உருமேனி தரித்துக் கொண்ட
தென்றலு முருவி றந்த
வருமேனி யதுவுங் கண்டோ
மருவுரு வான போது
திருமேனி யுபயம் பெற்றேஞ்
செப்பிய மூன்று நந்தம்
கருமேனி கழிக்க வந்த
கருணையின் வடிவு தானே.

என, சிவஞான சித்தியார் கூறும் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கம் சிவசக்தி தத்துவத்தைத் தன்னுள் கொண்டு விளங்குவது. சிவனது வடிவங்களுள் நடராஜ வடிவம் சிறப்புடையது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய இறைவனது பஞ்ச கிருத்தியங்களது தத்துவத்தைப் பிரதிபலிப்பது இவ்வடிவம். சைவ மரபில் சிறப்பிக்கப்படும் ஐந்தெழுத்தின் தத்துவமாய் விளங்குவது இவ்வடிவம். இறைவன் மந்திர வடிவினனாய்த் தோன்றி ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றார் என்ற தத்துவத்தை எடுத்தியம்புவதும் இவ்வடிவமே. நடராஜ வடிவம் திருவைந் தெழுத்தாகிய 'நமசிவாய', 'சிவாயநம' ஆகியவற்றுடனும் மற்றும் ஐந்தொழில்களோடும் கொண்டு விளங்கும் தொடர்பினைத் தேவாரங்களும் திருமந்திரமும் சைவசித்தாந்த நூலாகிய உண்மை விளக்கமும் மிக விரிவாகக் கூறுகின்றன. நமச்சிவாய என்பதன் உயர் சிறப்பினை அப்பர் தெளிவுபடக் கூறுகின்றார்:

நமச் சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச் சிவாயவே நானறி விச்சையும்
நமச் சிவாயவே நாநவின் றேத்துமே
நமச் சிவாயவே நன்னெறி காட்டுமே.

என்பது அப்பரது அருள் வாக்கு. நமச்சிவாய என்பது எமது வாழ்க்கைக்குரிய நன்னெறி காட்டும் வழிகாட்டி என்பது அப்பரது சிந்தனையாகும். இவை யாவற்றுக்கும் உண்மை விளக்கமாக நின்று சைவ சித்தாந்த உண்மைப் பொருளை எமக்கு உணர வைப்பது நடராஜ வடிவம். சமயம் தத்துவம், கலை ஆகிய முத்திறத்திற்கும் நிலைக்களனாக உள்ள இவ்வடிவம் சைவசித்தாந்த பதி உண்மைக்கு நல்லதொரு விளக்கமாக உள்ளது. ஆன்மாக்கள் தளையை நீக்கி இறைவன் அருளைப் பெற்று அவனடிக்கீழ் இன்பம் துய்ப்பதற்குரிய வழிவகைகளை எடுத்துக் கூறுவது சைவசித்தாந்தம். சைவசித்தாந்த தத்துவங்களுக்கு உரிய விளக்கமாய் அமைவது திருக்கோயிலும் அங்குள்ள இறைவன் திருவடிவங்களும், அவற்றுக்கு நிகழும் கிரியைகளுமாகும். சிறந்ததொரு கிரியை மரபு ஆன்மாக்களின் மனப் பக்குவத்திற்கு வழிகாட்டி நிற்கும் மாண்பைச் சைவமரபு தன்னகத்தே கொண்டுள்ளது. 'கிரியையென மருவுமவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்' எனச் சிவப்பிரகாசம் தரும் கருத்து எமது சிந்தனைக்குரிய தொன்றாகும்.

இவ்வாறு அனைத்துச் சிறப்புக்களையும் ஏனைய சமயங்களை விடத் தன்னகத்தே கொண்டு முடிமணியாய்த் திகழுவதால் சைவசமயம் அனைவருக்கும் உரிய அனைத்துக் காலத்திற்கும் உரிய சமயமாகவும் பொலிந்து விளங்குகின்றது. சமயாதீதப் பழம் பொருளைத் தில்லை மன்றம் தெளிவு செய்கின்றது. அப்பர் பெருமான் இத்தெய்வீகக் காட்சியை மனிதப் பிறவியின் சிறந்த பேருகக் குறிப்பிடுகின்றார்:


குனித்த புருவமுங் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

என்பது அவர் எமக்குத் தரும் நல்லுபதேசமாகும். இத் தில்லை நடராஜ தரிசனத்தைக் காண உலகத்திரே ஒன்று கூடுங்கள்; கண்டு களியுங்கள்; பெறற்கரிய மானுடப் பிறவி கழிவதற்குள் இத் திருக்காட்சியை ஒருமுறையேனும் கண்டு விடுங்கள் என எம்மை அழைக்கின்றார் தாயுமானவர்:


சைவ சமய மே சமயம்
சமயா தீதப் பழம் பொருளைக்
கைவந் திடவே மன்றுள் வெளிக்
காட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா! முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் செகத் தீரே.

இத்தகைய உயர்ந்த தத்துவங்களை எமது அனுபவத்திற்குக் கொண்டு வரும் இறைவனது திருவடிவங்கள் சைவ மரபின் மேன்மையை எடுத்துக் காட்டும் சிறப்பு வாய்ந்தவை. காலந்தோறும் சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று துறைகளையும் சீர்பட இணைத்து மண்ணிலே நல்ல வண்ணம் வாழ வழிவகுக்கும் சைவ சமயத்திற்குரிய சிரிய மரபினை நாம் அனைவரும் உவந்து, நயந்து இப்பிறவியின் பயனைப் பெறுதல் வேண்டும். சைவ மரபினைப் பேணிப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடன் ஆகும்.

## உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவர்கள் — 1992



ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை கல்வி பயிலும் மாணவர்கள்



ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரை கல்வி பயிலும் மாணவர்கள்

## மாணவர் பகுதி:

# எமது பாடசாலை

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த யாழ்ப்பாண மாவட்டத்தின் மத்தியிலே உரும்பிராய் என்னும் பதியில் அமைந்துள்ள எமது பாடசாலையின் பெயர் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம். எமது பாடசாலையின் முன்னுல் கற்பகப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. அது ஒரு தனிச் சிறப்பாகும்.

இப்பாடசாலையில் முருகன் ஆலயம், விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், கலையரங்கம் என்பன உள்ளன. முருகன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை தோறும் விசேட பூசையும் தேவார பாராயணமும் நடைபெறும். எமது பாடசாலையில் 29 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்ருர்கள். சுமார் தொளாயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்ருர்கள். எமது பாடசாலையில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை வகுப்புக்கள் உள்ளன. எங்கள் அதிபர் செல்வி அருணேதயம் சின்னத்தம்பி அவர்கள். ஆசிரியர்கள் எமக்கு அன்பாகப் பாடம் சொல்லித் தருகின்ருர்கள். நாங்கள் பாடசாலையில் கற்ற கல்வி தவருது அமைய வேண்டும்.

எமது வித்தியாலயத்துக்குப் பாடசாலைக் கீதம், பாடசாலைக் கொடி, பாடசாலை இலச்சினை என்பன உள்ளன. '' திருமலி ஈழத் திருப்புகழ் வாழி '' என்று பாடசாலைக் கீதம் தொடங்குகிறது. பாடசாலைக் கொடியில் பச்சை, சிவப்பு, மஞ்சள் ஆகிய மூன்று நிறங்களும் உள்ளன. பாடசாலை இலச்சினையில் பிள்ளையார் படமும், குத்து விளக்கும் '' கற்ருங்கு ஒழுகு '' என்ற வாசகமும் உள்ளன.

இங்கு சென்ற முதலாம் தவணை, பரிசளிப்பு விழா நடைபெற்றது. 1915ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை 1977ஆம் ஆண்டு வைரவிழாவைக் கொண்டாடியது. இப்பொழுது பவளவிழாக் கொண்டாடுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் எனது பாடசாலையை மிகவும் விரும்புகிறேன். பாடசாலையை மறக்க மாட்டேன். எமது பாடசாலை வளர்க; வாழ்க!

செல்வி. பா. ஞானமொழி
ஆண்டு 2 B — 1992

# சைவத் தமிழில் பரிசளிப்பு விழா

சைவமும் தமிழும் தழைத்து ஓங்கிய எமது உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஆண்டு தோறும் பல விழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றில் பரிசளிப்பு விழாவும் ஒன்றாகும். முன்னர் சூழ்நிலை அமைதியாக இருந்த காலத்தில் சைவத்தமிழில் பரிசளிப்பு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. தற்போது நாட்டு நிலைமையைக் கருத்திற் கொண்டு சைவத்தமிழில் பரிசளிப்பு விழா மிகவும் சாதாரண முறையில் கொண்டாடப்படுகிறது.

மாணவர்களாகிய நாம் சைவத்தமிழ் பரிசளிப்பு விழா எப்போது வரும், எப்போது வரும் என்று ஆவலுடனும், அங்கலாய்ப்புடனும் காத்திருப்போம். பரிசளிப்பு விழா என்றால் என்ன? வெறும் பரிசு கொடுக்கின்ற விழாவா அது? இல்லை! ஆடல், பாடல், நடிப்பு, படிப்பு எல்லாவற்றிலும் மாணவர்கள் அபிவிருத்தி காணும் விழாதான் இது. இந்தப் பரிசளிப்பு விழாவை ஏன் பாடசாலைகளில் கொண்டாடுகிறார்கள் என்பது பற்றிச் சிறிது சிந்திப்போம். ஒரு வழியில் மாணவர்களது படிப்பை ஊக்குவிக்கின்றது. மறு வழியில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் கல்வியின் முன்னேற்றத்தை அறிய நல்ல வாய்ப்பு அளிக்கிறது.

பரிசளிப்பு விழாவை வருடாவருடம் சிறப்பாக நடத்துவதற்கு எம் ஊரவர்களான திரு. சு. மனோகரபூபன், திரு. ஆ. செல்லையா, திருமதி கா. இராஜகோபால் ஆகிய பெரியோர் மனம் உவந்து ஒரு தொகைப் பணத்தை, உரும்பிராய் கிராமிய வங்கியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில் நிரந்தர வைப்புக் கணக்கில் இட்டு அதில் வரும் வட்டியிலேயே எமக்குப் பரிசில்கள் வாங்கித்தரும் பெரும் பணியைச் செய்துள்ளார்கள். சைவத் தமிழ் பரிசளிப்பு விழாவைக் கௌரவிக்கப் பல பல பிரமுகர்கள் பிரதமவிருந்தினர்களாக வருகை தந்துள்ளார்கள். அவர்களில், உயர் நீதி மன்ற நீதியரசரும் சைவத் தொண்டரும், எம் ஊரவரும், இலங்கை அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த கல்விமானும் ஆகிய திரு செல்லப்பா நாகலிங்கம் அவர்கள் சைவத்தமிழில் முதன் முதலாகப் பரிசளிப்பு விழாவிற்குச் சமுகம் அளித்துள்ளமை பெருமைப்படக் கூடிய விஷயமாகும்.

பரிசளிப்பு விழா அன்று சைவத்தமிழ் விழாக்கோலம் பூண்டிருக்கும். விழாவைப் பார்த்து மகிழ்வதற்காகப் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், சைவத் தமிழ் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் முதலியோர் திரள்வார்கள். கடந்த காலத்தில் நடைபெற்ற விழாக்களுக்குப் பல பெரியோர்கள் சமுகம் தந்து சிறப்பித்துள்ளார்கள். இந்த வரிசையில் செனேற்றர் எஸ். நடேசன், பிரதம கல்வி அதிகாரிகளாக இருந்தவர்களான திரு. இ. சுந்தரலிங்கம், திரு. கு. சோமசுந்தரம், கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், பேராசிரியர் ப. சந்திரசேகரம், முன்னாள் கொத்தணி அதிபர் திரு. செ சிவபாலன், முன்னை நாள் அதிபர்களான திரு. வி. அரியநாயகம், திருமதி ச. பரங்கிரிநாதன் ஆகியோர் அடங்குவர். பரிசளிப்பு விழா அன்று சமுகமளிக்கும் பிரதம விருந்தினரை, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாடசாலை வாயிலில் நின்று மலர் மாலை அணிவித்து வரவேற்பார்கள். கடவுள் வணக்கத்துடன் விழா ஆரம்பமாகும். அதிபர் தலைமை தாங்குவார். மாணவர்கள் இனிய குரலில் பாடசாலைக் கீதத்தைப் பாடுவார்கள். அதிபர் ஆண்டறிக்கையை வாசிப்பார். பிரதம விருந்தினர் சைவத் தமிழின் சிறப்புப் பற்றி உரையாற்றுவார்.

பரிசளிப்பு விழாவில் க. பொ. த. (சாதாரணத்தில்) விசேட சித்திபெற்ற, திறமைச் சித்திபெற்ற மாணவர்களுக்கும், பொதுவாகப் பாடங்களில் கூடிய புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். விசேடமாக 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறுவோருக்கும் பரிசில்கள் வழங்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. பரிசளிப்பு விழா வெகு சிறப்பாக நடைபெறுவதற்குத் திறந்தவெளி, பொன்னுத்துரை அரங்கு என்பன உதவுகின்றன. விழாவின் போது இவ்வரங்கு பல வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டு எல்லோரையும் கவரக்கூடிய வகையில் அமைந்திருக்கும். பரிசளிப்பு விழாவின்போது வழங்கப்படும் பரிசில்களில் பலவற்றை ஊர்ப் பெரியவர்கள் முன்னர் வழங்கிச் சிறப்பித்துள்ளமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

பரிசளிப்பு விழாவில் பல நிகழ்ச்சிகள் இடம் பெறுவது வழக்கம். நாடகம், பாட்டு, நடனம், கவிதை, பேச்சு முதலிய பல்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இறுதியில் அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவு பெறும். கடந்த பரிசளிப்பு விழாக்களில் நான், தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல், வாசிப்பு ஆகிய பாடங்களில் பரிசில்களைப் பெற்றேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

ஏ. கீதாம்பிகை
ஆண்டு 5 A — 1992

# சைவத் தமிழும் கவின் கலைகளும்

எமது வித்தியாலயம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு மார்கழி மாதம் மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. சைவமும், தமிழும் சிறப்பாக வளர்வதற்காகவே இக்கல்விக் கூடத்துக்குச் சைவத்தமிழ் வித்தியாலயம் என்று பெயரிட்டனர். இதற்கமைய எமது பாடசாலை சைவத்தையும், தமிழையும் சிறப்பாகப் பேணி, வளர்த்து வருவதுடன், கவின் கலைகளையும் விசேடமாக வளர்த்து வருகின்றது.

கவின்கலைகள் எனப்போற்றப்படுபவை நடனம், சங்கீதம், சித்திரம் என்பன குறிப்பிடத் தக்கவை. இவற்றில் மயங்காதவர் எவரும் இல்லை எனில் மிகையாகாது. சர்வ வல்லமை பொருந்திய எமது இறைவன் கூட இவற்றில் மிகுந்த விருப்பம் உடையவர். இதனைப் பல வரலாற்றுக் கதைகள் மூலமாக அறியலாம். நடனத்தில் இறைவனின் நாட்டத்தை, தில்லையிலே நடனமாடிக் காட்சி தந்து கொண்டிருப்பதில் இருந்தும், '' ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காணக் கண் ஆயிரம் வேண்டாமோ? '' '' நடனம் ஆடினார் தில்லையம் பலம் தனில் '' என்னும் பாடல்களின் வரிகளில் இருந்தும் அறிந்து கொள்ளலாம். சங்கீதத்தின் மூலம் இறைவனை மகிழ்வித்தான் இராவணன். திருக்கைலை மலையைத் தூக்க இராவணன் முற்பட்ட போது இறைவன் மலையின் கீழ் அவனை அகப்படும் படியாகப் பெரு விரலினால் அழுத்தினார். அப்போது வாகீசரின் ஆலோசனைப்படி இராவணன் சாமகானம் பாட, அதில் மகிழ்ந்தார் இறைவன். இராவணனை விடுவித்தார். இதிலிருந்தும், '' தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் '' எனனும் முதல் அடியை உடைய தேவாரத்தின் மூலமும் இசையின் பெருமை வெளிப்படுத்தப்படுகின்றது. முன்னைய காலங்களில் கலைகள் பெரும்பாலும் கோயில்களில் வளர்க்கப்பட்டு வந்தன.

காலப்போக்கில் கலைகளின் முக்கியத்துவத்தை அறிந்த பொது ஸ்தாபனங்களும், அரசும் பாடசாலைகளில் கலைகளை வளர்ப்பதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்தன. இதன் பயனாக எமது பாடசாலையிலும் எழுபத்து இரண்டாம் ஆண்டு தொடக்கம் கவின்

கலைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. நடனம், சங்கீதம், சித்திரம் என்னும் கலைப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டதால் பாடசாலையில் கவின்கலைப் பாடங்களைச் சிறப்பாகப் பயின்று வருகின்றோம்.

நாட்டியக் கலையானது மனிதருக்குக் கலை இன்பத்தை நல்குவதோடு அல்லாமல் பண்பாடுகளையும் அவரது உள்ளத்தில் பதியச் செய்து மனிதனைத் தேவனாக ஆக்கி விடுகின்றது. நாட்டியக் கலை தெய்விகமானது. இறைவனால் நமக்கு அருளப்பட்டது. அங்க அசைவுகளான ஆங்கிக அபிநயத்தாலும் கருத்தைப் புலப்படுத்தும் வாசிக அபிநயத்தாலும், பரிசுத்த உணர்ச்சிப் பிரவாகமான சாத்விக அபிநயத்தாலும் ஒரு கந்தர்வ லோகத்தையே சிருஷ்டி செய்து மனிதனை இரசிகத் தன்மை மூலம் இழுத்து மெய்மறக்கச் செய்து விடுகிறது நடனக்கலை. இந்தக் கலையினை முன்னர் இங்கு வளர்த்தவர்களில் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்கள் குறிப்பிடத்தக்கவர். மேலும், செல்வி ரங்கா விவேகானந்தா அவர்கள் ஆரம்ப காலத்தில் நடனக் கலையில் இங்கே புகழ் பெற்றிருந்தார். திருமதி பத்மா சுப்பிரமணியம் அவர்கள் பாரதத்திலே இப்பொழுது நடனக் கலையில் முன்னணியில் விளங்குகிறார்.

எமது பாடசாலையில் ஆசிரியர்களின் விடா முயற்சியால் கலைவிழா, நவராத்திரிவிழா, பரிசளிப்பு விழா போன்றவற்றில் மாணவர்கள் சிறப்பாக நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிப் பெரியோர்களையும், பெற்றோர்களையும் மகிழ்வித்துள்ளார்கள். கடந்த பரிசளிப்பு விழாவின் போதும், ஆசிரியர் தின விழாவின் போதும் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் விழாவைச் சிறப்பித்தன. கும்மி, நடனம், தீபநடனம் போன்றன மிக அழகாக இருந்தன. இவ்வருடத் தமிழ்த் தினப் போட்டி உப கோட்ட மட்டத்தில் கோப்பாயில் நடைபெற்றபோது நடன நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை எம் மாணவர்கள் பெற்றமை எமது பாடசாலையின் நடனக்கலை வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாகும்.

இசைக்கலையில் ஈடுபாடு உடைய ஒருவன் சங்கீத உலகில் கற்பனைகளுடன் பாடிக் கோடானு கோடி இரசிகர்களைக் கவர்ந்து கந்தர்வ கான உலகிற்கு அழைத்துச் செல்கின்றான். இசையானது உணர்ச்சிகளைத் தூண்டி, உணர்ச்சியின் மூலம் தூய சிந்தனைகள், இரசிக்கும் தன்மை என்பனவற்றை ஏற்படுத்துகின்றது. தமிழ் நாட்டில் சங்கீதத் துறையில் புகழ் பெற்றுத் திகழ்ந்தவர்கள் பலர் இன்றும் வாழ்கின்றார்கள். இவர்களில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்சுமி அவர்கள் ஒருவராவர். நமது நாட்டிலும் பலர் புகழ் பெற்று விளங்குகின்றார்கள்.

கலா மன்றம் அமைக்கப்பட்டு இசை ஆசிரியர்களால் இசைக்கலையை மாணவர்களுக்கு ஊட்டிய பெருமை சைவத்தமிழுக்கு உண்டு. மாணவர்களில் பலர் இசையை விரும்பிப் படிக்கின்றனர். வெள்ளிக் கிழமைகளில் மாணவர்கள் இசையுடன் திருமுறைகள் ஓதுவது சிறப்பானதாகும். மாணவர் மன்றம் மாதத்தில் இரண்டு தடவைகள் கூடும் போது மாணவர்கள் இசை, நடன நிகழ்ச்சிகளை நடத்தி ஆசிரியர்களையும் மாணவர்களையும் மகிழ்வித்து வருகின்றனர்.

மனதில் உள்ளதைச் சிந்தித்து அதற்குப் புதிய ஒரு வடிவம் கொடுத்து விடுகின்ற ஓவியக்கலைஞன் மக்கள் மத்தியில் சாகாத கலைஞன் ஆகின்றான். இத்துறையில் திரு. ரவிவர்மா போன்றவர்கள் சிறப்பிடம் பெற்று விளங்கியமை குறிப்பிடத்தக்கது, சென்ற வருடம் நிகழ்ந்த கண்காட்சியின் போது எமது மாணவர்கள் வரைந்த ஓவியங்கள் பெற்றோர்களதும், ஆசிரியர்களதும், மாணவர்களதும் மனங்களைக் கொள்ளை கொண்டன. அந் நிகழ்ச்சியில் பெருமளவு சித்திரங்களை வியக்கும் வண்ணம் வரைந்திருந்தமை சித்திரக்கலையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டியதெனலாம்.

எமது பாடசாலை நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய துறைகளில் மேலும் சிறப்புற்று வளரக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

பா. ஜெனித்தா
ஆண்டு 8 B — 1992

# சைவத்தமிழ் வித்தியாலயத்தின் எழுபத்தைந்தாண்டுப் பணி

பல்வகைச் சிறப்புக்களும் பொருந்திய உரும்பிராய்ப் பதியின் வளர்ச்சிக்கென்றே இவ்வூர்மண்ணில் பிறந்த நல்லறிஞர்களின் பெரும் முயற்சியால் 1915ஆம் ஆண்டு மார்கழி மாதம் 3ஆம் திகதி ஸ்தாபிக்கப் பெற்ற உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இன்றைய வளர்ச்சியின் உன்னத நிலையைக் கண்டு யாரும் மகிழாமல் இருக்க முடியாது.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் இந்துக் கல்லூரி வளவிலிருந்து இட நெருக்கடி காரணமாக 1949ஆம் ஆண்டு இங்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அப்போது தலைமை ஆசிரியரான திரு. ஆ. கந்தையா அவர்களும் உள்ளூர் ஆசிரியர்களும் பெற்றோர்களும் சேர்ந்து வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டார்கள்.

கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்குத் திசையிலேயே எமது பாடசாலை அமைந்துள்ளது. கோயிலுக்கு அருகாமையில் எமது பாடசாலை அமைந்துள்ளமையால் இறைவனின் அருள் ஒளியானது வித்தியாலயத்திற்கு எத்துன்பமும் ஏற்படாமல் மேன்மையடையச் செய்கின்றது. சில பிள்ளைகளுடன் ஆரம்பமான பாடசாலை இன்று 874 மாணவர்களையும் 29 ஆசிரியர்களையும் கொண்டிருப்பது இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன. எமது பாடசாலை பெரும்பாலும் ஏழை மாணவர்களுக்கே கைகொடுத்து உதவிவருகின்றது. வசதிபடைத்தவர்களை விட ஏழைகளுக்குக் கற்றுக் கொடுப்பது கோடிபுண்ணியம்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
　　இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
　　ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
　　பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
　　ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்.

என்று பாடியிருக்கின்றார் அமரகவி சுப்பிரமணிய பாரதியார்.

எமது பாடசாலையில் மாணவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. இம்மன்றங்கள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என நடைபெற்று வருகின்றன. இம்மன்றங்கள் பொறுப்பாசிரியர், தலைவர், செயலாளர் போன்றவர்களின் உதவியுடன் நடைபெற்று வளர்கின்றன. பேச்சு, பாட்டு, நடனம், விவாதம், வினாவிடை போன்ற நிகழ்ச்சிகள் இம் மன்றங்களில் நடைபெறும். மேற் பிரிவு மாணவர் மன்றத்தினர் ''கற்பகம்'' என்ற பத்திரிகையை நீண்ட காலமாக வெளியிட்டு வருகின்றனர்.

திரு. ஆ. கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் சிரேஷ்ட ஆசிரியராகப் பணி புரிந்த திரு. சி. பொன்னுத்துரை அவர்கள் இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். அப்பொழுது இவரது முயற்சியுடன் அரங்கு ஒன்று கட்டப்பட்டது. இவரது முயற்சியினால் கட்டப்பட்டதால் இவ்வரங்கிற்குப் பொன்னுத்துரை அரங்கு, என்று சமீபத்தில் நாமகரணமும் சூட்டப்பட்டது. இவ்வரங்கு

எல்லாவிதமான விழாக்களுக்கும் கைகொடுத்து உதவுகிறது. பரிசளிப்பு விழா, வைர விழா, ஆசிரியர் தினவிழா போன்ற பாடசாலை நிகழ்ச்சிகளுக்கு மட்டுமல்லாது பொது மக்களது நிகழ்ச்சிகள் பலவற்றையும் இவ்வரங்கு கண்டுகளித்தது.

எமது வித்தியாலயத்தில் விஞ்ஞானகூடம் இல்லாது இருந்தபோது 1969ஆம் ஆண்டில் திரு. தம்பு குமாரசுவாமி அவர்களால் விஞ்ஞான கூடம் கட்டிக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் செய்முறைக்கல்வி சிறப்படைந்தது எனலாம். மாணவர்கள் விஞ்ஞான பாட வளர்ச்சியில் முன்னேற முடிந்தது.

புதிய பாடத்திட்டத்திற்கமைய விவசாயம், பனந்தொழில் என்பவற்றுடன் புடைவையும் உடையமைத்தலும், தென்னந் தும்புத்தொழில் என்பன கற்பிக்கப்பட்டு வந்தன. இன்று வாழ்க்கைத் திறன் என்னும் பாடம் கற்பிக்கப்பட்டு வருகின்றது. கவின்கலைப் பாடங்களாகச் சித்திரம், சங்கீதம் என்பனவற்றுடன் 1972இல் நடன ஆசிரியரும் தேர்ந்தெடுக்கப்பட்டு நடனப்பயிற்சியும் நடைபெற்று வருகின்றது. எமது மாணவர்களும் கவின் கலைப் பாடங்களை உற்சாகத்துடனும் விருப்பத்துடனும் பயின்றுவருகின்றனர்.

25-06-1956இல் திரு. க. செல்லையா தம்பதியினரால் இவ் வித்தியாலயத்திற்கு நீர்த்தாங்கி கட்டிக்கொடுக்கப்பட்டது. இதனுல் மாணவர் கிணற்றிலிருந்து நீர் எடுக்காது சுலபமான முறையில் நீரைப்பெற வசதி ஏற்பட்டது. 1976இல் நூல்நிலையம் கட்டப்பட்டது. இந்நூல் நிலையத்திற்குக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களும் ஊர்ப்பெரியார்களும் அயலூர்ப் பெரியார்களும் பழைய மாணவர்களும் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். அத்துடன் வசதிக்கட்டணப் பணத்தில் வாங்கிய புத்தகங்களும் சஞ்சிகைகளும் உண்டு. இதன் மூலம் மாணவர்களது வாசிப்புத் திறனும் புத்தகங்களை வாசிக்கும் போது ஏற்படும் பலாபலன்களும் தெரிந்தன. பலவகையான புத்தகங்களையும் வாசிக்கும்போது உலக அறிவும் ஏற்படவாய்ப்பு உண்டாகிறது.

அரசாங்கம் ஆண்டு 5இல் புலமைப்பரிசில் பரீட்சையை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. இப்பரீட்சையில் எமது வித்தியாலய மாணவர்கள் பலர் சித்தியடைந்தனர். ஆனுல் இம்மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்வதால் எமது பாடசாலையில், தரம் குறைந்த மாணவர்களே மேல்வகுப்புக்களில் கல்விகற்க வேண்டியநிலை ஏற்படுகிறது. அவ்வாறுன மாணவர்களானுலும் தாமும் படித்து இவ்வித்தியாலய வளர்ச்சியை முன்னேற்ற வேண்டும் என்று பாடுபடுகின்றனர். சைவபரிபாலன சபைப் பரீட்சை, விவேகானந்த சபைப் பரீட்சை போன்றவற்றுக்கு எமது பாடசாலை மாணவர்கள் தோற்றிச் சித்தியடைந்துள்ளனர். தங்கப்பதக்கமும் பெற்றுள்ளனர். சைவத்தமிழ் வித்தியாலயம் என்ற பெயருக்கேற்றபடி இங்கு கூடுதலாகச் சைவமாணவர்களே கல்வி பயில்கின்றனர்.

எமது பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லாதது ஒரு பெருங்குறையே. ஆனுலும் பாடசாலையின் அயலிலுள்ள கற்பகப் பிள்ளையார் ஆலயவீதியிலே விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஆலய பரிபாலன சபை துணைபுரிந்து வருகிறது. கொத்தணி, கோட்ட மட்டத்திலும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களையும் சான்றிதழ்களையும் எமது மாணவர்கள் பெற்றுள்ளனர்.

தமிழ்த் தினப் போட்டிகள், ஆங்கில தினப்போட்டிகள் என்பன கொத்தணி, கோட்ட மட்டங்களில் நடத்தப்பட்டன. இவற்றிலேகூட எமது மாணவர்கள் கொத்தணி கோட்ட மட்டங்களில் கலந்து பரிசில்களைப் பெற்றுள்ளனர். மாவட்டத்திலும், அகில இலங்கை ரீதியிலும் தெரிவாகி உள்ளனர். இவை எமக்கெல்லாம் பெருமையைத் தேடித்தந்துள்ளன.

சைவத்தமிழ் வித்தியாலய மாணவர்கள் க. பொ. த. [சாதாரண] பரீட்சையில் தோற்றிச் சித்தியெய்தி மேற் படிப்புப் படித்துப் பெரிய உத்தியோகங்களும் வகிக்கின்றனர். எமது பாடசாலை கிராமப் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது எனலாம். நகரப் பாடசாலை மாணவர்களுக்கு நாம் சளைத்தவர்களல்லர் என்பதை பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் காட்டியுள்ளனர்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் சரித்திரத்தில், இயல், இசை, நாடகத்துறைகளிலும், கல்வி உள்ளிட்ட ஏனைய துறைகளிலும், கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் சுட்டிக் குறிப்பிடத்தக்க அளவுக்குப் புகழ்க் கொடி நாட்டிய மாணவர்கள், மாணவிகள் பட்டியலிற் பல நூற்றுக் கணக்கானவர்கள் இடம்பெறுவார்கள். சைவத் தமிழின் புகழை மேலும் நிலைநிறுத்துவதற்கு வருங்காலத்தில் இன்னும் பலர் தோன்றுவார்கள் என்பதற்கு ஐயமே இல்லை.

எமது பாடசாலையில் ஆண்டுதோறும் பரிசளிப்புவிழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. பரிசளிப்பதன் மூலம் மாணவர்கள் உற்சாகத்துடன் படிக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இப்பரிசளிப்பு விழாவின்போது பல பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் பாடசாலை வேலையை அலங்கரிப்பது இப்பரிசளிப்பு விழாவே.

இப்படியாக எமது பாடசாலை தனது எழுபத்தைந்தாண்டுப் பணியை நிறைவு செய்துள்ளது. சைவம், தமிழ், என்ற இரண்டையும் தனது இரு கண்களாகப் போற்றி நிற்கும் எமது பாடசாலை வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா என்பனவற்றைக் கண்டு களித்தது. பவளவிழாவையும் கொண்டாடுகின்றது. நூற்றாண்டுவிழாவையும் சிறப்பாகக் கொண்டாடும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. உரும்பிராய் எனும் பதியை இவ் வித்தியாலயம் என்றும் அலங்கரித்துக் கொண்டிருக்கும்.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் கற்றுவருகின்றவர்கள் ஓரளவுக்குப் பாக்கியசாலிகள் என்றே சொல்லலாம். இங்கே கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்களின் பெற்றோர்களும் அவர்களது முன்னோர்களும் இங்கேயே படித்திருக்கிறார்கள். எங்கள் பெற்றோர்களுக்குக் கல்வியூட்டிய ஆசிரியர்களில் பலர் இப்பொழுதும் எங்களுக்குக் கற்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பாரம்பரிய முறையில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருக்கும் நாம் 'கொடுத்து வைத்தவர்கள்' என்று பெருமைப்படுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வித்தியாலயம் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. எமக்கருகிலிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கற்பக விநாயகரே இச்சிறப்புக்களை எமக்குத் தந்துள்ளார். இன்னுமின்னும் எமது பாடசாலை சிறந்து விளங்கச் சர்வ வல்லமையும் பொருந்திய கற்பக விநாயகரே அருள் புரிவார் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஞா. தர்மினி
*ஆண்டு 11 — 1992*

# My Village


The name of my village is Urumpirai. It is in the Jaffna District in the Northern Province. It comes under the Valigamam East (Kopay) Assistant Government Agent's Division. It lies in the red soil region of the Jaffna Peninsula. This village is bounded by the following villages. On the north the village of Urelu, on the south the village of Kondavil, on the west the village of Inuvil, on the East the villages of Kopay and Neervely. It is about seven Kilometres from Jaffna.

My village has a population of 12,000 people. Females outnumber males. About ninety-five percent of the people are Hindus, and the rest are Protestants and Catholics. The chief occupation of the people is farming. There are many Hindu temples, two Churches, a Post Office, a Government Dispensary and four Schools in my village. The names of the schools are Urumpirai Hindu College, Urumpirai Saiva Tamil Vidyalayam, Urumpirai Sandrodaya Vidyalayam and Urumpirai Roman Catholic Tamil Mixed School. Saiva Tamil Vidyalayam has the most number of students and the only school in the village which has classes from year one to year eleven.


My village being in the red soil region has pure water which is drawn from the wells. There is enough water throughout the year for agricultural and domestic purposes. This is a blessing for my village.

**J. Swarna**
Year 5C — 1992

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்கள்




திரு. ஆ. கந்தையா
அவர்கள்




திரு. சி. பொன்னுத்துரை
அவர்கள்




திரு. சு. குமாரசேகரம்
அவர்கள்




திரு. கு. சபாரத்தினம்
அவர்கள்



திரு. க. கதிரவேல்
அவர்கள்



திரு. வி. அரியநாயகம்
அவர்கள்



திரு. அ. பஞ்சாட்சரம்
அவர்கள்



திருமதி ச. பரங்கிரிநாதன்
அவர்கள்



பவளவிழா உப சபையினர்

# My School

Urumpirai Saiva Tamil Vidyalayam is the name of my school. It was founded on the 3rd of December 1915. It functioned in the premises of Urumpirai Hindu College till 1949. With the introduction of free education in 1945, there was an increase in the enrolment of students in English medium schools. Urumpirai Hindu College being an English medium school then, had an Increase in enrolment of students and it was found difficult to accommodate this Vidyalayam within that premises.

This Vidyalayam was then shifted to the present place on the 5th of September 1949. This Vidyalayam is now situated behind Urumpirai Katpaga Pillayar Kovil on eleven lachams of land leased for 99 years by the trustees of Urumpirai Katpaga Pillayar Kovil. From the time of this Vidyalayam's inception, till the take over of schools by the government in 1961, this Vidyalayam was under the management of the Hindu College Board of Education. This is a Tamil medium school from its inception serving the cause of Saivaism and Tamil language. This institution has completed 75 years of its Service in the field of education.

Today, this Vidyalayam is a mixed School with nearly 1,000 students and 30 teachers. Mathematics and Science are taught in this Vidyalayam, while English is taught as a second language. It is the only educatonal institution in Urumpirai which has classes from year one to year eleven. This Vidyalayam has produced many men and women who have distinguished themselves in various fields.

**S. Ishani**
Year 8A — 1992

# சைவத் தமிழும் பழைய மாணவர்களும்

இலங்கை சுதந்திரம் அடைந்ததை முன்னிட்டு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலைக்கும் சுதந்திரம் கிடைத்தது. உரும்பிராய் இந்துக்கல்லூரி வளவில் இடநெருக்கடியின் மத்தியில் இயங்கிவந்த உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை இப்பொழுதுள்ள இடத்துக்கு 1949ஆம் ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டுச் சுதந்திரமாக இயங்கத் தொடங்கியது.

அப்பொழுது நாங்கள் பாலர் பிரிவில் (ஆண்டு 1) படித்தோம். கற்பகவிநாயகர் ஆலய வீதியில் மேற்குப்புறத்தில் அவருக்குரிய வளவில் இடமாற்றம் பெற்று வந்த உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையை வரவேற்குமுகமாக நாம் குழந்தைகளாக இருந்தபொழுதிலும் இயன்ற தொண்டுகளைச் செய்தோம். முதலிற் பாடசாலை கொட்டிலாக அமைந்தது. அதிபராக இருந்த இடைக்காடு திரு. ஆ. கந்தையா அவர்களது மேலான தலைமையில் பாடசாலை மிகவும் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபையாரின் சிபார்சுக்கமைய பெரிய டாக்குத்தர் என்று பெயர் பெற்ற டாக்டர் பி. எஸ். சுப்பிரமணியம் அவர்களது கைவிசேஷத்துடன் கிணறு தோண்டப்பட்டது. தொடர்ந்து 80 அடி நீளமான கட்டிடம் ஒன்றும் உறுதியான முறையில் அமைக்கப்பட்டது.

மாணவர்களின் தொகையும் கூடிக்கொண்டே சென்றது. கட்டிடங்களும் வளர்ந்துகொண்டே சென்றன. க. பொ. த. [சாதாரணம்] வகுப்பு வரை மாணவர்கள் உற்சாகமாகக் கற்றார்கள். உயர்ந்த பெறுபேறுகளையும் பெற்றனர். ஆரம்ப காலத்தில் திரு. ஆ. கந்தையா அவர்கள் தலைமையில் உதவி ஆசிரியர்களாக இருந்த திரு. மு. சிவலிங்கம், திரு. சி. பொன்னுத்துரை, திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை முதலானவர்கள், பாடசாலையில் மாணவர்களுக்குத் தந்தை தாயரைப் போலப் பணி செய்தார்கள். இடைக்காடு திரு. ஆ. கந்தையா வருகிறார் என்றால் மாணவர்களாகிய எங்களுக்குப் பெரும் ஏக்கமாக இருக்கும். கற்பித்தல் முறைகளில் திரு. கந்தையா ஆசிரியரவர்கள் மிகவும் கண்டிப்பானவர். அதுவே எங்கள் ஏக்கத்துக்குக் காரணம்.

உரும்பிராய் சைவத் தமிழில் கற்றவர்களிற் பலர் வெளிநாடுகளில் உயர்தர உத்தியோகம் வகிக்கின்றார்கள். திருவாளர்கள் க. நடேசலிங்கம், சி. பத்மராசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். விரிவுரையாளர் துரை — மனோகரன், வருமானவரித் திணைக்கள உயர் உத்தியோகத்தர் திரு. க. சுசீலர் முதலானவர்களும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களே. இவ்வாறாக இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவர்களிற் பலர் நல்ல நிலையில் இருக்கின்றார்கள்.

விளையாட்டுப் போட்டி என்றால் முன்னுக்கு நிற்பார் திரு. செ. சின்னத்துரை ஆசிரியர். நாடகம், நடனம் என்றால் திருவாளர்கள் க. சோதிலிங்கம், வ. மயில்வாகனம் என்பவர்கள் உற்சாகத்துடன் மாணவர்களுக்கு உரிய பயிற்சிகளை அளித்துப் புகழ் பெற வைப்பார்கள்.

திருமதி இராசலட்சுமி அப்புத்துரை, திருமதி சகுந்தலாதேவி பரங்கிரிநாதன் என்பவர்கள் எல்லா முயற்சிகளிலும் அதிபருக்கு உறுதுணையாக நின்று கல்வி முன்னேற்றத்துக்கு உழைத்தார்கள்.

பிற்காலத்தில் அதிபராகக் கடமையாற்றியவர்கள் பலர். சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெயரை நிலை நிறுத்தியவர்களில் திரு. சி. பொன்னுத்துரை அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அதிபர் திரு. வி. அரிய

நாயகம் அவர்கள் அன்புள்ளம் கொண்டவர்; பண்பாளருமாவர். அவரது குணாதிசயங்கள் மாணவர்களில் நன்கு பதிந்ததில் நூதனம் இல்லை.

இத்தொடர் வரிசையில் பலரும் பயன் பெறச் சேவையாற்றி 1987ஆம் ஆண்டு அதிபரான ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களை 'சைவத்தமிழ்' என்றால் மிகையாகாது. கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக இப்பாடசாலையைக் கண்ணுங் கருத்துமாக நிர்வகித்து வருகிறார். இளைப் பாறியும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்து அரும்பணியாற்றி, இப் பவள விழாவைக் கண்ணாரக் கண்டு களிக்க எமக்கும் பிறருக்கும் அதிபர், உப அதிபர், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

திருமதி சகுந்தலாதேவி பரங்கிரிநாதன் அதிபராகப் பணியாற்றியகாலம் மிகக் குறைவாக இருந்தாலும், அவரது சேவைக் காலமோ அதிகமானது. உதவி ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக நல்ல சேவையாற்றினார். அவரது 39 வருட காலச் சேவையால் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் அடைந்த நன்மைகளோ எண்ணிலடங்கா.

இப்பொழுது அதிபராகப் பணியாற்றும் செல்வி அ. சின்னத்தம்பி அவர்களின் தன்னலமற்ற சேவை இப்பாடசாலைக்கு இருபது வருடங்களாகக் கிடைத்து வருகிறது. விஞ்ஞான உதவி ஆசிரியராக வந்த இவர் உப அதிபராகப் பணி புரிந்ததன் மூலம் 1989ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அதிபருமானார். வசதியற்ற பல சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் மாணவர்கள் வசதியுடன் கற்று முன்னேற அதிபரவர்கள் எடுத்துவரும் நடவடிக்கைகள் மிகவும் பாராட்டுக்குரியவை.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நாம் கற்று முன்னேறினோம். நாம் கற்ற பாடசாலையில் எமது குழந்தைகளும் கற்று வருவதே எமக்குப் பேரானந்தம் தருகின்றது.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்து வரும் ஆசிரியர்களும், மாணவர்களும், அபிவிருத்திச் சபையினரும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள்.

இவ் வித்தியாலயம் இன்னுமின்னும் பல்வேறு துறைகளிலும் முன்னேறி இவ்வூரின் கலங்கரை விளக்கமாகப் பிரகாசிக்க வேண்டுமென்று எல்லாம்வல்ல கற்பக விநாயகரின் பொற்பாதம் பணிகின்றேன்.

**ந. கணேசலிங்கம்**
*பழைய மாணவன்*

---

ஈழத்திலிருந்து பெரியார் பலர் தென்னிந்தியாவிற்குச் சென்று கல்வி புகட்டி வந்தமையையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். அவருள் முதன்மையானவர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் சென்னையிலுள்ள பிரசிடென்சிக் கல்லூரியிலே தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிந்தியாவிற்குப் பல தடவைகள் சென்றதுண்டு. அத் தடவைகளில் ஆங்கிருந்த திருவாவடுதுறை ஆதீனம், மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம், கும்பகோண ஆதீனம் போன்ற மடங்களில் உள்ளவர்கள் நாவலரைத் தமது மடங்களுக்கு அழைத்துச் சித்தாந்த நூல்களிலும், இலக்கண இலக்கியங்களிலும் தமக்கிருந்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வர்.

— பேராசிரியர் சு. வித்தியானந்தன்

# உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்
## அதிபரின் அறிக்கை

சகல செல்வங்களும் பொருந்தி விளங்கும் உரும்பிராய்ப் பதியில் சைவப் பற்று மிகுந்த இவ்வூர்ப் பிரமுகர்கள் தங்கள் சிறுர்கள் சைவச் சூழலில் கல்வியைப் பெற வேண்டுமென்னும் உயரிய சிந்தனையினுல் சைவப் பாடசாலைகளை ஸ்தாபிக்க அரு முயற்சி எடுத்தனர். இம்முயற்சிக்கு ஊன்றுகோலாக உதவ முன்வந்தார்கள், இந்துக் கல்லூரி அதிகார சபையினர். மேலே குறிப்பிட்டுள்ள நோக்கத்துக்கு அமைவாக 1915 ஆம் ஆண்டு மார்கழி மாதம் மூன்ருந் திகதி ஆரம்பிக்கப் பெற்ற கல்விக்கூடமே யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம். இதனுல் அந்நியரின் சமய மாற்ற முயற்சி ஓரளவுக்குத் தடைப்பட்டது எனலாம்.

இந்துக் கல்லூரி அதிகார சபையினரது ஒழுங்கான நிர்வாகமும், பாடசாலைகளை அரசாங்கம் கையேற்ற பின்னர் கல்வி அதிகாரிகளினது சீரிய மேற்பார்வையுடன் அவர்களது ஆக்க பூர்வமான ஆலோசனைகளும், ஆற்றல் மிக்க அதிபர்களின் நிர்வாகத் திறனும் உதவி ஆசிரியர்களின் ஊக்கமும், தன்னலங் கருதாத கடின உழைப்பும், கடமையுணர்ச்சியும், பெற்ருர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரது தளராத ஒத்துழைப்பும் இப்பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்குக் காரணங்களாக அமைந்தன.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற பின்னர், குறிப்பாக 1972ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த கல்வித் திட்டத்துக்கு அமைவாகப் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. பாடசாலையின் வளர்ச்சி மேலும் முன்னேற்றங் கண்டுள்ளது. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பவள விழாவை இப்பொழுது யாம் கொண்டாடுதற்குப் புதிய கல்வித் திட்டமும் ஒருகோணத்தில் வழிவகுத்துள்ளது.

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் திருவீதியில் இப்பாடசாலை அமைந்திருப்பதும் தனிச்சிறப்பாகும். சைவத் தமிழ் வித்தியாலயம் என்ற பெயருக்கு ஏற்ற வண்ணம் சைவம், தமிழ் இரண்டும் வளர்ச்சியுற்று வருவது கண்கூடு.

ஆயிரம் மாணவர்கள் வரை கற்று வரும் இப்பாடசாலையில் முப்பது ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர். ஆண்டு 1 தொடங்கி ஆண்டு 11 வரை இங்கே கல்வி பயிலும் மாணவர்களுக்கு அவர்கள் கற்கை நெறிக்கு ஏற்ற வண்ணம் இயலுமானவரை ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கணிதம், விஞ்ஞானம், தொழில் நுட்பப் பாடங்கள், கவின்கலைகள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பாடங்களைக் கற்பித்து வருகின்றனர்.

நால்வர் குருபூசை, நாவலர் குருபூசை, வள்ளுவர் குருபூசை, நவராத்திரி, சிவராத்திரி, தீபாவலி, தைப்பொங்கல், வருடப் பிறப்பு முதலான தினங்கள் சைவாசார முறையில் கொண்டாடப் பட்டு வருகின்றன. மாணவர்களின் தினசரி வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம் பாடசாலையில் அமைந்துள்ளது. வெள்ளி தினங்களில் வகுப்பு வாரியாகப் பூசையும் சொற்பொழிவும் நடைபெறுவது வழக்கம்.

மாணவர் மன்றங்கள் சிறப்புற நடைபெறுகின்றன. குருளைச் சாரணர், சாரணர் பயிற்சியில் மாணவர்கள் விரும்பி ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மொழித் தினம், ஆங்கில மொழித்தினம் என்பன விரிவான முறையில் கொண்டாடப்படுகின்றன. வருடந் தோறும் பரிசளிப்பு விழா இடம்பெறுகின்றது. மாணவர்கள் வசதியாகப் பயிற்சி

பெறுவதற்குப் பாடசாலைக்கு அண்மையில் மைதான வசதி இல்லாத பொழுதிலும் இல்லப் போட்டிகள் காலத்துக்குக் காலம் நடைபெற்று வருகின்றன. பெண் ஆசிரியர்களின் முயற்சியினால் வலைப் பந்தாட்டத்துக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இலக்கிய விழா கணிசமான முறையிற் கொண்டாடப்பட்டது. பேச்சு, கட்டுரைப் போட்டிகள் இடம் பெற்றன.

பாடசாலை, கொத்தணி, கோட்டம், மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி மெய்வல்லுநர் போட்டி, கணித விஞ்ஞான விவசாயப் போட்டிகள், பண்ணிசைப் போட்டி முதலான நிகழ்ச்சிகளில் இப்பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினார்கள். கணிசமான தொகையினர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மாணவர்கள் சமய பாடப் பரீட்சைகளிற் பங்கு பற்றி நல்ல சித்திகளைப் பெற்றுள்ளனர். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

எமது பாடசாலை ஆசிரியர்கள் காலத்துக்குக் காலம் பதவி உயர்வு பெற்றுச் சென்றிருக்கிறார்கள். இதுவும் இனிமை தரும் செய்தியாகும்.

விளையாட்டு மைதானம், விவசாய நிலம் இவை இல்லாதிருப்பது பாடசாலை வளர்ச்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. குறித்த குறையைப் போக்குவதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சபையும் நீண்ட காலமாக முயன்று வருகின்றது. இக்குறைகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டியன என்பது எல்லோரது அபிப்பிராயமுமாகும். பாடசாலை அபிவிருத்திச் சபையினரின் சேவை மிகவும் போற்றத்தக்கது.

சைவத் தமிழ் வித்தியாலயத்தின் புகழ் பூத்த வளர்ச்சியை நீண்ட காலமாக அறிந்து வருபவரான கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் பாடசாலையின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்து வருகிறார். கல்விப் பணிப்பாளரின் உயர் தனிச் சேவையை — சேவையின் பயனை — உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் என்றும் பாராட்டும்.

பாடசாலை நிர்வாகத்தினைப் பரவலாக்கும் நோக்கமாகக் கொத்தணி முறையை அரசு ஏற்படுத்தியது. அந்த வகையில் உரும்பிராய்க் கொத்தணியில் இப்பாடசாலை இடம்பெற வேண்டிய சூழ்நிலை வந்தது. அதனால் மருதனார்மடம் கல்விக் கோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்க வேண்டியதாயிற்று. உரும்பிராய்க் கொத்தணியின் முதல் கொத்தணி அதிபரான திரு. செ. சிவன்பாலன் அவர்களும், மருதனார்மடம் கோட்டக் கல்வி அதிகாரிகளாக முறையே பணியாற்றிய திருவாளர்கள் ஆர். கே. குலசேகரம், ச. தனஞ்சயன் ஆகியோர்களும், இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய போது ஆக்கமும், ஊக்கமும் அளித்தார்கள். உரும்பிராய்க் கொத்தணியின் இன்றைய அதிபர் திரு. சி. பாலசுப்பிரமணியம் அவர்களது தளராத மேற்பார்வையும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது.

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவர்கள் உத்தியோக ரீதியில் இப் பாடசாலைக்கு இடையிடையே விஜயஞ் செய்து வேண்டிய நல்ல அறிவுறுத்தல்களை வழங்கிக் கல்வித் துறையில் மாணவர்களை ஊக்குவிப்பதுடன் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தி வருகின்றார்கள். பிரதிக் கல்விப்பணிப்பாளரின் கண்ணும் கருத்துமான கவனிப்புப் பெரு மகிழ்ச்சி தருகின்றது.

கோப்பாய் வட்டாரத்தில் கொத்தணி அமைப்பு முறை வரமுன்னரும், கல்வி அதிகாரிகள் பிரதம கல்வி அதிகாரிகள் கல்விப் பணிப்பாளர்கள் முதலானவர்களின் கவனத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் வளர்ந்தது.

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் இன்றைய வளர்ச்சிக்கு உதவியாசிரியர்கள், பிரிவுத் தலைவர்கள் முதலான

வர்களின் ஒத்துழைப்பு நன்கு அமைந்துள்ளது. பாடசாலை நிர்வாகத்தில் பேருதவியாக இருந்து வரும் உப - அதிபர் திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்களது தன்னலம் கருதாத சேவை பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறது. முன்னைநாள் அதிபர்கள் பாடசாலைக்கு உதவி வருவது யாவரும் அறிந்தது. ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் இப்பாடசாலையின் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பொழுதிலும் பாடசாலையின் அனைத்து முயற்சிகளுக்கும் உற்சாகத்துடன் உதவி வருகின்றார்.

இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் தொடர்ந்தும் கல்வி கற்கத் தக்க வகையில் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளைக் கால கதியிலேனும் தொடங்குதல் வேண்டும். அம்முயற்சி ஏழை மாணவர்களின் உயர் கல்விக்குத் தூண்டு கோலாகலாம். பவள விழாக் கண்ட உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் இந் நாட்டிலுள்ள சிறுர்களின் கல்விக்கும் வழிகாட்டியாக என்றென்றும் திகழவேண்டுமென்று இறைவன் திருவடிகளைப் பிரார்த்திக்கிறேன்.

யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
01 - 02 - 1993

செல்வி அ. சின்னத்தம்பி
அதிபர்

## உரும்பிராய்
## சைவத்தமிழ் வித்தியாலயம்
## "வாழிய நீடே"

புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்

### அகவற்பா

ஆயிரம் ஆயிரம் மாணவர் தமக்கும்
அறிவொளி பரப்பும் அருங்கலை விளக்கே!
உரும்பிராய் என்னும் ஒப்பிலாப் பதியின்
திலகமே ஆகத் திகழ்ந்திடும் சிறப்பினை
உலகம் போற்றும் உயர்தனி மொழியாம்
செந்தமிழ் மொழியின் வளர்ச்சியே குறித்தும்
தெய்வ நோக்கம் தெள்ளிதிற் காட்டும்
சைவ மதத்தின் வளர்ச்சியே கருதியும்
ஓயா துழைக்கும் இயல்பினை வாழி!
பொறியிய லாளர் மருத்துவர் புகழ்தரும்
நல்லா சிரியர் பிறதுறை வல்லுநர்
பலரை நல்கிய பண்பினை வாழிய!
விழாப் பலகண்டே விரைவினில் வளர்ந்து
பவள விழாவைக் காணும்நின் பணிகள்
எல்லாம் வல்ல தெய்வ அருளால்
மேலும் சிறக்க வாழிய நீடே.

# யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் அபிவிருத்திச்சபை வரலாறு

நல்லை நகர் ஆறுமுக நாவலர் பெருமானின் நல்ல சிந்தனைகளுக்கு அமைவாக 1915ஆம் ஆண்டு மார்கழி மாசம் 3ஆம் திகதி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை இந்துக்கல்லூரி வளவில் ஆரம்பமானது. அவ்விடம் ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக, கற்பக விநாயகர் கோயிலுக்கு உரிமையான இந்த இடத்துக்குச் சைவத்தமிழ் வித்தியாசாலை இடமாற்றம் செய்யப்பட்டது. அப்பொழுது திருவாளர்கள் மு. வே. நவரத்தினம், சி. எஸ். இராசையா, பண்டிதர் இ. நவரத்தினம், திரு. ச. முத்தையா என்போரது முயற்சியால் தலைமை ஆசிரியராய் இருந்த திரு. ஆ. கந்தையா அவர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றைக் கூட்டினுர். 1949ஆம் ஆண்டு மாசி மாதம் திரு. நா. தம்பித்துரை அவர்களின் தலைமையில் இயங்கிற்று. தலைவர் அவர்கள் மலாயா செல்ல நேர்ந்ததினுல் திரு. ஆ. முத்துவேலு அவர்கள், பெற்றோர் ஆசிரிய சங்கத் தலைவர் ஆனுர். காரியதரிசிகளாக திரு. மு. வே. நவரத்திலம் அவர்களும் திரு. அ. சேனுதிராசா அவர்களும் பணியாற்றினர். ஆசிரியர் திரு. ச. முத்தையா அவர்கள் தனுதிகாரியாக இருந்தார். தொடர்ந்து பெற்ரூர் ஆசிரியர் சங்கம் சிறப்பாக இயங்கி வந்தது.

பின்னர் திரு. அ. இளையதம்பி அவர்கள் தலைவராகவும் திருவாளர்கள் அ. சேனுதிராசா, செ. ஐயாத்துரை இருவரும் இணைக் காரியதரிசிகளாகவும் ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை அவர்கள் தனுதிகாரியாகவும் செயற்பட்டார்கள்.

திருவாளர்கள் ஆ. கந்தையா, ஆ. முத்துவேலு, ஆ. தனபாலசிங்கம், சு. குமாரசேகரம், சி. செல்லப்பா, வே. நல்லையா, ந. செல்லையா, பண்டிதர் இ. நவரத்தினம் என்பவர்கள் வெவ்வேறு காலங்களில் பெற்ரோர் ஆசிரிய சங்கத்தில் உபதலைவர்களாக இருந்து நல்லதொண்டினைச் செய்தார்கள்.

பெற்ரோர் ஆசிரிய சங்கத்தின் தலைவராக இருப்பவர் பாடசாலை அதிபராக இருத்தல் வேண்டும் என்ற திட்டம் அரசாங்கத்திஞல் கொண்டுவரப்பட்டது. அதன் பிரகாரம் அதிபர்களான திருவாளர்கள் கு. சபாரத்தினம், க. கதிரவேலு, ச. கதிரவேலு, வி. அரியநாயகம், அ. பஞ்சாட்சரம், திருமதி ச. பரங்கிரிநாதன் ஆகியோர்கள் பெற்ரோர் ஆசிரிய சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்று நன்கு உழைத்தனர்.

இதற்குச் சிறிது முன்பாக காரியதரிசிகளாக திருவாளர்கள் செ. சின்னத்துரை, ஆ. முத்துவேலு, வே. சின்னத்துரை, து. இ. இரத்தினவேலு, முதலானவர்கள் தெரிவு செய்யப்பெற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் கடினமாக உழைத்தார்கள். தனுதிகாரிகளாக, திருவாளர்கள் பண்டிதர் இ. நவரத்தினம், க. சோதிலிங்கம், அ. பஞ்சாட்சரம் என்பவர்கள் நல்ல பணியாற்றினர்.

இப்பாடசாலையின் பெற்ரோர் ஆசிரிய சங்கம் எடுத்த முயற்சியிஞலேதான் பாடசாலைக் கட்டடங்கள் வளர்ச்சியுற்றன. பெற்ரோர் ஆசிரிய சங்கத்தினர் பாடசாலை நிர்வாகத்தினுள் புகுந்து கொள்ளாமலே பாடசாலையின் வளர்ச்சிக்கு எடுத்துக் கொண்ட நல்ல நடவடிக்கைகள் ஏராளம்.

பாடசாலையை அரசாங்கம் கையேற்பதற்கு முன்னர் பெற்ரோர் ஆசிரிய சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் பணிபுரிந்த திரு. அ. இளையதம்பி அவர்களும் காரியதரிசிகளாகப் பணிபுரிந்த திருவாளர்கள் அ. சேனுதிராசா, செ. ஐயாத்துரை, செ. சின்னத்துரை, க. சோதிலிங்கம் ஆகியோர்களும் எடுத்த முயற்சி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையின் சரித்திரத்தில் முக்கியமானது.

1972ஆம் ஆண்டில் இப்பாடசாலையின் தரத்தைக் குறைப்பதற்குச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது குறித்துப் பெற்றோர் ஆசிரியர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. அத்துடன் நிற்காமல் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தூதுக் குழுவினர் கல்வி அமைச்சு வரை சென்று பாடசாலையை இருந்த படியே இயங்க அனுமதிக்கும்படி கோரிக்கை விடுத்தனர். குறித்த கோரிக்கையைச் செவி மடுத்த கல்வி அமைச்சு யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பாடசாலை இருந்தபடியே தொடர்ந்தும் இயங்க அனுமதி வழங்கியது. இத்தூதுக் குழுவில் திருவாளர்கள் சி. செல்லப்பா, கு. நவரத்தினசாமி, ஆ. முத்துவேலு, அ. பஞ்சாட்சரம் ஆகியோர் அடங்கியிருந்தனர். தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கிய மூதறிஞர் சி. செல்லப்பா அவர்களது முயற்சி என்றும் மறக்க முடியாத சம்பவமாகும். அன்று இயங்கிய பெற்றோர் ஆசிரிய சங்கம் எடுத்த துரித நடவடிக்கையே இன்றைய சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது.

தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்க முறை நடைமுறைக்கு வந்தது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர்களாக அவ்வப்போது இருந்த அதிபர்கள் தலைமைதாங்கினார்கள். 1977ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் (07-4-77 வியாழன் 08-04-77 வெள்ளி) பாடசாலையில் இடம் பெற்ற வைரவிழாவும் விழாவின் போது வெளியீடு செய்த வைரவிழா மலரும் பாடசாலைச் சரித்திரத்தில் பொன் எழுத்திற் பதிக்கும் சிறப்புக்கு உரியவை.

**பவள விழா :**

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஸ்தாபிக்கப் பெற்று எழுபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டுப் பாரம்பரிய முறையில் பவள விழாவினை நடாத்துவதுடன் பவள விழா மலரினையும் காத்திரமான முறையில் வெளியிடப் பாடசாலை அபிவிருத்திச் சபை விரும்பியது. பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இது விடயமாகப் பெற்றார்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகளை நாடிய பொழுது அனைவரும் மிகவும் குதூகலத்துடன் உதவி செய்ய முன்வந்தார்கள். இவர்களது பேருதவியின் பெறுபேறே பவள விழா.

இப் பாடசாலையிலே ஆசிரியராகப்பணி புரிந்து ஓய்வுபெற்றவர்களில் எழுபத்தைந்து வயசு உடையவர்களையும் அழைத்துக் கௌரவப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறான சான்றோர் வரிசையில் சிவஸ்ரீ. சோ. சதாசிவ ஐயர் அவர்கள், திரு. வே. நவரத்தினம் அவர்கள், திருமதி. தங்கமணி இராமுப்பிள்ளை அவர்கள், திரு. செ. ஐயாத்துரை அவர்கள், பண்டிதர் வித்துவான் இ. நவரத்தினக் குருக்கள் அவர்கள் ஆகியோர்கள் இடம்பெறுகின்றார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகள் காரியதரிசியாகப் பணியாற்றிய பெருமை திரு. து. இ. இரத்தினவேலு அவர்களுக்குரியது. பொது நல சேவையில் ஊக்கமுள்ள திரு. து. இ. இரத்தினவேலு அவர்களுக்கு, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் காரியதரிசியாக அவர்இருந்த காலத்தில் சமாதான நீதிபதிப் பட்டமும் கிடைத்தமை அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

பல்லாண்டு காலமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தனாதிகாரியாக இருந்து வரும் உப-அதிபர் திரு. த. சிவசுப்பிரமணியம் அவர்கள் சேவை மிகவும் பாராட்டத் தக்கதே.

பழைய மாணவர்களும் பெற்றோர்களுமான திருவாளர்கள் க. சிவஞானம், ச. ஏகாம்பரநாதன், ந. கணேசலிங்கம், க. குமாரசாமி என்பவர்களும் பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் கருத்தாக உதவி வருகின்றார்கள். பாடசாலையின் கிழக்குப்புறமாகத் தெற்கு நோக்கிச் சுற்றுமதிலை அமைப்பதற்குப் பேருதவியாக இருந்தவர்களுள் ஒருவர் ச. ஏகாம்பரநாதன் அவர்கள்.

பாடசாலைப் பரிசளிப்பு விழா வருடா வருடம் சிறப்பாக நடைபெறுவதற்கு வசதியாக வேடிய நிதியைப் பாடசாலை அபிவிருத்திச் சபை ஊடாக உரும்பிராய்க் கிராமிய வங்கியில் முதலீடுசெய்ய உதவியிருக்கும்

திருவாளர்கள் ஆ. செல்லையா, சு. மனோகர பூபன், திருமதி கா. இராஜகோபால் மூவரது சேவையையும் பாடசாலை அபி விருத்திச்சபை பெரிதும் பாராட்டுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் நடப்புவருட
நிர்வாகசபையின் விபரம் 1992 — 1993

*தலைவர் :*

செல்வி அ. சின்னத்தம்பி (அதிபர்);

*காரியதரிசி :*

திரு. அ. பஞ்சாட்சரம்

*தனாதிகாரி :*

திரு. த. சிவசுப்பிரமணியம்

*உப தலைவர்கள் :*

திரு. க. சிவஞானம்
திரு. க. ஆனந்தராசா

*உப காரியதரிசி :*

திரு. ச. செல்வரத்தினம்

நிர்வாகசபை உறுப்பினர் :

திருமதி பொ. ஜெகநாதன்
திருமதி ம. திருநாவுக்கரசு
திரு. இ. இராஜ்குமார்
திரு. து. இ. இரத்தினவேலு
திரு. ச. ஏகாம்பரநாதன்
திரு. ந. கணேசலிங்கம்
திரு. அ. இ. தர்மலிங்கம்
திரு. கா. குமாரசாமி
திரு. சு. அப்புத்துரை
திரு. பொ. தர்மலிங்கம்
திரு. சி. அரியநாயகம்
திரு. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை
திருமதி கா. இராஜகோபால்

*கணக்குப் பரிசோதகர்கள் :*

திரு. பொ. காசிநாதன்
திரு. து. சிவசுப்பிரமணியம்.

யா / உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் வியத்தகு முன்னேற்றம் கருதி நீண்டகாலமாக உழைத்துவரும் பாடசாலை அபிவிருத்திச்சபை, தொடர்ந்தும் பாடசாலையின் வளர்ச்சி குறித்துத் தொண்டு புரிவதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

சைவத் தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.
*01 - 03 - 1993*

அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி
பாடசாலை அபிவிருத்திச் சபை

# நலன் நாட்டும் கல்லூரி

திரு. பெரியதம்பிப்பிள்ளை தருமலிங்கம் அவர்கள்
(பொருளாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)

1. அறிவுடைமை புத்தி அநுபவத்தின் கூர்மை
நெறியுடைய கல்வியால் நிற்கும் — நெறிநின்று
சைவந்தமிழ் கண்ணும்ச் சிறக்கும் உரும்பிராய்ச்
சைவத் தமிழ்ச்சாலை சான்று.

2. கல்வி கனிந்தூட்டல் கீர்த்திமிகு புண்ணியமாய்
நல்ல கதியீட்டி நேர்த்திதரும் — சொல்லக்கேள்
இல்லாத ஏழைச் சிருர்க்கிந்தக் கல்லூரி
நல்லாள் செய் சேவை நலம்.

3. வள்ளல் பெருமக்கள் வந்தித் தருள்செய்ய
உள்ளொளிபூண் டோங்கி உரும்பிராய்த் — தெள்ளுதமிழ்
வித்யா லயமெங்கள் வீங்குபுகழ் நாவலரின்
முத்திரையைக் காட்டும் முகம்.

4. கம்பீரம் மிக்கபல கல்விப் புலமையினேர்
தம்தொண்டாற் றக்க தகவுடைய — செம்மனத்து
மாணக்கர் மேம்பா டடையும் வழிவகைகள்
பூணும் வளரும் புகழ்.

5. தொண்டுக்கு நல்லன்பு தேயாநல் லக்கறைமிக்
குண்டாயின் ஏற்றம் அதற்குண்டாம் — தொண்டாரும்
கல்லூரி வாழக் கனதனங்கள் ஈந்தோர்கள்
எல்லோரும் வாழ்வர் இனிது

6. கோப்பாய்வட் டாரத்திற் கோதில் தமிழ்சைவம்
காப்போர் உழைத்துயர்த்துங் கல்லூரி — காப்பவிழ்ந்த
செந்தா மரையன்ன செவ்வி பொலிந்தினிது
நந்தா விளக்காம் நமக்கு.

# உரும்பிராய் பற்றிய ஒரு நோக்கு

யாழ்ப்பாணத்திற் பழைமையும் பெருமையும் வாய்ந்த பதிகளுள் ஒன்றாக விளங்குவது உரும்பிராய். யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பலாலி வீதியில் ஐந்தாவது கல்லை மத்தியாகக்கொண்டு இக் கிராமம் அமைந்திருக்கிறது.

இக்கிராமத்துக்கு உரும்பிராய் என்று பெயர் வரக் காரணம் யாது எனப் பலரும் வினவுவதுண்டு. இடப் பெயர் ஆராய்ச்சி சம்பந்தமாக வெளிவந்த நூல்களில் இவ் வூருக்கான பெயரின் காரணம் நன்கு விளக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒருகாலத்தில் வழிப்போக்கரின் நலன் கருதித் தெருவோரங்களில் நிழல் தரு மரங்களை நாட்டியும், சுமை தாங்கிகளை அமைத்தும் அரசு வசதிசெய்து வைத்ததாகத் தெரியவருகிறது. வாகன வசதி மிக மிகக் குறைந்திருந்த காரணத்தினால் நெடுந் தூரம் நடந்தே தமது பிரயாணத்தை மக்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பிரயாணம் செய்பவர்கள் மரநிழல்களில் தங்கிச் சிறிது களைப்பாறிய பின்னர் பிரயாணத்தை மேற்கொள்ளுவர். பொருள்களைப் பொதியாகக் கட்டித் தலைச் சுமையாகவே கொண்டு செல்லவேண்டியிருந்தது. இப் பொழுதும் அந்தக் காட்சியை நாம் அவதானிக்கலாம். சுமந்து செல்லும் பிரயாணிகள் பிறருடைய உதவியின்றியே பொதிகளைச் சுமைதாங்கியில் வைத்து விட்டுச் சிறிது நேரம் ஆறிச் செல்வதுமுண்டு. எந்தச் சுமைகளையும் தாங்கும் சக்தி அந்தச் சுமைதாங்கிகளுக்கு உண்டு. ஆரம்பத்தில் வைரக் கற்களினாலும் பின்னர் சிமெந்து கொண்டும் உறுதியாகச் சுமை தாங்கிகளை நிறுவினார்கள். அப்படியான பழைய சுமைதாங்கிகளை இன்றும் சில இடங்களில் தெருஓரங்களிற் காணலாம்.

மேலே கூறியவாறு நிழல்தரு மரங்களுள் ஒன்றான பிராய் (பராய் என்றும் சொல்வதுண்டு) மரக் கன்றுகள் தெருவோரங்களில் நிழல் செய்யும் பொருட்டு நாட்டப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது. நன்றாகச் செழித்துப் படர்ந்து வளரக்கூடிய இம் மரத்துக்குப் ''பெருஞ்சூலி மரம்'' என்று இன்னொரு பெயருமுண்டு. ஆல், அரசு போல இதுவும் பால் உள்ள மரம்.

தெருவோரத்தில் நாட்டப்பட்டுவந்த பிராய் மரவரிசையில் எண்களிடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. அந்தவகையிலே எங்கள் கிராமத்தில் இருபத்தைந்தாவது மரம் நாட்டப்பட்டிருக்கலாம். எண்களைக் குறிப்பதற்கு அந்தக்காலத்தில் எழுத்து எண்களையே உபயோகித்தார்கள். நாவலர் பெருமான் அவர்கள் எழுத்து எண்களையே அவர் சம்பந்தப்பட்ட நூல்களில் உபயோகித்திருக்கின்றார். நாவலர் பெருமானுக்குப் பின் வந்தவர்களும் எழுத்து எண்களை உபயோகித்திருக்கின்றார்கள். இங்கே நாட்டப்பட்ட பிராய் மரத்தின் இலக்கமும் எழுத்து எண்களைக் கொண்டதாக இருந்திருக்கலாம் என்று ஊகித்துணர முடிகின்றது.

இருபத்தைந்தாம் பிராய் என்பதனை 25ம் பிராய் என்று இக்காலத்தில் எழுதுவார்கள். அப்பொழுது எழுத்து முறையையே கையாண்டு -

உரு<u>ம்</u>பிராய் என்று எழுதி இருப்பார்கள்.

உ — 2; ரு — 5.

உரும்பிராய் = 25<u>ம்</u> பிராய்.

என்பதற்கு ஈடாகும்.

இருபத்தைந்து என்ற எண்களைக் (25) குறித்த எழுத்துக்களை 'உரு' என்றும், அயலில் உள்ள <u>ம்</u> என்ற எழுத்தையுஞ் சேர்த்து உரு<u>ம்</u> என்றும், அப்பால், பிராய் என்னும் மரப் பெயரையுஞ் சேர்த்து,

உரு<u>ம்</u>பிராய்

என்றும், காலக் கிரமத்தில் வாசிக்கும் வழக்கை ஏற்படுத்தியிருக்கலாம். எழுத்து இலக்கத்தோடு கூடிய மரப்பெயர் (பிராய்) ஊர்ப் பெயராக மாறி இருக்கலாம் என்பதே எனது சிந்தனையில் எழுந்த அபிப்பிராயமாகும்.

பேச்சு வழக்கில், எழுத்து வழக்கில் உரும்புராய், உறும்பிராய், உடும்பிராய் என்றும் கையாளுகின்றார்கள். அவ்வாறு பேசுவதற்கோ எழுதுவதற்கோ தக்க சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

கட்டைப்பிராய், வேலம்பிராய், மானம் பிராய், தம்பிராய் என வழங்கும் இடங்களும் இருக்கின்றன. அந்தந்த இடங்களைச் சார்ந்த அறிஞர்கள் அந்த இடப் பெயர்கள் குறித்து வேறு வேறு விளக்கங்கள் கொடுக்கக் கூடியதாகவுமிருக்கலாம்.

முன்னர் கூறிய வண்ணம் பிராய், பராய் என்னும் இரு சொற்களும் பிராய் மரத்தையே குறிப்பன எனினும், உரும்பராய் என்ற உபயோகத்திலும் பார்க்க, உரும்பிராய் என்ற பிரயோகமே சிறந்ததாகத் தெரிகின்றது.

அப்பொழுது அரசகரும மொழியாக இருந்த ஆங்கிலத்தில்,

URUMPIRAI

என்றே வழங்கப்பட்டிருக்கின்றது. கச்சேரி, தபாற் கந்தோர், கிராம சேவையாளர் பிரிவு முதலான ஸ்தாபனங்களிலும் ‘Urumpirai’ என்றே வழங்கப்பட்டு வருகின்றது. அதற்கான தமிழ்த் தொடரும் உரும்பிராய் என்றே அமைந்திருக்கின்றது.

சிலர் ஆங்கிலத்தில் எழுதும் பொழுது **Urumpirai** என்றும், தமிழில் எழுதும் பொழுது உரும்பராய் என்றும் எழுதுவதுமுண்டு.

**Urumpirai** — உரும்பிராய்

என்று முறையே ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதுவதே பொருத்தமானதாகும்.

கிழக்கே கோப்பாய் நீர்வேலியும் தெற்கே கோண்டாவிலும், மேற்கே இணுவில் உடுவிலும், வடக்கே ஊரெழு நீர்வேலியும், எல்லைக் கிராமங்களாக உரும்பிராயை அணிசெய்கின்றன. 1990 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி 3.3 சதுர மைல் கொண்ட இக் கிராமத்தில் 3753 குடும்பங்களைச் சார்ந்த **13400** பேர் வாழ்கின்றார்கள். இத்தொகை இப்பொழுது கூடியிருக்கலாம்.

அதிகமான கிராமங்களில் வயற்பரப்புக் கூடியும், மக்கள் வாழ் பிரதேசம் குறைந்தும் இருப்பதை அவதானிக்கலாம். உரும்பிராயைப் பொறுத்தவரை மக்கள் குடியிருப்புக்குரிய நிலமே கூடியிருக்கின்றது. மிகுதி நிலமும் செம்மண் செறிந்த சும நிலமாகவே பிரகாசிக்கின்றது. நல்ல நீர்வளத்தைப் பெற்றிருப்பதும் பெருங்கொடை என்றே சொல்லலாம். கரந்தன், அன்னுங்கை, யோகபுரம், செல்வபுரம் என்பன உரும்பிராய்ப் பிரதேசத்தில் அடங்கிய குறிச்சிகள்.

ஒரு காலத்தில் நீர்வேலி கிராமச் சங்க பரிபாலனத்தின் கீழ் நீர்வேலி, உரும்பிராய், ஊரெழுக் கிராமங்கள் அடங்கியிருந்தன. பின்னர் உரும்பிராய் ஊரெழு ஆகிய கிராமங்கள் 01 - 07 - 1967 இல் பட்டணசபை நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இப்பொழுது வலி கிழக்குப் பிரதேச சபையின் உப-பிரிவாக இயங்கி வருகின்றது.

பெரும்பான்மையானவர்கள் சைவ சமயத்தையே சார்ந்தவர்கள். பிற்காலத்திற் சைவ சமயத்தினரில் ஒரு பகுதியினர் மதமாற்றத்துக்கு உட்பட்டார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் உரோமன் கத்தோலிக்க சமயத்தையும் அதற்கு முன் ஒரு சாரார் புரட்டஸ்தாந்து சமயத்தையும் (அங்கிலிக்கன் சபை) தழுவிக் கொண்டனர். உரோமன் கத்தோலிக்கசமயநெறி 1916-ஆம் ஆண்டிலேயே இக்கிராமத்தில் பரப்பப்பட்டது.

### சிவாலயங்கள்

**கருணாகரப் பிள்ளையார் கோயில் :**

யாழ்ப்பாணத்தை அரசுபுரிந்த விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி காலத்துக்கும் முந்திய பூர்வீக ஆலயம் இதுவாகும். விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி கருணாகரப் பிள்ளையாரை வணங்கி அருள் பெற்றதாகவும், திருப்பணிக்கு உதவியதாகவும்

சரித்திரம் கூறுகிறது. அந்தணர் பரம்பரையினர் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வருகிறார்கள். பழைமையையும், பெருமையையும் எடுத்துக் காட்டும் வகையில் கல் வெட்டுச் சாசனமும் உண்டு. பிரசித்தி பெற்ற பிள்ளையார் கோயில்களின் வரிசையில் இவ்வாலயமும் சேர்க்கப்பட்டுள்ளது. (சைவநெறி — ஆண்டு 11)

ஆவணிப் பூரணையை இறுதி நாளாக வைத்துமஹோற்சவம்இடம்பெறும்.பத்துத் தினங்கள் இடம்பெறும் இம் மஹோற்சவம் 1910ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாக அறிஞர்கள் கூறுகின்றார்கள். 1973ஆம் ஆண்டு புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக விழாவினை யொட்டி ஷெ ஆலய திருப்பணிச் சபையினால் வெளியிடப்பெற்ற மஹா கும்பாபிஷேக மலர் ''பொன்மலர்'' என்னும் பாராட்டினைப் பெற்றது.

நீர்வேலி சிதம்பரநாதப் புலவர், ஆசு கவி கல்லடி வேலுப்பிள்ளை, கவிஞர் செ. ஐயாத்துரை என்பவர்கள் கருணாகரப் பிள்ளையார் மீது வெவ்வேறு காலங்களிற் பிரபந்தங்களைச் செய்துள்ளனர். தனிப் பாடல்களும் உண்டு. மருத நிலச் சூழலில் பரத்தைப் புலம் என்று கூறப்பெறும் திவ்விய க்ஷேத்திரத்தில் எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையார் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். ''கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்.''

**சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் :**

பரத்தைப்புலம் என்னுங் குறிச்சியிலேயே இவ்வாலயமும் அமைந்துள்ளது. கிராமத்தில் உள்ள ஒரேயொரு கந்தசாமி கோயில் இதுவொன்றேயாகும். ஒரு காலத் திற் கிலமடைந்திருந்த இவ்வாலயம் சைவப் பெரியார்களின் முயற்சியினால் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு நான்கு தசாப்தங்களாகப் பூசை, திருவிழாக்களுடன் நன்கு நடைபெற்று வருகின்றது. ''உரும்பிராயில் ஒரு கதிர்காமம்'' என்ற சிறப்பைத் தன்னகத்தே கொண்டது. இங்கே அலங்காரத் திருவிழாக்கள் கதிர்காமத் திருவிழாக் காலத்திலே நடைபெற்று வந்தன. தொடர்ந்தும் இடம்பெறும்.

தைப்பூசத் திருநாளைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு இந்த ஆண்டு (1993) இங்கே முதன்முதலாக மஹோற்சவம் நடைபெற்றது. வழிகாட்டியாக இருந்து இம் மஹோற்சவத்தை முதன்முதலாக நடத்தி வைத்த பெருமையைப் பெறுகின்றார் உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் பிரதம சிவாசாரியர் 'சிவாசார்யமணி' சிவஸ்ரீ. வை. சபாரத்தினக் குருக்கள் அவர்கள்.

வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன், கவிஞர் செ. ஐயாத்துரை முதலானவர்கள் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி மீது துதிப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளனர். சிதம்பரசுப்பிரமணிய சுவாமி பற்றிய கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

**பர்வதவர்த்தனி அம்மன் கோயில் :**

கிராமத்துக்கு ஒரு அம்மன் கோயில் என்ற பெருமை இக்கோயிலுக்கு உண்டு. பர்வதவர்த்தனி அம்பாள் எழுந்தருளியுள்ள இடமும் பரத்தைப்புலமே. வைகாசிப் பூரணையைத் தீர்த்த நாளாகக் கொண்டு பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெறுவது வழக்கம். சித்திரத்தேர் சிறப்பானது. பங்குனித் திங்களில் பொங்கல் பூசை என்பன நேர்த்தியாக நடைபெறும். நவராத்திரி பூசை அந்தக்காலந் தொட்டே சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாளின் மானம்பூத் திருவிழா இந்தக் கிராமத்தில் ஓர் எழுச்சி விழாவாகவே கொண்டாடப்பட்டு வருகின்றது. பர்வதவர்த்தனி அம்பாள் மீது அடியார்கள் தோத்திரங்களைப் பாடியிருக்கின்றார்கள். பர்வதவர்த்தனி அம்பிகை அந்தாதி என்ற நூலினைக் கவிஞர் செ. ஐயாத்துரை அவர்கள் பாடி அரங்கேற்றியுள்ளார்.

**கற்பகப் பிள்ளையார் கோயில் :**

தொழுவார் துயர்தீர்த்து அடியார்களுக்கு அருள்புரிகின்றார் கற்பகப்பிள்ளையார். கற்பகப்பிள்ளையார் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஓடையம்பதி உயர் தனிச் சிறப்புக்கு உரியது. ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பார்கள். ஆலய

முகப்பில் பஞ்ச தளங்களைக்கொண்ட இராஜ கோபுரம் கம்பீரமாக அமைந்திருப்பது அழகுக்கு அழகு தருவதாகும். இவ்வாலயம் ஊர்நடுவில் அமைந்திருப்பதும் ஒரு சிறப்பு.

இவ்வாலய மஹோற்சவம் ஆனிப் பூரணையைத் தீர்த்தத் தினமாகக் கொண்டு நடைபெறுகிறது. ஒரு காலத்தில் பத்துத் திருவிழாக்களே நடந்தன, இப்பொழுது பதினைந்து திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. அழகிய சித்திரத் தேரும் உண்டு.

தெற்கு மேற்கு வீதிகளில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயமும் கிழக்கில் பல நோக்கக் கூட்டுறவுச் சங்க மண்டபமும், வடபால் கமநிலமும் சூழ இருப்பதும் பல வகைக் காட்சிகளாக அமைந்துள்ளன.

கற்பக விநாயகர் திருவந்தாதி என்ற நூலினைக் கவிஞர் செ. ஐயாத்துரை அவர்களும், கற்பகவிநாயகர் அந்தாதி என்ற நூலினைக் கோயிலாக் கண்டியைச் சேர்ந்த ஆசிரியரான சு. பொ. குழந்தைவடிவேலு அவர்களும் இயற்றி வெளியீடும் செய்துள்ளனர்.

கற்பக விநாயகர் பொற்பதம் பணிவோர் நற்கதி பெறுவர்.

**ஞான வைரவர் கோயில் :**

கோப்பாய் வீதியிலே துண்டிப் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வைரவப் பெருமானைத் துண்டி ஞானவைரவ சுவாமி என்ற திருநாமங் கொண்டு பணிகிறார்கள். துண்டி விசேடம் பெற்றது.

சைவப்பிரசங்கங்கள், புராணபடனங்கள் அந்தக்காலத்தில் ஒழுங்காக நடைபெற்றன. இப்பொழுதும் நடைபெறுவதுண்டு. நேரந் தவறாமல் வைரவர் கோயில் மணி அதிகாலை ஐந்து மணிக்கு ஒலிக்கும். அந்த மணியோசை ஊரையே குதூகலிக்க வைக்கும். மக்கள் வழிபாட்டுடன் தங்கள் தங்கள் நாளாந்தக் கடமைகளையும் மேற்கொள்ளுவதற்கு வழி செய்வது இந்த மணி ஓசை.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், கவிஞர் சோ. பத்மநாதன் முதலான அறிஞர் பெருமக்கள் ஞானவைரவசுவாமி மீது பாடப்பெற்ற பாடல்கள் நூலுருவம் பெற்றுள்ளன.

பிரயாணிகளின் பிரியமான வழிபாடுகளை ஏற்று அவர்களுக்கெல்லாம் நல்ல வழி காட்டுகின்றார் ஞானவைரவ சுவாமி.

**சிவபூதநாதேசுவரர் ஆலயம் :**

உரும்பிராயின் கிழக்கு எல்லையில் வடபுறமாக அமைந்துள்ளது சிவபூதநாதேசுவரர் ஆலயம். நீர்வேலி, கோப்பாய், கரந்தன் கிராமங்களை அண்மித்து இக்கோயில் அமைந்திருப்பதினால் அவ்வூர் மக்களது வழிபாடு இங்கு விசேடமாக இடம் பெறுகிறது.

கம நிலங்கள் நான்கு புறமும் சூழ்ந்திருப்பதனால் பச்சைப் பசேலென அந்தச் சூழல் காட்சியளிப்பதும் ஆலயத்துக்குத் தனிச் சிறப்பை அளிக்கிறது.

சித்திரைப் பூரணையை அடுத்து வரும் அமாவாசைத் தினத்தை இறுதி நாளாகக் கொண்டு பக்தி பூர்வமாக அலங்காரத் திருவிழாக்கள் நடை பெற்று வருகின்றன. விழாக் காலங்களில் இடம்பெறும் அன்னதான முயற்சிகள் பாராட்டுக்குரியவை. அலங்காரத் திருவிழாவுக்குப் பதிலாக மஹோற்சவங்களை நடத்துவதற்கு ஆலய பரிபாலன சபை வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

* * *

கற்பக விநாயகர் ஆலயத்தின் வடபால் இயற்கையாக அமைந்திருப்பது சொக்கநாதர் ஆலயமாகும். அவ்வாலயத்திலுள்ள சுவரோவியங்கள் அழகு பொருந்தியவை.

மேலும் காளிகோயில்கள், பூதராயர் கோயில்கள், அண்ணமார் கோயில்கள், பேச்சியம்மன் கோயில் என்பன பரந்து பட்டிருக்கின்றன. வைரவர் கோயில்களும் உண்டு. காட்டு வைரவர் கோயில்கள் முக்கியமானவை. ஒரு காலத்தில் பலியிடும் வழக்கம் இருந்தது. தற்போது நிறுத்தப் பட்டுவிட்டது. இப்பொழுது குறித்த ஆலயங்களில் பொங்கல் பூசை திருவிழாக்கள் செவ்வனே நடைபெற்று வருகின்றன.

### கத்தோலிக்க தேவாலயம்

உரும்பிராயின் கிழக்குத் திசையில் வடபுறமாகக் கத்தோலிக்க மக்களின் வணக்கத் தலமான புனித மைக்கேல் ஆலயம் விளங்குகின்றது. 1916ஆம் ஆண்டளவில் ஸ்தாபிக்கப்பெற்ற புனித மைக்கேல் ஆலயம் தனது பவள விழாவைச் சமீபத்திற் கொண்டாடியது. இவ்வாலயத்தின் பரிபாலகர்களது சமூக சேவை பெரிதும் பாராட்டத்தக்கது. குறித்த கத்தோலிக்க தேவாலயம் உருவாவதற்கு முன்னோடியாக இருந்தவர் சுவாமி ஞானப்பிரகாசர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அங்கிலிக்கன் சபையும் தேவாலயமும் :

பலாலி வீதியில் உள்ள அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த தேவாலயம் 1955இல் கட்டப்பட்டது. இத் தேவாலயம் அமைக்கப்படுவதற்கு முன் இவ் விடமிருந்த இச் சமயத்தவர்கள் இங்கிருந்த பாடசாலையின் ஒருபகுதியைத் தமது வணக்கத் தலமாக உபயோகித்தனர். விசேட காலங்களில் கோப்பாயிலுள்ள தேவாலயங்களுக்குச் சென்று இவர்கள் வழிபாடாற்றுவது முண்டு.

### பாடசாலைகள் :

ஒரு காலத்தில் முனிசிரேட்டர்களது ஆசிரமங்களை நோக்கிச் சீடர்கள் சென்றார்கள். முனிவர்களுக்குத் தொண்டு புரிந்து கற்கும் நிலை இருந்தது. வீரனாகிய இராமனும் அவன் தம்பியரும் வனம் நோக்கிச் சென்று முனிவர்களிடம் பாடங்கேட்டு விட்டு மாலையில் திரும்பும் காட்சியை அழகுபட எடுத்துரைக்கின்றது கம்பராமாயணம்.

பின்னர் கல்விஅபிவிருத்தியின் பொருட்டுத் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் ஆங்காங்கு நிறுவப் பட்டன. அந்தத் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இன்றைய சர்வகலாசாலைகள் போல அன்று பணி புரிந்தன.

இவ்வாறான திண்ணைப் பள்ளிக் கூடம் ஒன்று கருணாகரப் பிள்ளையார் கோயிலின் வடபுறத்தில் இருந்ததாகத் தெரிய வருகின்றது. தம்பாபிள்ளை ஐயர் என்பவரால் அந்தத்திண்ணைப் பள்ளிக்கூடம் நிர்வகிக்கப்பட்டு வந்ததாகவும் பெரியவர்கள் சொல்லுகிறார்கள். குடிசன நெருக்கம் குறைவாக இருந்த அப்பகுதியில் குடியேற விரும்பியவர்களுக்கு இலகுவான முறையில் காணியை ஐயரவர்கள் வழங்கியதாகவும் கூறப்படுகிறது. புராண இதிகாசங்களின் பெருமைகளை அங்கு சென்ற மாணவர்களுக்குப் போதித்ததாகவும் சொல்லப்படுகின்றது.

### அங்கிலிக்கன் சபைப் பாடசாலை :

ஒருகாலத்தில் சமயத்தைப் பரப்பும் அடிப்படை நோக்கில் கிறிஸ்தவ பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் அங்கிலிக்கன் சபை உரும்பிராயிலும் ஒரு பாடசாலையை நிறுவியது. ஆங்கிலம் தமிழ் இரு மொழிகளையும் கற்பிக்கும் பாடசாலையாக இயங்கியது. இந்துக் கல்லூரி அதிகார சபையினர் ஆங்கில பாடசாலை யொன்றை உரும்பிராயில் நிறுவியதனால் கிறிஸ்தவ பாடசாலையில் உள்ள ஆங்கிலப் பகுதி நிறுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழ்மட்டும் போதிக்கப்பட்டு வந்தது. அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்றதையடுத்து இப்பாடசாலை மூடப்பட்டது. உரும்பிராயில் முதன்முதல் ஆரம்பித்த பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்துக் கல்லூரி அதிகார சபை :

சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிலேயே கற்றுத்தேற வேண்டும் என்ற நோக்குடையவர், நாவலர் பெருமான் அவர்கள். அவரது ஆத்மிக சக்தியே பிற்காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகப் பரிணமித்தது. இதற்கு வழிகோலியவர்கள் இந்துக்கல்லூரி அதிகார சபையினர். குறித்த சபையினர் தேவையை அறிந்து வேண்டிய இடங்களில் இந்துக் கல்லூரிகளை அமைத்தனர். புகழ் பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழாவையும் கண்டுகளித்திருக்கின்றது.

சைவப் பாடசாலைகளை அமைத்த பணியிற் பெரும்பங்கு சைவவித்தியா விருத்திச் சங்கத்துக்கும் இருந்தது என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

**உரும்பிராய் இந்துக் கல்லூரி :**

1911ஆம் ஆண்டு இவ்வூர்ப் பிரமுகர்களின் ஒத்துழைப்புடன் உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இக் கல்லூரி சமீபத்திற் பவள விழாவைக் கொண்டாடியதுடன் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாறுகளை உள்ளடக்கிய பவள விழா மலரினையும் வெளியீடு செய்தது. ஆங்கில மொழிக்கு அந்தஸ்து இருந்த காலத்தில் உரும்பிராய் மாணவர்களும், அயலூர் மாணவர்களும் சமயக் கோட்பாடுகளையும் ஆங்கில மொழியையும் நன்கு அறிந்து கொள்ள உதவியது உரும்பிராய் இந்துக் கல்லூரி. அறிஞர்கள் பலர் இந்தவூரில் உருவாவதற்கு இக் கல்லூரி உழைத்த உழைப்பு மகத்தானது. மகாவித்தியாலய அந்தஸ்தினை முன்னரே பெற்றுக் கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரி உரும்பிராய்க் கொத்தணியின் மூலாதாரப் பாடசாலையுமாகும்.

**சைவத்தமிழ் வித்தியாலயம் :**

03 - 12 - 1915 இல் உரும்பிராய் இந்துக் கல்லூரி வளவில் இந்துக் கல்லூரி அதிகார சபையினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலையே சைவத் தமிழ் வித்தியாசாலை. இடநெருக்கடி காரணமாக 1949ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்துக்கு உரிமையான காணியிற் கட்டடங்கள் அமைக்கப்பட்டு, கற்பகப் பிள்ளையார் வீதியில் சைவத் தமிழ் வித்தியாசாலை இடமாற்றஞ் செய்யப்பட்டது.

ஆண்டு 1 தொடங்கி ஆண்டு 11 வரை வகுப்புக்களைக் கொண்டு இயங்கும் சைவத் தமிழ் வித்தியாசாலை கோப்பாய் வட்டாரத்தில் அமைந்துள்ள கனிஷ்ட வித்தியாலயங்களிற் பிரபலம் வாய்ந்தது எனலாம். 1977ஆம் ஆண்டு நடைபெற்றது வைரவிழா, வைரவிழா மலர் வெளியீடு சிறப்பம்சமாக இடம்பெற்றது. இப்பொழுது இடம்பெறுவது பவள விழா, பவள விழா மலர் சிறப்புடன் வெளிவருகின்றது.

உரும்பிராயின் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வியத்தகு முன்னேற்றத்துக்கு எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் திருவருளே காரணம் என்பது எமது நம்பிக்கை.

**றோமன் கத்தோலிக்க பாடசாலை :**

கத்தோலிக்க சமயக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி கருதி 18 - 10 - 1916 இல் நிறுவப்பட்டதே உரும்பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலை. சமய அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை சமய சேவை புரிந்ததுடன் விசேடமாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்தது என்பதைக் கல்வியில் நாட்டமுள்ள பெரியவர்கள் ஒத்துக்கொள்வார்கள். இது இன்று ஆரம்ப பாடசாலையாகப் பிரகாசிக்கின்றது. அரசு பாடசாலைகளைக் கையேற்ற பொழுதிலும் அடிப்படை நோக்கத்திற்கு முரணின்றி இப் பாடசாலை இயங்குகின்றது.

**சந்திரோதய வித்தியாசாலை :**

உரும்பிராய்ச் சந்தியின் அயலிலுள்ள காணியில் 28-10-1928 இல் ஆரம்பிக்கப்பட்டது உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை. மாணவர் கூடக்கூட இடநெருக்கடியும் ஏற்பட்டது. எனவே மானிப்பாய் வீதியில் உள்ள காணியில் கட்டடங்களை அமைத்து அந்த இடத்துக்கு வித்தியாசாலையை மாற்ற (1942) நேரிட்டது. சந்திரோதய வித்தியாசாலை இப்பொழுது அமைந்திருக்கும் வளவும் உரும்பிராய் கற்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையினரிடமிருந்து குத்தகைக்குப் பெறப்பட்டதே. ஆண்டு 1 தொடங்கி ஆண்டு 8 வரை கொண்டதாக இயங்கிவரும் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை அறிஞர்கள் பலரை உருவாக்கிய கல்விக்கூடம் என்பதை நாம் மறத்தலாகாது. இவ் வித்தியாயாலயத்தின் தோற்றத்துக்கு உழைத்தவர்களில் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் (இராசா - வேலுப்பிள்ளை) முக்கிய இடம் பெறுவார்கள்.

**வெளியூர் ஆசிரியர்கள் :**

உரும்பிராயின் கல்வி வளர்ச்சிக்கு இவ்வூரவர்கள் மாத்திரமன்றி வெளியூரவர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்கி இருக்

கின்றார்கள். விசேடமாக நீர்வேலி, கோப்பாய், இணுவில் பகுதியைச் சேர்ந்த தவர்கள் மேலே குறிப்பிட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணி புரிந்து பாராட்டுக்கு உரியவர்களானார்கள். குறித்த பாடசாலைகளில் அதிபர்களாகவும், உப-அதிபர்களாகவும் சேவையாற்றியவர்கள் தமது தளராத சேவையின் மூலம் கற்றோர் வரிசையில் நீங்காத இடம் பெற்றுள்ளார்கள். இப் பாடசாலைகளிற் படித்தவர்களும் தங்கள் ஆசிரியர்களைப் பின் தொடர்ந்து தாமும் பணியாற்றி வருகின்றார்கள். இவர்கள் யாவரும் என்றென்றும் பாராட்டுக்கு உரியவர்களே.

**பெரியவர்கள் :**

உரும்பிராய் என்று சொன்னால் கற்றோர் உலகில் பஞ்சலிங்கம் குடும்பத்தினர் பற்றிப் பேசப்படுவது வழக்கம். அவர்களது கல்வி அறிவும் தேச சேவையுமே காரணம் ஆகலாம்.

செல்லப்பா மீனாட்சிப்பிள்ளை தம்பதியினர் பெற்றெடுத்த ஆண்பிள்ளைகள் ஐவர். சிரேட்டரான திரு. பஞ்சலிங்கம் அவர்கள் சிறந்த வைத்தியர். சட்டத் துறையில் முன்னரே பிரபல்யம் பெற்றவர் திரு. செ. நாகலிங்கம் அவர்கள். நீதியரசராக இருந்த இவர், சிலகாலம் பதில் தேசாதிபதியாகவும் கடமை புரிந்தவர். இலங்கைத் தமிழரில் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த பெருமைக்கு உரிய ஒரேயொரு தமிழர் திரு. செ. நாகலிங்கம் அவர்களேயாவர்.

மூன்றாமவரான திரு. சுந்தரலிங்கம் அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் புகழ்பூத்த கணிதப் பேராசிரியராக விளங்கியவர்; இலங்கை, இந்திய சிவில் சேவைப் பரீட்சைகளிற் சித்தியடைந்தவர். சட்ட அறிஞர். வவுனியாத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும், சிலகாலம் வர்த்தக அமைச்சராகவும் இருந்ததுடன் இவர் விவசாய விருத்தியிலும் அக்கறை கொண்டிருந்தார்.

அடுத்தவரான திரு. தியாகலிங்கம் அவர்கள் சட்டத் துறையில் அதி மேன்மை பெற்றிருந்தார். கியு. ஸி. என்ற அந்தஸ்தையும் அடைந்திருந்தவர். முருக பக்தரான இவர் சமய, சமூகத்துறைக்குத் தம்மாலான தொண்டுகளைப் புரிந்துள்ளார்.

கனிட்டரான திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சிறந்த கல்விமானெனப் பாராட்டப்பட்டவர். கலாநிதிப் பட்டம் பெற்றவர். மீன்பிடி இலாகாவில் உயர் உத்தியோகம் வகித்தவர். பிற்காலத்தில் இங்கிலாந்துக்குச் சென்று அங்கு வாழ்ந்தவர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவழக்கில் நீதிபதியாகப் பணிபுரிந்தவர், திரு. செ. நாகலிங்கம் அவர்கள். வழக்காளி எதிரிகள் சார்பில் திரு. செ. சுந்தரலிங்கம் அவர்கள் ஒருபுறமாகவும் திரு. செ. தியாகலிங்கம் அவர்கள் மறுபுறமாகவும் ஆஜராகி வாதிட்டார்கள். அண்ணன் நீதிபதியாக இருந்த அதே வழக்கில், தம்பிமாரான சுந்தரலிங்கம் அவர்களும் தியாகலிங்கம் அவர்களும் நியாயவாதிகளாக ஏற்பட்டு மிகவும் திறமையாகச் சட்ட அறிஞர் உலகம் வியக்கும் வண்ணம் தங்கள் தங்கள் கட்சிக்காரர் பொருட்டுப் பேசினார்கள்.

நீதிபதியும் நியாயவாதிகளான தம்பியர் இருவரும் நீதிஸ்தலத்தில் ஒரேவழக்கில் ஒரே காலத்தில் சந்தித்த சந்திப்பு நீதித்துறை உலகில் ஓர் அபூர்வ சந்திப்பு. இந்த அபூர்வ சந்திப்புக் குறித்து அப்பொழுது பத்திரிகைகள் மிகவும் பாராட்டி எழுதின.

திருமணம் காரணமாக இவ்வூருடன் தொடர்பு கொண்டவர்களான பிரபல்யம் வாய்ந்த சட்டமேதைகளும் உளர். திரு. தம்பு துரைச்சாமி அவர்களும், மூதவை உறுப்பினராக இருந்த திரு. எஸ். நடேசன் கியு. ஸி. அவர்களும், திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களும் குறிப்பிடத் தக்கவர்கள். ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களும் இவ்வூருடன் தொடர்புபட்டவர்.

கருணாகரப் பிள்ளையார் ஆதீனத்தைச் சேர்ந்தவரான சிவஸ்ரீ அ. வைத்தீசுவரக் குருக்கள் (சின்னையர்), கற்பகவிநாயகர் ஆதீனத்தைச் சேர்ந்தவர்களான சிவஸ்ரீ இ. பரமசாமிக் குருக்கள், சிவஸ்ரீ கு. வேதக்குட்டிக் குருக்கள், பண்ணிசைச் செல்வர்

சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், ஞானவைரவர் கோயிலைச் சார்ந்தவரான சிவஸ்ரீ பொ. கந்தையாக் குருக்கள் உள்ளிட்டவர்கள் தாம் தாம் சார்ந்த சிவாலயங்கள் வாயிலாகவும் ஒன்று சேர்ந்தும் ஆற்றிய சைவப் பணிகள் மகத்தானவை. விசேடமாக மஹோற்சவங்கள், சைவப் பிரசங்கங்கள், புராண படனங்கள் காலத்துக்குக் காலம் சிறப்பாக நடைபெற உழைத்த பெருமக்கள் இவர்கள். இவர்களது புகழ் இவர்கள் காலத்திலேயே எங்கும் பரவி இருந்தது. இவர்கள் மறைந்த பொழுதிலும் இவர்கள் பணிகளோ என்றும் மறக்கவோ மறைக்கவோ முடியாதவை.

மேலும் இக்கிராமத்தில் வைத்தியகலாநிதிகள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், அரசாங்க அதிபர்கள், கமக்காரர்கள், கைத்தொழிலாளர்கள், வணிகர்கள் என்றிவ்வாறு பலரும் வாழ்ந்தார்கள்; வாழ்கின்றார்கள். கணக்காளர் உலகில் பலரதுபாராட்டையும் பெற்றவரான திரு. மு. பசுபதி அவர்களும் நூலாசிரியர் உலகில் தமக்கென்றே ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டவரான திரு. செ. தனபாலசிங்கன் அவர்களும் இவ்வூர்ப் பிறந்தவர்களே. அவர்கள் அமரத்துவம் அடைந்து விட்டார்கள். அவர்கள் நாமங்கள் என்றும் நிலைத்து நிற்கும். இந்தக் கிராமத்தின் புகழுக்கு இன்னும் பலர் அச்சாணியாக இருந்தார்கள்.

'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்பது முதுமொழி. ஈழம்வாழ் தமிழர்களை - விசேடமாக உரும்பிராயைச் சேர்ந்தவர்களை - உத்தியோக நிமித்தம் அப்பொழுது மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகள் அழைத்துக் கௌரவம் செய்தன. இந்த நாடுகளில் மக்கள் உழைத்த உழைப்பு, உரும்பிராயை வளம்படுத்தியது என்று துணிந்து கூறலாம். இப்பொழுது கல்வி, தொழில் காரணங்களை முன்னிட்டு உலகின் பல பாகங்களிலும் இவ்வூர் மக்கள் பரந்திருக்கின்றனர்.

'' தமிழ் எங்கள் உயிருக்கு நேர் '' என்பார்கள். மொழிப் பற்று, நாட்டுப் பற்றுக் காரணமாக முன்னின்று உழைத்தவர்கள், உழைக்கின்றவர்கள் பலர். ''வீர சுதந்திரம் வேண்டி நின்றோர் பின்னர் வேறொன்று வேண்டுவரோ '' என்றார் பாரதியார். நாட்டு விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்த வீரர்கள், வீராங்கனைகள் வாழ்ந்த, வாழ்கின்ற பதி இதுவாகும்.

**உரும்பிராய்க் கிழங்கு :**

உதைபந்தாட்ட, கரபந்தாட்ட வீரர்கள், சவாரிப் பிரியர்கள், இசைவிற்பன்னர்கள், நடிகர்கள் என்றின்னோரன்னவர்கள் இக்கிராமத்துக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்துள்ளனர். அந்தக் காலத்தில் சிங்கங்கண்டி, நீதவான் பங்கு முதலிய இடங்களே விளையாட்டு மைதானங்கள். இம்மைதானங்களில் உதை பந்தாட்ட வீரர்கள் நல்ல பயிற்சி எடுப்பதுடன் அயலூர் அணிகளை எதிர்த்து உதை பந்தாட்டத்தில் கலந்து கொண்ட சந்தர்ப்பங்கள் பல.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறும் உதை பந்தாட்டங்களிலும் உரும்பிராய் வீரர்கள் பங்குபற்றி விறுவிறுப்புடன் விளையாடியதுண்டு. வேகமாக விளையாடும் பொழுது உரும்பிராய் வீரர்களைப் பார்த்து '' உரும்பிராய்க் கிழங்கு '' என்று எதிரணியைச் சார்ந்த இரசிகர்கள் கூக்குரலிடுவது வழக்கம் (மரவள்ளிக் கிழங்குக்குப் பேர் போன இடம் உரும்பிராய்). போட்டியில் உரும்பிராய் வீரர்கள் வெற்றி கொண்டு விட்டார்களென்றால், வெற்றிக்கு அடையாளமாக இரசிகர்கள் தாம் அணிந்திருக்கும் சால்வைகளை வானத்திலே வீசி வீசித் துள்ளிக் குதித்துக் குதூகலிப்பார்கள். இந்தக் குதூகலக் காட்சியோ வெகு இரம்மியமாக இருக்கும்.

மருதனார்மடம் வீதியில் சவாரிப் போட்டி நடைபெறும். இதுவும் கண்ணுக்குக் குளிர்ச்சியான ஒரு போட்டியே. இப்போட்டியிற் பங்குபற்றும் மாடுகளுக்கு நல்ல தீனி போடுவார்கள். ஒரு வண்டியில் பெரும்பாலும் ஐந்து பேர் பங்குபற்றுவார்கள். எனவே போட்டியில்பங்குபற்றும்இருவண்டிகளிலும் குறைந்தது பத்துப் பேராவது கலந்துகொள்ளுவர். ஆசனத்தட்டில் சாரதி இருப்பார். இரு மாடுகளுக்கும் அடித்து, உரப்பி ஏவுதற்குத் துவரந் தடியுடன் இருவர் வண்டி

யின் இருபக்கங்களிலும் ஏறி நிற்பார்கள். கடைக்கிட்டி பிடித்து ஓடுவதற்கு நுகத்தின் இருபக்கங்களிலும் இருவர் நிற்பார்கள்.

பகுத்தறிவுள்ள இந்த மனிதர்களது வீர உணர்ச்சியை, பகுத்தறிவற்ற அந்த மாடுகளும் உணர்வன போலும்! மாடுகளுக்கும் பெயர் இருக்கும். அளவெட்டி மாவெள்ளை, சங்குவேலிப் பூச்சியன், உரும்பிராய் கழுகன் சோடி, ஊரெழு ஐயருடைய செங்காரி, சரசாலை ஞானமுத்தர் சுட்டியன் சோடி, கள்ளக் கறுவல் என்றெல்லாம் பெயர்கள் இருக்கும். கொடி காட்டியதும் மாடுகள் ஓடத்தொடங்கும். இரசிகர்களது ஆரவாரம் பெரிதாக இருக்கும். வேகமாக மாடுகள் ஓடும். மாடுகள் வேகமாக ஓடவேண்டுமென்பதற்காக ஆசனத் தட்டிலிருக்கும் சாரதியார் மாடுகளின் குதப் பகுதியில் அடிக்கடி களிஊசி போட்டபடியே இருப்பார். சில மாடுகள் படுத்து விடும், சிலமாடுகள் வெடி வாலைக் கிளப்பிய வண்ணம் முட்கிளுவை வேலியையும் பிரித்துக்கொண்டு தோட்டங்களினூடே பாய்வதையும் காணலாம். சில சமயங்களில் பக்கச்சாவி விழ சில்லுகளும் கழன்றோட, வண்டியில் உள்வர்கள் விழுந்து எழும்புவதுமுண்டு. விறுவிறுப்பான போட்டிகளில் சவாரிப் போட்டி வெகு ஜோரானது! இப்படியான சவாரிப் போட்டிகளிற் பங்குபற்றிய சவாரிப் பிரியர்கள் உரும்பிராயில் நிறைய இருந்தார்கள். இத்துறையில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் கமக்காரர்களாகவே இருப்பார்கள்.

**ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்**
**நீரருகே சேர்ந்த நிலமுமாய் — ஊருக்குச்**
**சென்றுவர அணித்தாய்ச் செய்வாருஞ்**
**சொற்கேட்டால்**
**என்று முழவே இனிது.**

உரும்பிராயின் உயர் தனிச் சிறப்புக்கு அன்றும் இன்றும் காரணர்களாக உள்ளவர்கள் கமக்காரர்களே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**சங்கங்கள், சபைகள் :**

நாட்டை வளம்படுத்தும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மகளிர் மன்றங்கள், அரசினர் மருந்தகம், தனியார் மருத்துவசாலைகள், இந்துசமய அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபைகள், ஆலய பரிபாலன சபைகள், சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்கள், நூலகங்கள், கிறிஸ்தவ சமூக சேவா சங்கங்கள் என்பன செவ்வனே இயங்குகின்றன. மாவிப்பாய் வீதியில் உள்ள ஞானசம்பந்தர் இல்லம் ஆதுலர் சாலையாக விளங்குகிறது.

**புலவர்மணி வாயில் உரும்பிராய்:**

நாவலர் காவிய பாடசாலையில் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடம் ஒரே காலத்திற் பாடங்கேட்டவர்களில் பிற்காலத்தில் பிரசித்தி பெற்றவர்கள் இருவர். வடக்கே பண்டிதமணி அவர்கள்; கிழக்கே புலவர்மணி அவர்கள். தம்மைப் பற்றியும் சக பாடியான பண்டிதமணி அவர்களைப் பற்றியும், புலவர்மணி அவர்கள் குறிப்பிடும் போது ''ஒரே கிளையில் ஒரே காலத்தில் ஒருமிக்கப் பழுத்த இரண்டு பழங்கள்'' என்பார். இருவர் பெரியார்களும் உரும்பிராயின் மீது அளவு கடந்த பற்று உடையவர்கள்.

உலகறிந்த கவிஞர்களில் ஒருவரான மட்டக்களப்பு, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள். உரும்பிராயின் சிறப்புக் குறித்து எடுத்தியம்பும் பான்மை இனிக்க வைக்கின்றது:


உலகறிந்த பேரறிஞர்
பலர் பிறந்த சீரூர்
உண்மை வளர் நூல்கள் பல
படைத்தோர் வாழ்ந் துயரூர்
நிலவுலகும் வானுலகும் நீண்ட
புகழ்ப் பேரூர்
நிலைகலங்காத் தமிழ் வீரம்
'நிலைநாட்டும் நிறை யூர்
பலகலையும் வளர்த்து நன்கு
வாழுமரும் பொரு ளூர்
பரமனடித் தொண்டு புரிந்
தேத்து திருவரு ளூர்
அலகில்புகழ் யாழ்ப்பாண அன்னை
திரு முகத்தில்
அணிதிலகம் போன் றிலங்கும்
உரும்பிராய்த் திரு வூர்.

உரும்பிராயின் உயர்தனிச் சிறப்பை விளக்கும் செய்திகள் இன்னும் பலவுள. இவ்விஷயங்கள் இன்னொரு சந்தர்ப்பத்தில் மேலும் விரிவாக ஆராயப் பெறும்.

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

வலி-கிழக்கு, தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்

## ★ கூட்டுறவே நாட்டுயர்வு ★
## ★ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ★



தரமான நுகர்ச்சிப் பொருள், விவசாய கிருமிநாசினிகள், கனரகப் பொருள்கள், புடைவை வகைகள் என்பவற்றைச் சகாய விலையில் பெறவும் கிராமிய வங்கிச் சேவை-சேமிப்பை ஊக்குவித்தல், கதிரை வாடகைக்குப் பெறல் போன்றவற்றுக்குச் சிறந்த ஸ்தாபனம் **வலி-கிழக்கு, தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்.** உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் பவளவிழாக் கொண்டாடுவதை மகிழ்ச்சியுடன் **வாழ்த்துகின்றது.**

வலி-கிழக்கு, தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி

திருமகள் அழுத்தகம், சுன்னுகம் 1220/9-1992